# மணிவாசகர்

அமுது அடி அடைந்த அன்பர்

அ. மு. சரவண முதலியார்
அ. ச. ஞானசம்பந்தன்

உ

சிவமயம்

# மணிவாசகர்

## —அழுது அடி அடைந்த அன்பர்—

ஆக்கியோர்

திரிசிரபுரம், பெருஞ்சொல்விளக்கனார், முதுபெரும்புலவர்

**அ. மு. சரவண முதலியார்**

பேராசிரியர்

**அ. ச. ஞானசம்பந்தன்**

காந்தளகம்

மறவன்புலவு
சாவகச்சேரி

834, அண்ணா சாலை
சென்னை 600 002

முதற்பதிப்பு. மார்கழி 1992
உரிமை பதிவு

விலை : ரூ. 40. 00

*அச்சுப் பதிவு :*
கண்ணப்பா ஆர்ட் பிரிண்டர்ஸ்
60/4, சூரப்ப முதலித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

# பதிப்புரை

திரிசிரபுரம், பெருஞ்சொல்விளக்கனார், முதுபெரும்புலவர் திரு. அ. மு. சரவண முதலியார், அவர்தம் மகன், பேராசிரியர் அ ச ஞானசம்பந்தன் இருவரும் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பே இந்த நூல்.

முதல் ஐந்து அத்தியாயங்களில் திரு. அ மு. சரவண முதலியார் முப்பதுகளில் ,ஆற்றிய சொற்பொழிவுக் கருத்துகள் தரப்பட்டுள.

ஆறாம் ஏழாம் எட்டாம் அத்தியாயங்களில் திரு. அ. ச ஞானசம்பந்தன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவுகள் தரப்பட்டுள.

தந்தையும் மகனுமாக இந்த நூற்றாண்டுத் தொடக்கம் முதல் ஆற்றிய ஆராய்ச்சிப் பணிகள் பல்வேறு படிமங்களை விட்டுச் சென்றுள. புதிய பரிணாமங்களை ஏற்படுத்தியுள. சைவமும் தமிழும் புதிய பார்வைக்கு உள்ளாயின.

இந்த நூலைப் பதிப்பிக்குமாறு தந்து, பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் எம்மைப் பெருமைப்படுத்தி உள்ளார்கள். அவர்கட்கு நாம் என்றென்றும் நன்றி உடையோம்.

மறவன் புலவு
சாவகச்சேரி
15-12-1992

**மு. கணபதிப்பிள்ளை**

திருச்சிற்றம்பலம்

# முன்னுரை

இறைவன் திருவருளால் வெளி வருகின்ற 'அழுதடியடைந்த அன்பர்' என்னும் ஆராய்ச்சி நூலாகிய இஃது 1930 ஆம் ஆண்டு எழுதப்பெற்றது.

'அழுதடியடைந்த அன்பர்' என்ற தலைப்பிலும், இந்நூலுட் காணப்படும் உட்பிரிவுகளாகிய 'மணிவாசகரும் கண்ணப்பரும்' 'திருவாசகமும் பரஞ்சோதி முனிவரும்' என்பன போன்ற தலைப்புகளிலும் பல சபைகளில் 30 ஆண்டுகட்கு முன்னிருந்தே யான் சொற்பொழிவாற்றியதுண்டு. 'இக்கருத்துக்களை எழுதி நூல் வடிவமாக வெளியிட்டால் படித்த—படிக்கும் மக்களுக்கு உதவியாக இருக்கும்' என்று கூறிய பெரியோர்களின் விருப்பப்படி வெளிவருகின்றது.

இந்நூல் எளியநடையில்லை; கடினமான நடையது.

இனி 'எளிய நடை' என்ற சொல்லும் அரசியற் செல்வாக்குள்ள சிலரால் விபரீத வியாக்கியானம் செய்யப்படுகின்றது. உதாரணமாக, 'கடற்கரை' என்று எழுதுவது தவறு; 'கடல்க்கரை' என்றுதான் எழுதவேண்டுமென்பது, முன்னரே படிப்படியாக மறைந்து வருகின்ற தமிழிலக்கணத்தைக் குழிதோண்டிப் புதைப்பதற்கு இதனினும் வேறு உபாயம் வேண்டாம் அன்றோ! இத்துணைக் கேட்டிற்கும் மூல காரணம் 'எளிய நடை'ப் பிரசாரமேயாகும். இக்கேடுகள் மலிந்து காணப்படும் இக்காலத்திற்குத் 'தமிழ் மறுமலர்ச்சிக் காலம்' என்று பெயர் கூறப்படுகின்றது. 'மறு' என்ற சொல் 'குற்றம்' என்ற பொருளையும் தருமல்லவா? எனவே 'தமிழ்மொழியிலே குற்றங்கள் மலருகின்ற காலம்' என்று கருதினால் அதிலே குற்றமில்லையல்லவா? மக்களின் கல்வித்தரம் குறைந்து வருகின்ற காலத்தில் அவர்களுக்கு விளங்கும்படி எளிய நடையில் எழுத வேண்டியதுதான். அதற்காக இலக்கணக் கொலை, ஒலிக்கேடு முதலியவற்றைப் பயன்படுத்தலாகாது அன்றோ?

திருச்சிராப்பள்ளி
19—12—56

அ. மு. சரவணன்



"பெருஞ்சொல் விளக்கனார்"

"முது பெரும் புலவர்"

திருவாளர் அ. மு. சரவண முதலியார்

# உள்ளுறை


பதிப்புரை

1. அழுதடி யடைந்த அன்பர் 9

2. திருவாசகரும் பரஞ்சோதி முனிவரும் 28

3. அழுதடி யடைந்தவன்பர் தொடராராய்ச்சி 49

4. மணிவாசகரும் கண்ணப்பரும் 111

5. அழுது அடியடைந்த அன்பர் புகழ்மாலை 143

6. மணிவாசகர்—வரலாறும் காலமும் 145

7. மணிவாசகர்—புலமைநயம் 185

8. மணிவாசகர்—ஆன்ம யாத்திரை 234

உ.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

எழுதரு மறைக டேறா
　　விறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும்
　　பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத்
　　துளும்புகண் ணீருண் மூழ்கி
அழுதடி யடைந்த வன்ப
　　னடியவர்க் கடிமை செய்வாம்.

[திருவிளையாடற் புராணம்]

# அழுதடி யடைந்த அன்பர்

உ

திருச்சிற்றம்பலம்

புழுவினாற் பொதிந்திடு குரம்பையிற் பொய்தனை
யொழிவித்திடும்
எழில்கொள் சோதியெம் மீசனெம்பிரா னென்னுடை
யப்பனென்றென்று
தொழுதகை யினராகித் தூய்மலர்க் கண்கள் நீர்மல்கும்
தொண்டர்க்கு
வழுவிலா மலர்ச்சேவடிக் கணஞ்சென்னி மன்னி மலருமே''
(திருவாசகம் சென்னிப்பத்து)

''அழுதடியடைந்த அன்பர்'' என்பார் யார்? இத்தொடராற் குறிக்கப்படும் பெரியார் யாவரென முன்னர் அறிந்து கோடல் வேண்டும். இன்றேல் இது எந்தப் பெரியாரைக் குறித்து, எந்தப் புலவர் பெருமானால் எந்த நூலிற் கூறப்படுகின்றதோ அதனை அறிந்தார் சிலரொழிய அறியாதார்க்கு ''இவர் யாவராயிருத்தல் கூடும்'' என ஒரு ஐயுறவு தோன்றுமன்றே! அஃது இத்தொடரைத் தொகுத்து வகுத்துச் செய்திருக்கும் ஆராய்ச்சியுரையிற் கூர்ந்து செல்லும் அவருடைய அறிவினை இடையிடையே சென்று தடுக்குமாதலின் அனைவரும் அறிந்த விளக்கமான பெயரால் அப்பெரியாரை முன்னர் உணர்ந்துகொண்டு மேலே செல்லுதல் பொருந்துவதொன்றாகும்.

''அழுதடியடைந்த அன்பர்'' என்பார் பரந்த இந்நிலவுலகின்கண் ஒவ்வொருகாலத்தில் அஃகி அகன்ற அறிவினையுடைய பெருமக்கள் பலரால் ஆக்கப்பட்டு ஒன்றோ

டொன்று கருத்து ஒவ்வாது மாறுபட்டனவாய்ப் பரந்து விரிந்து கிடக்கும் பலவேறு சமயங்களையும் தன் உறுப்புக் களாகக் கொண்டு ஒளிர்வதும். இற்றை நாளில் தோன்றா நின்ற சமயங்களையும் அங்ஙனமே கொள்ளா நிற்பதும், மேல் வருஞ் சமயங்களையும் ஏற்றுக் கொள்ள இடந்தந்து திகழ்வதும், அன்பும் அருளுமாகிய அடிப்படையால் ஆக்கப் பட்டதுமாகிய பொதுக் கொள்கையாம் சைவ சமயமும், அதன் சாதனங்களும் இன்றும் நாளையும் நின்று நிலவுமாறு இறைவன் திருவருளால் தோன்றி அருளிய சமய குரவராம் பெருமக்கள் நால்வருள் ஒருவரும், பெயரளவினாலே தனது சிறப்பினைத் தெரிவிக்கும் உண்மை நெறியென்னும் சன் மார்க்கத்தில் நடந்து நமக்குக் காட்டியருளியவரும்,

''திருந்துறு வேதச் சிரப்பொருள் முழுதும்
குறுந்துறு நீழலிற் கொள்ளை கொண்டவரும்''

அங்ஙனங்கொள்ளை கொண்ட பொருளைத் தாமே நுகரும் உலோபிகள் சிலர் போலாது ''நான் பெற்ற இன்பம் பெறுக விவ்வையகம்'' என்னும் பெரியாரியல்புப்படி ''முழுதுலகுந் தருவான் கொடையே சென்று முந்துமினே'' எனவும், ''தன் அடியவர்க்கு மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்து மினே'' எனவும் முறையே தம்மோடுடன் உள்ளவர்களையும் பின்னுள்ளவர்களையும் செலுத்தி நுகர்வித்தவரும், இன் னும் தமக்குப் பிற்காலத்தவராகிய நம்மனோரும் அதனை அடைந்துய்யத் திருவுள்ளங் கொண்டு, பல பதிகங்களையோ அன்றிப் பதிகத்தையோ பல திருப்பாட்டுக்களையோ அன்றி ஒரு திருப்பாட்டினையோ பல தொடர்களையோ அல்லது ஒரு தொடரையோ, பல மொழிகளையோ அல்லது ஒரு மொழியையோ அன்புடன் ஓதினார்களானால் அவர்கள் ஊனை உருக்கி உணர்வைப் பெருக்கி மனத்தைக் கரைத்து மலத்தைக் கெடுத்துத் தேனும் பாலும் தீங்கன்னலுமமுது மாய்த் தித்தித்து என்பினை உருக்கி அன்பராக்கவல்ல கரு வாசம் போக்கும் திருவாசகமென்னும் ஒப்புயர்வற்ற திப்பிய தேனைத் தமது மலர் வாயினின்றும் வழியச் செய்தவரு மாகிய மாணிக்கவாசகராவார்.

எனவே, அழுதடி யடைந்த அன்பர் என்பவர் மாணிக்க வாசகர் என்பது பெற்றாம்-பெறவே, முன்; ஐயுற்றார் சிலர் பின்னும் மற்றொரு ஐயத்திற்கு ஆளாவர். அது ''நமது அடிகள் ஏதமற்ற வாதவூரின்கண் போதவடிவினராய்த் தோன்றிய'' ஞான்று அவரை அரிய புதல்வராகப் பெறுதற்கு அளவிறந்த தவமாற்றிய அன்னையும் அத்தனும் திருவாதவூரர் என்னும் பிள்ளைத் திருநாமம் இட்டதாகக் கேட்டோம். திருவாதவூரர் இளம் பருவத்திலேயே கலைகள் அனைத்திலும் வல்லுநராய்ச் சிறந்து விளங்குதலை அறிஞர் வாயிலாக அறிந்த பாண்டி மன்னன் அவரைத் தன்னிடம் வரவழைத்து அவர் கல்வி, அறிவு ஒழுக்க முதலியவற்றைக்கண்டு வியந்து காவல்தேரை நடாத்தும் நமக்கு அறிவொழுக்கஞ்சான்ற இப்பெரியாரைத் துணைக்கோடல் அரியவற்றுளெல்லாம் அரிதாம் இன்றியமையாப் பெரும் பேறன்றோ? ''தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல், வன்மையு ளெல்லாந்தலை'' அல்லவா? நமது பாரம் அமைச்சரைக் கண்ணாகக்கொண்டு நடத்தப்பெறுவதன்றோ? அவ்வமைச்சர் தாமும் அங்ஙனம் ''அறனறிந்து மூத்த அறிவுடைய'' ராய்க் கிடைப்பின் அவர் நட்பைப் பேணாது விடுதல் ''பல்லோர் பகை கொளலிற் பத்தடுத்த தீமை'' யுடையதன்றோ? எனக்கருதி அவர் நட்பின் பெருமையை உணர்ந்து அதனைக் கொள்ளும் திறனறிந்து, அவர் உவப்பனவாய பல வரிசைகளை நல்கித் தனக்கு முதலமைச்சராக அமைத்துக்கொண்ட காலத்தில் தென்னவன் பிரமராயர் என்னும் பெயர் அளித்ததாகவும் அறிந்தோம்.

பின் தென்னவன் பிரமராயர் அரசனுக்குக் கண்ணும் கவசமும் போலிருந்து காவல்தேரை நடாத்துவிக்கும் காலத்து, இளமையிலேயே கற்கவேண்டிய நூல்களைக் கற்று அதற்குத்தக ஒழுகியதன்பயனாக நித்த அநித்த வேறுபாட்டுணர்வுடையவராய்த் துன்பப் பிறவியில் உவர்ப்பும் இன்ப வீட்டில் விருப்பும் ஓங்க, அவற்றை முறையே போக்கவும் ஆக்கவும் நல்ல நெறியினைத் தம் நூலுணர்வாலும், நுட்ப

வுணர்வாலும் ஆய்ந்தாய்ந்து வல்லார் பலரிடம் கேட்டுக் கேட்டும் அவையனைத்தும் நீர்வேட்கை யுற்றானொருவன் உவரி நீரை உண்டாலொப்ப மேலு மேலும் ஐயத்தை விளக்கக் "கற்றாரை யான் வேண்டேன். கற்பனவு மினியமையும்" என்ற கருத்துடையராய்,

"கரவிலாத பேரன்பினுக் கெளிவருங் கருணைக்
குரவனாரரு ளன்றியிக் கொடிய வெம்பாசம்
புரையில் கேள்வியாற் கழிப்பது புணையினா லன்றி
உரவு நீர்க்கடல் கரங்கொடு நீந்துவ தொக்கும்"

ஆதலின் "நாதனாகிய தன்னையு மென்னையும் நல்கும் போதனாகிய குருபரன் வருவதெப்போது" என அகவினை ஆசிரியனை நாடுவதிலும், புறவினை மன்னன் கோல் கோணாது நடத்துவதிலும் வைத்து ஒழுகுங் காலத்தில் "வேண்டுவோர் வேண்டுவதே ஈவான்" அருளால் ஒரு நாள் குதிரைப் பாதுகாவலாளர் சிலர் மன்னன் அவையினையடைந்து வணங்கி 'அரசர் பெரும! நமது மதுரையிலுள்ள குதிரைகளுக்கு நேர்ந்த ஒரு நோயினால் இறந்துபட்டன பல; எஞ்சி நின்றன சிலவே; அவையும் பெரிதும் மூப்புடையவும் எய்ப்புடையவுமாயுள்ளன. ஆதலின், நமது அரசியல் முறைக்கு வேண்டுங் குதிரைகள் எவ்வளவோ அத்துணையும் இன்றே வேண்டப் பெறுவன என்று கூற அதனைக் கேட்ட அரசர் பெருமான் அண்மையிலிருந்த அமைச்சர் பெருமானை நோக்கி "வாதவூர் வள்ளால்! நீவிர் இப்பொழுதே நமது பொருளறையினைத் திறந்து வேண்டு பொருள்களை எடுத்துச்சென்று நமது ஆட்சிக்கு வேண்டும் குதிரைகள் எவ்வளவோ "அவ்வளவையும் வாங்கிக் கொண்டு வருவீராக" என்று கூற அதற்குடன்பட்ட அடிகள் அவ்வாறே வேண்டிய பொருள்களை யெடுத்து யானைகள் மீதும் ஒட்டகங்கள் மீதும் ஏற்றி ஏவலாளருடன் முன்னே அனுப்பி, தாம் ஆலவா யண்ணலையும் அங்கயற்கண் ணம்மையையும் வணங்கி விடை பெற்றுக் கொண்டு திருப்பெருந் துறையை நோக்கிச் செல்லுங்கால் அவ்வெல்லையானது 'அடுத்திட

அடுத்திட' அகத்துவகை வெள்ளமடுத்திட, முகிழ்த்த கைம் மலர்க்கமலம் உச்சி தொடுத்திட, விழிப்புனல் துளித்திட வினைக்கே விடுத்திடு மனத்தருள் விளைந்திட நடந்து ஓ! ஈதென்ன வியப்பு! என்னுட்பல இன்பங்கள் நிகழ்கின்றன என்னைப் பிணித்திருந்த கட்டு ஒன்று நீங்கினது போலுந் தோன்றுகின்றது; என் தலையில் ஏற்றியிருந்த சுமை ஒன்று இறங்கினாற்போலுங் காண்கின்றேன்; ''நெருப்பிலிடு வெண்ணெயென நெஞ்சுருக என்னை உருக்கு'' கின்றது; இவற்றால் ''எனை ஒளித்த மல ஆற்றல் கருக்குமவனாகி எனை ஆள்கருணை வள்ளல் இருக்குமிடனே இது''வென எண்ணி நகரிற் புகுந்து நீராடித் திருக்கோயிலுட்புக்கு வலமாக வருகின்றார்.

வரும்பொழுது ஆங்குள்ள குருந்த மரத்தினடியில் தம்மை ஆட்கொள்ளும் பொருட்டு ஓர் அந்தணக் குலக் குரவனாகி வேதநூல் ஒருமருங்கின் மிளிரவும், சைவப் போதநூல் ஒருபுடையில் திகழவும், கீதநூல் ஒரு சிறையினிற் கிளரவும் சமய பேதநூல் ஒரு பக்கலில் வாய்விட்டுப் பிறங்கவும், மற்றொருபுறத்தில் 'சரியையாதி நாற்பாத முந் தலை தெரிந்துணர்ந்த பெரிய மாணவர் கழகம் வினாவிடை பேச'வும், பிறிதொரு பக்கலில் சரிதை வல்ல மெய்த் தொண்டரும் சம்புவுக்கினிய கிரியை செய்யு நன்மைந்தரும் கிளர் சிவயோகம் தெரியுஞ்சாதகக் கேளிருந் தேசிகத்தன்மை புரியும் போதகச் செல்வரும் அளப்பிலர் பொலிய'வும், வேறொரு மருங்கில் பாசங் கழித்த கண்களால் அரனுருக் கண்டு கொண்டுலகில் விழித்த கண்குருடாகிய வீரர்பலர்' ஒழித்த நோன்பினராய் ஆடுகின்றவராய்ப் பாடுகின்றவராய் உலகம் பழித்த செய்கையராய் அழுதலையுடையராய் நகையினையுடையராய்த் திரியவும், பிறிதோரிடத்திற் கோவண உடையும் கைப்பலி உண்டியும் அடியார் உறவும் கலன் கண்டியும் பார்படுக்கையுமாகக் கொண்டு பகல், இரா, முதல், ஈறு, இடையில்லா விடத்து உறங்கும் வாழ்க்கையை மேற்கொண்ட விஞ்ஞையர் பலர் ''கரவிலுள்ளமாம் விசும்

பிடைக் காசற விளங்கும், பரசிலாச் சுடர்க்குதயம் ஈறின் மையாற் பகலும், இரவும் நேர்படக் கண்டிலரியன்று செய்நித்த, விரதமாதி நோன்பிழந்து உறை''யவும் இருத்தலைக் கண்டனர்.

காண்டலும் அவ்வாசிரியன் அருட்குறிப்பு உள்ளத்தின் கண் உணர்த்த ''மன்றுளாடிய ஆனந்தவடிவமும் வடவால், ஒன்றி நால்வருக் கசைவற உணர்த்தியவுருவும், இன்று நாயினேற் கெளிவந்த இவ்வுருவமே'' என்று உணர்ந்து முன் பணிந்து அஞ்சலி முடிமேல் அணிந்து என்புநெக்கிட உருகித் துன்ப வெம்பவவலை அறுத்திட வலையிற்பட்டனர்; ஆண்டவனாகிய அவ்வருட்குரவன் அடிகளின் உடல், பொருள், உயிர் மூன்றையும் நீருடன் வாங்கிக் கொண்டு அருட் கண்ணினால் மலத்தைப் போக்கித் திருவடியை முடியிற் சூட்டிச் செங்கரத்தைச் சென்னியில் வைத்துச் சூக்குமமாகிய திருவைந்தெழுத்தை உபதேசித்துப் ''பார்த்த பார்வையால், இரும்புண்ட நீரெனப் பருகும் அத்தீர்த் தன் தன்னையுங் குருமொழி செய்ததுந் தம்மைப், போர்த்த பாசமும் தம்மையு மறந்து மெய்ப்போத. மூர்த்தியாயொன் றும் அறிந்தில'' ராகிய வாதவூர் முனிவர் நாவின்கண் ஞான வாணி வந்து தங்க, அவ்வருட்குரவன் அளித்த இன்பமானது 'தேனும் பாலும் தீங்கன்னலுமமுதுமாய்த் தித்தித்து ஊனையும் என்பினையும் உருக்க, உள்ளொளியுணர்ந்து தொழுத கையினராய்த் துளங்கிய முடியினராய்த் துளும்ப அழுத கண்ணினராய்ப் பொடிப்புறும் யாக்கையராய் நாக்குத் தழுதழுத்த அன்புரையினராய்த் தமை இழந்தவராய் அழல்வாய் இழுதையன்ன மெய்யினராய்' நின்று இன்பமாகிய ஆறானது உள்ளமாகிய ஏரியின்கண் நிறைந்து புறத்திற் கசிந்தாற் போன்று துதிப்பாராயினர்: அப்பொழுது,

''பழுதி லாதசொன் மணியினைப் பத்திசெய் தன்பு
முழுது மாகிய வடத்தினான் முறைதொடுத் தலங்கல்
அழுது சாத்து மெய்யன்பருக் ககமகிழ்ந் தையர்
வழுவி லாதபேர் மாணிக்க வாசக னென்றார்''

என்று அவர் வரலாற்றின் மூலமாக அறிந்தோம்.

இன்னும் அவர் ஆண்டவனாலே ஆட்கொள்ளப்பட்டதனாலும், திருவாசகச் செந்தேனை ஊட்டி நம்மனோரை ஆட்கொண்டதனாலும் ஆளுடைய அடிகள் என்று பெரியார் கூறக் கேட்டோம். இங்ஙனம் திருவாதவூரடிகளென்றும், தென்னவன் பிரமராயரென்றும், மாணிக்க வாசகரென்றும், ஆளுடைய அடிகளென்றும் அடிகளின் பெயர்களைக் கேட்டோமே யன்றி அழுதடி யடைந்த அன்பர் என ஒரு பெயர் கேட்டோமில்லையே? இப்பெயரிட்டார் யாரா யிருத்தல் கூடும்?

ஆண்டவன் ஆலவாயின்கண் அடியார்களுக்கு அருளும் பொருட்டு அருட்டிரு மேனிகொண்டு ஆடியருளிய அறுபத்து நான்கு பெருவிளையாடல்களையுந் திருவிளையாடல் என்னும் பெயரிய நூலாகப் பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பரஞ்சோதி முனிவரென்பார் அந்நூலின் பாயிரத்துள் சமயகுரவர் நால்வருக்குந் துதி கூறுமுறையில்•

"எழுதரு மறைகள் தேறா விறைவனை எல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி யடைந்த வன்பன டியவர்க் கடிமை செய்வாம்"

என மணிவாசகரைத் துதிப்பாராயினர். இனி, இவர் ஆளுடைய பிள்ளையாரை வழுத்து முகத்தால்,

"கடியவிழ் கடுக்கை வேணித் தாதைபோற் கனற்கண் மீனக்
கொடியனை வேவ நோக்கிக் குறையிரந் தணையாள் கற்பிற்
பிடியன நடையாள் வேண்டப் பின்னுயி ரளித்துக் காத்த
முடியணி மாடக் காழி முனிவனை வணக்கஞ் செய்வாம்"

என அவர் வரலாற்றிற் சிறந்ததொரு பகுதியாகிய பாண்டியன் மீது வெப்புநோயை விடுத்துப்பின் நீக்கியருளிய செய்தியையும், ஆளுடைய அரசுகளைப் போற்று முகத்தால்

''அறப்பெருஞ் செல்வி பாகத் தண்ணலஞ் செழுத்தா
லஞ்சா

மறப்பெருஞ் செய்கை மாறா வஞ்சக ரிட்ட நீல
நிறப்பெருங் கடலும் யார்க்கு நீந்துதற் கரிய ஏழு
பிறப்பெனுங் கடலு நீத்த பிரானடி வணக்கஞ் செய்வாம்''

என அவர் வரலாற்றிற் சிறந்ததொரு பகுதியாகிய கல்லைப் புணையாகக் கொண்டு கடலைக் கடந்து கரையேறிய செய்தியையும், ஆளுடைய நம்பிகளைத் துதிக்கு முகத்தால்,

''அரவக லல்கு லார்பா லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன் றன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான் கழுதுகண் படுக்கும் பானாள்
இரவினில் தூது கொண்டோ னிணையடி முடிமேல்
வைப்பாம்''

என அவர் வரலாற்றிற் சிறந்ததொரு பகுதியாகிய பரவையார் மனைக்குப் பரமனைத் தூதனுப்பிய செய்தியையுங் குறித்து ஆளுடைய அடிகளைக் கூறுங்கால் அவர் வரலாற்றிற் காணப்படும் சிறந்த பகுதிகளில் ஒன்றையேனுங் கூறாமல் மற்றும், வேம்பத்தூர் நம்பியும் கடவுண் மாமுனிவரும் முறையே தாமியற்றிய திருவிளையாடலிலும் திருவாதவூரடிகள் புராணத்திலும் கூறாததாகிய ''இறைவனை இடையறாது வழிபட்டு 'அழுது அவனடி யடைந்தார்' என்னுஞ் செய்தியைத் தான் படைத்துக் கொண்டு மேற்காட்டிய ''எழுதருமறைகள்'' என்னும் செய்யுளாற் கூறி இருப்பதைக் கூர்ந்து நோக்குங்கால் இது நுணுகி ஆராய்வதற்குரிய தொன்றென்பது புலனாகும்.

பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் அடிகளோடு தொடர்புடைய நான்கு படலங்களிலும் பிறவிடங்களிலும் திருவாசகக் கருத்துக்கள் பலவும், அடிகள் பலவும், தொடர்கள் பலவும் காணப்படுகின்றன. இதனால் இவர் அடிகள் வரலாற்றைக் கூறிய ஏனைய இருவரினும் திருவாசகமென்னும் தேன் கடலில் நன்கு திளைத்தவர் எனத் தெரிகிறது.

இனி, அடிகள் வரலாற்றைக் கூறுமுறையில் மற்றைய இருவரோடுஞ் சிற்சில பகுதிகளில் முரண்படுகின்றனரே எனின், அங்ஙனமே அவ்விருவரும் பலவிடங்களில் ஒருவரின் ஒருவர் மாறுபாடுகின்றனர். அடிகள் வரலாறு இம் மூவர் களாலும் பெரும்பாலும் திருவாசகத்திற் காணப்படும் ஆதரவுகளைக் கொண்டும் சிறுபான்மை செவிவழியாக வந்த செய்திகளைக் கொண்டும் ஆக்கப்பட்டதாகலின் இம் முரண் நேருதல் இயல்பே. ஆனால், ஒவ்வொருவர் மாறு பாட்டிற்கும் திருவாசகத்திற் சான்றுகள் உள. அவற்றைக் கொண்டு இதுதான் எனத் துணிந்து இம்மூவரும் வரை யறுத்துக் கூறினார்களில்லை. இதனை நோக்க நமது அடிகள் வரலாறு தெய்வச் சேக்கிழார் பெருமான் திரு வாயாற் கூறப்படாது போனது சைவவுலகம் செய்ததவக் குறைவு போலும். இனி, இம்மூவராலும் கூறப்படாதனவும் திருவாசகச் சான்றுகள் உள்ளனவுமாய பகுதிகளும் உள. அவற்றை நுணுகி ஆராய்ந்து காண்பது எம்மனோர்க் கியலாத தொன்றாயினும் என் புல்லறிவிற்குப் புலனாகிய தொன்றை இங்குக் குறிப்பதற்கு முன் ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாராய்ச்சி நமது நாட்டின்கண் தமிழ்மொழி தலை சிறந்து நின்ற ஒரு காலத்தில் அம்மொழியை ஐயந் திரிபறக் கற்று வல்ல புலவர் பெருமக்கள் தலையில் 'சிவாணு பூதிப் பெருஞ்செல்வர்' என்னுஞ் சுமையை ஏற்றி அவரியற் றிய நூல்களைப் பிள்ளையார்சுழி முதல் முற்றிற்று வரையில் வரிவரியாக எழுத்தெழுத்தாக நம்ப வேண்டுமென் னுங் கொள்கையை மேற்கொண்டு அறிவிற்கு ஓர் எல்லை கட்டிக்கொண்டு ஆராய்ச்சி என்னுஞ் சொல்லைக் கேட்டவள விலே தலை நடுக்கு மக்கள் சிலர்க்குக் கைப்பாக இருக்கும். ஆனால், இக்காலம் ஆராய்ச்சிக்கு மதிப்புத் தருகின்றது எனக் கருதி அதற்குத் தகுதி இல்லாத பலர் அத்துறையில் இறங்கி முறை தவறிச் செல்கின்றார் எனக் கூறாமலும் இருக்க இயலவில்லை. ஆராய்ச்சி வல்லுநருக்குப் பொது வாக இருக்க வேண்டிய குணங்கள் பல. அவை இயற்கை

அறிவின் கூர்மை, நன்கு கற்று வல்ல புலமை, பன்மொழிப் பயிற்சி, நடுவுநிலைமை, நாம் ஆராய்ச்சி அறிவாற் சிறந்துள்ளோம் என்னுந் தருக்கின்மை முதலிய பலவாம்.

இனி, சிறப்பாக வேண்டப்பெறுவதொன்றுண்டு. அது ஒரு ஆசிரியரைப்பற்றி ஆராயப்புகுந்தால் அவரியற்றிய நூல்களை எழுத்தெண்ணிப் படித்தல். அங்ஙனம் படித்த பின்னர் மேற்கூறிய பொதுக்குணங்களுடையார் ஆராய்ச்சிக்குத் தலைப்படவேண்டும்; இன்றேல் உண்மை புலனாதல் அரிதாம். அவ்வாராய்ச்சியுடையார் முடிவிலும் தவறு நேருதல் இயல்பாகலின் தாம் கண்டதே உண்மை என்றும் பிறர் அதனை முற்றும் நம்பவேண்டுமென்றும் கொள்ளுதலுஞ் சிறப்பாகாது. அங்ஙனங் கொண்டாராயின் மேற்காட்டிய அறிவிற்கு எல்லை கட்டுங் குழுவினருக்கும் இவருக்கும் வேறுபாடில்லை. அவர் முடிபின் வழுவினால் அவர் பெருமைக்கு நேர்ந்த இழுக்கொன்றுமில்லை. இற்றை நாளில் மாணவர்கள் பலர் ஒருநூலைப் படிக்கத்தொடங்கிப் பாயிரத்தைப்படித்து முடிப்பதற்கு முன்னரே அவ்வாசிரியர் காலம் முதலியவற்றை ஆராயத் தலைப்பட்டு விடுகின்றனர். திருக்குறள் கற்கப்புகுந்த ஒருவர் 'கடவுள் வாழ்த்திற்கடுத்த வான் சிறப்பு'ப்படிக்கும் பொழுதே கற்றுவல்ல புலவர் குழுவிற் சென்று 'அசட்டுப் புலவர்களே! திருவள்ளுவர் காலத்தைக் காண முடியாமல் விழிக்கின்றீர்களே யான் கண்டு கொண்டேன்' என்றார். புலவருள் ஒருவர் 'தம்பி! நேற்றுத் தானே என்னிடம் வந்து திருக்குறள் வாங்கிக் கொண்டு சென்றனை, இன்று எங்ஙனம் பொய்யா மொழியார் காலத்தை மெய்யாக உணர்ந்து கொண்டனை' என வினவினார். உடனே அவர் 'வான் சிறப்பில் துப்பாக்கி என்று வந்திருக்கின்றதே அது உங்கள் கண்ணுக்குப் புலப்படவில்லையா? என்று ''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கி'' என்னுங் குறளைக் கூறி ஆசிரியர் காலம் துப்பாக்கி என்னுஞ் சொல் நமது நாட்டிற்கு வந்த பின்னர்தான் என முடிவு கட்டினர்.

இவற்றை நோக்க ஆராய்ச்சி என்னுந் திருமகள் ஒரு பால் மேற்காட்டிய குணங்களமைந்த நல்லாரின் தூய உள்ளமாகிய அரங்கமேடையில் நடிக்கின்றாள். மற்றொருபால் அவள் பேய் வடிவெடுத்து அக்குணங்களில்லாத புன் மக்களிடம் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றாள். எங்ஙனமாயினும் உண்மை காணும் நோக்கத்தோடு கூடிய ஆராய்ச்சி வேண்டுமென்பது ஒருதலை. ஆராய்ச்சிக்குங் கருத்து வேற்றுமைக்கும் இடந்தராத நாடு நாடன்று. இற்றை ஞான்று நம் நாட்டிலுள்ள மக்கள் ஒரு சிலரின் குறுகிய நோக்கம் பற்றி இதனைச் சிறிது விரித்து எழுத நேர்ந்தது அறிஞர்கள் பொறுப்பாராக.

இனி மேற்குறிக்கின்றேனென்றதை ஈண்டுத் தருகின்றேன். அடிகளின் வரலாறு பெரும்பாலும் திருவாசகத்திலுள்ள ஆதரவுகளைக் கொண்டு எழுதப்பட்டது என முன்னரே காட்டப்பட்டது. அடிகள் தம்மை இறைவன் இறைவியோடும் வந்து ஆட்கொண்டானெனத் திருவாசகத்தில் பல விடங்களில் கூறியருளுகின்றார்; அவை,

"கூறுடைய மங்கையுந் தானும் வந்தருளி"

(கீர்த்தித் திருவகவல்)

"கருவா யுலகினுக் கப்புறமா யிப்புறத்தே
மருவார் மலர்குழன் மாதினொடும் வந்தருளி
அருவாப் மறைபயி லந்தணனா யாண்டு கொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ"

"நானுமென் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் தையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

(திருக்கோத்தும்பீ)

"அரையாடு நாக மசைத்தபிரா னவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்

உரையாடஉள் ளொளியாட ஒண்மாமலர்க் கண்களின்
நீர்த்
திரையாடு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ''

''கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவே யனவளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப்பிடித்தாட் கொண்டவா நயந்துநெஞ்சஞ்
சினவேற்கண் நீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ''
(திருத்தெள்ளேணம்)

''தெங்குலவு சோலைத் திருஉத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனிஉருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும்பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ''
(திருப்பொன்னூசல்)

''வணங்குமிப்பிறப் பிறப்பிவை நினையாது மங்கையர்
தம்மொடும்
பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத் தழுந்திநான்
பித்தனாய்த் திரிவேனைக்
குணங்க ளுங்குறி களுமிலாக் குணக்கடல் கோமளத்
தொடுங்கூடி
அணைந்து வந்தெனை ஆண்டுகொண் டருளிய அற்புத
மறியேனே''

''பொருந்தும் இப்பிறப் பிறப்பிவை நினையாது பொய்களே
புகன்றுபோய்க்
கருங்கு ழலினார் கண்களா லேறுண்டு கலங்கியே
கிடப்பேனைத்
திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத் திருவொடு
அகலாதே
அருந்து ணைவனா யாண்டுகொண் டருளிய அற்புத
மறியேனே''
(அற்புதப்பத்து)

என்பன. இங்ஙனம் எட்டு இடங்களிற் கூறியிருத்தலை நோக்குமிடத்து, இறைவன் ஞானாசிரியனாக வந்து ஆட்கொண்ட பின்னர், எங்கோ அம்மையுந் தானுமாக வந்து காட்சி தந்தருளியிருக்க வேண்டுமென்று கொள்ளின் அதிலே தவறில்லை. இவ்வுண்மையை அடிகள் வரலாறு கூறிய மூன்று ஆசிரியர்களுங் கூறினாரில்லை. ஈண்டு பெரிய புராணத்திற் காணப்படும் செய்தி ஒன்று கூர்ந்து நோக்கத் தக்கது. அது,

''வடிவுடை மழுவேந்தி மதகரிஉரி போர்த்துப்
பொடியணி திருமேனிப்புரி குழலுமை யோடுங்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகளிவ் வழிப்போந்த அதிசய மறியேனே''

என்று தொடங்கி ஆளுடைய நம்பிகள் அருளிச்செய்த திருக்கூடலை யாற்றூர்ப் பதிகத்தை ஆதரவாகக் கொண்டு சேக்கிழார் பெருந்தகை,

''வம்புநீ டலங்கண் மார்பின் வன்றொண்டர் வன்னி கொன்றைத்
தும்பைவெள் ளடம்பு திங்கள் தூயநீ ரணிந்த சென்னித்
தம்பிரா னமர்ந்த தானம் பலபல சார்ந்து தாழ்ந்து
கொம்பனா ராடல்நீ ளீடு கூடலை யாற்றூர் சார''

செப்பரும் பதியிற் சேரார் திருமுது குன்றை நோக்கி
ஒப்பரும் புகழார் செல்லு மொருவழி யுமையா ளோடும்
மெய்ப்பரம் பொருளா யுள்ளார் வேதிய ராகி நின்றார்
முப்புரி நூலுந் தாங்கி நம்பியா ரூரர் முன்பு''

''நின்றவர் தம்மை நோக்கி நெகிழ்ந்தசிந் தையராய்த் தாழ்வார்
இன்றியா முதுகுன் றெய்த வழிஎமக் கியம்பு மென்னக்
குன்றவில் லாளி யாருங் கூடலை யாற்றூ ரேறச்
சென்றதிவ் வழிதா னென்று செல்வழித் துணையாய்ச் செல்ல''

(ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்)

என வரலாறு கூறியருளினர். என்பது.

இனி, மற்றொன்றும் இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். நமது அடிகள் தாம் பாடியருளிய திருவாசகத்துள் தமது குறைபாடுகளைப் பலபடக் கூடியருளுவதைக் காண்கிறோம். அவற்றுள் ஒன்று தமது பொய்யைக் கடிந்து கொண்டது.

திருவாசகத்தின் முன்னுள்ள 'சிவபுராணம்' முதலிய நான்கு பகுதிகளிலும் மற்றுமுள்ள அறுநூற்று ஐம்பத்தெட்டுப் பாட்டுக்களிலும் சற்றேறக்குறைய முப்பத்து மூன்று இடங்களில், தமது பொய்யை நினைந்து வருந்துதல் காணப்படுகின்றது. அவற்றுள் தலைமை தாங்கி நிற்பது "விச்சுக் கேடுபொய்க் காகாதென்றிங் கெனை வைத்தாய்" என்பது இதன் பொருள்! பொய்க்கு—பொய் என்ற மரவர்க்கங்கள் உலகத்திலே தோன்றி அழியாமல் நிலை பெறுவதற்கு; விச்சுக்கேடு ஆகாது—விதை முதலில்லாமற் போதல் நன்றன்று; என்று—என்று தேவரீர் திருவுளங்கொண்டு; இங்கு இந்நிலவுலகத்தில்; எனைவைத்தாய்— அடியேனை வைத்திருக்கின்றீர்!, என்பது. இதிலிருந்து உலகத்திலே தோன்றி வளர்ந்து வருகின்ற பொய் அனைத்திற்கும் தாமே மூல காரணம் என அடிகள் கருதி வருந்தினார் என்பது புலப்படுகின்றதல்லவா? பொய் என்பது ஐந்து பெருந்தீவினைகளுள் ஒன்று என அறநூல்கள் விதித்தன. அது வீடுபேற்றுக்குத் தடையாயுள்ளதென்பதை "போவோம் காலம்வந்தது காண் பொய்விட்டுடையான் கழல் புகவே"என அடிகள் கூறுவதனாலும், பொய் யுரைக்கா துன்னடிக்கே போதுகின்றேன்" எனத் திருநாவுக்கரசர் கூறுவதனாலும் அறியலாம்.

மேற்காட்டியவற்றால், அடிகள் தமது வாழ்க்கையில் ஏதோ ஒரு சிறு பொய்க்கு ஆளாகி, "தினைத்துணையாங் குற்றம்வரினும் பனைத்துணையாக், கொள்வர் பழிநாணுவார்"என்ற திருக்குறளின்படி, அச்சிறு பொய்யை மலையளவாக் கருதியே அவ்வாறு வருந்தியிருக்க வேண்டுமென்று கருதினால் அது மிகையாகாது.

இனி, அப்பொய் யாதாயிருக்கலாமெனச் சிந்திப்போம். அடிகள் குருவாக வந்து இறைவன் ஆட்கொண்டு மறைந்தருளியபின், தம்மைமறந்து குதிரை வாங்கக் கொண்டுபோன பொருள் முழுவதையும் திருக்கோயிலின்பொருட்டுச் செலவு செய்ததையறிந்த பாண்டியன் கடுமையாக ஓர் ஓலை எழுதி அனுப்ப, அதனைப் பார்த்து நெடுநேரம் சிந்தித்து, தம் நினைவுவர, தாம் பொருளைச் செலவு செய்தது தவறு என்று கருதி, (இதன் விரிவு பின்னர் அறியப்படும்) இறைவன், தம்மைக் கைவிட மாட்டான் என்ற நம்பிக்கையால், மன்னனிடஞ் சென்று, குதிரைகள் வாங்கிவிட்டேன்; பின்னர் வரும் என்று சொல்லியிருக்கவேண்டும் அவர் குறித்த காலத்தில் குதிரைகள் வாராமையால் அரசனால் ஒறுக்கப்படுகின்றார். எனவே இந்தப் பொய்யை நினைந்துதான் அடிகள் அவ்வாறு வருந்தியிருக்க வேண்டும். இதுவும் அந்த மூன்று ஆசிரியர்களாலும் கூறப்படவில்லை. கூறாததுமட்டுமல்ல; இறைவன் அடிகளாருக்கு அசரீரியாக "நீ பாண்டியனிடம் குதிரைகள் வாங்கிவிட்டேன்; இன்ன காலத்தில் வரும், என்று சொல்லிவிடு; நாம் குதிரைகள் கொண்டுவருகிறோம்" என்று சொன்னார் எனக் கூறுகிறார்கள். அங்ஙனமாயின் குறித்த காலத்திற் குதிரைகள் வராவிடில் அக்குற்றத்திற்குப் பொறுப்பாளி இறைவனேயன்றி; அடிகளல்லர் என்பது சிறிது சிந்திப்பவர்க்கும் புலனாகாமற் போகாது. எனவே, இச்செய்தியும் அந்த ஆசிரியர்களாற் கூறப்படாதது என்க.

இனி இம்மூன்று ஆசிரியர்களுள் ஒவ்வொருவரும் கூறியிருக்கும் அடிகளின் வரலாற்று அமைப்பில் ஆராய்ச்சியாளர்க்குப் பிழையாகத் தோன்றும் ஒவ்வொன்றை இங்குக் காட்டுகின்றேன்.

மணிவாசகப் பெருமானார் பாண்டி மன்னன் கட்டளைப்படியே அவன் பண்டாரத்தினைத் திறந்து வேண்டும் பொருளை எடுத்து ஒட்டகத்தில் ஏற்றி முன்னே அனுப்பிவிட்டுத் தாம் திருக்கோயிலுட் சென்று ஆலவாயடிகளை வணங்கி நின்று,

"ஒன்று வேண்டுமிப் பொருளெலா முனக்கு மைம்பொறியும்
வென்று வேண்டுநின் னன்பர்க்கு மாக்குக வெள்ளி
மன்று வேண்டிநின் றாடிய வள்ளலென் குறையீ(து)
என்று வேண்டிநின் றேத்துவார்"
(திருவிளையாடல், வாதவூரடிகளுக்குபதேசித்த படலம்)

எனப் பரஞ்சோதி முனிவர் கூறுகின்றார். அடிகளின் ஒழுக்கத்திற்கு இது பொருந்துமா? என அறிஞர் ஆராய்வாராக பின் அப்பொருளை அங்ஙனஞ் செலவழித்தது பொருந்துமோ எனின், "பேய்க்கோட்பட்டார் செயலனைத்தும் பேய்ச்செயலே ஆதல்போல, திருவருளால் விழுங்கப்பட்ட அடிகளின் செயலும் அத்திருவருளின் செயலேயாகுமென்க. இங்ஙனம் அவர் அருட்குரவன் பார்த்த பார்வையால் தம்மை முற்றும் மறந்திருந்தன ரென்பதும். பாண்டியன் திருமுகம் வந்த பின்னரே" தன்நினைவு வந்து தாம் செய்த செயலுக்கு வருந்தினாரென்பதுமாகிய உண்மையை,

'இத்திரு முகத்தை ஆங்க ணெய்திய தூதர் காட்டப்
பத்திசெய் தடைவின் வாங்கிப் பாசுரங் காணு முன்னம்
உத்தம மன்னன் சித்த முணர்ந்தனர் நெடிது யிர்த்தார்
புத்தியு ளிளைத்தார் சாலக் கலங்கினார் புலம்பி னாரால்"

"தென்னவ னமைச்ச னேயா னென்னகா ரியம்செய் தேன்மேல்
என்னதாய் விளையுங் கெட்டே இவுளிகொள் வதற்கே வந்தேன்
பொன்னையே யழித்தே னந்தோ புகலவோர் மாற்ற முண்டோ
மன்னவற் பிழைத்த லாகா மற்றினி ஆவ தென்கொல்"
(ஞானோபதேசஞ் செய்த திருவிளையாடல்)

என்னும் வேப்பத்தூரார் திருவிளையாடற் செய்யுட்களால் அறிக.

இனி, ஆளுடைய அடிகள் தம்மை ஆட்கொண்ட அருட்குரவன் 'மாணிக்கவாசக' நில் எனக் கூறி மறைந்த பின்னர்

கண்களினின் றும் அறிவி பொழிய அழுது விம்மி அரற்றித் திருவாசகம் ஓதத் தொடங்கினாரென்றும் அப்பொழுது பாடிய திருப்பதிகங்கள்.

''மாறிநின் றென்னை யென்னு மாறிலொண் கோயிற் பத்துத்
தேறல்வண் புணர்ச்சிப் பத்துச் செத்திலாப் பத்து மற்றும்
ஆறிய பிரார்த்த னைப்பத் தாசைப்பத் துபிரு ணிப்பத்(து)
ஏறிய புலம்பல் வாழாப் பத்தெண்ணப் பத்தெ டுத்தார்''

''அரும்பெரு நகரி னிற்போந் தவ்வயிற் றிகழ்வ கண்டே
பொருந்துவம் மனையே சுண்ணங்கோத்தும்பீ
புகழ்த்தெள் ளேணந்
திருந்துபூ வல்லியுந்தி தோணோக்கஞ் சிறந்த பாவை
முரண்கடி சதக மெய்யென் றோதினா ரோதப் புக்கார்''

(ஞானோபதேசஞ் செய்த திருவிளையாடல்)

என்றும் வேம்பத்தூரார் கூறுகின்றார். இவர் அப்பதிகங்களுள் திருவம்மானையில்

''பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய்''

எனவும்,

'இந்திரனு மால்அயனும்' என்று தொடங்குந் திருப்பாட்டில் 'பந்தம்பரியப் பரிமேற் கொண்டான்' எனவும் 'பெற்றி பிறர்க்கரிய' என்னும் முதலையுடைய திருப்பாட்டில் 'கொற்றக் குதிரையின்மேல் வந்தருளி' எனவும் திருப்பூவல்லியில்,

''திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாட்டல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ''

எனவும்,

''மாவார வேறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ''

எனவும் ஆளுடைய அடிகள் அருளியிருக்கின்றதனால் இவ்விரண்டு பதிகங்களும் ஆண்டவன் அடிகளின் பொருட்டு நரிகளைப்பரிகளாக்கிக்கொண்டு குதிரை வீரனாக வந்ததும், அடிகளும் வந்தியுமாகிய இருவர் பொருட்டும் மண்ணெடுக்குங் கூலியாளாக வந்து பாண்டியனாற் பிரம்படிபட்டு மறைந்ததுமாகிய நிகழ்ச்சிகள் நடந்த பின்னரே பாடப் பெற்றனவாதல் வேண்டுமெனக் கூர்ந்து நோக்கிலரெனக் கூறின் அது மிகையாகாதெென நினைக்கிறேன். இங்கு அன்பர்கள் உள்ளத்தின்கண் ஒன்றைப் பதித்து வைத்துக் கொள்ள வேண்டுகின்றேன். அது என்னையெனின் இங்ஙனம் ஆசிரியர்கள் பிழை பாட்டினை எடுத்துக் காட்டுதலால் அவர் புலமை, பெருமை முதலியவற்றிற்கு இழுக்கு நேர்ந்து விட்டதென்றாதல், அத்தவறுகளை எடுத்துக் காட்டுகின்றவர்கட்கு அமையாததொரு பெருமை வந்து விட்டதென்றாதல் எண்ணாததுடன் மக்கள் எளிதிற் செய்தற்கரிய வினைகளை மேற்கொள்ளின் அதிற்பிழை நேருதல் இயல்பு என்பதாகும்.

இனி, இப்பரஞ்சோதி முனிவரும், வேம்பத்தூர் நம்பியும் மணிவாசகப் பெருமான் வரலாறு ஒன்றையே கூறும் நோக்கத்தோடு நூல் செய்யவில்லை. ஆலவாயின்கண் நிகழ்ந்த ஆண்டவனருள்விளையாடல்களைக் கூறியவர்கள், அடிகளின் வரலாறு அம் மதுரைப்பதியின்கண் தொடர்புள்ளவரையிற் கூறி எஞ்சிய பிற்பகுதியைச் சுருக்கமாகக்கூறி முடித்தனர். கடவுண்மா முனிவர் ஒருவரே அடிகளின் வரலாறு ஒன்றையே கூறும் கருத்தோடு 'திருவாதவூரர் புராணம்' எனப் பெயரிட்டுக் கொண்டு நூல் பாடிமுடித்தவர். இவர் 'கல்யாண ஆரவாரத்தினால் தாலி கட்ட மறந்து விட்டார்' (இது தவறான பழமொழி; 'தாலி காட்ட மறந்தார்'

என்பது தான் தவறில்லாதது.) என்னும் பழமொழிக்கு இலக்காக 'மாணிக்கவாசகர்' என்னும் பெயரையே கூற மறந்துவிட்டனர். ஒரு பெரியார் வரலாறு கூறவந்த ஒரு ஆசிரியர் அவருடைய சிறந்ததொரு பெயரையே கூறாது விட்டனரென்பதை நோக்க வியவாதார் யார்? இஃது ஆராய்ச்சி வல்லுநருக்கு ஒரு பெரு விருந்தன்றோ?

இனி, இம்மூன்று ஆசிரியர்களுள் பரஞ்சோதி முனிவரென்பார் ஏனைய இருவரினும் திருவாசகத்தில் நன்கு பயின்றவர் என முன்னர்க் குறித்ததைச் சிறிது ஆராய்ந்து மேற்செல்வோம்.

# 2. திருவாசகமும், : :
# : : பரஞ்சோதி முனிவரும்.

அடிகள், இறைவன் திருவருளைப் பெறுவதற்குத் தாம் எவ்வாற்றானும் தகுதியுடையவரல்லரென்றும், அங்ஙன மிருக்கவும் அவ்வாண்டவன் தன் பெருங்கருணையினால் அருட்குரவனாகி எளிவந்து தம்மை வலிய ஆண்டுகொண்டு ஆராவின்பம் அளித்த செயல்,

"பெரியார்க்குச் செய்யுஞ் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
பூமே லிசைமுரலு மூர அதுவன்றோ
நாய்மேல் தவிசிடு மாறு" (பழமொழி-75)

என்றாங்கு நாய்க்குத் தவிசிட்டதை ஒக்குமெனவும் கருதி இக்கருத்தைத் தாமருளிய திருவாசகத்திற் பல விடங் களிற் கூறியருளுகின்றார். அக்கருத்தை விளக்கும் பாட்டுக் கள்,

"கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்,
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே,
காட்டா தனவெல்லாம் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாம் கேட்பித் தென்னை,
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டா
னெம்பெருமான் செய்திட்ட விச்சை தானே"
(திருச்சதகம்-28)

"ஒன்றாய் முளைத்தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த
என்றாதை தாதைக்கும் எம்மனைக்குந் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ."
(திருக்கோத்தும்பீ-8)

'பூமே லயனோடு மாலும் புகலரிதென்
றேமாறி நிற்க வடியே னிறுமாக்க
நாய்மேற் றவிசிட்டு நன்றாப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ''

(திருக்கோத்தும்பீ-20)

'நானாடி யணைவோனொரு நாய்க்குத்தவி சிட்டிங்
கூனாருடல் புகுந்தானுயிர் கலந்தானுளம் பிரியான்
தேனார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை

யுறைவான்

வானோர்களு மறியாததோர் வளமீந்தன னெனக்கே''

(உயிருண்ணிப்பத்து-2)

'கற்றறியேன் கலைஞானங் கசிந்துருகே னாயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்து
உற்றிறுமாந் திருந்தேனெம் பெருமானேயடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே''

(திருவேசறவு-5)

''செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே''

(அச்சோப்பதிகம்-9)

என்பன. இங்ஙனம் ஆறு இடங்களில் அடிகள் கூறியருளி யிருப்பதைக் கூர்ந்து நோக்கின் அவர் திருவுள்ளத்தில் இடையறாது இக்கருத்து நின்று நிலவிக்கொண்டிருந்திருக்குமென்பது ஒருதலை. இவ்வுயரிய கருத்தை அடிகள் கூற்றாக வைத்து வேம்பத்தூர் நம்பியேனும், கடவுண் மாமுனிவரேனும் தங்கள் நூலில் யாண்டும் கூறினார்களல்லர். ஆண்டவன் அருட்குரவனாய்ப் போந்து அடிகளுக்கு அரும் பொருளை அறிவுறுத்தி அடியார்களோடும் மறைந்தருளிய பின்னர் மணிவாசகப் பெருமானார் வருந்தும் பகுதியில்,

''கனவில்வருங் காட்சியெனக் கருணை மூர்த்தி
காட்டிமறைத் தலுமன்பர் கலக்கத் தாழ்ந்து
கனவுகொல்லோ கனவுகொல்லோ இன்று நாதன்
ஞமலிக்குத் தவிசிட்ட நலம்போ லென்னை
நினைவரிய திருமேனி காட்டி ஆண்டு
நீத்ததையென் றையுற்று நெஞ்சந் தேறி,
இனவடியா ருடன்கூட்டா தேகி னாயே
என்னையுமென் வினையையுமிங் கிருத்தி எந்தாய்''
(வாதவூரடிகளுக்குபதேசித்த படலம்-54)

என அடிகள் கூற்றாக வைத்துப் பரஞ்சோதி முனிவர் இக் கருத்தை அழகுறப் பாராட்டியிருப்பதுடன் இன்ன சமயத் திற்றான் அடிகளுக்கு இக்கருத்துத் தோன்றியிருக்க வேண்டு மெனத் தங்கூர்த்த மதியாலாய்ந்து அறிந்து கூறியிருப்பது போற்றத்தகுந்ததொன்றாம்.

இன்னும் இச்செய்யுளின் ஈற்றடியாகிய 'இனவடியாரு டன் கூட்டாதேகினாயே யென்னையுமென் வினையையுமிங் கிருத்தியெந்தாய்' என்பது திருவாசகத்திலுள்ள,

''மானேர் நோக்கி உடையாள்பங்கா மறையீறறியா
மறையோனே,
தேனே யமுதே சிந்தைக்கரியாய் சிறியேன்
பிழைபொறுக்கும்,
கோனே சிறிதே கொடுமைபறைந்தேன் சிவமா
நகர்குறுகப்
போனா ரடியார் யானும்பொய்யும் புறமே போந்தோமே''
(திருச்சதகம்-85)

''பொருத்த மின்மையேன் பொய்மை யுண்மையேன்
போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்,
வருத்த மின்மையேன் வஞ்சம் உண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே,

அரத்த மேனியா யருள்செ யன்பரு நீயும்
அங்கெழுந் தருளி யிங்கெனை,
இருத்தி னாய்முறை யோஎன் னெம்பிரான் வம்ப
னேன்வினைக் கிறுதி யில்லையே''
(திருச்சதகம்-93)

என்னுஞ் செய்யுட்களில் 'போனாரடியார் பொய்யும் யானும் புறமே போந்தோமே' 'அருள்செய்யன்பரு நீயுமங் கெழுந் தருளி யிங்கெனை இருத்தினாய் முறை யோவென்னெம் பிரான் வம்பனேன் வினைக்கிறுதியில்லை' என்ற அடிகளைத் தழுவியிருத்தல் காண்க. இன்னும் பரஞ்சோதி முனிவர், அடிகள் அருட்குரவன் மறைந்ததற்கு வருந்தும் அப்பகுதியிலேயே,

''வஞ்சவினைக் கொள்கலனாம் உடலைத் தீவாய்
மடுக்கிலேன் வரையுருண்டு மாய்ப்பே னல்லேன்
நஞ்சொழுகு வாளாலுங் குறைப்பே னல்லேன் நாதனே
அதுவுநின துடைமை யென்றே
அஞ்சினேன் றானேயு மழியா தாவி லையயனே
நினைப்பிரிந்தும் ஆற்ற கில்லேன்'
என்செய்கோ எந்தாயோ எந்தா யோவென்று
இரங்கினார் புரண்டழுதா ரினைய சொல்வார்''
(வாதவூரடிகளுக்குபதேசித்த படலம்-55)

எனப் படிப்போருள்ளம் பாறையாயினும் நெக்குவிட்டுருகுமாறு கூறியிருப்பது திருவாசகத்திலுள்ள,

''வினையென் போலுடை யார்பிற ராருடை யானடி
நாயேனைத்
தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப் பன்றுமற்
றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்து
நான்முட்டிலேன் தலைகீறேன்
இனையன் பாவனை இரும்புகல் மனஞ்செவி
இன்னதென் றறியேனே''
(திருச்சதகம்-37)

"ஓய்வி லாதன உவமனி லிறந்தன ஒண்மலர்த் தாடந்து
நாயி லாகிய குலத்தினுங் கடைப்படு மென்னைநன்
னெறிகாட்டித்
தாயிலாகிய திருவருள் புரிந்தவென் தலைவனை
நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன்
செழுங்கடல் புகுவேனே"
(திருச்சதகம்-39)

"அறுக்கி லேனுடல் துணிபடத் தீப்புக் கார்கி
லேன்றிரு வருள்வகை யறியேன்,
பொறுக்கி லேனுடல் போக்கிடங் காணேன் போற்றி
போற்றியென் போர் விடைப்பாகா,
இறக்கி லேனுனைப் பிரிந்தினி திருக்க வென்செய்
கேனிது செய்கவென் றருளாய்,
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ் திருப்பெ
ருந்துறை மேவிய சிவனே"
(செத்திலாப்பத்து-6)

என்னுந் திருப்பாட்டுக்களின் கருத்தை முற்றுந் தழுவி நிற்றல் காண்க. இன்னும் அப்பரஞ்சோதியார் பாட்டில் "நாதனே அதுவு நினதுடைமை யென்றே அஞ்சினேன்" என்னுந் தொடருக்கு,

"அன்றே யென்ற னாவியு முடலு முடைமையெல் லாமுங்
குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே
கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ வெண்டோள் முக்க
ணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ
விதற்கு நாயகமே"
(குழைத்தபத்து-7)

என்னுந் திருவாசகச் செய்யுள் சான்றாதல் காண்க. மீண்டும் அடிகளின் கூற்றாக மேற்காட்டிய பகுதியிலேயே 'வஞ்சவினை' என்னுஞ் செய்யுளை அடுத்துப் பரஞ்சோதியார்,

"வறிய வனா மொருபிறவிக் குருடன் கையில் வந்தபெரு
விலைமணிபோல் மழலை தேறாச்
சிறியவனா மொருமதலை கையிற் கொண்ட
செம்பொன்மணி வள்ளம்போல் தேவர் யார்க்கும்
அறிவரியாய் சிறியேனை யெளிவந் தாண்ட
அருமையறி யேன்துன்பத் தழுவத் தாழப்
பிறிவறியா வன்பரொடு மகன்றாய் கல்லாப் பேதையேன்
குறையலதெம் பிரானா லென்னே"
(வாதவூரடிகளுக்குபதேசித்த படலம்-56)

எனக் கூறுகின்றார். இச்செய்யுளிலுள்ள 'மழலை தேறாச் சிறியனா மொருமதலை கையிற் கொண்ட செம்பொன்மணி வள்ளம் போல்'' என்னுந் தொடர் திருவாசகத்திலுள்ள,

"மையிலங்குநற் கண்ணிபங்கனே வந்தெனைப்பணி
கொண்டபின்மழக்
கையிலங்குபொற் கிண்ணமென்றலால்
அரியையென்றுனைக் கருதுகின்றிலேன்
மெய்யிலங்குவெண் ணீற்றுமேனியாய்
மெய்ம்மையன்பருன் மெய்ம்மைமேவினார்
பொய்யிலங்கெனைப் புகுதவிட்டுநீ போவதோசொலாய்
பொருத்தமாவதே"
(திருச்சதகம்-62)

என்னுந் திருப்பாட்டின் முன்னிரண்டடிகளையும், 'பிறிவறியா அன்பரொடும் அகன்றாய்'' என்னுந் தொடர் திருவாசகத்தில் அடைக்கலப்பத்தில் (9) வது பாட்டின் 'பிறிவறியா அன்பர்' என்று தொடங்கும் அடியினையும் 'கல்லாப் பேதையேன் குறையலதெம் பிரானாலென்னே' என்னுந் தொடர்,

'என்னாலறியாப் பதந்தந்தா யானதறியா தேகெட்டேன்
உன்னாலொன்றுங் குறைவில்லை'' —(ஆனந்தமாலை-2)

என்ற அடிகளையும், உயிருண்ணிப் பத்தின் (10) வது பாட்டாகிய 'வான்பாவிய' என்னும் முதற்குறிப்பை யுடையதின் ஈற்றடியாகிய 'நான் பாவியனானாலுனை நல்கா யெனலாமே'' என்னும் அடியினையும் சொல்லாலும் பொருளாலும் முற்றுந் தழுவிச் செல்லல் காண்க.

இனி, அடிகள் 'முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே' (திருவெம்பாவை 9) என அருளிச் செய்ததைப் பரஞ்சோதி முனிவர்,

''முன்னா முதுபொருட்கும் முன்னா முதுபொருளாய்ப்
பின்னாம் புதுமைக்கும் பின்னாகும் பேரொளியாய்''
(நரிபரியாக்கிய படலம்-20)

எனக் கூறிச் செல்கின்றார்.

இன்னும் அடிகள்,

''குழைத்த சொன்மாலை கொண்டருள் போற்றி''
(போற்றித்திருவகவல்)

''சீவார்ந்து ஈமொய்த்து அழுக்கொடு ... ... ...
... ... ... ... ... ... ...
ஆவா வென்ன ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே''
(ஆசைப்பத்து-3)

'வெஞ்சே லனைய ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
பஞ்சே ரடியாள் பாகத் தொருவா பவளத் திருவாயால்
அஞ்சே லென்ன ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே'
(10)

என அருளியவற்றை முறையே,

ஆளுடைய அடிகள் பல விடங்களில் 'நாயேன்' 'நாயனை' யேன்' என்றும் 'நாயினுங்கடையேன்' என்றும் ஒன்றுக் கொன்று முரண்பட்ட பொருள்களையுடைய தொடர் களைக் கூறுமாறு என்னை? இன்னும் ஒரே அடியில் 'நாயிற் கடையாம் 'நாயேனை' (குழைத்துபத்து 8) எனக் கூறி யருளியதற்குப் பொருள் யாது என அறிந்துகொண்டு மேற் செல்லுவோம்.

பெரியோர்கள் மக்களிடத்தில் பெரும்பாலும் இயல்பாய் அமைந்து கிடக்கும் இழிகுணங்களைத் தம்பாலேற்றிக் கூறுவர். அதனால் 'நாயினுங் கடையேன்' என்று கூறுங் கால் நாயினிடத்தில் இயல்பாக அமைந்து கிடக்கும் குணங் கள் மக்களிடத்தில் அங்கன மில்லாமலிருத்தல் வேண்டும். அவை எவையென ஆராய்வோம்.

1. தன் தலைவனைப்போலவே பல்லாயிர மக்கள் உடை முதலியவற்றால் புனைந்து கொண்டு வரினும் சிறிதும் ஐயுறாது விரைந்து அவனை அறிந்து கொள்ளும் இயல் புடைமை.

2. ஒரு பிடி சோறு ஒரு காலத்தில் ஒருமுறை ஒருவன் உதவினானாயின் அவனைத் தன் வாழ்நாள் உள்ளவரையும் நினைவிற்பதித்து வைத்திருத்தலுடன் அவனை எங்கேனும் காணின் தான் எத்துணைத் துன்பநிலையிலிருப்பினும் அதனைச் சிறுதும் பொருட்படுத்தாது தன் வாலைக் குழைத்து இன்முகங்காட்டல் முதலியவற்றால் தன் நன்றி அறிவை அவனுக்குக் காட்டுதல்.

3. தன் தலைவன் ஒரு பணியின்கண் தன்னை ஏவினா னாயின் அப்பணி தன்னாற் செய்தற்கரிதாயினும் அதிற் செல்லின் தன் உயிர்க்கு ஈறு நேருமாயினும் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அப்பணியிற் செல்லுதல். இம் மூன்று பண்புகளும் நாயின்கண் இருத்தல் கண்கூடு.

இனி இப்பண்புகள் மக்களிடத்தில் எம்மட்டிற் காணப் படுகின்றன என்பதைப் பார்ப்போம்.

மக்களிற் சிலர் தலைவன் ஒருவன் உளன் என்னும் உணர்ச்சியேயின்றித் திரிகின்றனர். சிலர் தாமே தலைவர் எனத் தருக்குவர். சிலர் பொருள் முதலியவற்றாற் சிறிது சிறந்த ஒருசில மக்களையே தலைவராகக் கருதித் தடுமாறு கின்றனர். சிலர் இறைமைக் குணங்களிலராயினாரைத் தலைவரெனத் திரிபுணர்ச்சி கொண்டு திரிகின்றனர். சிலர் தலைவனொருவன் இருக்கலாம்; ஆனால் அவன் இவன் தானெனத் துணிந்து கூற இயலாது என்பர். மற்றொரு சிலர் இன்ன இன்ன இலக்கணமுடையவன் தலைவனாவான் என அறிந்துவைத்தும் "ஆரா ரெனக்கென்ன போதித்து மென்ன என்னறிவினை மயக்கவசமோ" என்னுந் திண்மையிலராய் மதிநுட்பம் நூலோடமைந்து கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்ப மொழிவதாகிய சொல்வன்மை உடையராய ஒருவர் வந்து 'நீவிர் கருதும் இலக்கணமுடையவன் தலைவனல்லன். இவ் விலக்கணங்களையுடையவன்றான் தலைவன்' என வேறு சில இலக்கணங்களைக் கூறினாராயின் மயங்கி விடு கின்றனர். இங்ஙனம் மக்கள் தந்தலைவனை உள்ளவாறு உணர்ந்து கொள்ளாது தலைதடுமாறுகின்றனர்களாகலின் தன் தலைவனை நன்குணர்ந்து கொள்ளும் நாயினுங் கடை யராயினர்.

இனி இருட்டறையிற் குருட்டுச்சேய்போற் கிடந் துழன்ற உயிர்களைத் தன் பெருங் கருணையால் எடுத்து உடல், கரணம், உலக முதலியவற்றை உதவி அவ்வுயிர்கள் நிலைத்தற் பொருட்டு ஒன்றாயும், பொருள்களை அறியும் படி அறிவித்தற் பொருட்டு வேறாயும், அங்ஙனம் அறியி னும் அறிந்தவாறே நுகரும் சுதந்தரம் அவைகட்கு இன்மை யினால் அவற்றை நுகர்வித்தற் பொருட்டு உடனாயும் நின் றருளி ஒவ்வொரு மாத்திரையும் உண்டி முதலியவற்றால் ஓம்பியருளுந் தலைவனது கைம்மாறில்லா நன்றியை ஏனைய உயிர்களினும் சிறந்து பாராட்டுதற்குரியவர் பகுத் தறிவாகிய மனவுணர்வைப் பெற்ற மக்களேயன்றோ? அவர்

களிற் பெரும்பகுதியினர் அங்ஙனம் நினைக்கின்றார்களில்லையாதலின் அவர்கள் ஒரு பொழுது உணவு கொடுத்தவனைத் தன்னுயிர் உள்ளவளவும் நினைத்துப் பாராட்டும் நாயினுங் கடையராயினர்.

இனி, உயிர்கட்கு இங்ஙனம் பொதுவகையால் உதவிய தன்றியும், மக்கட்குச் சிறப்புவகையாகத் தன் திருவருள் பெற்ற பெரியார் பலர் வாயிலாகப் பல அற நூல்களையும் அறிவு நூல்கள் பலவற்றையும் அளித் தருளினர். அங்ஙனம் அளித்தருளிய. அங்ஙனம் அளித்தருளிய அவ்வாண்டவன் அவற்றுள் அறநூல்களால், படைப்பு நோக்கத்திற்கு மாறு படாமல் ஆடவர் ஒவ்வொருவரும்.

'தோலுங் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையுமுடை'' ய தனது தொன்மைக் கோலமேபோல 'நற்குணம் நிறைந்த கற்புடை மனைவி'யர் ஒவ்வொருவரைப் பெற்று, 'ஓராவிற்கு இருகோடு தோன்றினாற் போலும்' உடலிரண்டும் உயிரொன்றுமாகி இல்வாழ்கையினின்று, அறிவறிந்த மக்களைப் பெற்று, அன்புருவினராய், விருந்து புறந்தந்து, இன்முகமும் நன்மொழியும் தூய உள்ளமுமுடையராய், செய்ந்நன்றி மறவாதவராய், நடுநிலைமை பிறழாதவராய், அடக்கமாகிய அணிகலனை அணிந்து, ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பிப் பிறன் மனைவியை விரும்பி நோக்குவதிற் குருடராய் பொறையுடைமையைப் பொன்னே போற் போற்றுபவராய், அழுக்காற்றினால் இழுக்காதவராய், வெஃகாமையை வெஃகியவராய், புறங்கூறல், பயனிலகூறல், ஆகிய இவற்றில் மூங்கையராய், தீவினைக்கு மிகவும் அஞ்சி உலக நடையையறிந்து, குறியெதிர்ப்பையின்றி வறியாற்கு வேண்டுவன கொடுத்து, புகழுடம்பு பொலிவுறுமாறு புரிந்துவாழ அறிவுறித்தினர்.

இங்ஙனம் பொறிகளால் நுகரப்படும் பொருள்களை விடாது வைத்து "எல்லாம் உன்னுடைமையே எல்லாம்

உன்னடிமையே'' என்னும் இடையறாச் சிந்தையுடன் அவற்றை நுகரும் வலியில்லாதவன்.

'பொருளு மின்பமு மொரீஇ யருளொடு
பொறையு மாற்றலு நிறைபே ரொழுக்கமும்
வாய்மையுந் தவமுந் தூய்மையும் தழீஇ
ஓரறி வுயிர்க்கு முறுதுய ரோம்பிக்
காலோய் நடைய னாகித் தோலுடுத்(து)*
என்பெழு மியாக்கையன் றுன்புறத் துலங்காது
வரையுங் கானு மெய்திச் சருகொடு
கானீ ரருந்திக் கடும்பனிக் காலத்து
மாநீ ரழுவத் தழுங்கி வேனிலில்
ஐவகை யழலின் மெய்வருந்த வருந்தி
இவ்வகை யொழுகு'' தல் வேண்டும். எனவும் அறிவுறுத்தருளினர்.

இனி, அவ்விறைவன்றானே உயிர்கள் தன்னையறிந்து அடைய வொட்டாமல் மறைத்து நிற்கும் மலத்தின் இலக்கணங்கள் இவையெனவும், உயிர்களின் இயல்கள் இவை எனவும், தனது தன்மை இஃது எனவும் நமக்கு அறிவு நூல்கள் வாயிலாக விளக்கி யருளினான். இவ்வாற்றான் இன்ன இன்ன செயல்களை மேற்கொள்ளக் கடவீர் எனத் தலைவன் பணித்தும் அச்செயல்களும் மக்களாற் செய்யக் கூடியனவு மாயிருந்தும் அவைகளை மேற்கொள்ளாமல் பிறதுறைகளில் சென்றுழலும் மக்கள், தன்னால் இயலாத தொன்றைத் தன் தலைவன் பணித்தானாயினும் அதனை விரைந்து மேற்கொள்ளும் நாயினுங் கடையராயினர்.

இன்னும் நாயின் தலைவன் அதற்கு இடும் பணியின் பயன் தன்னதாதலையும், உயிர்களின் தலைவன் அவைகளுக்கு இடும் பணியின் பயன் அவற்றிற்கே உரியதாதலையும் உய்த்துணரின் நாயினும் மக்கள் எத்துணைக் கடையராவர் என்பது நன்கு புலனாகும்.

நான்காவதாக நாயினிடத்துப் பிறிதொரு அரிய குணங் காணப்படுகின்றது; அதாவது:- 'தன் தலைவன் நேரில் நின்று யாதொரு காரணமுமின்றித் தனக்கு எத்துணைக் கொடிய இன்னலை விளைப்பினும் அதனை ஒரு பொருட் படுத்தாது அத்துன்பம் தன்னுடலின் கண்ணதாயிருக்கும் போழ்தும் தன்வாலைக் குழைத்து அவனுக்குத் தன் நன்றி யறிவைக் காட்டுதல்' ஆகும். இவ்வுண்மையை,

"யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும் யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கு நாய். (நட்பாராய்தல்)

என்னும் நாலடியார்ச் செய்யுளும் நன்கு விளக்கியது.

இனி, இக்குணம் மக்களிடத்தில் எம்மட்டிற் காணப்படு கின்றதென்பதைப் பார்ப்போம். கடவுள் நம்பிக்கையுடைய ராய்ச் சிறிது அன்பினையும் மேற்கொண்ட மக்களிற் பெரும் பாலோர் தமக்குத் துன்பம் நேர்ந்துழி அது தாம் முன்செய்த தீவினை காரணமாக வந்தது என அறிந்துவைத்தும் "பாழுங்கடவுளே! நீதியற்ற கடவுளே! எம்மை இங்ஙனம் துன்புறுத்தல் தகுமா? நின்கண் கருணையில்லையா?" எனக் கதறிப் பதறுவதுடன் அந் நம்பிக்கையையும் இழந்து கடவுள் இல்லை என்னும் கொள்கையை உடையராதலைக் காண் கின்றோம். இதனாலும் மக்கள் நாயினுங் கடையரா கின்றனர்.

ஐந்தாவதாக:- நாயினிடம், செயலுக்குக் காரணங் காணும் இயல்புண்டு; மக்களிற் பெரும்பாலோரிடம் அஃதில்லை; இல்லாதது மட்டுமில்லை; திரிபாகக் காணு தலையும் அறிகின்றோம் எங்ஙனமெனில், ஒரு நாயை ஓர் இளைஞன் மறைவில் நின்று கல்லால் அடிக்கிறான். தன்மீது பட்டதும், தனக்குத் துன்பம் செய்ததும் கல்; ஆனால் எந்த நாயும் அந்தக் கல்லைக்கடிப்பதில்லை; அடித்தவனைக் கண்டால் அவன்மேலே வீழ்ந்து கடிக்கும்; இன்றேல் வாளா போய்விடும்.

மக்களுள் யாருக்கேனும் ஓர் துன்பம் வந்தால் அதற்கு மூல காரணம் தாம் முன்செய்த வினையென்று அறியாதது மட்டுமன்று; அவ்வினையினாற் செலுத்தப்பட்டுத் துன்பம் செய்தவர்களிடம் பகைமைபூண்டு, அவர்களைத் துன்புறுத்தக் காண்கின்றோம். எனவே, நாயின் மேலே பட்ட கல்லைப் போன்று, துன்புறுத்தியவர்களே காரணமாயுள்ளவர் என்று தவறாகக் கருதுகின்ற மக்களைவிட, உண்மையான காரணத்தை அறிந்து செயல்படுகின்ற நாய் எத்துணைச் சிறந்தது என்பதை அறிக. மக்களின் அத்தவறான செயலைக் குறிக்கத்தான் ''எய்தவனிருக்க அம்பை நோவது'' என்ற பழமொழியும் எழுந்துவழங்குவதாயிற்று.

நாயினிடத்து அக்குணமிருப்பதையும், மக்களிடத்து அஃது இல்லாமையையும் எடுத்துக்காட்டி, அம்மக்கள் அறிவில்லாதவர்; இரங்கத்தக்கவர் என, 'வாகீச முனிவர்' என்பார், தாமியற்றிய ஞானாமிர்தம் என்னும் நூலில்,

> "தெளியா இளையோன் துரந்த குணில்வாய்ச் செல்லாது
> இளையோற் சினவும் வளைவாய் ஞமலியின்
> அளியரோ அளியர் என்னை
> ஒளிகொள் காரணம் உன்னா தோரே"

என அழகுறக் கூறியருளுகின்றார்.

இனி, நாயை ஒத்தவன் என்னும் பொருளில் 'நாயேன்' என்றும் 'நாயனையேன்,என்றும் அடிகள் கூறியதன் கருத்து என்ன? என்பதைப் பார்ப்போம்.

மேற்காட்டிய பல நற்குணங்களையுடைய நாயினிடத்து ஒரு இழிகுணங் காணப்படுகின்றது; அதாவது தான் வயிறு நிறைய உண்டு தேக்கெறிந்து கக்கிய உணவைச் சிறிதும் அருவருப்பில்லாமல் புதியதாகவே நினைந்து உண்ணுதல்.

மக்களும் தாம் நுகர்ந்த பொருள்களையே மீண்டும் மீண்டும் சலிப்பும் அருவருப்புமில்லாமல் நுகர்தல் இவ்வுண்மைகள் கண்கூடாகக் காணப்படுவதுடன்,

''உண்டதேஉண்டு முடுத்ததே உடுத்து மடுத்தடுத்
துரைத்ததே உரைத்துங்
கண்டதேகண்டுங் கேட்டதே கேட்டுங் கழிந்தன
கடவ நாளெல்லாம்
விண்டதாமரை மேலன்னம் வீற்றிருக்கும்
விழவரு வீதிவெண் காடா
அண்டரே போற்றும்அம் பலத்தாடு மையனே
யுய்யு மாறருளே''

என்னும் பெரியார் வாக்காலும் வலியுறுத்தப்படும். மற்றோரு இழிகுணம் குறிக்கோளில்லாது அலைதல்; அது மக்களிடத்தும் காணப்படுவது. இத்தன்மையால் மக்கள் நாய்க்கு ஒப்பிடப் படுகிறார்களாகலின் அடிகள் பலவிடங்களில் 'நாயனையேன்', எனவும், 'நாயேன்' எனவுங், 'கூறியருளினாரென்க. இன்னும் பரஞ்சோதி முனிவர் கூறிய,

''அத்தவோ கல்லாக் கடையேனை யாட்கொண்ட
பித்தவோ பொய்யுலகை மெய்யாகப் பேதிக்குஞ்
சித்தவோ சித்தந் தெளிவித் தெனைத்தந்த
முத்தவோ மோன மயமான மூர்த்தியவோ''
(பரிநரியாக்கி வையை யழைத்த படலம்-50)

என்னுஞ் செய்யுளிலுள்ள 'கல்லாக் கடையேனை' என்னுந் தொடர், திருவாசகத்தில் 'கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை' (திருவம்மானை-5) கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை' (கண்டபத்து-4) என்னுந் தொடர்களையும் 'கல்லாக் கடையேனை யாட் கொண்ட பித்தவோ' என்னுந் தொடர் ''தாதாய் மூவேழுலகுசகுந்தாயே நாயேன் தனை யாண்டபேதாய்'' (புணர்ச்சிப்பத்து-9) என்னும் அடிகளையும் பொய்யுலகை மெய்யாகப் பேதிக்குஞ் சித்தவோ, என்னுந் தொடர், பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறும், மெய்யாக் கருதிக்கிடந்தேனை' (திருக்கோத்தும்பீ-17) 'பொய்யெல்லாம் மெய்யென்று'(அச்சோப் பதிகம்-3) என்னுந் தொடர்களையும், சித்தந் தெளிவித்

தெனைத் தந்த முத்தவோ' என்னுந்தொடர், 'இந்திரியவய மயங்கி' என்று தொடங்குந் திருப்பாட்டின் 'சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட' (கண்டபத்து -1) 'புத்தன்' என்று தொடங்குவதில் 'சித்தஞ்சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்,(திருத்தோணோக்கம்-6) 'மூத்தி நெறி' என்னும் முதற் குறிப்பையுடைய பாட்டில் 'சித்த மல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட அத்தன்' (அச்சோப்பதிகம்-1) என்னுந் தொடர்களையும் சொல்லாலும் பொருளாலும் ஒத்திருத்தல் காண்க.

இங்கு எடுத்துக் காட்டியவற்றால் பரஞ்சோதி முனிவர் ஏனைய இரண்டு ஆசிரியர்களைவிடத் திருவாசகப் பயிற்சியிற் பெரிதும் சிறந்தவரென்பது தெற்றென விளங்கும். விளங்கவே, அவராற் பாயிரத்துட்கூறப்பட்ட 'எழுதருமறைகடேரா' என்ற முதலையுடைய அடிகளின் துதிப்பாட்டினை உய்த்து நோக்குழி, அஃது அவர் அத்திருவாசகப் பயிற்சிச் சிறப்பினாற் கூர்த்த தமது அறிவென்னும் எழுதுகோலாற் கள்ளமற்ற உள்ளமென்னும் படத்தில் அடிகளின் திருவுருவத்தை நன்கு வரைந்து கொண்டு கூறினாரென்பதைச் செவ்வனே விளக்குகின்றது.

இங்ஙனம் அறிவு வல்லானொருவன் தன்னாற் காணப்படாத ஒருவனுடைய சில மொழிகளையோ, அல்லது அவனியற்றிய நூல் ஒன்றையோ பலகாலும் கூர்ந்து கூர்ந்து நோக்குவானாயின் அதன் பயனாக, அவனுடைய உருவம், உள்ளம், உரை முதலிய அனைத்தையும் மக்களுக்கு நன்கு எழுதிக்காட்டி விடுவானென்பது ஒருதலை.

இவ்வாறே சேக்கிழார் பெருந்தகையார் ஆளுடைய அரசின் அருண்மொழியாகிய தமிழ்மறைப் பயிற்சி மிகுதியால் அப்பெரியாரின் மனம், மொழி, மெய்களைப் பெரிய புராணத்திற் பலவிடங்களில் எழுதி மக்கட்குக் காட்டுதல் கண்டு மகிழ்வதற்குரிய தொன்றாகும். திருநாவுக்கரசுகள் தம்மைக் கொல்லுதற் பொருட்டுச் சமணர்கள் செய்த பல்

வகைச் சூழ்ச்சிகளில் இறுதியதாகிய கல்லொடு பிணித்துக் கடலிற் போட்டதினின்றும் தப்பிக் கரையேறித் திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளியிருக்கும் தோன்றாத் துணைவனை வணங்கிக் கொண்டு திருவதிகை வீரட்டானஞ் சென்று அவ் வீதியுட் புகுகின்ற காட்சியைச் சேக்கிழார் முதலில் தமது உள்ளத்தில் வரைந்து கொண்டு பின் நமக்குப் பெரிய புராணத்தில் எழுதிக் காட்டுவது,

''தூயவெண் ணீறு துதைந்த பொன்மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும்
பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயுமுடையார் புகுந்தனர் வீதியுள்ளே''
(திருநாவுக்கரசுநாயனார் புராணம் - 140)

என்பதாகும். இங்ஙனமே அவர் திருவாரூர்த் தேவனை வணங்கி அவ்வூர் வீதியில் உழவாரப் பணிசெய்யுந் தோற்றத்தை,

''மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவு
மதுரவாக்கிற்
சேர்வாகுந் திருவாயிற் றீந்தமிழின் மாலைகளும்
செம்பொற்றாளே
சார்வான திருமனமு முழவாரத் தனிப்படையுந்
தாமுமாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப்
பரவிச்செல்வார்'' (ஷை-225)

எனவும், ஆளுடைய பிள்ளையாரைக் காணச்செல்லுங் காட்சியை,

''சிந்தை யிடையறா வன்புந் திருமேனி தனிலசைவுங்
கந்தை மிகையாங் கருத்துங் கையுழவா ரப்படையும்

வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற்பொலி திருநீறும்
அந்த மிலாத்திரு வேடத் தரசுமெதிர் வந்தணைய''
(திருஞான சம்பந்தர் புராணம்-270

எனவுங்கூறி அரசுகளின் அருள்வடிவத்தையும், தெருள் மொழியையும் நெக்கு நெக்குருகும் உள்ளத்தையும் அங்கை நெல்லிக்கனியென விளக்கியருளினர்.

இனி நமது புலவர் பெருமக்களியற்றிய நூல்களைக் கொண்டு நுனித்து நோக்கினால் அவர்கள் இருவேறுவகைப் படுகின்றனர். ஒருவகையார் தமக்கு இயற்கையாகப் பாடும் வன்மை அமைந்திருந்தும், தாமியற்றும் நூல்களில் இன்ன இன்ன பகுதிகளை இன்ன இன்ன இடத்திற்றான் கூற வேண்டுமென வரையறை செய்து கொள்ளாமற் பாடி முடித்தவராவர். அதனால் அந்நூல்களில் ஒருசெய்தியே பல விடங்களில் வருதல் கூடும்.

பிறிதொரு திறத்தார் தாம் இயற்றும் நூல்கள் எத் துணைப் பெரியவாயினும் அவற்றுள் இன்னின்னவற்றை இவ்விடங்களிற்றான் கூறவேண்டும் எனவும் இத்துணைச் செய்யுட்களால் முடிக்க வேண்டுமெனவும், இரண்டு இடங் களிற் கூறவேண்டிய செய்தி ஒன்றுநேரின் அதனை அவ் விரண்டிடங்களிலும் கூறி மிகைப்படுத்தாமல் இதனை எங்குக்கூறின் இரண்டிடத்தும் கூறியதாகவும் சிறப்பாகவும் கற்போர்க்குக் களிப்பைத் தருவதாகவும் இருக்குமெனவும் தமது கூர்த்த மதியால் ஆராய்ந்து கூறுபவராவர். இன்னும் அவர் அங்ஙனமே வரையறுத்துக் கொண்டு நூல் செய்வத னால் பலவாயிரஞ் செய்யுட்களுக்குப் பின்னே சொல்லப் போகும் இலக்கியம் ஒன்றை நினைவில் வைத்து அதற்கு முன்னரே இலக்கணங்கூறிச் செல்வதுங் கண்டு மகிழ்வதற் குரிய தொன்றாகும். இங்ஙனம் நூல் யாக்கும் புலவர் பெருமக்கள் மிகச்சிலரேயாவர். அவருள் சேக்கிழார், கம்பர் முதலியோர் தலைசிறந்தவர். எடுத்துக் காட்டாக ஒவ் வொன்று ஈண்டுத் தருதல் மிகையாகாது.

பெருமிழலைக்குறும்ப நாயனார் தவத்தினால் மிக்கா ரென்பது,

''வண்டு மருவுங் குழலுமை யாள்கேள்வன்
செய்யதாளென்னும்
புண்டரிக மகமலரில் வைத்துப் போற்றும் பொற்பினார்''
(பெருமிழலைக்குறும்பர் புராணம்-3)

என்பதனாலும் தமதுஞானகுரவராகிய ஆளுடைய நம்பிகள் ஆண்டவன் ஆணையால் வெள்ளையானை மேலேறித் திருநொடித்தான்மலை செல்வதை ஞான நோக்கத்தால் முன்னரே உணர்ந்து கொண்டு, யோக முயற்சியினாலே பிரமரந்திர வழியால் உடலினின்றும் பிரிந்து முதனாளே அம்மலையை யடைந்தார் என்பதனாலும் தெளியப்படும். இப்பெரியார் சித்தி முதலியன கைவரப் பெற்றமைக்குக் காரணங் கூறுமுகத்தால்,

''நாளுநம்பி யாரூரர் நாம நவின்ற நலத்தாலே
ஆளும் படியா லணிமாதி சித்தியான அணைந்ததற்பின்
மூளுங் காதலுடன்பெருக முதல்வர் நாமத்தஞ் செழுத்துங்
கேளும் பொருளு முணர்வுமாம் பரிச வாய்ப்பக்
கெழுமினார்''
(பெருமிழலைக்குறும்பர் புராணம்-6)

எனக் கூறுஞ் சேக்கிழார் பெருந்தகையார் இங்ஙனம் பின்னர்க் கூறப்போவதை நினைவில் வைத்து மூன்று சருக்கங்களுக்குமுன்—இருபத்திரண்டு புராணங்கட்கு முன்—ஆயிரத்தைஞ் ஞூற்றறுபத்தைந்து செய்யுட்களுக்குமுன் தடுத்தாட்கொண்ட புராணத்தில் நான்காவது பாட்டில் சுந்தரமூர்த்திகளுக்குப் பிள்ளைத் திருநாமமிட்டார்களென்று சொல்லுமிடத்து,

''தம்பிரா னருளினாலே தவத்தினான் மிக்கார் போற்றும்
நம்பியா ரூரரென்ற* நாமமுஞ் சாத்தி மிக்க
ஐம்படை சதங்கை சாத்தி யணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொனா ணரையின் மின்னத் தெருவிற் றேருருட்டு
நாளில்''

*(பா-ம்) பொருள் பொருந்துவது அன்று.

எனக் கூறுவாராயினர். இங்ஙனம் தவத்தினால் மிக்காராகிய பெருமிழலைக் குறும்ப நாயனார் இடையறாது 'நம்பியாரூரர்' என்னுந் திருப்பெயரைப் போற்றியே பல பேற்றினை யடைந்தாரெனப் பின்னே சொல்ல வேண்டுமென்பதை நினைவில் வைத்தே முன்னர் அப்பெயருக்கு 'தவத்தினால் மிக்கார் போற்றும் நம்பியாரூரர்' என்னும் இலக்கணங் கூறினாரென்பது நன்கு கற்றவர்க்குப் புலனாவதொன்று.

இனி, இராமாயணமென்னுங் காப்பியச் சோலையுட் புகுந்து பார்க்கின் கம்ப நாடரின் நல்லிசைப் புலமையைக் காட்டுவனவாகி, மலர்ந்து மணம்வீசும் பல மலர்களைக் காணலாம். அவற்றுள் ஒன்று இங்கு நுகர்வோம்.

இராமபிரான் தன்னாருயிர்க் காதலியாகிய பிராட்டியாரோடும், இன்னுயிர் இளவலாகிய இலக்குவனோடும் கான்புகுதலை மேற்கொண்டு நகரின் வாயிலைக் கடப்பதற்கு முன்னே பிராட்டியார் 'காடு எங்குளது?' என்று கேட்ட செய்தியை அங்குக் கூறாமலும், சீதாபிராட்டியைத் தேடச் சென்ற அனுமானிடத்தில் 'பிராட்டியைக் கண்டு இன்ன இன்ன அடையாளங்களைக் கூறுவாயாக' என்று இராமபிரான் கூறிய இடத்திற் கூறாமலும், அனுமான் இலங்கையில் இராவணனாற் சிறைப்படுத்திருந்த பிராட்டியாரைக் கண்டு இராமனுடைய எழிலனைத்தையுங் கூறி, பின் அவன் கூறிய சில செய்திகளை அடையாளமாகச் சொல்லுகின்றான் என்னுமிடத்து,

"நீண்டமுடி வேந்தனரு ளேந்திநிறை செல்வம்
பூண்டதனை நீங்கிநெறி போதலுறு நாளின்
ஆண்டகை ராரையொடு வாயி லகலாமுன்
யாண்டையது கானென விசைத்தது மிசைப்பாய்"
(உருக்காட்டுப் படலம்-61)

எனக் கம்பநாடர் கூறியதை நுனித்து நோக்கின் அவர் அந்நூலைச் செய்வதற்கு முன்னரே இத்தனை காண்டங்களாக,

இத்தனை படலங்களாக, இத்துணைச் செய்யுட்களால், இன்ன இன்ன செய்திகளை இன்ன இன்ன விடத்திற்றான் கூறவேண்டு மென்பதற்காக வரையறுத்துக் கொண்டே செய்து முடித்தனரென்பது நன்கு விளங்கும் என்க.

இனி, பரஞ்சோதி முனிவரும் இங்ஙனமே தாமியற்றிய திருவிளையாடற் புராணத்தில் ஐம்பத்தெட்டுப் படலங்கட்குப்பின் கூறப்போகும் 'வாதவூரடிகட்கு உபதேசித்த படல'த்திலும் அவர் தொடர்புடைய பிறபடலங்களிலும், 'துளும்ப அழுதகண்ணினர்' என்றும் 'அழுது சாத்தும் மெய்யன்பர்' என்றும் 'அழுதிசை பாடுந் தொண்டிலகப்படும் பாதம்' என்றும் கூறப்போவனவற்றை நினைவில் வைத்துப் பாயிரத்தின் கண்ணே 'அழுதடி அடைந்த அன்பன்' என்று கூறியிருப்பதை நோக்கின் அவரும் தம் நூலை வரையறுத்துக்கொண்டு இயற்றினாரென்பது நன்கு விளங்கும்.

# 3. 'அழுதடி யடைந்தவன்பர்' தொடராராய்ச்சி

இத்தொடர், அழுது-அடி-அடைந்த-அன்பர் என்ற நான்கு சொற்களாலும், மூன்று சந்திகளாலும் ஆயது. பொருள் வெளிப்படையாக விளங்கும் எனினும், பரஞ்சோதி முனிவர் திருவாசகப் பயிற்சி மிகுதியால் இவ்வாறு கூறினா ரென முன்னரே காட்டப்பட்டது. ஆதலின், திருவாசகக் கருத்துடன் மாறுபடாமல் இத்தொடருக்கு உரை காண வேண்டும். அங்ஙனங் காணுங்கால் 'உண்டு பசி தீர்ந்த சாத்தன்' என்புழி, சாத்தனது பசி நீங்கியதாகிய காரியத் திற்கு அவன் உண்டது காரணமாயிருந்தமையின் 'உண்டு' என்னும் வினையெச்சங் காரணப்பொருளில் வந்ததாகக் கொண்டு உண்டமையாற் பசிநீங்கிய சாத்தன் எனப்பொருள் கொள்ளுமாறு போல, ஆண்டவனுடைய அடியை அடைந்ததாகிய காரியத்திற்கு அழுதது காரணமா கலின், அழுதமையால் ஆண்டவன் அருட்கழலையடைந்த அன்பர் எனப் பொருள்படும். படவே, (1) அழுதல் ஆண்ட வனுடைய அருட்கழலைப் பெறுதற்கு சாதனமா? என்பதும், (2) அடி யடைந்தாரா? என்பதும்; (3) அன்பர் என்பது மாகிய இம்மூன்று பகுதிகளும் திருவாசக ஆதரவுகளைக் கொண்டு ஆராயத்தக்கன என்பது பெறப்படும்.

## 1. அழுதல் ஒரு சாதனமா?

இப்பகுதியை ஆராய்வதற்கு முன்னரே நாம் இங்கு அறிந்து வைத்துக் கொள்ள வேண்டியது ஒன்று உண்டு அதாவது. உலகியலில் எவ்வெவ்வுயிர்கள் எவ்வெவ்வழிகளால் தாந் தாம் விரும்பியவற்றை அடைகின்றனவோ, அவ்வழிகளெல் லாம் இறைவன் திருவடிப் பேற்றுக்கும் உரியனவாகும் எனக் கருதுவது அவ்வடிப் பேற்றுக்கு அன்புநெறியிற் செல்லும்

பெரியோர்களின் இயல்பு என்பது. இவ்வுண்மையை அவர்கள் அருளிச் செய்த நூல்களிற் பரக்கக் காணலாம்.

உலகினரிற் பெரும்பாலோர் மேற்கொண்டொழுகும் இல்லறத்திற்கு மங்கலமாகிய மாண்பமைந்த மனைக்கிழத்தியும், அதன் நன்கலமாகிய நன்மக்களும் தாம் வேண்டுவனவற்றைப் பெறுதற்கு மேற்கொண்டொழுகும் பலவழிகளில் அழுதல் ஒரு தலைசிறந்த வழியன்றோ? ஒரு மகவு தாய்வயிற்றினின்றும் வெளிவந்தவுடனே அழுகின்றது. சிறிது நேரம் அழாமலிருப்பின் அது அழுதற்கு வேண்டிய உபாயங்களாகிய திடுக்குத்தண்ணீர் தெளித்தல் தொப்பூழ்க் கொடியை நெருப்பில் வாட்டுதல் முதலியன செய்யப்படுகின்றன. இன்னும், பார்த்து மகிழ்ச்சிகொள்ள வருகின்றவர்களும் 'குழந்தை அழுகின்றதா?' என்று கேட்பார்கள். 'இல்லை' என்றால் உடனே தாங்கள் அழத்தலைப்படுவார்கள். 'அழுகிறது' என்றால் மகிழ்வார்கள். இதனை நோக்க அது பிறந்தவுடனே அழுதல் இந்நிலவுலகில் உயிரோடு சின்னாள் வாழ்தற்கு ஓர் சாதனமாயிருக்கின்றது என்பது விளங்குகின்றது. இன்னும் அது பசித்துன்பம் வந்த பொழுதெல்லாம் அழுதலைக் காண்கின்றோம். உடனே அன்புடைய அன்னை ஓடிவந்து வாரி எடுத்து மடியின் மீதிருத்தி, 'என் கண்ணே அழாதே' என்று இன்மொழி கூறி, பால் அருத்துகின்றாள். எத்துணை அன்புடைய, அறிவுடைய தாயும் சேய் அழுதற்கு முன்னே பால் ஊட்டுவதில்லை. ஏனெனில், 'பசித்தாற் குழந்தை அழும்; அழாதிருப்பதினால் பசிக்கவில்லை போலும்; பசி இல்லாதபோது பால் ஊட்டினால் உடல் நலங்குறையும்' எனக்கருதி. இதனாலன்றோ 'அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்' என நமது நாட்டில் ஒரு பழமொழியும் வழங்குவதாயிற்று. இன்னும், ஒரு பொருளைப் பெற விரும்பியவன் அதனைப் பெற முயலாமலும், பிறரைக் கேளாமலும் மடிந்திருந்து, அதனை அங்ஙனஞ் செய்து பெற்றவனைக் கண்டு பொறாமைப் படுங்காலை, வேறொருவன் அவனை நோக்கி, அவன்

சோம்பியிருந்ததையும், மற்றவன் மடியாது அதனைப் பெற்றதையுங் குறித்தற் பொருட்டு 'அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்' எனக் கூறவுங் கேட்கின்றோம். இதனால் ஒரு குழந்தை தனக்கு வேண்டுவதாகிய இன்றியமையாத பாலுணவையும் அழுதலாகிய வழியினாலே பெற்றுக் கொள்ளுகின்றது என்பது விளங்கும். இன்னும் அது பாலுணவு வேண்டாத பருவத்திற்கூட, தனக்கு வேண்டிய உணவுப் பொருளோ, அல்லது காட்சிப் பொருளோ தன் அருமைத் தந்தையாரிடங் கேட்டு, அதற்கு இயலாவிடின் அழுது பெறுவதைக் காண்கின்றோம்.

இனி, இல்லக்கிழத்தியருட் பலர் தம் காதலரிடத்துத் தமக்கு வேண்டிய பொருளைக் கேட்பார்கள். அவர்கள் மறுத்துரைப்பின், நகரங்களிலுள்ள நீர்க்குழாய்கள், மேலேயுள்ள கைப்பிடியை ஒருமுறை திருப்பினால் நீரை ஊற்றுவதுபோலத் தம் வலதுகையை முட்டியாகப் பிடித்துக் கொண்டு, வலக்கண்ணில் வைத்து ஒருமுறை சுழற்றி இரண்டு கண்களினின்றும் தாரை தாரையாக நீரைப் பெருக்கி அழுகின்ற வழியினால் தாம் கருதிய பொருளைப் பெறுதலைக் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

இங்ஙனம் உயிர்ச்சார்பாயுள்ள பொருள்களுட் சிறந்த மனைவியும் மக்களும் அழுதலைச் சாதனமாகக் கொண்டு விரும்பிய பொருளைத் தம் தலைவரிடத்துப் பெறுகின்றார்களெனின், உயிர்கள் தம் இனிய உயிர்த்தலைவனாகிய பசுபதியை நோக்கி அழுதால் அவை விரும்பியவற்றை அவன் அளித்தருளுவானென்பதில் ஐயம் யாதுளது?

இனி, நாம் ஒரு பொருளைப் பெறவிரும்பி அதனைப் பெறும் பொருட்டு யாரிடத்து அழுகின்றோமோ, அவர் மக்கள் தலைவராயிருப்பின் பேரருளுடையரல்லராகலின் நமக்கு இரங்கி அதனைக் கொடுத்தற்கு இசையார். ஒரோவழிச் சிறிது இரக்கமுடையவராயிருந்து அதனைக் கொடுக்கக் கருதினும் அவர் எல்லாமுடையவரல்ல ராகலின் அப்

பொருள் அவரிடம் இருத்தல் ஒருதலையன்று. இல்லாவிடினும் தேடிக் கொடுக்குங் கருத்துடையராயிருப்பின். முற்றுமுணர்ந்தவரல்லராகையால் அதனைப் பெறுதற்குரிய நெறியைப் பிழைபாடின்றி உணரும் ஆற்றலுடையவராகார். ஒருவாறு பிழையின்றி உணர்ந்து முயலினும் என்பு தோல், நரம்பு முதலியவற்றா லாக்கப்பட்ட உடம்புடையவராதலின் உடல் நலம் அம்முயற்சி காரணமாகக் குறையின் அதனைக் கைவிடுவர். எங்ஙனமாயினும் அதனைப் பெறுதற்கு முடிவிலாற்றலுடையவருமல்லர். இத்துணையுங் கடந்து ஒரோவழி அது அவர்க்குக் கிடைப்பினும், வரம்பிலின்பமுடையவ ரல்லராதலின் தம் முயற்சியின் பெருமையும், அப்பொருளின் அருமையும் நோக்கித் தம்மின்ப நிறைவுக்கு அதனை ஆக்கிக் கோடலுங் கூடும். அல்லது கிடைப்பினுங் கிடைக்கலாம். எனவே, மக்கள் தலைவரிடம் நாம் அழுது வேண்டும் பொருள் நமக்குக் கிட்டுதல் ஐயமே யன்றித் தேற்றமில்லை. அவர் கடவுள் தலைவராயிருப்பின். பேரருளுடைமையும், எல்லாமுடைமையும், முற்றுணர்வுடைமையும், வரம்பிலின்பமுடைமையும் அவரிலக்கணமாதலின் அப்பொருளை நாம் அடைதல் முக்காலும் உறுதியென்க.

இன்னும், ஓர் அரிய மகவின் அழுகையானது பொதுவாகத் தமிழுலகத்திற்கும் சிறப்பாகச் சைவ உலகத்திற்குஞ் செய்த நன்றியை இங்கு மறக்க ஒண்ணுமோ? அன்றி மறைக்க ஒல்லுமோ? இலைபடர்ந்த பொய்கைக் கரையில் செம்மேனி வெண்ணீற்றான் திருத்தோணிச் சிகரத்தை நோக்கி, தம்புனித வாயைத் திறந்து, 'அம்மே அப்பா' என்றழைத்து, கண்மலர்கள் நீர்ததும்ப, கைம்மலர்களாற் பிசைந்து வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடைதுடிப்ப, வேதநெறி தழைத்தோங்கவும், மிகு சைவத்துறை விளங்கவும் பூத பரம்பரை பொலியவும் பொருமி அழாவிடின் நீறு எங்கே? மறை எங்கே? திருவைந்தெழுத்தெங்கே? திருநெறித் தமிழ்மறை எங்கே? இவையாவும் நிலைபெற

விம்மி அழுத மகவு யார்? காழிக்கன்றன்றோ? கழுமலக் கண்ணன்றோ? வேணுபுர வேந்தன்றோ! வெங்குரு விரகன்றோ! புகலிப் புண்ணியமன்றோ! புறவி நன்றவன்றோ! பூந்தராய்ப் புகழல்லவா! சிரபுரச் செம்மலல்லவா! சண்பைத் தவமல்லவா! கொச்சைவயக் குழகல்லவா! பிரமபுரப்பிள்ளையல்லவா! தோணிபுரத் தோன்றலல்லவா! இங்ஙனம் அழுது அம்மையப்பரால் எண்ணரிய சிவ ஞானத்தின்னமுதங் குழைத்து' 'ஊட்டப் பெற்றதன் பயனாக,

''ஆறதேறுஞ் சடையானருள் மேவ அவனியர்க்கு
வீறதேறுந் தமிழால் வழிகண்டவ''

ராகிய திருஞானசம்பந்தப் பெருந்தகையாரின் திருச்செயல்களை அறியாதவன் தமிழ் மகனாவனோ? அவரைப் போற்றாதவன் சைவனாவனோ? ஆகான்! ஆகான்!! ஆகான்!!!

இங்ஙனம் தம்முடல் தந்தையையுந் தாயையும் நோக்கிப் பாலுக்குங் காட்சிப்பொருளுக்கும் அழப்பெறுங் குழவிப் பருவத்திலேயே உயிர் தந்தையாகிய இறைவனையும், இன்னுயிர் தாயாகிய இறைவியையும் ஒரு நெறிய மனம் வைத்து, நோக்கி, அழுது அழைத்து, உலகை வாழ்வித்தமையினாலன்றோ 'காலம் பெற|அழுதார்' என்றும், விடையின்மேல் வருவார் தம்மை அழுதழைத்துக் கொண்டவர்' என்றும், 'அழுதுலகை வாழ்வித்தார்' என்றும் சேக்கிழார் பெருந்தகையாரால் நமது ஆளுடைய பிள்ளையார் பாராட்டப் பெற்றார்.

இனி, ஆண்டவன் அடிப்பேற்றுக்கு அழுதல் ஒரு வழி எனத் திருவாசகத்தில் யாண்டுக் கூறப்பட்டிருக்கின்றதென்பதை ஆராய்வோம்.

''யானேபொய் என்னெஞ்சும்பொய் என்னன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதாலுன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கு
மானே அருளா யடியேனுனை வந்துறு மாறே''

(திருச்சதகம்-90)

என்னுந் திருப்பாட்டினால் 'யான்' என்னுள்ளம், அதனை இடமாகக் கொண்டு திகழும் அன்பு ஆகிய இவ்வனைத்தும் பொய்; ஆனாலும் தீவினையேனாகிய யான் அழுதேனா னால் உன்னையடையலாம் என நமது அடிகள் கூறியருளி னமை காண்க.

இனி, பெருந்துன்பமுடையாரும் நோய்கொண்டாரு மன்றோ பொறுக்கலாற்றாது அழுவர். இப்பெரியார் ஏன் அழ வேண்டுமெனின், கூறுதும்,

## 2. அழுதலின் காரணமென்னை?

பரந்த நிலவுலகின்கண் காணப்படும் உயிர்களனைத்தும் துன்ப நீக்கத்தையும் இன்ப ஆக்கத்தையுமே அவாவி நிற் கின்றன வென்பது கண்கூடு. அங்ஙனம் அவாவுகின்ற முறையில், அவற்றால் துன்பமெனப்படுவனவும், இன்ப மென எண்ணப்படுவனவும், அவற்றை முறையே போக்கவும் ஆக்கவும் சூழும் நெறிகளும் அவற்றின் அறிவு வேறுபாட்டுக்கேற்பப் பலதிறப்படும். எனினும் அவற்றின் குறிக்கோள் துன்பம் நீங்குதலிலும், இன்பம் ஓங்குதலிலு மென்பது மறுக்க முடியாததொரு உண்மையாகும்.

இனி, அவ்வின்ப துன்பங்களை உள்ளவாறு உணர்வதில் ஏனைய உயிர்களினும் மக்களே தலைசிறந்தவராவர். என்னை? பகுத்தறிவுடையராகலின் என்க. ஆயின் மக்கட் பிறப்பினரனைவரும் அவற்றைப் பிறழாது உணர்தற்கு வல்லுநராவரோ எனின், ஆகாரென்க; என்னை? மக்களி லும் மாக்களுண்டாகலின். அற்றேல், அவர் யார்? கல்லாத வர் என்க; என்னை?

> "விலங்கொடு மக்கள் அனைய ரிலங்குநூல்
> கற்றாரோ டேனை யவர்"

என்பது பொய்யா மொழியாகலின் என்க. ஈண்டு விலங்கின் மக்கட்கேற்றமாய உணர்வு மிகுதி காணப்படுவது கற்றார் கண்ணேயாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்த பிறப்பின ரல்ல ரென்பதாம்' என்னும் பரிமேலழகருரையும் காண்க.

ஆயின், அவரை அம்மக்களினின்றும் வேறு பிரித்து எவரும் எளிதிலுணர்ந்து கொள்ள இயலுமோவெனின், இயலா தென்க; என்னை? குணத்தால் முற்றும் முரணி, வடிவால் முழுதும் ஒத்திருக்கின்றாராகலின். இதனை,

''மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்''

என வள்ளுவனார் தெள்ளுமொழியும் விளக்கினமை காண்க. ஆதலின், கல்வியறிவு கைவரப் பெற்ற பெரியாரே இன்ப துன்பங்களையும், அவற்றை ஆக்கவும் போக்கவும் ஆய நெறிகளையும் பிறழாது உணர்வர். அங்ஙனம் உணரும் தன்மையை முறைப்படுத்தி ஆராய்ந்தால் அது 'சமய உணர்ச்சி' அல்லது 'கடவுட் கொள்கை' என்பதிற் சென்று முடியும். இம்முடிவிற்கு வாராதவர் தாங்கற்ற கல்வியாற் பயன்பெறாதவர்களாய், மேற்காட்டிய மாக்களினத்துடன் வைத்தெண்ணப்படுவார். இவ்வுண்மையை,

''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாரெ னின்''

என்னுந் திருக்குறளாலும் அறிக. இன்னும், இறைவன் திருவடியை வணங்குதற்கு அறிவுறுத்துகின்ற கல்விதான் கல்வியெனப்படுமென்பதும், ஏனையவை ஆகாவென்பதும்,

''கற்க, கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக.''

என்னுந் திருக்குறளிலுள்ள 'கற்பவை' என்பதனாலும், 'விலங்கொடு' என்பதிலுள்ள 'இலங்குநூல்; என்பதனாலும் 'கற்பவை' யென்றதனால் அறம் பொருள் இன்பம் வீடென்னும் உறுதிப் பொருளுணர்த்துவனவன்றிப் பிற பொருளுணர்த்துவன சின்னாள் பல்பிணிச் சிற்றறிவினர்க்கு ஆகாவென்பது பெற்றாம்'' என்னும் பரிமேலழகர் உரையானும் உணரப்படும்.

இனி. 'சமய வுணர்ச்சி' அல்லது 'கடவுள் கொள்கை' என்பது மக்களிடம் அரும்பியது எங்ஙனமென ஆராய்வோம்.

இவ்வுணர்ச்சியானது மக்களிடம், அவர் முதன் முதல் தோன்றிய காலத்தே உண்டாயிருக்குமென்றாதல், ஆராய்ச்சியற்ற சில நம்பிக்கைகளைக் கொண்டு பிறவழியால் உண்டாயிற்றென்றாதல் கொள்ளின் அது இயற்கையோடு பொருந்தாததுடன், அறிவுடன் கூடிய ஆராய்ச்சி 'உலகத்தால் ஏற்றுக்கொள்ளப் பெறாததுமாகும். ஆயின் இது எப்பொழுது உண்டாயிருக்கலாமெனக் கூர்ந்து ஆராயின், மக்கள் தோன்றிய பன்னெடுங் காலங்கட்குப் பின்னரே தோன்றியிருத்தல் வேண்டும். எங்ஙனமெனின், அவர்கள் தோன்றிப் பன்னாள்வரையும் தங்கட்கு இயல்பாகவுள்ள பசிப்பிணி முதலியவற்றைப் போக்க முயன்று நேர்ந்த உணவு முதலியவற்றை நுகர்ந்து, பின் அறிவு சிறிது வளர இருத்தற்கு எழில்பெறும் இடமும், உண்ணுதற்கு அண்ணிக்கும் உணவும், உடுத்தற்கு உயரிய உடையும், படுத்தற்குச் சீரிய பாயலும் பெற்றுத் துய்த்திருப்பார்கள். பின் அவர்கள் 'ஆராவியற்கை அவா' உடையவராகலின் தாம் அரிது முயன்று பெற்ற பொருளில் வைத்த விருப்பத்தை நீக்கிப் பெறாத பொருள் அதனினும் எளிதாயினும் அதில் விருப்பத்தைப் போக்கி அதனைப் பெறுதற்கு முயன்றிருப்பார்கள். இவ்விரண்டு தன்மையும் மக்களின் இயற்கையென்பது யாவருமறிந்ததொன்று.

சாந்தலிங்க அடிகள் என்னும் பெரியார் தாமியற்றியருளிய 'வைராக்கிய தீபம்' என்னும் நூலின்கண் இவ்வுண்மையை,

யாவர்க்கும் கிடைத்தற்கரிய பொருளைப் பெற்றகாலத்தும் தாம் பெற்ற அப்பொருளை எளிதாகக் கருதி அதன்கண் விருப்பமற்றுப் பெறாதனவாகிய பொருள்கள் எளியவாயினும் அவற்றை அரியவாகக் கருதி விரும்பா

நின்ற உயிர்கள், தாம் முன்னர் அடையாத செல்வமாகச் சொல்லப்பட்ட நின்மலமாய்த் தமக்கு உரிய ஞானானந்த மாய், அழியாததாய், ஒப்பற்றவீடு உண்டென்று கேட்டிருந் தும் அதன்கண் விருப்பமற்று முன்னர்த் தாம் அடைந்ததாய் அசுத்தமாய்த் துக்கமாய் அநித்தமாயுள்ள பொல்லாத பிறவி யையே இன்னமும் அடைய விரும்புதற்குக் காரணம் என்னையோ? யாம் அறியோம்! என்னும் பொருளை,

> "அரிதுபெற் றிடினும் பெற்றதின் விருப்ப மறப்பெறா
> தனவிரும் புயிர்கள்
> தெரியகிற் கிலமீ தெனைமுன மடையாச் செல்வமாய்ச்
> சொல்பவித் திரமாய்
> உரியசிற் சுகமாய் நித்தமா யொருவீ டுளதெனக்
> கேட்டுமற் றதனிற்
> பிரியமற் றினமு முனமுறும் பொல்லாப் பிறவியே
> பெறவிரும் புதலே" என்னுஞ்

செய்யுளால் விளக்கியருளினார். அங்ஙனம் முயன்று அம் முயற்சி பழுதுபடு மாற்றையும், அப்பொருள் தமக்குக் கிடைக்காததையும், ஒரோவழிக் கிடைப்பினும் தாங்கருதிய அளவில்லாததையும், சில பொருள்கள் தாம் வேண்டாத காலத்து வந்து மேவுதலையுங் கண்டு ஈதென்ன வியப்பு! அப் பொருளை யாம் விரும்பினேம்; அது கிடைக்கவில்லை. இப் பொருளை யாம் எண்ணவில்லை; எனினும், அது தானே வந்தெய்தியது. உப்பொருள் யாம் வேண்டியவாறே கிடைப் பினும், அது நாங்கருதிய வளவிலில்லை. இங்ஙனமே நாம் முயலும் செயல்களனைத்தும் மாறுபடுகின்றன. இதற்குக் காரணம் என்னை? இங்ஙனம் ஆகாத அலுவல்களில் முயலும் யாம் யார்? அவற்றை ஆகவொட்டாமற்றடுப்ப வர், அல்லது தடுப்பது யார்? அல்லது எது? அவ்வாறு தடுப்பவரையோ, அல்லது தடுப்பதனையோ யாம் அறிந்து கொள்ள முடியாமல் மறைப்பது எது? யாம் முன்னே எங்கிருந்தோம்? எப்படியிருந்தோம்? இப்பொழுது எங்கு

வந்திருக்கின்றோம்' இவ்வுடலுடனே இங்கேயே நிலைபெற்றிருப்பேமா? ஆ! இதை நினைக்குங்கால் எம் உள்ளம் பதறுகின்றதே! குருதி கொதிக்கின்றதே! எங்கண்ணுக்கெதிரே பலர் இறந்துபடுகின்றனரே! எம்மைப் பத்துத் திங்கள் சுமந்து வருந்திப் பெற்று, எறும்பும் அணுகவொட்டாமற் குறிக்கொண்டு போற்றிய எம் அன்னை எங்கே? அவட்கு அன்னையுங் காணோமே! யாமும் அவ்வாறு தானே ஆவோம். ஆயின், பின்னர் எங்குப் போவோம்? இங்கு நாமாகவே வந்தேமா? அங்ஙனமாயின், நாம் இவ்வுலகத்திலே நிலைபெற்றிருக்குமாறு கருதுகின்றபடி இறாமல் இறந்துபடுதற்குக் காரணம் என்னை? இதனால் பிறிதொன்று உந்த வந்திருப்பேமா? ஆயின், அது நம்மை இங்கு வரச் செய்தது? எதனால்? தன்னலத்தின் பொருட்டா? எம் நலத்தின் பொருட்டா? நாமறியா தெம்முள்ளே புகுந்து நின்று நல்லனவுந் தீயனவுங் காட்டுவது எது? நம்மாற் காணப்படும் இவ்வுலகத்தை ஆக்கியது யார்? என அலைகள் போலும் அணியணியாகத் தோன்றும் இன்னோரன்ன பல வினாக்களை எழுப்பிக்கொண்டு அவற்றிற்கு விடைகண்டு. பிறவிப் பிரயாணத்தில் வெறுப்புற்று, இனி இச்செலவினை ஒழிக்க வேண்டுமெனத் துணிந்து அதற்குரிய நெறி யாதெனத் தெளிந்து, அதன்கண் ஒழுகியிருப்பார்கள். இங்ஙனம் ஒழுகிய மக்களது ஒழுகலாற்றினைத்தான், 'சமயச் உணர்ச்சி' என்றும் 'கடவுள் கொள்கை' என்றும் நமது ஆன்றோர் வழங்குவாராயினர்.

இனி, 'சமயம்' என்ற சொல்லின் பொருளை ஆராய்ந்தாலும் இவ்வுண்மை நன்கு புலனாகும். எங்ஙனமெனின் சமயம் என்ற சொல். 'காலம்' என்னும் பொருள்படும்; ஆனால், இச்சொல் யாண்டும் தனித்து வராமல் யாதாயினும் ஓர் வினையோடு கூடியே வரும். இதனை, 'நாம் எவரேனும் ஒருவரைப் பார்ப்பதற்கு அவரில்லம் சென்று வினவினோமாயின், அங்குள்ளார் அவருக்கு இது வழிபாட்டுச் சமயம் என்றேனும், அல்லது உணவுச் சமயமென்றேனும், அன்றி

உறக்கச் சமய மென்றேனும், அல்லாவிடில் "இது நல்ல சமயம் போவீராக" என்றேனும் சொல்வதனால் உணரலாம். இங்ஙனம் பல வினைகட்கும் பண்புகட்கும் பொதுவாய் நின்று அவற்றுள் யாதாயினும் ஒன்றுடன் கூடியே வருகின்ற பொதுச் சொல் ஒன்று தனித்து வருமாயின் அதற்கு ஓர் சிறந்த பொருள் கொள்ளுதல் ஆன்றோர் மரபு. எடுத்துக் காட்டாக, 'ஒழுக்கம்' என்ற சொல் நன்மை, தீமை, கூடாமை என்ற மூன்றுக்கும் பொதுவாக நின்று நல்லொழுக்கம், தீய வொழுக்கம், கூடாவொழுக்கம் எனப் பயின்றுவருமாயினும், பலவிடங்களில் அது தனித்து வந்து நல்லொழுக்கம் என்ற சிறந்த பொருளையே தருவதை நூல்களிற் பரக்கக் காண லாம். ஆதலின், சமயம் என்ற பொதுச் சொல்லும் தனித்து வந்தால் ஓர் உயர்ந்த வினையோடு கூடிய காலம் என்ற பொருளே கொள்ளவேண்டும் என்க. அவ்வினை யாதெ னின், மக்கள் இவ்வுலகத்திற் பெறக்கடவனவாகிய பல சிற் றின்பங்களை அவாவி அவற்றை அடைதற்குரிய பல நெறி களிலும் செல்லும் மனமுதலிய கருவிகளை மடக்கி, என்றும் அழியாப் பேரின்ப வடிவாகிய இறைவனை அடைதற்குரிய வழியிற் செலுத்துதலாகும். உலகத்து மக்களால் இயற்றப் படும் வினைகளனைத்தினும் இஃதே தலைசிறந்த வினை யாகலின், இதனோடு பொருந்திய காலத்தையே நமது ஆன் றோர் 'சமயம்' என்று தனியே கூறி அதனைத் தமது உயிரி னும் சிறந்ததாகக் கருதிப் போற்றிவந்தார்கள். 'இங்ஙனம் போற்றிவந்தவர் நம்நாட்டு மக்கள் மட்டுமல்லர்; பிறநாட் டுப் பெரியார் பலரும் தத்தஞ் சமயக் கொள்கைகட்கு இடை யூறு நேர்ந்த காலத்தில் தம்மாருயிரைத் துறந்தும் அவற்றை ஓம்பிய உண்மையை அவ்வந் நாட்டு வரலாறுகளில் நிரம்பக் காணலாம். இனி, இச்சமயம் என்றசொல் சமை என்னும் பகுதியடியாகத் தோன்றி, அறிஞர்களால் சமைக்க அதாவது ஆக்கப்பட்டது எனக் கொள்வதே நேரிதாகும் எனவும் அறிக.

இனி, இத்தத்துவ ஆராய்ச்சி மக்களிடம் அரும்பிய காலத்து இது பற்றிய வினாக்களனைத்தையும் எழுப்பிக்

கொண்டு அவற்றிற்கு உண்மை விடைகண்டு அந்நெறியில் ஒழுகுவோரும், சில வினாக்கள் எஞ்சி நிற்க மற்றவற்றிற்கு விடையிறுத்துக்கொண்டு அந்நெறியிற் செல்வோரும் மேற்கண்ட வினாக்களுக்குத் திரிபாக விடை கொண்டு அத்துறையிற் செல்வோருமென மக்கள் பல திறப்படுவது இயற்கையாகலின், சமயங்களும் பலவாயின. இக்காரணம் பற்றியேதான் இற்றை ஞான்றும் பலப்பல சமயங்கள் தோன்றுவ ஆயின. ஆயின், மேலும் மேலும் சமயங்கள் தோன்றலாமோவெனின், மக்கள் அறிவு வளர்ச்சிக் கேற்பத் தோன்றுதல் இயற்கையை ஒத்ததாகுமேயன்றி மிகையாகாது. ஆனால், அச்சமயங்களனைத்தும் உண்மையாயிருத்தல் இயலுமோவெனின், தலைவன் விரிந்த அறிவுடையவனாய், பரந்த நோக்கமுடையவனாய், முனைப்பற்றவனாய், உயிர்கள் மாட்டுக் கருணையுடையவனாயிருப்பின் அவனாலாக்கப்பட்ட சமயத்திற் சில பகுதிகள் உண்மையாயிருக்குமென்பதை அறிவுடையோர் ஒப்பாமலிரார். ஆயின், குறுகிய அறிவுடையாரும் சமயத்தை ஆக்கலாமோவெனின், அவர் உண்மை காணும் நோக்கமின்றிப் பிறசமயங்களின் மீது வைத்த பொறாமை காரணமாக ஆக்குவாரென்பதும் அங்ஙனம் ஆக்கப்படும் அதுவும் ஆண்டவனுக்கு அமைவதாகும் என்பதும், பரந்த நோக்கமுடைய திருநாவுக்கரசுகள் திருவாய் மலர்ந்தருளிய,

"விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்து
எரிவினாற் சொன்னாரேனு மெம்பிராற் கேற்ற தாகும்"

என்னும் தமிழ் மறையால் விளங்கும்.

இனி, கடவுள் இலக்கணங்களும், உயிரின் இலக்கணங்களும் மலத்தின் இலக்கணங்களும் பிறவுமாய இவற்றை மக்கள், தாம் சமய ஆராய்ச்சியிற் றலைப்பட்ட காலத்திலேயே கண்டிருப்பா ரென்றாதல் தலைப்பட்ட அண்மைக் காலத்திலேனும் அறிந்திருப்பாரென்றாதல் கொள்ளுதலும் அமையாது. ஆராய்ச்சி தோன்றியபின் பன்னாட்கள்வரை கலங்கி பின்னர் நமக்கு வேறாகியதும் நம்மினும் வலியுள்ளது

மாகிய ஒருபொருள் உண்டென்னும் பொதுவுணர்ச்சி உண்டாகப்பெற்று, அதன்பின் பன்னூறாண்டுகள் கடந்தே அப்பொருளையும் பிறவற்றையும் சிறப்பாக அறிந்திருப்பார்கள். மணிவாசகப் பெருந்தகை யென்னும் 'அமுதடி யடைந்த அன்பர்' இம்முறையை,

"தெய்வ மென்பதோர் சித்த முண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்"
என விளக்கி யருளினமை காண்க.

இனி, மேற்காட்டியவற்றால் உயிர்களனைத்தும் துன்பம் அறவும், இன்பம் பெறவுமே அவாவுமென்பதும் அவற்றுள், பிறப்பான் மக்களாயும் செயலான் மாக்களாயுமில்லாத மக்களுயிரே துன்ப இன்பங்கள் முதலியவற்றை உள்ளவாறு உணருமென்பதும் பெற்றாம்; பெறவே அவர் பிறழாது உணர்ந்த துன்பம் எதுவென அறிந்து கோடலே ஈண்டைக்குப் போதியது,

துன்பம் என்பது. கடவுள் தன் படைப்பு நோக்கம் முற்றுதற் பொருட்டு உயிர்கட்கு வைத்த ஒரு பெருநிதியாகும். அஃதொன்று இல்லையேல் எவ்வுயிர்களும் இறைவனை நினையா. கடவுள் இல்லையென்று துணிந்த மன் வலியும், உடல்வலியுமுடைய ஒருவனும் தன் வலிமைக்கு மேற்பட்டநோய் முதலிய துன்பம் வரின் கடவுளை நினைந்து கதறக் காண்கிறோம், செல்வர்கட்குத் துன்பமுண்டாதல் அரிதாகலின் அவர்கட்கு ஆண்டவன் திருவடிப் பேறு கிடைத்தல் எளிதன்று என்னுங் கருத்துப் பற்றியன்றே பிறநாட்டுப் பெரியார் ஒருவர் 'ஒட்டகம் ஊசியின் காதில் நுழையினும் செல்வர்கட்கு வீடுபேறு கிட்டாது' என மக்கட்கு அறிவுறுத்துவாராயினர்.

துன்பங்கள் தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிரைப் பற்றி வருவனவும், தெய்வத்தால் வருவனவுமாக அளவின்றி விரிந்து கிடக்கின்றவாகலின் அவற்றை விடுத்து அவையனைத்திற்கும் மூலகாரணமாகவுள்ள துன்பம் எதுவென

ஆராய்ந்து அது பிறவியே எனக் கண்டனர் அப்பெரியோர். என்னை? பிறவி இன்றேல் அதுகாரணமாக வரும் அவ் வகைத் துன்பமுமில்லையாகலின். இவ்வுண்மையை,

"அல்லற் பிறவி யறுப்பானே"

என்று மாணிக்க வாசகனாரும்,

"பொன்னை வகுத்தன்ன மேனியனே புணர்மென் முலையாள்
தன்னை வகுத்தன்ன பாகத்தனே தமியேற் கிரங்காய்
புன்னை மலர்த்தலை வண்டுறங்கும் புகலூ ரரசே
என்னை வகுத்திலையே லிடும்பைக்கிடம் யாது சொல்லே'

எனவும்,

"பிறத்தலும் பிறந்தாற் பிணிப்பட வாய்ந்தசைந்துடலம் புகுந்துநின்
இறக்குமாறுளதே யிழித்தேன் பிறப்பினைநான்"

எனவும் திருநின்ற செம்மைத் திருநாவுக்கரசரும்,

"நோயும் பிணியும் அருந்துயரமும் நுகருடைய வாழ்க்கை" எனத் தோணிபுரத்தோன்றலாகிய திருஞானசம்பந்தரும்,

"தோற்றமுண்டேல் மரணமுண்டு துயரமனை வாழ்க்கை" எனவும்,

"இன்பமுண்டேல் துன்பமுண்டு ஏழை மனைவாழ்க்கை" எனவும் நாவலூரர் நம்பியும் அருளி விளக்கினமை காண்க.

இன்னும் நாம் இப்பிறப்புத்துன்பத்திற் கிடந்து நையா வகை கூறிய பொய்யா மொழியாரும், இப்பிறப்பிற்குக் காரணமும், பிறப்பின் தன்மையுங் கூறுவார்,

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானா மாணாப் பிறப்பு"

என அருளிச்செய்தார். சொற்களை நிறுத்து உரை எழுதிய பரிமேலழகரும், 'மாணாப்பிறப்பு-இன்பமில்லாத பிறப்பு' என உரையெழுதி, விளக்கவுரையில், "நரகர், விலங்கு, மக்கள், தேவர் என்னும் நால்வகைப்பிறப்பினு

முள்ளது துன்பமேயாகலின், மாணாப் பிறப்பென்றார் இதனாற் பிறப்புத் துன்பமென்பதூஉம், அதற்கு முதற் காரணம் அவிச்சை யென்பதூஉங் கூறப்பட்டன'' என உரை வரைந்தனர். இதனை நோக்குங்கால் அறப்பயனாகிய இன்பத்தையே நுகரும் தேவப் பிறப்பினுந் துன்பமுண்டோ? என ஓர் ஐயந்தோன்றும். அத்தேவரின் துன்பத்தை அறியுங்கால் நமக்கு ஓர் வியப்புத் தோன்றாமலிராது என்னை? எந்த நாட்டிலும் மக்கள் நூற்றுவருக்கு ஒரு மருத்துவர் இருப்பது அரிதாகும். தேவவுலகத்திலோ முப்பத்துமூன்றுகோடி தேவர்களில் இரண்டுகோடி பேர் மருத்துவர் எனக் கேட்கின்றோமாகலின் என்க. நோயாளிகள் இல்லாதவிடத்து மருத்துவருக்கு வேலையில்லை என்பது நாம் அறிந்ததொன்று. ''இடம், பொருள், ஏவல் நிரம்பப்பெற்ற செல்வர்களாய் அம்மருத்துவர் இருப்பின் தந்தொழிலைக் கருதாமல் இடத்தின் நலம் நோக்கி ஆங்கு இருத்தலாகாதோ'' எனின், அங்ஙனங் கருதவும் இடனில்லை' என்னை?

''குருடன் புகரா மார்த்தாண்டன் குட்டரோகியாம் எஞ்ஞ
புருடன்றலை நோய்புரந்த ரற்குப்புயத்தில் வாதந்
தக்கற்குச்
சுர நோயுண்டு கயரோகம் சோமனுக்கு நீரிழிவு
வருணற் கிவ்வாறமரர்க்கு நோயுண்டுண் டேமருத்து
வரும்''

''தீயவசுரர் பகையுண்டு செற்ற மார்வ மிகவுண்டு
நோயுண் டனங்கனாருண்டு நோய்கட்கெல்லாந் தாயான
காயமுண்டு கைதொழ வேண்டினருமுண்டு கற்பத்தே
மாயுந்தன்மை யுண்டானால் வானோர்க்கென்னை
வளனுண்டே''

எனப் 'பெருந்திரட்டு' என்னும் நூலிற் கூறப்பட்டிருத்தலினால் என்க.

இன்னும் பிறப்புத் துன்பமுடையது என்பதை,

''பிறந் தோருறுவது பெருகிய துன்பம்''
எனவும்,

''வினையின் வந்தது வினைக்கு விளைவாயது''
எனவும், மணிமேகலை ஆசிரியராகிய சீத்தலைச்சாத்தனா ரென்னும் சீரிய புலவரும் விளக்கினமை காண்க.

இன்னும் இப்பிறவியானது நோய் துன்பஞ் செய்வது போலத் துன்பம் செய்தலின், இதனையே ஒரு 'பிணி' யென்றும் நோய்களனைத்தும் தோன்றுதற்கு இஃது ஓர் 'மூலமாயிருத்தலின் 'மூல நோய்' என்றும், ஏனைய நோய்கள் போலப் பல மருத்துவர்களாலும் நீக்கப்படாமை பற்றி இதனைத் 'தீரா நோய்' என்றும், இதனைத் தீர்க்க வல்ல இறைவனை 'மருந்து' என்றும், 'வைத்தியநாதன்' என்றும் நமது முன்னோராகிய பெரியார் பலரும் மொழி குவாராயினர். அவற்றை அவரியற்றிய சாத்திரமுந் தோத்திரமுமாய நூல்களிற் பரக்கக் காணலாம். அவற்றுட் சில வருமாறு:-

''இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை
என்னினல்லால்
விருந்தினனேனை விடுதிகண்டாய் மிக்க நஞ்சமுதா
அருந்தினனே மன்னுஉத்தர கோச மங்கைக்கரசே
மருந்தினனே பிறவிப் பிணிப்பட்டு மடங்கினர்க்கே.''

''தாதாய் மூவேழுலகுக்குந் தாயே நாயேன் தனையாண்ட
பேதாய் பிறவிப்பிணிக் கோர்மருந்தே பெருந்தேன்
பில்க எப்போதும்
ஏதாமணியே என்றென்றேத்தி இரவும் பகலுமெழி
லார்பாதப்
போதாய்ந் தணைவதென்று கொலோ என்பொல்லா
மணியைப் புணர்ந்தே.'' (திருவாசகம்)

''மருந்து நம்மல்லற் பிறவிப்பிணிக்கு அம்பலத்தமிர்தாய்
இருந்தனர்... ... ... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ... ...
... ... ......வெள்வளையே'' (திருக்கோவையார்)

"தீரா நோயெல்லாந் தீர்தல் திண்ணமே''
''மாணா நோயெல்லாம் வாளா மாயுமே''
"வள்ளன் மாமழபாடியுள் மேய மருந்தினை
உள்ள மாதரிமின் வினையாயின ஓயவே''
''மைந்தன் வார்பொழில் சூழ்மழபாடி மருந்தினைச்
சிந்தியா எழுவார் வினையாயின தேயுமே''
(திருஞானசம்பந்தர்)

''பேராயிரம் பரவி... ... ... ... ... ...
... ... ... மந்திரமுந் தந்திரமு மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னை... ... ... ...
... ... ... ...போக்கி னேனே''
''மூலநோய் தீர்க்கு முதல்வன் கண்டாய்''
''மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லஅடி'' (திருநாவுக்கரசர்)

''திங்கட்கு றுந்தெரியல் திகழ்கண்ணின் நுண்ணியனாய்
நங்கட் பிணிகளை வானருமா மருந் தேழ்பிறப்பும்''
(திருநாவலூரார்)

''பிறவிப்பிணிக்கு மருந்தாகலின் நற்றா ளென்றார்''
(பரிமேலழகர் விளக்கவுரை) (திருக்குறள் சூ.2.)

திருப்புள்ளிருக்கு வேளூர்ச்சாமி பெயர் 'வைத்தியநாதன்
திருவான்மியூர்ச்சாமி பெயர் 'மருந்தீசுரன்'

இங்ஙனம் பிறவியைப் பிணி, என்றும், 'நோய்' என்றும், அப்பெரியார் இழித்துக் கூறினாரேனும், நன்மை தீமையைப் பகுத்தறியும் மனவுணர்வும், கடவுளை 'வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும்,'' பிறவழிபாட்டிற்குப் பிறவுறுப்புக்களும் பெற்றிருப்பது இம் மக்கட் பிறப்பேயாகலின் இதனை அவர் பிறிதொரு வழியாற் போற்றிப் புகழ்வாருமாயினார். அவை,

''வாய்த்தது நந்த மக்கீதோர் பிறவி மதித்திடுமின்' எனவும்'
''எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினு
மரிதரிதுகாண்'' எனவும்,

"ஈறியுங்கடலினுகத் துளையினியாமைக் கழுத்துப்
புகுவதுபோற்,
புருடன் விவேகி யெனப்பிறந்து" எனவும்

"தென்பரவையினுட் கழிவடபரவை சேர்நுகத்துளை
உள்செலல்போல்,
ஒன்பதிற் றொன்பதோடு மூவிலக்க முளவியோனியும்
பிழைத்தேறிப்
பின்பிறப்பிது பெற்று"

எனவும், 'உடம்பு பெற்றான்-இறப்பவும் பலவாய பிற யாக்கைகளிற் பிழைத்துப் பெறற்கரிய இம்மானுட யாக்கையைப் பெற்றான்' எனவும் வரும் இவற்றோரன்ன பலப் பல.

மேற்காட்டியவற்றுள் 'மருந்தினனே பிறவிப்பிணிப் பட்டு மடங்கினர்க்கே" என்னும் அடிகள் திருவாக்கால் பிறவியைப் பிணியென்று உணர்வது அரிது என்பதும், அங் ஙனம் உணர்ந்தவர் அதனைப் பொறுக்கலாற்றாது வருந்து வர் என்பதும், அவ்வாறு அழுங்குவார்க்கே ஆண்டவன் அரியமருந்தாயிருந்தது அப்பிணியைப் போக்கி யருளுவ னென்பதும் பிறவும் உணரப்படும்.

இனி, உலகின்கண் துன்பத்தையும், நோயையுங் காணின், அவற்றை போக்கக்கருதி முயலாதார் யாருளர்? ஒருவரு மில்லை; ஆதலின், பிறப்பினைத் துன்பமெனவும் பிணி எனவும் உணர்ந்த அப்பெரியார் அதனைப் போக்குதற்கும் மீண்டும் அது வாராமல் இருப்பதற்கும் முயலாமல் அரை நொடிப் பொழுதேனும் மடிந்திருப்பரோ? அங்ஙனமிருத்தல் மூடர் செயலன்றோ? எனவே அதனைப் போக்க விரைந்து முயல்வாராயினர். அங்ஙனம் முயலுங்கால், தமக்குள்ள 'பிறவிப் பிணியைப் போக்குவான் அப்பிணி தன் மாட்டில் லாதவனாயிருக்க வேண்டும்; அவனால் தான் இது முடியும்" எனத் தெளிந்து 'அவன் சிவபெருமான் ஒருவனே' என உணர்ந்தனர். என்னை?

''எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லா லறிந்தோம்நஞ் சோணேசா—இல்லிற்
பிறந்தகதை யுங்கேளோம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லோம்''

*எனப் பெரியார் கூறினராகலின்.*

இன்னும், இவ்வுண்மையை,

''தெரியா வெகுளிய னாய்த்தக்கன் வேள்வி தகர்த்துஉகந்த
எரியா ரிலங்கிய சூலத்தினா னிமையாத முக்கட்
பெரியான் பெரியார் பிறப்பறுப்பான் என்றுந்
தன்பிறப்பை யறியா னவனடிக் கீழதன்றோ
என்ற னாருயிரே''

*எனவும்,*

''... ... பாதம் பணிவார் தம்பல் பிறவி
ஆய்ந்தாய்ந் தறுப்பாய்''

*எனவும் ஆளுடைய அரசுகளும்,*

''பிறப்பாதி யில்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்பாதி யந்தஞ் செலச்செயும் தேசன்''

*என ஆளுடைய பிள்ளையாரும் விளக்கியருளினமை காண்க. இங்ஙனம் அப்பெரியார் தம் பிறப்பைப் போக்கவும், இனிப் பிறவாதிருக்கவும் கருதி அதுவல்ல 'பிறப்பிறப்பில்லாப் பெருமானை' நோக்கி முறையிட்டமையும், மற்ற மக்களும் அதனைச் செய்யுமாறு அவர்க்கு அறிவுறுத்தினமையும், ''மெய்ப்பொருளாகிய இறைவனைக் காணின் மீண்டும் இப் பிறப்புத் துன்பம் நமக்கு இல்லை'' என்று அவர் கருதினமையும் பிறவும் கீழ்வரும் பகுதிகளால் உணரலாம்.*

*அவை,*

''வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந்
தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே''
(*மாணிக்கவாசகர்*)

''பிணிகொ ளாக்கை யொழியப் பிறப்புளீர்
துணிகொள் போரார் துளங்கு மழுவாளர்
மணிகொள் கண்டர் மேயவார் பொழில்
அணிகொள் சோற்றுத் துறைசென் றடைவோமே''
(திருஞான சம்பந்தர்)

''பத்தர்கள் நாளும் மறவார் பிறவியை யொன்றறுப்பான்''
''துறவி நெஞ்சின ராகிய தொண்டர்காள்
பிறவி நீங்கப் பிதற்றுமின் பித்தராய்''
''அறவனா ரடியா ரடியார் தங்கள்
பிறவி தீர்ப்பர் பெருமா னடிகளே''
''பிணித்த நோய்ப்பிற விப்பிறி வெய்துமால்
உணர்த்த லாமிது கேண்மின் உருத்திர
கணத்தி னார்தொழு தேத்துங் கருவிலிக்
குணத்தி னான்உறை கொட்டிட்டை சேர்மினே''

(திருநாவுக்கரசர்)

''மணமென மகிழ்வர் முன்னே மக்கள் தாய்தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் பேர்த்தே பிறவியை வேண்டேன்
நாயேன்''
''எங்கோனே உனைவேண்டிக் கொள்வேன் பிறவாமையே''
''பெற்றனன் பெற்றனன் பெயர்த்தும் பெயர்த்தும்
பிறவாமைக்கே''
''இங்ஙனம் வந்திடர்ப் பிறவிப் பிறந்தயர் வேன்அயராமே
அங்ஙனம் வந்தெனை யாண்டஅரு மருந்தென்னா ரமுதை''
(திருநாவலூரர்)

''கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி''

''ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு''

''பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு''

"மற்றுந் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பு மிகை"

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்"

(திருக்குறள்)

"இவ்வுடம்புகளால் துன்பம் இடையறாது
வருதலையுணர்ந்து
இவற்றானாய கட்டினை இறைப்பொழுதும் பொறாது
வீட்டின்கண் ணேவிரைதலின், 'உடம்பு மிகை' என்றார்"
"வேண்டுங்கால் பிறவாமை வேண்டும்—பிறப்புத்
துன்பமாதல்
அறிந்தவன் ஒன்றை வேண்டிற் பிறவாமையை வேண்டும்"
(பரிமேலழகர் உரை. திருக்குறள் சூ. 345, 362)

என்பனவாம்.

இன்னணம் இப்பிறவியை இழித்து வெறுத்து 'வேண்டா 'வேண்டா' என்னும் அப் பெரியாரே

"மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயம்
ஆனிடத் தைந்துமாடி யான்பணிக்காக"

என்பதை உணர்ந்து உள்ளம், உரை, உடலாகிய மூன்றையும் ஆண்டவனுக்குச் செய்யும் அன்புப்பணியிற் போக்கி அதனாற் பொங்கியெழும் இன்பப் பெருக்கின் வயப்பட்டவராய் அப்பிறவி 'வேண்டும் வேண்டும்' எனவுங் கூறுவராயினர். அவை,

"குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற்
பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங்காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்தமா நிலத்தே"

''குறைவி லோங்கொடு மானுட வாழ்க்கையாற்
கறைநிலாவிய கண்டன்எண் தோளினன்
மறைவலான் மயிலாடு துறையுறை
இறைவ னீள்கழ லேத்தி இருக்கிலே''

''என்னன்பா லிருக்குமாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே'' (அப்பர்)

என்பன.

சமய குரவர் நால்வருள் திருநாவுக்கரசர் ஒருவரே மனம், மொழி, மெய் என்ற மூன்றாலும் இடையறாப் பேரன்புடன் இறைவனுக்குப் பணியாற்றி வந்தாராகலின் அவர் இப்பிறவியைப் பெரிதும் வேண்டினர் என்ப.

இன்னும், திருவிடைமருதூரின்கண் வரகுணபாண்டியன் என்பான், ஆண்டவனிடத்து வைத்த பேரன்பினால் விழுங்கப் பட்டவனாய், பார்த்த விடமெல்லாம் பரம்னைக் காணும் உணர்வுடையவனாய், வேம்பின் பழங்கள் ஆண்டவன் அருட்குறி போற்றோன்ற அவைகீழே விழாமல் அம்மரங்கட்குமேல் விதானமமைத்தும், குளத்திலுள்ள தவளைகள் கத்துவதை இறைவன் திருப்பெயரை இயம்புகின்றனவென்று கருதி அவைகட்குப் பொன்னும் மணியும் வாரி இறைத்தும், ஓடுகின்ற நரிகளின் ஊளை கேட்டு அவைகள் பரமனைப் பாடினவென்று கருதிப் படாங்கள் பல அளித்தும், இன்னுஞ் செயற்கருஞ் செயல் பல புரிந்தும் வருங்காலை, ஒருநாள் வன்னிமதிச் சடையனை வழிபடும் பொருட்டு அன்னவன் கோயில் அணுகுவானாக, ஆண்டு ஆண்டவன் திருமுழுக்குக்கு நெய் எடுத்தற் பொருட்டுக் காயவைத்திருந்த எள்ளைப் பணிசெய்வான் ஒருவன் தின்று கொண்டிருத்தலைக்கண்டு 'அடே பாவி!' என் செய்தனை! இறைவனுக்குப் பயன்படவிருக்கும் எள்ளை அள்ளித் தின்று மிச்சிலாக்கி மீளா நிரயத்திற்கு ஆளாகினையே' என, அவன் இவனை ஏமாற்றும் வழியை உணர்ந்து 'அரசர் பெரும! யான் இத்திருக்கோயிற்றிருப்பணியாளரில் ஒருவன்

இத்திருப் பணிப்பயனால் மீண்டும் எனக்குப் பிறப்பில்லை யெனப் பணித்தனர் பெரியோர் பலர். பல பிறவிகள் எடுத்துப் பரமனுக்குப் பணியாற்ற வேண்டுமென்னும் பேரவாவுடைய எனக்கு அப்பெரியார் கூற்று கூற்றாகத் தோன்றிற்று; ஆதலின் இவ்வெள்ளைத் தின்றால் அவ்வெள் ளுக்கடனை இறுக்கும் பொருட்டாகவேனும் இன்னு மொரு பிறவியெடுத்து இவ்விறைவனுக்குப் பணியாற்றலா மெனக் கருதிச் செய்து விட்டேன்; 'பிழைபொறுக்க? என்று வேண்ட, 'அங்ஙனமாயின் எனக்குஞ் சிறிது தருவாயாக' என அவன் மிச்சிலெள்ளை வாங்கி அப்பாண்டியன் தின்றா னென வரலாறு கூறுவதிலிருந்து பரம்பரன்பணிக்குப் பயன் படுமேல் பிறவியைப் பெரிதும் வேண்டுவர் பெரியா ரென்பது வெள்ளிடை மலை

மேற்காட்டிய பாண்டியன் வரலாற்றுண்மையைப் பட்டினத்தடிகள் திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில்

''வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பன்னரி ஊளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்தும்
குவளைப் புனலில் தவளை யரற்ற
ஈசன் தன்னை யேத்தின வென்றும்
காசும் பொன்னுங் கலந்துதூவியும்
வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்மித் தலையுங்
கிடக்க வேண்டுமென்று அடுத்தடுத் திரந்தும்
கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்தும்

காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய வன்பின் வரகுண வேந்தரும்''

எனக் கூறியவாற்றான் அறிக.

இன்னும் இவ்வுண்மையைச் சேக்கிழார் பெருந்தகை 'திருத்தொண்டர் புராண'த்தில் அடியார்களின் இலக்கணங் கூறும்வழி'

''கூடு மன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்''

என விளக்கியருளினமையுங் காண்க.

இன்னும் அவர், தில்லையின்கண் திருக்கூத்தப் பெருமான் காட்சியாற் பெருகிய இன்பத்தில் ஈடுபட்ட நம்பியாரூரர் கூறுங் கூற்றாகவைத்து,

''தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
றிருநடங் கும்பிடப் பெற்று,
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணில் ஆனந்த வருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்''

எனக் கூறியருளியதுங் காண்க.

இங்ஙனம் ஒருவகையாற் பிறப்பு வேண்டாமெனவும், பிறிதொரு வகையால் அது வேண்டுமெனவுங் கூறுமாற்றால் ஒன்றுக்கொன்று முரண்படாமையும் ஓர்ந்தறிக.

இனி, பிறப்பைத் துன்பமெனவும், நோய் எனவும் தீராநோய் எனவும், மூலநோயெனவும் பெரியோர்கள் கொண்டார்களெனவே, அப்பெரியாருள் தலை நிற்பவராகிய நமது அழுதடியடைந்த அன்பரும்,

''வேற்று விகாரவிடக் குடம்பினுட் கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேயோ''

எனவும்,

''தினைத்துணையேனும் பொறேன் துயராக்கையின்
றிண்வலையே''

எனவும்,

விடக்கூன் மிடைந்த, சிதலைச்செய் காயம்
பொறேன் சிவனே முறையோ முறையோ,''

எனவும்,

மொய்ப்பா னரம்பு கயிறாகமூளை யென்புதோல்
போர்த்த குப்பாயம் புக்கிருக்க கில்லேன்''

எனவும்,

''சீஆர்ந்தீமொய்த்தழுக் கொடுதிபுரிஞ் சிறுகுடிலிது
சிதையக், கூவாய் கோவே''

எனவும்,

''மிடைந்து எலும்பூத்தை மிக்கழுக்கூறல் வீறிலி
நடைக்கூடம் தொடர்ந்தெனை நலியத்
துயருறுகின்றேன்''

எனவும், நோயுந்துன்பமுங் கொண்டார் பொறுக்கலாற் றாது பதறிக் கதறுவதுபோல அரற்றி அழுதனர் என்க.

இனி, ''யானே பொய்'' என மேலே காட்டிய பாட்டுள், 'அழுதாலுன்னைப் பெறலாமே என்ற தொடரிலுள்ள ஏகாரத்தை வினாவாகக் கொண்டு அதனாற்போந்த பொருள் பெறலாகாது என முடித்து, 'பொய்யாகிய அன் புடைய யான் அழுவதனால் பயன் யாது? அன்பற்ற-மாய அழுகையால் உன்னைப்பெற முடியாது எனக்கொள்ளுவதே அடிகள் கருத்தாகும் எனக் கூறலாமோவெனின், கூறலாம்;

அங்ஙனம் கொள்ளினும் அடிகள் 'அன்போடு கூடிய அழுகையால் ஆண்டவன் அடியை அடையலாம்' எனக் கருதினாரென்றும், 'அன்பின்றி அழுகின்ற எற்கு எங்ஙனம் அத்திருவடிப்பேறு வாய்க்கும்? எனக் கருதினாரென்றுங் கொள்ளப்புட்டு, ஆண்டவனடிப்பேற்றுக்கு அழுதல் ஒரு சாதனம் என்பதும், அழுதனர் என்பதும் வலியுறுத்தப் படுவதால் முடிவில் வேறுபாடின்மையைக் கூர்ந்துணர்க.

அவர் தமக்கு 'அன்பில்லை' எனக் கூறியருளியதன் காரணத்தை மேல்வரும் 'அன்பர்' என்ற பகுதியில் விளங்கக் காண்க.

இன்னும், இந்நூலின் தொடக்கத்தில் அடிகள் வாசமாகக் காட்டப்பட்ட 'புழுவினால்' என்று தொடங்குந் திருப்பாட்டில், உள்ள

"தொழுதகையின ராகித்தூய் மலர்க்கண்க ள்நீர்
மல்கு தொண்டர்க்கு வழுவிலா மலர்ச்சேவடி"

என்னுந் தொடரால் 'அழுபவர்க்கு அடிப்பேறு தப்பாது' என அடிகள் அறுதியிட்டு அருளினமை காண்க.

இச்சாதனமும் தனக்கு வாய்க்கவில்லையேயென அடிகள் புடைபடக் கவன்றமை திருச்சதகத்திலுள்ள.

"ஆராயடியே னயலே மயல் கொண்டழுகேனே"
"அழுகினின்பா லன்பாமனமாய்"

என்னும் அடிகளால் நன்கு விளங்குவதாகும்.

இனி, அன்பர் அழுதமையைக் குறிக்கும் அழகிய ஆதரவு ஒன்று வருமாறு:-

"முழுமுதலே ஐம்புலனுக்கு மூவர்க்கும் என்றனக்கும்
வழிமுதலே நின்பழவடி யார்திரள் வான்குழுமிக்
கெழுமுதலே அருள்தந் திருக்க இரங்குங்கொல்
லோவென்று

அழுமதுவே அன்றிமற்றென் செய்கேன்
பொன்னம்பலத்தரைசே''
(கோயில்மூத்த திருப்பதிகம்-4)

அறிவுடைய செல்வக்குழந்தை ஒன்று இடையறாது அழாநிற்க, அவ்வருந்தவமகவின் அத்தனும் அம்மையும் அதை வாரியெடுத்து, முத்தமிட்டு, 'என்கண்ணே ஓயாது அழுகின்றாயே ஏன்' என்று கேட்பார்களாயின், அவ்வரும் பொருள், 'நீங்கள் தாம் யாம் கேட்டதைத் தரவில்லையே, யான் அழாமல் என் செய்வேன்' எனக் கூறுவதை நினைவில் வைத்துக் கொண்டு பார்ப்போமானால், நமது அடிகள் இடையறாது அழாநிற்க அதனையறிந்த அம்பலத்தரசு பொறுக்கலாற்றாது 'ஏன் ஓயாது அழுகின்றாய்' எனக்கேட்டது போலவும்' அதற்குவிடையாக, 'அழும் அதுவேயன்றி மற்று என்செய்கேன்பொன்னம்பலத்தரசே'' என அடிகள் கூறியருளியது போலவும் மேற்காட்டிய திருப்பாட்டின் ஈற்றடி அமைந்து கிடத்தல் காண்க.

இன்னும், நமது அன்பர்தாம் அழுங்காலை ஆண்டவன் கண்ணீரைத் துடைத்துப் போக்கியருளினனென்பதை,

''மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி மலங்கெடுத்த பெருந்துறை''

எனக் கூறி விளக்கியருளினமையும் காண்க.

இனி. அழுதல் ஒரு சாதனமா? என்ற பகுதியின் தொடக்கத்தில் 'உயிர்கள் எவ்வெச்சாதனங்களால் தாம் விரும்பியவற்றை அடைகின்றனவோ அச்சாதனங்கள் ஆண்டவன் அடிப்பேற்றுக்கும் உரியனவாகுமெனப் பெரியோர் கருதினரென்பதை அவரியற்றிய நூல்களிற் காணலாம் எனக் கூறினேம் அதற்குச் சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:-

நகரங்கள் பலவற்றிலும் தூய்தல்லாத உடை முதலியன உடையாராய், வீதி முதலியவற்றைத் துப்புரவு செய்யுந் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்து வரும் ஒரு வகுப்பார்

உளர். அவர்கள் ஆங்குள்ள வீடு ஒன்றில் மணவினையோ அன்றிப் பிணவினையோ எதுவாயினுங் கருதாராய் மக்கள் திரண்டிருப்பதைக் காணின் அங்குச்சென்று உண வின் பொருட்டு [இசைநூலுட் கூறப்படும் பன்னிரண்டு மாத்திரையினும் மிகுமாறு] (ஓ) வென்று நீட்டி 'அம்மோ ஆயோ' எனச்சிறிதும் ஓயாது கத்துவார்கள். அவ்வீட்டுத் தலைவர் சிறிது இரக்கமுடையவரானால் அலறுகின்றவர் களின் விருப்பம் எளிதில் நிறைவேறும். இன்றேல் அரிது முயல வேண்டியதுதான் முயற்சி என்னை? ஒவ்வொரு முறையும் ஒலியை உயர்த்தி மாத்திரையை மிகுத்து விளிப் பதுதான். இங்ஙனம் அவர்களால் உண்டாகும். அப்பே ரொலியானது அவ்வீட்டுத் திண்ணையில் மேற்காட்டிய இரு வினைகளில் எது நடந்தாலும் தாம் அதில் ஒரு சிறிதுந் தொடர்புகொள்ளாத மெய்ஞ்ஞானிகளாய், 'நன்றறி வாரி னும் திருவுடையராய்ச் சதுர்முக வேதபாராயணம் (சீட்டாட் டம்) செய்து கொண்டிருக்கும் இளைஞரும் முதியருமாகிய சிலர் நுகரும் இன்பத்திற்குப்பெரிதும்இடையூறாகஇருக்கும் உடனே அவருள் ஒருவர் வெளியே சென்று அச்சுறுத்து வார்கள் அவர்கள் ஒரு சிறிதும் அதைப் பொருட்படுத்ாது தாம் மேற் கொண்ட உரத்துக் கூப்பிடுதலாகிய தொழிலின் கண்ணே கண்ணுங்கருத்துமாக இருப்பார்கள். நால்வகை உபாயங்களுள் கொடுத்தலென்பது ஒழிய மற்ற மூவகையுள் எதைச் செய்யினும் போகார். இன்னும் நான்காவதாகிய ஒறுத்தல் நடந்துவிட்டால் அவர்கள் வேண்டுவது எளிதில் முடிவதுடன் எதிர்பார்த்ததினும் மிகுதியாகவே முடியும். பின் வெளியே வந்து அவ்வுபாயங்களைச் செய்து பார்த்த அவர் உள்ளே சென்று அவ்வீட்டுத் தலைவரிடம் 'அவர்கட்கு உணவுகொடுத்துப் போகச் சொல்லுகின்றீர்களா? அல்லது யாங்கள் வேறிடத்திற்குச் செல்லவேண்டுமா? எனச் சினக் குறியுடன் வினவுவார். உடனே அவர் வெளியிலுள்ள ஆட வரும் மகளிருமாகிய அக்குழுவினருக்கு வேண்டிய உணவைக் கொடுத்துப் போக்குவர். இங்கு அவர்கள் எச்சாதனத்தால் தாங்கள் விரும்பியதைப் பெற்றனர்? அவர்கள் உணவு பெற்

றுக்கொள்ளுதற்குரிய தகுதியினாலா? அன்று உணவுகொடுத்தவர்கள் இரக்கத்தினாலா? அன்று பின் என்னை? அவர்கள் 'அம்மோ ஆயோ' என இடையறாது போட்டக் கூக்குரல் தான்.

இனி. இதை நினைவில் வைத்துக்கொண்டு, நமது திருநாவுக்கரசுகள் தனித்திரு விருத்தத்தில் கூறியருளிய,

''சிவனெனும் நாமந் தனக்கே யுடைய செம்மேனி
யெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகில்
அவன்றனையான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தால்
இவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென்று
எதிர்ப்படுமே''

என்னுந் திருப்பாட்டின்கீழ் இரண்டிகளையும் நோக்குவோமாக.

ஆளுடைய அரசு என்ன கூறுகின்றார்? ''ஆண்டவனுடைய காட்சியைப் பெறுந்தகுதி எனக்கில்லை யாயினும் அதனால் அவன் அருள்கூர்ந்து எளிவந்து காட்சிகொடானாயினும், அவன் திருப்பெயரைச் சொல்லி இடையறாது பன்னாள்வரை யான் அழைத்துத் திரிந்தேனாயின், அவன், இவன் பன்னாளாகவிடாது கத்துகிறான், எனக்கருதி அக் கூப்பாட்டினால் உண்டாகும் உபத்திரவம் பொறுக்கலாற்றாது எதிர்வந்து காட்சி கொடுப்பான்'' என அருளிச் செய்தனர். இது மேற்காட்டிய உலகியலுடன் ஒத்திருத்தல் காண்க.

இத்திரு விருத்தத்தின் முன்னிரண்டடிகளால் 'இறைவன் திருப்பெயரையறிந்து அதனால் அவனை அழைத்தற்கும் அவன் திருவருள் வேண்டும்' எனவும் 'இன்றேல் அது முடியாது' எனவும் குறிப்பித்தது கருதத்தக்கது. இக்கருத்தைப் பின்னும் அப்பெரியார்,

''என்னை ஏது அறிந்தில னெம்பிரான்
தன்னை நானுமுன் னேது மறிந்திலேன்

**என்னைத் தன்னடி யானென் றறிதலும்**

**தன்னை யானும் பிரானென் றறிந்தேனே''**

என விளக்கிப் போந்தமை காண்க.

இனி, வண்டியிலும், நடந்தும் வழிச்செல்லுவோரை ஒருவகுப்பாரின் சிறுவர் சிலர் 'ஐயா ஐயா' என்று வயிற்றிலடித்துக் கொண்டு, காவத தூரமேனும் பின்றொடர்ந்து ஓடி அவர் போக்கைத் தடைப்படுத்தி எத்துணை உலோபியாக இருப்பினும் அவரிடஞ் சிறுபொருள் பெற்று மீளுதலாகிய நிகழ்ச்சியை நினைவில் வைத்துக் கொண்டு,

**''வணங்கியாம் விடேங்களென வந்து நின்றருளுதற்**

**கிணங்கு கொங்கை மங்கைபாக என்கொலோ**

**நினைப்பதே''**

எனக் கூறும் அடிகளின் திருவாசகத்தையும்,

பன்னாட்களாக எத்திக்கொண்டு திரியும் ஒருவன் அகப்பட்ட ஞான்று எத்தப்பட்டவன் இறுகப்பிடித்துக் கொண்டு 'எங்கே இனி போய்விடு பார்ப்போம்' எனக் கூறும் உலக நிகழ்ச்சியை நினைவில் வைத்துக்கொண்டு,

**''எத்தனே யுன்னைச்சிக்கெனப்பிடித்தேன் எங்கெழுந்**

**தருளுவதினியே''**

என்னும் மணிவாசகத்தையும்,

**''முளைத்த வெண்பிறை மொய்சடையுடையா யெப்போதும்**

**என்னெஞ்சிடங் கொள்ள,**

**வளைத்துக் கொண்டிருந்தேன் வலிசெய்து**

**போகவொட்டேன்''**

என்னும் அப்பர்பெருமான் அமிர்தமொழியையும் உன்னியுன்னி மகிழ்க.

மேலே காட்டப்பட்ட திருவாசக ஆதரவுகளினால் ஆண்டவன் அடிப்பேற்றுக்கு அழுதல் ஒருசாதனம் என்பதும் அதுதானும் தமக்குச் சித்திக்க வில்லையே என அடிகள் வருந்தினரென்பதும், அழுபவர்க்கு அவ்வடிப்பேறு தப்பாதென்பதும், அதனை மேற்கொண்டு அடிகள் ஒழுகினாரென்பதும், பிறவும் பெறப்பட்டன.

## 3. அடியடைந்தாரா?

அடியார்களனைவரும் இறைவன் திருவடிப்பேறு ஒன்றையே விரும்பி நின்று அதனையே அடைவார் என்பது அவர்களின் உண்மை வரலாறுகளில் காணப்படுவதொன்றாகும். அடியார் என்ற சொல்லும் அப்பொருளை வலியுறுத்தும், ஆண்டவன் அடிப்பேறுதான் வீடுபேறு என்பது இதனை, நமது அன்பர் திருவாசக யாத்திரைப்பத்தில்,

''போவோங் காலம் வந்ததுகாண் பொய்விட்டுடையான்
கழல்புகவே''

எனவும்,

''போமாறமைமின் பொய்நீக்கிப் புயங்கன் ஆள்வான்
பொன்னடிக்கே''

எனவும்,

''நிற்பார் நிற்க நில்லாவுகினில் லோமினி நாஞ்செல்வோமே
பொற்பா லொப்பாந்திரு மேனிப்புயங்கன்ஆள்வான்
பொன்னடிக்கே''

எனவும்,

''திருமாலறியாத் திருப்புயங்கன் திருத்தாள் சென்று
சேர்வோமே''

எனவும், கூறியருளியவாற்றால் அறிக.

இன்னும் திருநாவுக்கரசுகள் தாம் இறைவன் றிருவடியுடன் இரண்டறக் கலக்கச்செல்லும் அந்நிலையிற் பாடியருளிய 'எண்ணுகேன்' என்று தொடங்குந் திருத் தாண்டகத்தின்கண்,

''புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்
மேவிய புண்ணியனே''

என ஈற்றடி கூறியருளினமையும், அப்பதிகமுழுதும் ஈற்றடியில் "அடிக்கே போதுகின்றேன்" என அருளிச்செய்தமையுங் காண்க.

இன்னும் இப்பதிகத்தின் மூன்றாவது திருப்பாட்டின் இறுதியடியாகிய,

"பொய்யுரைக்கா துன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே"

என்பதும் மேலே காட்டிய மணிவாசகமாகிய,

"போவோங்காலல் வந்ததுகாண் பொய் விட்டுடையான்
கழல் புகவே"

என்பதும் ஒத்திருத்தலை ஓர்க.

இனி ஆளுடைய பிள்ளையாரும் திருவாழ்கொளிப் புத்தூர் (பண்-தக்கராகம்) பதிகத்தின் ஈற்றடி அனைத்தினும் 'அடிசேர்வோம்' என இவ்வுண்மையை விளக்கியருளினார்.

"திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ்சிந் திக்கில்,
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உட்டெளி வார்க்கே"

என்பது திருமந்திரம்.

மக்கட் பிறப்பினர் அடைய வேண்டிய பயன் கடவுள் கழல் சேர்தல் (வீடுபேறு) தான் என்பதைச் சேரமான் பெருமாள் நாயனார் 'பொன்வண்ணத் தந்தாதி'யில்,

"படிறாயின சொல்லிப்பாழுட லோம்பிப் பலகடைச் சென்று
இடறா தொழிதும் எழுநெஞ்சமே எரியாடி யெம்மான்
கடறாயின நஞ்ச முண்டபிரான் கழல் சேர்தல் கண்டாய்
உடறானுள பயனாவ சொன்னேன் இவ்வுலகினுள்ளே"

எனக் கூறி விளக்கியருளினர்.

இன்னும், திருமுருகாற்றுப் படையில் 'சேவடி படரும்' என்ற விடத்து,

> ''திருவடியே வீடாயிருக்கு மென்றார்; அது,
> 'தென்னன் பெருந்துறையான்... ... ... ... ...
> காட்டாதனவெல்லாங் காட்டிச்சிவங் காட்டித்
> தாட்டாமரை காட்டித் தன்கருணைத் தேன்காட்டி'
> என்பதனானும்,
> பிறருந்திருவடியைக் கூறுமாற்றானும் உணர்க''

என்ற நச்சினார்க்கினியர் உரையும் இதனை வலியுறுத்தல் காண்க.

அவர் மேற்கோளாகக் காட்டிய திருப்பாட்டும் திருவாசகமென்பது கருதற்பாலது.

இனி, நமது அடிகள் இறைவன் திருவடியின்கண் வைத்த பற்று முதலியவற்றையும் அதனை அடைந்ததையும் திருவாசகத்திற் கிடைக்கும் ஆதரவுகளைக் கொண்டு ஆராய்வோம்.

திருவாசகத் தொடக்கத்திலேயே, ''நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க'' எனப் பெருமான் திருவடி பேசப்படுகின்றது. இங்ஙனம் தொடக்கத்திலேயே அன்பர் ஆண்டவனுடைய திருவைந்தெழுத்தையும் திருவடியையும் வாழ்த்தியதற்குக் காரணம் என்ன என்பதைச் சிறிது நோக்குவோமாக.

அடிகள் தாம் பிறவியென்னும் பெருங்கடலில் வீழ்ந்து துன்பமென்னும் பேரலைகளால் எற்றப்பட்டு, பெண்களாகிய காற்றினாற் கலக்குண்டு காமமென்னும் சுறாமீனின் வாய்ப்பட்டு 'இனி எங்ஙனம் உய்வேன்' எனக் கலங்கிய ஞான்று, அஞ்செழுத்தாகிய புணை கிட்டியதாகவும் அது கொண்டு திருவடியாகிய கரையை அடைந்ததாகவும்,

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலாற் கலக்
குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்(டு)
இனியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற் கரைகாட்டி
ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே"

(திருச்சதகம்-27)

என்னுந் திருப்பாட்டால் நன்கு விளக்குகின்றார். இங்ஙனம் திருவைந்தெழுத்தாகிய புணை தமக்குச் செய்த, காலத்தினாற் செய்ததும், செய்யாமற் செய்ததும் பயன் தூக்காது செய்ததுமாகிய அவ்வுதவியானது, ஞாலம் வானம், கடலாகிய இம்மூன்றினும் பெரிதாகத்தோன்ற அதற்குக் கைம்மாறாகத் தாம் யாது செய்யாலாமென அடிகள் துருவித் துருவி ஆய்ந்து 'யானிதற்கிலனோர் கைம்மாறு' என்னும் முடிவுக்கு வந்து, நன்றி செய்தாரை வாழ்த்துதலாகிய நல்லோர் மரபுப்படி, நமச்சிவாய வாழ்க, எனக் கூறியருளினர்.

இனி, கடலின் நடுவண் கிடந்து கலங்கும் ஒருவனுக்குப் புணை ஒன்றுகிட்டி, கரைகிட்டாதிருப்பின், அக்கடலில் மூழ்கி இறத்தலாகிய துன்பமட்டும் இல்லாதிருக்கலாமேயன்றி கரையடைதலாகிய இன்பத்தைப் பெறாராகலின் துன்ப நீக்கத்திற்குக் காரணமாயிருந்த திருவைந்தெழுத்தைக் கூறிய நமது அடிகள் இன்ப ஆக்கத்திற்குக் காரணமாயிருந்த இறைவன் திருவடியை வாழ்த்துவான் வேண்டி 'நாதன்றாள் வாழ்க" என வாய்மலர்ந்தருளினர். இன்னும் அதன் கீழ்வரும் பதினான்கு அடிகளில் அத்திருவடி வாழ்க வெல்க, போற்றி எனக்கூறியருளியதையும் காண்க.

இன்னும் அடிகள்,

"போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி இன்பமும்
ஏக நின்கழல் இணையலாது"

என்பதனால் அப்பேற்றினைத் தவிர வேறு எப்பதவியிலும் தமக்குப் பற்றில்லை என்பதையும்.

"இரவும் பகலும்எழிலார் பாதப் போதாய்ந்துஅணைவ
தென்று
கொலோ என் பொல்லாமணியைப் புணர்ந் தே"
'பாடிப்பாடிப் பணிந்து பாதப் பூப்போதணைவதென்று
கொலோ என்பொல்லா மணியைப் புணர்ந்தே"

என்பவற்றால் அப்பேறு என்ஞான்று தமக்குக் கிட்டுமோ வென வருந்தியதையும்,

"உன்திரு மலர்ப்பாதம் அடைந்து நின்றிடுவான்
ஆசைப் பட்டேன் கண்டாயம் மானே"

என்பதனால்
அத்திருவடிப் பேற்றில் தமக்குள்ள ஆசையையும்,

"தருகநின் பாதம் போற்றி தமியனேன் தனிமைதீர்த்தே"
"ஆர்ந்த நின்பாதம் நாயேற் கருளிட வேண்டும் போற்றி"

என்பவற்றால் அப்பேற்றுக்கு ஆண்டவனைத் தாம் மன்றாடி இரந்து வேண்டினமையையும்,

"நின்தி ருவடிக்காம்பவமேஅருளு கண்டாய் அடியேற்கு
எம்பரம் பரனே"

என்பதனால் இப்பிறவி அப்பேற்றினைப் பெறுந்தகுதியுடைய தன்றேல் அடுத்த பிறவியாயினும் அதற்குரியதாகக் கொடுத்தருள வேண்டுமென்பதையும் விளக்கியருளினமை காண்க.

இன்னும் அத்திருவடிக்குள்ள பேரருளை விளக்குமிடத்து,

"வண்ணந்தானது காட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவை காட்டி வழியற் றேனை
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்"

என வண்ணம், வடிவுகாட்டினும், மலர்ச்கழல்கள் காட்டிய பின்னரே தமது பிறப்புத் தொலைந்தது எனக் குறிப்பித் தருளினர்.

இங்கு வண்ணந்தானது........கொண்டாய் என்பதனால், பேரொளி மயமாகிய இறைவன் வெளிப்பட்டுத் தன் அருட்டிருமேனியைக் காட்டிய உண்மையை அடிகள் கூறியிருப்பதைச் சிறிது ஆராய்ந்து காண்போம்.

மக்களுடைய காட்சிக்கும், கடவுளின் காட்சிக்கும் பெரிதும் வேற்றுமையுண்டு. மக்கள் சேய்மையிற் காணப்பட்டால் முதலில் உருவமும் சிறிது நெருங்கியபின் உறுப்புக்களும் அண்மையில் வந்தபின் அவர்களின் செந்நிறமோ, அன்றிக் கருநிறமோ, அல்லது பொது நிறமோ, அதுவுங் காணப்படும். கடவுளின் காட்சி முன்னர் ஒளியும் பின் வடிவமும், அதன் பின் உறுப்புங் காணப்படும். அடிகள் உண்மையாகவே ஆண்டவனைக் கண்டு களித்தவராகலின் அவ்வுண்மையை 'வண்ணந்தானது காட்டி' என முதலில் ஒளியைக்கூறி, 'வடிவுகாட்டி' எனப் பின் திருவுருவத்தைச் செப்பி, 'மலர்க் கழல்களவைகாட்டி' என இறுதியில் இறைவனருளுறுப்பும் தமக்கு இன்பமளித்ததுமாகிய பொன்னடியைப் புகன்றருளினார். காலஞ்சென்ற பேரறிவாளர், கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களால் உரையெழுதப்பெற்று சைவ சித்தாந்த சமாஜத்தாரால் 1933ல் வெளியிடப்பெற்ற திருவாசகத்தில், அச்சமாஜத்தார்கள் வேண்டுகோளுக்கிணங்கி அந்த உரைமேல் தங்கள் கருத்தை எழுத உடன்பட்டு எழுதிய மூவருள் யான் ஒருவன், மற்றவர் காலஞ்சென்ற நாட்டாரவர்களும், பண்டிதமணியவர்களுமாவர். அத்திருவாசக இறுதியில் அவர்களின் கருத்தை ஒரு அநுபந்தமாகவும் என் கருத்தைத் தனி அநுபந்தமாகவும், வெளியிட்டிருக்கிறார்கள். அதில் யான் எழுதிய இந்த உரை பிற்காலத்தில் தமது உரைபோலக் கதிர்மணி விளக்கஉரைகாரர் எழுதிக்கொண்டார். இவ்வாறு ஆண்டவன் அருள் வடிவத்தையும் அருட்கழலையும் தாங்

*கண்ணரக் கண்டு மகிழ்ந்தது பற்றி அடிகள் திருவாசகத்திற் கூறியருளிய பகுதிகள் அளவிறந்தன; அவற்றுட்சில:-*

### திருவுருவக்காட்சி:-

"கண்ணாலி யானுங் கண்டேன் காண்க"

"உண்டோ ரொண் பொரு ளென்றுணர் வார்க்கெல்லாம்
பெண்டிர் ஆண் அலி என்றறி யொண்கிலை
தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலேன் என்னகண் மாயமே"

"அடியோங் கண்ணாற வந்து நின்றான்"

"திகழா நின்ற திருமேனி காட்டி யென்னைப்பணி
கொண்டாய்"

### திருவடிக்காட்சி:-

(1) "மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"

(2) "நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி"

(3) "கண்ணாற் கழல் காட்டி நாயேனை யாட்கொண்ட"

(4) "நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி நாமிற்
கடைப்பட்ட நம்மையிம்மை ஆட்கொண்ட"

(5) "திருமாலும் பன்றியாச் சென்றுணராத் திருவடியை
உருநாமறிய ஓரந்தணனாய் ஆண்டு கொண்டான்"

(6) "பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசமறுத்
தெனையாண்ட"

(7) "கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன்
கண்கள் களிகூர"

(8) "கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினையுன்
கழலிணைகள்"

(9) "கண்ணார உய்ந்த வாரன்றே யுன்கழல் கண்டே"

(10) "பாதமலர் காட்டிய வாரன்றே யெம்பரம்பரனே"

(11) ''ஒண்மலர்த் தாள்தந்து, நாயிலாகிய குலத்தினுங் கடைப்படும்
என்னை நன்னெறிகாட்டி''

(12) ''பொய்யெலாம் விடத்திருவருள் தந்துதன்
பொன்னடியிணை காட்டி''

(13) ''போந்தியான்துயர் புகாவணம் அருள்செய்து
பொற் கழலிணை காட்டி''

(14) ''வீடுதந்தென்றன் வெந்தொழில் வீட்டிட மென்மலர்க்
கழல் காட்டி''

(15) ''மலரடியிணை காட்டி''

(16) ''விரை மலர்க்கழல் காட்டி''

(17) ''தன்னிணை மலர்க்கழல் காட்டி''

(18) ''காயத்துள் அமுதூறவூற நீகண்டுகொள் என்று
காட்டிய, சேயமாமலர்ச் சேவடி''

(19) ''காதல் பெருகக் கருணை காட்டித் தன்கழல் காட்டி''

(20) ''என்பே உருக நின்னருளளித்துன் இணைமலரடி காட்டி''

(21) ''துயக்கறுத் தெனையாண்டு கொண்டு நின்தூமலர்க் கழல்
தந்தெனை''

(22) ''உரியேன்அல்லேன் உனக்கடிமைஉன்னைப் பிரிந்திங்கு ஒருபொழுதுந்
தரியேனா யேனின்ன தென்றறி யேன்சங்கரா
கருணையினாற்
பெரியோனொருவன் கண்டு கொள்என்றுன்
பெய்கழலடி காட்டிப்
பிரியேனென்று அன்றருளிய அருளும் பொய்யோ
எங்கள் பெருமானே''

என்பன.

இவற்றுள் 1, 3, 4, 6, 9, 11, 14 எண்ணுள்ள தொடர்களும். "என்பிறவி கெட்டின், றழிகின்ற தாக்கியதாள்" என்னுந் திருக்கோவையார்த் தொடரும் "திருவடி காட்டிய பின்னே பிறவியற்றது" என மேலே காட்டியதனை விளக்குதல் காண்க.

இன்னும் அடிகள் தகுதியற்ற தம்மை ஆட்கொண்டதனாற்றான் ஆண்டவன் திருவடி தன் அருட்டிறமையைக் காட்டிற்று என்னும் பொருள்பட,

"அறவை யென்றடியார் தங்களருட்குழாம் புகவிட்டு நல்
உறவு செய்தெனைஉய்யக் கொண்டபிரான்தன்னுண்
மைப்பெருக்கமாந்
திறமைகாட்டிய சேவடி"

எனக் கூறி,

"அங் கணன்அந்தணனாய் அறை கூவி வீடருளும்
அங் கருணை வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய்"

எனக்கூறி அதன் பேரருளை விளக்குகின்றார். அத்திருவடிகளின் திருவருளை வியந்து கூறுமிடத்து,

"பெற்ற தாயின் தன்மைபோல்வது நின் தன்மை, என்பேன். அதற்கேற்ப மகவு அழுங்காலத்து இன்றியமையாப் பணியில் ஈடுபட்டிருக்குந் தாய் வருதற்குச் சிறிது காலந் தாழ்ப்பதுபோல, நீயும் யான் அழுதால் வராமலிருப்பாய். ஆனால், உன் திருவடிகள் அவ்வழுதலைப் பொறாவாய் வந்து எற்கு அருள் செய்யும்" என்ற பொருளையமைத்து,

"பெற்றிடுதாய் போல்வதுநின் பெற்றி யென்பேன்
பிள்ளையது,
மற்றழுதரற் கேட்டும் வாராதங்கே-சற்றிருக்கப்,
பெற்றாள் பொறுப்பள் பிரானீ பொறுக்கினுநின்,
பொற்றாள் பொறா வென் புலம்பு"

என இராமலிங்க அடிகள் அருளியது கருதி மகிழத்தக்கது.

இங்ஙனம் அவ்வடிகள் பேரருளுடைமையாற்றான் ஆண்டவன் பிரிவுக்கும் அத்துணை வருந்தாது, அவன் திருவடிப் பிரிவைக் குறித்தே,

...... விரை மலர்த், திருப்பாத
முற்றிலா இளந்தளிர் பிரிந்திருந்து நீயுண்டன
வெல்லாமுன்
அற்றவாறு நின்னறிவு நின்பெருமையுமளவறுக்
கில்லேனே''

எனவும்,

''முனைவன் பாதநன்மலர் பிரிந்திருந்து நான்மூட்டிலேன்
தலைகீறேன்''

எனவும்,

''எல்லையில் கழல் கண்டும் பிரிந்தனன்
கல் வகை மனத் தேன்''

எனவும் அடிகள் வருந்துகின்றனர்.

இன்னும் அடிகள்,

''நின் விரைமலர்த்தாள், பண்டுதந்தாற் போற்பணித்து''
''கழுமணியே யின்னுங் காட்டு கண்டாய் நின்பொலன்
கழலே''

என்பவற்றால் முன்னர், திருவடி, காட்டிய உண்மையை நன்கு விளக்குகின்றனர்.

''அவன் பூங்கழல் யாம்,
பேசத்திரு வார்த்தையிற் பெருநீளம் பெருங் கண்களே''

எனக்கோவை கூறிய நமது அடிகளின் திருவாய்,

''பூங்கழல்களவையல்லா தெவையாதும் புகழேனே''

என வாசகம் அருளியது மாண்புடைத்தாகும்.

இனி, நமது மணிவாசகனார், திருவாசக இறுதியிலுள்ள அச்சோப்பத்தில்

"மையலிடங் கொண்டபிரான் றன்கழலே சேரும் வண்ணம்
ஐயனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே"

எனவும்,

"மாதொருகூ றுடையபிரான் றன்கழலே சேரும்வண்ணம்,
ஆதியெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே"

எனவுங் கூறிய வாற்றால் அடியடைந்தமை புலனாதல் காண்க.

இனி, அடியடைந்தாரா? என்னும் பகுதியின் தொடக்கத்தில், 'அடியார்களனைவரும், ஆண்டவன் திருவடிப்பேறு ஒன்றையே கருதி நிற்பர்' எனக் கூறினோம். அதற்கு எடுத்துக்காட்டுக்கள் பல; அவற்றுள் ஆண்டவனிடத்தில் அப்பேற்றினை நயம்பட வேண்டிக்கொண்ட பெரியார் சிலர் திருவாக்குகளிற் சிலவற்றை மட்டும் இங்குத் தருகின்றோம்.

தலைவன் ஒருவனிடத்தில் பேச்சில் வல்ல அடிமை ஒருவன் தன் இருக்கைக்கு இடம் வேண்டுமென்று கேட்பானாயின், 'தலைவ! இப்போது அடியேன் ஒரு சிறு குடிலில் இருக்கின்றேன்; இது பிரிந்துவிடின், இந்த நாய்க்குட்டிக்குத் தங்கள் காலடியில் ஒரு தலைமறையும் இடங் கொடுத்தாற் போதும்; அதற்கு அருள் செய்ய வேண்டும்'என வேண்டுவதை உலகியலிற் காண்கிறோம். இம்முறையில் நமது அப்பர் பெருமான் ஆண்டவன் அருட்கழலை வேண்டுவது கண்டு மகிழற்பாலது. அது,

"முருகார் நறுமல ரிண்டை தழுவிவண் டேமுரலும்
பெருகா ரடைசடைக் கற்றையி னாய்பிணி மேய்ந்திருந்த
இருகாற் குரம்பை யிதுநா னுடையதிது பிரிந்தால்
தருவா யெனக்குன் திருவடிக் கீழோர் தலைமறைவே"

என்பது,

குமரகுருபர அடிகளென்பார் கூத்தப் பெருமானை நோக்கிக் கேட்கும் வரமொன்றில் ஏனையவையெல்லாம் வேண்டாம் என்றும், தம் உடல் விடும் வரையும் அடியார் குழாத்துடனேயே தாமிருக்க வேண்டுமென்றும், இறுதியில் நின் திருவடியைக் கொடுக்கவேண்டுமென்றும், இப்பொழுது தாம் கேட்பதே உறுதியான மொழியென்றும், பின் தாம் எப்பதவியை விரும்பி இரந்து கேட்பினும் மறுத்துத் திருவடியையே தரல் வேண்டுமென்றும் வேண்டுகின்றனரென்பதை அவரருளிய சிதம்பர மும்மணிக்கோவையில் உள்ள,

''வரமொன் றிங்கெனக் கருளல் வேண்டும்; அதுவே,
பெருங்குளிர்க் குடைந்த காலைக் கருந்துணி
பலதொடுத் திசைத்த வொருதுணி யல்லது
பிறிதொன்று கிடையா தாக வறுமனைக்
கடைப்புறத் திண்ணை யல்லது கிடக்கைக்கு
இடம்பிறி திலலை யாகக் கடும்பசிக்
குப்பின் றட்ட புற்கையூ ணல்லது
மற்றோ ருண்டி வாய்விட் டரற்றினும்
ஈகுந ரில்லை யாகநா ளாளும்
ஒழுக்க நிறைந்த விழுப்பெருங் கேள்வி
மெய்த்தவர் குழாத்தொடும் வைக வித்திறம்
உடனீங் களவு முதலிக் கடவுணின்
பெரும்பத மன்றியான் பிறிதொன்
றிரந்தனன் வேண்டினு மீந்திடா ததுவே''

என்னுஞ் செய்யுளால் அறிக.

மேற்காட்டிய திருவாசக ஆதரவுகளினால் நமது அடிகள் ஆண்டவன் அடிப்பேறு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து, இறுதியில் அதனையே அடைந்தமை வெள்ளிடை மலையென விளங்குதல் காண்க.

## 4. அன்பர்

இனி, அன்பர் என்றதைப்பற்றி ஆராய்வோம். பெரியார் ஒவ்வொருவருக்கும் ஏற்றம் வருவது ஒவ்வொரு கார

ணம் பற்றியேயாம். நமது அடிகளின் பெருமைக்குக் காரணம் அவர் ஆண்டவனிடத்து வைத்த மெய்யன்பு ஒன்றேதான். இவ்வுண்மையை, துறவு நிலையால் பெருமையடைந்தவரெனக் கருதி,

''பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப்
பிள்ளையைப்போல்
ஆருந் துறக்கை யரிதரிது''

எனத் தாயுமான அடிகளாற் போற்றப்பட்ட பட்டினத்தடிகள்

''வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய வன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்''

என்பதனால் விளக்கியருளினார்.

இன்னும் உமாபதி சிவனார் அருளியதாக வழங்கும்

''வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணந் தொகுசித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்''

என்னும் பாடலில், நமது அடிகளின் இயற்பெயர் ஒன்றையுங் குறிப்பிடாது 'அன்பர் மொழி வாசகம்' என்றே குறிப்பிட்டிருத்தல் காண்க

இன்னும் அவர் ஓர் அன்பர் என்னும் உண்மையை வலியுறுத்துதற்கு அவரியற்றியருளிய 'திருவாசகம்' ஒன்று போதாதா? வேறு சான்றும் வேண்டுமோ? 'திருவாசகத்திலுருகார், ஒருவாசகத்திலுமுருகார்' என்பது அநுபவமுடைய பெரியார் பழமொழியன்றோ? அவர் அன்பராக இல்லாவிடின் அவர் வாசகம் தன்னைப் படிப்போரையுங் கேட்போரையும் எங்ஙனம் அன்பராக்கும் வன்மையுடையதாகும்? ஒருவன் தன் பழக்கத்தில் இல்லாததொன்றைக் கூறினானாயின், அக்கூற்றுக்கு மக்களைத்தன் வழிப்படுத்தும்

ஆற்றலிராதென்பது அறிஞர் கண்கூடாகக் காணும் உண்மையன்றோ? பெரியாராகிய காந்தியடிகளின், 'என் அநுபவத்திற்குக் கொண்டுவந்து நன்மை தீமையைப் பாராத எதனையும் யான் மக்களுக்குச் சொல்வதில்லை' என்னும் பொன் மொழி போற்றத்தக்கதன்றோ? ''கற்றுப் பிறர்க்குரைத்துத் தான் நில்லார் வாய்ப்படுஉம் வெற்றுரை'' என்பது குமரகுருபர அடிகளின் திருவாக்கன்றோ? அன்பின் ஊற்றுக்கு நிலைக்களனாகிய 'திருவாசகத்'தின் பெருமையை அஃது அணுவுமில்லாத பேதையாகிய யானோ எழுதவல்லுநன்? ''பாம்பறியும் பாம்பின் கால்'' என்பது போலப் புலவனைப் புலவன் அறிவான், அன்பனை அன்பன் அறிவான்,யோகியை யோகி அறிவான், ஞானியை ஞானி அறிவான், ஏனையோர் அறிந்தோமென்பது பேதைமையன்றோ. அங்ஙனம் அறியினும் அது ஒருபகுதியல்லவா? 'திருவாசகப் பெருமையை அறிந்தார் யார்? கவிச்சிங்கமாகிய 'சிவப்பிரகாச' அடிகள் அறிந்தார்; அன்பு வடிவாகிய 'இராமலிங்க' அடிகள் அறிந்தார்; மேல் நாட்டறிஞராகிய ''ஜி.யூ.போப்'' என்பார் அறிந்தார்; பிற அறிஞர் பலர் அறிந்தனர்; அறிகின்றனர்; அறிவார்.

சிவப்பிரகசனார் அறிந்து என்ன செய்தார்? 'நால்வர் நான்மணி மாலை' என்னும் பொற்பேழையின்கண் மணிவாசகத்தின் மாண்பினையறியும் பத்து மணிகளைப் பெய்து வைத்தார். அவற்றுள் ஒன்று,

''விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துக் கண்கள்

தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே''

என்பது மற்றொன்று,

''வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துல குவப்ப வுகந்த மாணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
ஓதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனும் நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே''

என்பது. இன்னும் அவர்,

'நலமலி வாதவூர் நவ்லிசைப் புலவ!
மனநின் றுருக்கு மதுர வாசக!

எனவும்,

''வலம்புரி கிடக்கும் வாதவூர் அன்ப!''
'செய்யவார் சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூர் அன்ப!''

எனவும் விளிக்கின்றார். மற்றையவைகளை அந்நூலுட் காண்க.

இனி, இராமலிங்க அடிகள் தாம் பாடிய திருவருட்பாவில் பலவிடங்களுள் அடிகளைப் புகழ்ந்திருப்பதுடன், அந்நூலுள் 'ஆளுடைய அடிகள் அருண்மாலை' எனத் தனியே ஒரு பகுதி பத்துப்பாட்டு பாடியருளினர். அவற்றுள் சில,

"வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்கினமும் மெய்ஞ்ஞான
நாட்ட முறு மெனினிங்கு நானுறுதல் வியப்பன்றே"

"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ்
சுவைகலந்தென்
னூன்கலந்து வுயிர்கலந்து வுவட்டாம லினிப்பதுவே"

"வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே யென்னையுமென் னுடையனையு
மொன்றுவித்துத்
தருமொழியா மெனிலிங்குச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பியயல் கூடுவதேன் கூறுதியே"

என்பன. இவற்றுள் 'வாட்டமிலா' என்று தொடங்குஞ் செய்யுளிற் சிலர் ஓர் ஐயுறவு கொள்ளுவார்; அதாவது:- சில விலங்குகளிடத்தில் திருவாசகம் ஓதினால் அவைகட்கு ஞானம் வந்து விடுங்கொல்? என்பது. அங்ஙனம் ஐயம் உண்டாதல் இயல்பே. இதற்கு அவ்வாசிரியர் என்ன கூறுகின்றன ரென்பதைக் கூர்ந்து நோக்கவேண்டும்; ஏதேனுங் கூறியே யிருப்பார். என்னை? என்ஞான்றும் நமது புலவர் பெருமக்கள் பிறருக்குத் தோன்றும் ஐயம் தமக்குந் தோன்றப் பெற்று அதற்கு அவரியற்றுஞ் செய்யுளுள்ளே விடையிறுத்துச் செல்வாரேயன்றி, தாம் அகப்பட மாட்டாராதலின் என்க.

நமது இராமலிங்க அடிகள் மேற்காட்டிய செய்யுளில் 'கேட்டபொழுது' எனக் கூறியிருத்தலே அவ்வையுறவை ஒழிக்கும் என்க; எனவே அவ்விலங்குகள் ஞானம் பெற்றதனால் திருவாசகத்தைக் கேட்டதென்றும் இல்லையானால்

அதனைக் கேட்கவில்லை என்றுங் கோடல் வேண்டுமே யொழியத் திருவாசகத்திற்கு அவ்வாற்றலில்லையென்று கோடல் இழுக்கென்க.

விலங்குகள் கேளாதிருக்குமோ வெனின் நண்பர் இருவர் எதிரெதிரிருந்து செய்திகள் பேசுங்கால் ஒருவர் மற்றவரை நோக்கி 'நுமது நினைவு எங்கோ இருக்கிறாற் போலும்; யான் இதுபோது என்ன சொன்னேன்; சொல்லுங்கள்? என்றாராயினர், மற்றவர், 'ஆம்' 'ஆம்'; யான் எங்கேயோ இருந்து விட்டேன்; இன்னொருமுறை சொல்லுங்கள்' எனக் கூறுவதைக் காண்கின்றோமாகலின் விலங்குகள் கேளாதிருத்தல் இயல்பென்க. இங்ஙனமே! திருவாசகத்தைப் பாடினால் இனிக்குமோ' எனக் கருதுவார் அச்செய்யுளிலுள்ள 'நான்கலந்து பாடுங்கால்' என்னுந் தொடரைக் கூர்ந்து நோக்கித் தமக்குச் சுவை தோன்றாவிடின் தாம் 'அதிற்கலந்து பாடவில்லை' எனக் கருதுக.

இனி, சிவப்பிரகாசரும் தாம் அருளிய 'விளங்கிழை பகிர்ந்த' என்னும் பாவில் 'கேட்போரனைவரையும் அன்பராக்கி விடுமோ அவ்வாசகம்? என ஐயவினா எழுப்புவார்க்கு 'அன்பராகாதவர் மக்கள் வகுப்பைச் சார்ந்தவரல்லர்' என்னும் பொருள்தோன்ற 'மன்பதையுலகின் மற்றையரிலரே' என்னும் விடையிறுத்ததூஉமென்க.

இனி, மேல்நாட்டறிஞராகிய 'போப்' என்பார் திருவாசகப் பெருமையை எங்ஙனம் அறிந்து வைத்தாரென்பதை நோக்கின், தமிழ் மக்கள் என்று தம்மை நினைத்துக் கொண்டு அவிழ்ச்சுவையே யன்றித் தமிழ்ச்சுவையறியாது வறிதே காலம் போக்குந் தம்பங்கள் வெட்கித் தலைகுனிய வேண்டாமோ? அப்புலவர் பெருமகன் என்ன சொன்னார்? தம் உயிர் உடலினின்றும் பிரியுஞான்று தம் அருகிலிருந்த நண்பர் பலரையும் நோக்கி "நண்பர்காள்! யான் இறந்தபின் நீவிர் எனக்குப் பெரியதொரு கல்லறை கட்டவேண்டுமென்பதில்லை; சிறிதாகக் கட்டினாற் போதும்; ஆனால், அது

கட்டும் பொருள் மாணிக்கவாசகர் பிறந்த நாட்டுப் பொருளா யிருக்க வேண்டும்; ஆகலின் அந்நாட்டுக்கு என் கருத்தைத் தெரிவித்து அங்கிருந்து எவ்வளவு குறைவாகப் பொருள் வரி னும் அப்பொருளளவில் சிறிதாகக் கட்டி அதில் 'தண்ட மிழ்த் தொண்டன்' என்னும் பெயர் பொறித்து விடுங்கள்! இதுவே என் வேண்டுகோள்' எனக் கூறித் தம் பூதவுடம்பை நீத்தனர். அவரது வேண்டுகோளைக் குறித்த அறிக்கை நமது நாட்டுக் கல்லூரிகளுக்கு வந்த ஞான்று பொருளளித்த மாணவர் பலருள் காலஞ்சென்ற திருவாளர், திரு.வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் (நவசக்தி ஆசிரியர்) ஒருவராவர் (அவர் சொல்லித்தான் இதனை யானறிந்தேன்) அன்பர்களே! இந்நிகழ்ச்சி ஒன்றை உன்னி யுன்னி நோக்குவீராயின், அவ்வறிஞர் பெருமானை நமது அழுதடியடைந்த அன்பர் அருளிய திருவாசகம் எத்துணைத் தன்வயப்படுத்தியிருந்தது என்பது தெற்றெனப் புலனாகும். அவரை ஆட்கொண்டது திருவாசகத்திலுள்ள "இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க" என்னும் ஓரடியேதான்.

ஆகவே, மேற்காட்டியவற்றால் நமது அடிகள் ஒரு அன் பர், என்பது நன்றாகப் புலனாகும்; ஆனால், அழுதல் ஒரு சாதனமா? அடி அடைந்தாரா? என்னும் இரண்டு பகுதி களையும் திருவாசகத்திலுள்ள ஆதரவுகளைக் கொண்டே 'ஆம்' என்று, நிறுவினேம். என்னை? திருவாசகப பயிற்சி மிகுதியால் பரஞ்சோதி முனிவரென்பார் திருவிளையாடலில் அடிகளை 'அழுதடி யடைந்த அன்பர்' எனக் கூறினாரென முன் குறித்தலாலென்க. அங்ஙனமே இந்த 'அன்பர்' என்ற பகுதியை நிறுவுதற்கும் மேற்காட்டிய புறச்சான்றுகள் போதா. அகச்சான்றுகள் வேண்டும்; எனின் அகச்சான்றுகள் எங்ஙனம் கிடைக்கும்?ஒருவர் தம்மை ஓர் அன்பரென்றாதல், பெரியாரென்றாதல் கூறுவாரோ? அன்றிக் கருதுதல் தானும் செய்வாரோ? அங்ஙனம் கருதின் அவர் உண்மை யான அன்பருமாகார்: பெரியாருமாகார். அன்றியும் ஏகதேச

மாய அவரிடம் அன்பும் பெருமையும் இருப்பின் அவை பறந்தோடிப்போகும். பெரியோரின் இலக்கணங்கள் பலவற்றுள்ளும் தலைசிறந்ததுதான். 'எவ்வித நலனுமுடையவனல்லன்' என்றும், எல்லா வுயிரினும் கடைப்பட்டவன்' என்றும் கருதுவதன்றோ? இக்கருத்து இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னுங் கால மூன்றினும் முறையே இருந்த, இருக்கின்ற, இருக்கும் பெரியோரனைவருக்கும் ஒத்ததாகும்.

உலகத்தின்கண் பெரும்பாலோராற் போற்றப்பட்டு வரும் பெரியோராகிய காந்தியடிகள் தாங்கள் மெய்யாகவே மகாத்மாவா? அப்படியானால் மகாத்மா என்னுஞ் சொல்லை 'விளக்குக' என நண்பர் சிலர் கேட்ட வினாக்களுக்கு விடையாகக் கூறியதாவது;-

''அத்தகைய ஒருவனாயிருக்கச் சிந்திப்பதில்லை; ஆனால்; கடவுள் படைப்புக்கு உட்பட்ட உயிர்களுள் மிகத் தாழ்ந்தவன் யான் என்பது எனக்குத் தெரியும். அச்சேர்க்கை பெறாத யான் அச்சொல்லை விளக்கவல்லேனல்லேன்'' என்பது.

இன்னும் அப்பெரியார் 'சத்திய சோதனை'யின் முன்னுரையில் அருளிய பொன் மொழிகளுட் சில:- ''சத்தியப் பயிற்சியில் அருமை எளிமை என்னும் இரண்டும் உண்டு; அப்பயிற்சிச் செருக்கில் ஆழ்ந்து கிடக்கும் ஒருவற்கு அரியது ஒன்றுமறியா இளங்குழந்தைக்கு அஃது எளிது. சத்திய நெறியிற் புகுவோன் தூசியினுந் தாழ்மை பெறவேண்டும். உலகோர் தூசியைத் தம்மடிக் கீழ் மிதிக்கின்றார்; சத்தியத்தை நாடுவோன் அத்தூசியால் மிதியுண்ண வேண்டும். அதன் பின்னர்—முன்னரன்று—அவன் உண்மை ஒளி சிறிது காணக் கூடும்.

என்னை யானே அளந்து ஆராயும்போது சுர்தாஸ் என்னும் அன்பர் பாடியவாறு 'என்னைப் போன்ற கொடும் பாவி; வெறுக்கத் தக்கவன் யார்? என்னைப் படைத்த ஆண்

டவனைக் கைவிட்டு விட்டேன். அவ்வளவு நன்றி கெட்டவனானேன்; என்று ஓலமிட வேண்டும்'' என்பன.

''நான் என்னைத் திரணத்தினும் தாழ்மையுள்ளவனாக்கிக் கொள்ளவேண்டும்; ஒருவன் தன்னுடைய சொந்த விருப்பத்தினால் தன்னைத் தன் சகோதர உயிர்ப்பிராணிகளுக்கெல்லாங் கடையானவனாகக் கருதாதவரையில் அவனுக்கு மோட்சங் கிடையாது! என்பது அவர் சத்திய சோதனையின் முடிவுரையிற் கூறிய செம்மொழியாகும்.

இவ்வற மொழிகளை நினைவில் வைத்துக் கொண்டு கீழ்வருந் திருவாசகங்களை அன்பர்கள் கூர்ந்து நோக்குவார்களாக. அவை,

''யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழா மடியேனை—யாவரும்
பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை''

''ஆயநான் மறையவனும் நீயே யாதல்
அறிந்துயான் யாவரினுங் கடையன் ஆய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு
நாதனே நான்உனக்கோர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார்தாம் இல்லையே அன்றி மற்றோர்
பேயனேன் இதுதான்நின் பெருமை அன்றே
எம்பெருமான் என்கொல்லிப் பேசு கேனே''

''யாரினுங்,
கடையனாயினேன் போற்றி''

''கடை யேனடிமை கண்டாய் போற்றி''
''நான் யாதும் ஒன்றல்லாப் பொல்லா நாயான,

நீசனேன்''

''பாவி யேனைப் பணி கொண்டாய்''

''நான்பாவியன் ஆனால்உனை நல்காயென லாமே''

என்பன.

''நாயிற் கடையா(ம்) நாயேன்'' போன்ற பல தொடர்கள் முன்னே குறிக்கப்பட்டன. இன்னும் திருவாசகத்தை வடித்து வடித்துப் பார்ப்பினும் பெரும்பகுதி அடிகள் தமது தாழ்மையைப் பற்றியும் இறைவன் மேன்மையைப் பற்றியும் கூறியனவாகவே காணப்படும். இத்தாழ்வுதான் சைவத்தின் உயிர் நாடி என்பதை,

''வாழ்வெனு மையல்விட்டு வறுமையாஞ் சிறுமைதப்பித்
தாழ்வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமயஞ்சாரும்
ஊழ்பெறலரிது''

என்னும் சித்தியாராலறிக. ''வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பி''யதை

''செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னும் தொல்விடம் பிழைத்தும்''

என்பதனாலும், 'தாழ்வு' என்பதற்கு எல்லா உயிரினுந் தம்மை ஓர் கடையவனாகக் கருதல் (முனைப்பின்றி இருத்தல்) என்னும் பொருளை மேற்காட்டிய தொடர்களாலும் 'யாம் எல்லாம் வல்ல கடவுளுக்கு அடிமை;பிறருக்கு அடிமையன்று; ஆதலின் எதற்கும் அஞ்சோம்' என்னும் பொருளை ''யாவர்கோ னென்னையும் வந்தாண்டு கொண்டான் யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்'' என்பதானாலும் விளக்கியருளினமை காண்க. இதனோடு,

''நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்''

என்னும் திருநாவுக்கரசரின் செம்மொழியையும்,

''உலகத்தில் எவர்க்கும் அஞ்சேன்; கடவுள்
ஒருவருக்கே அஞ்சுவேன்''

''கடவுளுக்கு அஞ்சி நடப்போமாக; மனிதனுக்கு அஞ்சி நடப்பதை ஒழிப்போமாக; நமது உள்ளத்தில் தெய்வமிருப்பதையும், அது நாம் நினைத்தல் நிகழ்த்தலைக் கண்டு வருவதையும், அது நம்மை நேர்மையான வழியில் நடத்துவதையும் உணர்வோமானால், நாம் கடவுள் ஒருவர்க்கன்றி வேறு எவர்க்கும் அஞ்சுவதை ஒழிப்போம்'' என்னும் மகாத்மாவின் மணிமொழிகளையும் ஒப்பிட்டு நோக்குக.

இன்னும் அப்பெரியாரது,

''கடவுள் கணிதத்தில் நமது செயல்கள் குறிக்கப்படுகின்றன'' என்னும் உண்மை மொழியை,

''தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே''

என்னும் ஆளுடைய அரசுகளின் அருண்மொழியோடும், ''கடவுளிடத்திலும் அவரது வல்லமையிடத்திலும் அவரது அன்பினிடத்திலும் எனக்குள்ள உறுதி அசைக்கமுடியாதது'' என்னும் அருமொழியை,

''இறக்கினு மின்றே யிறக்குக வென்றும் இருக்கினும்
இருக்குக வேந்தன்
ஒறுக்கினும் ஒறுக்க உவகையு முடனே யூட்டினும்
ஊட்டுக வானிற்
சிறக்கினுஞ் சிறக்க கொடியதீ நரகிற் சேரினுஞ்
சேருக சிவனை
மறக்கிலம் பண்டைப் பழவினை விளைந்தால் மாற்றுவார்
யாரென மறுத்தார்''

என மணிவாசகனார் கூற்றாக வைத்துக் கூறும் பரஞ்சோதியார் திருவாக்குடனும்,

''ஆராரெனக் கென்ன போதித்தும் என்னஎன்
னறவினை மயக்க வசமோ''

என்னும் தாயுமான அடிகளின் தனிமொழியுடனும் ஒத்து நோக்கி உண்மை காண்க.

மேற்காட்டிய வாற்றாலும், காட்டப்படாது இவை போலும் உள்ள பலவாலும் நாடு, மொழி, சமயம் முதலிய வற்றால் வேறுபடாது பெரியார் பலரின் கருத்து ஒன்றா கவே யிருக்குமென்பதனை உய்த்துணர்க.

இங்குக் காட்டிய காந்தியடிகளின் கனிந்த மொழி களைப்போல் பலர் மேடைகளிற் பேசவும் எழுதவும் காண் கின்றோமே எனக் கருதுவோர், அவ்வடிகளின் உள்ளம்வேறு; உரைவேறு; செயல்வேறு அல்ல வென்பதை உலகம் அறியும் என்னும் நினைவைத் தம்உள்ளத்திற் பதித்து வைப்பாராக.

ஆயின், ஒவ்வொரு பெரியாரின் வரலாறுகளையும் நோக்குங்கால், அவ்வவர் வாழ்க்கைநெறிகள் மாறுபட்டுக் காணப்படுகின்றனவே யெனின், அது அவ்வப்போதுள்ள காலம், இடம், நிகழ்ச்சிகளைப் பொறுத்தது என்க.என்னை? மக்கள் பாவைகள்போல அசைவற்றிருப்பவரல்லர்; ஆகலின் அவர்கள் மாறுபாடுடையராதல் இயல்பு. அதற்கு மேற் காட்டிய கால முதலியனவே காரணம் ஆகும். எடுத்துக் காட்டாக சிலநூற்றாண்டுகட்கு முன்னர் நம்நாடு இருந்த நிலையும், இற்றைநாள் அஃது இருக்கின்ற நிலையும் அக்கண்ணும் புறநோக்குங் கொண்டு பார்ப்போமானால் வேற்றுமை பெரிதுந்தோன்றும்.

முன் ஓர் கிராம வாழ்க்கையில் உள்ளவன் நகர வாழ்க் கையின் நன்மையையோ தீமையையோ அறியாதிருந்தான். அப்போது கடல், காடு, மலை முதலியன ஒவ்வொரு நாட்டையும் பிரித்து ஒரு நாட்டிலுள்ளோர் பிறநாட்டா ரோடு பழகா வகைசெய்து நின்றன. இந்நாளில் நீராவி மரக்கலங்கள், வானவூர்திகள், புகைவண்டிகள் முதலியவற் றால் அவ்விடையூறு முற்றுந் தகர்க்கப்பட்டு உலகமுழுவதும் ஒன்றாக்கப்பட்டது. அதனால் எல்லாநாட்டுமக்களும் ஒருவ ரோடொருவர் கலந்து பழகி வருகின்றனர் எனவே, அந்

நாளில் வாழ்ந்த மக்களின் அறிவியக்கத்திற்கும், பொருளாதாரநிலை முதலியவற்றிற்கும், இற்றை நாளிலுள்ள அவைகட்கும் இடையீடு சாலவும் பெரிதாகுமன்றே? ஆகவே, உயிர்களிடத்துக் கொண்ட அருளையே அடிப்படையாகக் கொண்டு அவ்வக்காலத்து வாழ்ந்த பெரியார் பலரும் அது காலை மக்களிடம் என்ன குறைபாடிருந்ததோ அதை நீக்குதற்குரிய நெறியை மேற்கொண்டு அதற்கு ஆவனவற்றை அவர்க்கு அறிவுறுத்திப் போயிருப்பாரெனக் கோடலே முறையென்க.

உறுபசியும், ஓவாப்பிணியுமின்றி, நாடு செழித்து, குடி கொழுத்துள்ள அப்போது "நெருநல் அவ்வின்பத்தை நுகர்ந்தோம்; இன்று இந்நலனைத் துய்க்கின்றோம்; நாளை இன்ன மகிழ்ச்சியை அடைவோம்" என மக்கள் வாழ்க்கையின்பத்தையே எண்ணி, கடவுள் நினைவு அரும்பாதிருப்பர். அது காலை,

"இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற விச்சையாற்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்தயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே"

என ஆளுடைய பிள்ளையார் அறிவுறுத்தருளினார். இருக்க இடமும் உடுத்த உடையும், உண்ண உணவுமின்றிப் பல கோடி மக்கள் பரிதவிக்கின்ற இதுகாலை ஒரு பெரியார் அது போன்ற உபதேச மொழிகளைக் கூறினாராயின் அது செவிடன் காதிற் சங்கூதியது' போலிருக்குமன்றி வேறுயாது பயனைச் செய்யும்? இதனால் மேற்காட்டிய மணிமொழியைக் குறைத்துக் கூறினேனென்னும் முடிவுக்கு அன்பர் சிலர் வந்துவிடா வண்ணம் வேண்டுகின்றேன் எனவே இற்றைநாட் பெரியார் மக்களின் வறுமை நோயைக் களையும் வினையில் முன்னணியாக நின்றே தொண்டாற்றுவரென்க. எனினும் அப்பெரியாரனைவரின் குறிக்கோள் மட்டும் ஒன்றேதான் என்பதை அறிவுடையோர் யாவரும் மறுக்கார்.

இங்ஙனம் குறிக்கோள் ஒன்றாகவும் அதனை அடைதற்குரிய நெறிகளை அக்கால, தேச, வர்த்தமானத்திற்கு ஏற்ற முறையில் பலவாகவுங் கொண்டு ஒழுகும் பெரியோர்களின் நூல்களை ஆராய்ந்து பார்க்கின், அவற்றின்கண் பெரும்பாலும் அவர்களின் வாழ்க்கை தோல்வியேதான் காணப்படும்.

வெற்றி குறித்த செய்தி அரிதினும் அரிதாகும். அவ்வரியதூம் அவர்களை அறியாது போந்த உண்மையாகும் தோல்விச்செய்தி நிறைந்து காணப்படுதற்குக் காரணம் இரண்டு; ஒன்று, தம் தோல்வி அணுவாயினும் அதனை மலைபோலத் தாங்கருதி வருந்தி ஆண்டவனிடத்து முறையிடுதல்; மற்றொன்று, ஏனைய மக்களிடத்துக் காணப்படுந் தீச்செயல்களைக் கண்டு வருந்தி அவற்றைத் தம்பாலேற்றிக் கூறி முறையிடல் இது முன்னருங் காட்டப்பட்டது. எனவே எவ்வகையானும் தங்கள் சிறுமையையுந் தோல்வியையுமே அவர்கள் கூறுவார்களேயன்றிப் பெருமையையும் வெற்றியையுங் கூறார்கள். பின்னுள்ளவை அவர்கட்குத் தெரிவதேயில்லை ஒரோவழித் தெரியினும் தாங்கள் கோலி வரையறுத்த எல்லைக்கு அவை அணுவினும் அணுவாகத் தோன்றும். தோன்றவே அவைகளை அவர்கள் கொள்வதில்லை; ஆனால் பிறருக்கு அவை பெரியவற்றினும் பெரியவையே' ஆதலினாற்றான் அங்ஙனங் கருதிய பிறர் தம்மைப் புகழும் போது,

"இல்லன புகழ்தலின் வைதலே நன்று" என்னுங் கருத்துடையவராய் அப்புகழ்ச்சியை நஞ்சினுங் கொடிதாக அவர் நினைப்ப தூஉமென்க. என்னை? அப்பெருமையும் வெற்றியும் தம்மிடத்தில்லை என்பது அவர் கருத்தாகலின்,

இனி அணுவினுஞ் சிறிதாகிய தீமையை மலையினும் பெரிதாகக் கருதியிருத்தலினால் பிறர் இகழ்ச்சியைப் பெரிதும் அவர் விரும்புகின்றனர்; என்னை? தமக்குச் செருக்கு

அரும்பாதிருத்தற்கும், தம் தீமையைப் போக்குதற்கும் அது துணையாக நிற்கும் என்பதூஉம் அவர் கருத்தாகலின்,

"நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றி"

"உத்தம னத்த னுடையா னடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவன் என்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர் திரிந்தெவருந்
தத்தும் மனத்தன் பேசஎஞ் ஞான்றுகொல் சாவதுவே"

என்னும் அடிகள் திருவாக்கு, அவர் பிறரிகழும் இகழ்ச்சியை எத்துணை விருப்பொடும் வரவேற்று நின்றாரென்பதை நன்கு விளக்குதல் காண்க.

இனி, இவ்வேண்டுகோள் கைவரப்பெற்ற நமது அடிகள் தம்மை நாட்டிலுள்ளோர் பலரும் "அமைச்சியற் பதவியை இழந்து ஓர் கோவணாண்டியாகத் திரிகின்றான் இப்பித்தன்!' என்று எள்ளி நகையாடுதலையும், அவர்களைத் தாம் "உலகவின்பத்தை நிலைபேறுடையதெனக் கருதிக் களியாட்டயருகின்ற "பித்த ரிவர்" என அங்ஙனம் செய்தலையும், "நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப நாமுமவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப" என்பதனாற் குறிப்பித்தருளினார்; பின் அந்நிலை கடந்து மக்கள் பலர், தம்மைப் 'பித்தன்' என்று அஞ்சுதலைக்கண்ட நமது அடிகள் உயிர்கள் மாட்டு அஞ்சுதலையுஞ் செய்யாக் கழிபேரிரக்க முடையராகலின் இறைவனை நோக்கி,

"மருளார் மனத்தோ ருன்மத்தன் வருமா லென்று
இங்கெனைக் கண்டார்
வெருளா வண்ணம் மெய்யன்பை உடையாய்
பெறநான் வேண்டுமே"

எனக் குறையிரந்து வேண்டினமையுங் காண்க.

மேற்காட்டியவைகள் இஞ்ஞான்றுள்ள திருவாசகப் பதிப்புகளில் முறையாகக் காணப்படுதலுங் கருதத்தக்கது.

இந்நிலையில் நின்றொழுகிய நமது அடிகள் அருளிச் செய்த திருவாசகத்தின்கண் அவர் அன்பர் என்பதற்கு அகச்சான்று கள் அகப்படாவென்பது ஒருதலை. அம்மட்டுமன்றி, மேற் காட்டிய காரணங்களால் அதற்கு மறுதலையாய சான்று கள் நிறையக் கிடைக்கும் என்க. அவை,

"ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை"
"அலவா நிற்கும் அன்பிலேன்"
"நெகும் அன்பில்லை நினைக்காண"
"இல்லை நின்கழற்கு அன்ப தென்கணே"
' நான்தனக்கு அன்பின்மை நானுந் தானுமறிவோம்
தானென்னை யாட்கொண்டது எல்லாருந் தாமறிவார்"

என்பன. இன்னும் அடிகள்,

"கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என அருளியதுங் காண்க.

இப்பாட்டிற்கு, கண்ணப்ப நாயனாரின் அன்பு போன்று தம்மிடத்து அன்பில்லை என அடிகள் கூறினார் எனப் பொருள் கொண்டு, கண்ணப்பர் அன்பிற் றலைசிறந் தவராகலின், அவரினும் சிறிதோ அன்றிப் பெரிதோ குறைந்த அன்பு தம்மிடத்திலும் உண்டு என்பதே அவர் கருத்து எனக் கொள்ளலாகாதோ' எனின், மேற்காட்டிய தொடர்களுடன் முரணுதலின் அது பொருளன்றென்க. ஆயின், 'முரணாதபொருள் என்னை' யெனிற் கூறுதும்.

இதன் பொருள்:-

கண்ணப்பன் ஓர் (அன்பு உண்மை) ஒப்பது-கண்ணப்ப நாயனாரின் ஒப்பற்ற அன்புண்மை போல்வதாகிய, (என்) அன்பு இன்மை கண்டபின்-அடியேனது அன்பின் இன்மை யைக் கண்டபின்னும், என் அப்பன்-அடியேன் உயிர் தந்

தையாகிய இறைவன் என் ஒப்பு இல் என்னையும்-(அன்பின் மையில்) எனக்கு ஒப்பாவார் எவரும் இன்மையைப்பெற்ற அடியேனையும், ஆள் கொண்டு அருளி=(திருப்பெருந்துறையில்) அடிமையாகக்கொண்டு ஞானோபதேசஞ் செய்தருளி, வண்ண=அழகு பொருந்த, என்னை வா என்று பணித்த= அடியேனைத் தில்லைக்கு வரக்கடவாயென்று பணித்தருளிய வான் கருணை=பேரருளையுடைய, பொன் சுண்ணம் நீற்றற்கே=பொன்போலும் திருமேனியின்கண் பொடியாகிய வெண்ணீறணிந்தருளிய சிவபெருமானுக்கே, கோத்தும்பீ=அரசவண்டே, சென்று ஊதாய்=நீ போய்ப் பாடுவாயாக: என்றவாறு.

'கண்ணப்பன்' எனவும், 'அன்பின்மை' எனவும் வருவதனால், 'என்' என்பதும் 'அன்புண்மை' என்பதும் வருவித்துரைக்கப்பட்டன. 'ஒப்பது' மறுதலையுவமை; அது. 'அவன் எப்படி நல்லவர்களிற் சிறந்தவனோ, அது போலவே யான் தீயவர்களிற் சிறந்தவன்' என்புழி வரும் 'அதுபோல' என்பது போல்வது; 'கொடுப்பதூஉம்' என்னுந் திருக்குறள் விளக்கவுரையில் 'ஆங்கு' "மறு தலையுவமம்" என்றார் பரிமேலழகர். உம், தொகுத்தல். 'என்னப்பன்' என்றார்;தம்மை ஆட்கொண்டது அவன் கடமை என்பதனை அறிவித்தற்கு. என்னை? சிற்றறிவும் சிறு தொழிலுமுடையஉடல்தந்தையும் நெறியில்லா நெறி செல்லும் தன் புதல்வனை ஆட்கொண்டு நன்னெறிப் படுத்தித் தன் பொருளை அவனுக்கு அளித்தல் தன் கடமையென்று கருதுதல் கண்கூடாமல்லவா! மறித்தும் 'என்னொப்பில்' என்றார்; அன்பின்மையில் தமக்கு நிகராவார் யாருமில்லை என்பதை யாப்புறுத்தற்கு. 'என்னையும்' என்றதிலுள்ள இழிவு சிறப்பும்மையால், அன்பின்மையால் அவனால் ஆட்கொள்ளப் பெருந் தகுதியற்ற தமது இழிவைப் புலப்படுத்தினார்; என்னை? 'பத்தி வலையிற் படுவோன்' எனவும், யாவராயினும் அன்பராலன்றி அறியொண்ணா மலர்ச் சோதியான்' எனவும் அவ்வடிகளே கூறுதலால் என்க. அங்ஙனந் தகுதியற்ற தம்மை ஆட்கொள்ளு

தலே அடாது எனினும் ஆட்கொண்டான் என்பது தோன்ற 'ஆட்கொண்டு' என்றும், அங்ஙனம் ஆட்கொள்ளினும் பன்னிரண்டு ஆண்டுகள் வரையும் தம் தகுதியை நன்கு ஆராய்ந்து, தகுதியின்றேல் அதனை உளதாக்கி உபதேசிக்க வேண்டுமென்னும் அறிவு நூற் சட்டத்திற்கு மாறாக உடனே உபதேசித்தருளினான் என்பது தோன்ற 'அருளி' என்றும் கூறியருளினார். இஃது ஆண்டவன் அந்தணக்குலக் குரவனாய்ப் போந்து திருப்பெருந்துறையில் அடிகளை ஆட்கொண்டு திருவைந்தெழுத்தை முறைப்படி உபதேசித்தருளின வரலாற்றைக் குறிப்பதாகும்; இதற்குத் திருவாசகத்தின்கண் அகச்சான்றுகள் நிறைய உள்ளன; ஆண்டுக்காண்க.

அழகனைத்தினுஞ் சிறந்த பிறவி நீங்குதலென்னும் பேரழகைத் தமக்கு அருளுமாறு தில்லைக்கு வரக்கடவாய் என்று பணித்தான் என்பது தோன்ற 'பண்ணைப்பணித்தென்னை வாவென்ற' என்றார். "தில்லைத் திருக்கூத்தைக் கண்டு யான் பிறவி நீங்கலாகிய பெருநலமுற்றேன்" என அடிகள் மிக விரிவாகக் கூறுதலைக் 'கண்டபத்'திலும். 'குலாப்பத்' திலுங் காண்க 'தில்லைக்கு வா' என்றதை,

"நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்திருப் பொதுவினில் வருகென"

என அடிகளே கூறுமாற்றால் அறிக. இதுவும் அவர் வரலாறு குறித்ததாகும். 'பணித்து வாவென்ற' என்பது 'வாவென்று பணித்த' என விகுதி பிரித்துக் கூட்டப்பட்டது. 'வான் கருணை' என்றது இத்துணைக்கும் அவன் பேரருளே காரணம் என்பதை அறிவித்தற்கு, 'பொன் சுண்ண நீற்றற்கு' என்பது, ஆண்டவன் ஆசிரியக் கோலத்துடன் வந்து ஆட்கொண்டருளிய ஞான்று காட்டிய திருவுருவத்தின்கண் ஈடுபட்ட அடிகள் இடையறாது அவ்வழகு வடிவத்தைத் தம் முள்ளத்தின்கண் வைத்து வழுத்துவதைக் குறிப்பதாகும். இவ்வுண்மையை,

"எந்தமை யாண்ட பரிசது பகரின்
ஆற்ற லதுவுடை யழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்"

என வருஉம் அடிகள் கூற்றாலே அறிக. அவ்வளவு கண்கவர் வனப்பினதாகலின் அடிகள் பின்னும் பல விடங்களில் கூறுவர்; அவற்றுட்சில,

"நீறுபட்டே யொளி காட்டும்பொன்மேனி நெடுந்தகையே"
"ஒண்மையனே திருநீற்றை யுத்தூளித் தொளி
மிளிரும் வெண்மை யனே"
"செய்யா வெண்ணீ றாடி"
"வெண்ணீற்றர் செம்மேனியர்"
"துப்பனே தூயாய் தூயவெண்ணீறு துதைந் தெழு
துளங்கொளி வயிரத் தொப்பனே"

என்பன.

"பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்"

என்பது ஆளுடைய அரசின் அருளிப்பாடு.

"செம்மேனி வெண்ணீற்றான்"

என்பர் சேக்கிழார்.

"அவ்வப்போது ஒரு கண நேரம் சத்தியத்தின் தோற்றத்தைக்கண்டது கொண்டு, அதன் அளவிலா ஒளியினியல்பை நாம் அறிந்துகொள்ள முடியாது. நாம் தினந்தோறும் பார்க்கும் சூரியனுடைய பிரகாசத்தை விடக் கோடி மடங்கு ஜோதியுடையது சத்தியம். அந்தப் பரஞ்சோதியில் நான் கண்டது அணுவிலும் அணுவான ஒளிக்கிரணமேயாகும். ஆனால் என்னுடைய சோதனைகள் அனைத்தினுடையவும் பயனாக ஒன்று நான் உறுதியாகச் சொல்லமுடியும்; அது கோடி சூரியப் பிரகாசமுடைய சத்தியமென்னும் ஜோதியைப் பூரணமாகத் தரிசனம் செய்யவேண்டுமானால் அஹிம்சா தர்மத்தையன்றி அதற்கு வேறுசாதனம் இல்லை

யென்பதேயாகும்" என்பது காந்தியடிகள் திருவாக்கு. பொன், உவமையாகு பெயர்; அதனை நீற்றுக்கு அடையாக்கினும் பொருந்தும். ஏகாரம், பிரிநிலை.

சோலை முதலிய பலவிடங்களில் இன்னொலி எழுப்பிக் கொண்டு தன்னியல்பிற் பறந்து திரியும் வண்டினை நோக்கி "வண்டே நீ பல இடங்களிலும் சென்று பொருள் சேராத புகழினையுடைய பலரையும் உன் இன்னிசையாற் பாடி வாணாளை வீணாளாக்காது, இடைவிருப்பனாகிய எம்பெருமான் திருமுன் சென்று 'அவன் பொருள்சேர் புகழைப் பாடுவாயாக'' என்பார், சென்றூதாய் கோத்தும்பீ என்றார்; என்னை? நிற்பனவும் இயங்குவனவுமாய் அனைத்தும் அவ்வவைகட்குரிய காரணங்களால் ஆண்டவனையே வழிபட்டு அழியாத இன்பத்தைப் பெறவேண்டும் என்னும் கனிந்த கருணையுடையவராகலின் என்க. பெரியார் கருத்து அதுவேயாகுமென்பதை,

"ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
னால வாயி லுறையுமெம் மாதியே"

என்னுந் தமிழ் மறையால் அறிக. அரசன் எவ்வொழுக்கத்தை மேல்கொண்டு நடக்கின்றானோ, அதனையே குடிகளும் மேற்கொண்டு ஒழுகுதல் கண்கூடாகலானும் 'அரசனெவ்வழி, குடிகளவ்வழி' என்பது பழமொழியாகலானும் ஏனைய வண்டுகளையும் அந்நெறிப்படுப்பான் அரச வண்டை நோக்கிக் 'கோத்தும்பீ' என விளித்தாரெனக.

இனி, தலைவனைப் பிரிந்த தலைவி, அத்தலைவனிடத்துத் தூதுசெல்ல வண்டினை வேண்டுகிறாளெனவும் இத்திருப்பாட்டிற்கு உரைகாணலாம்; என்னை!

"இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை
பயம்பெறுமே கம்பூவை பாங்கி—நயந்தகுயில்,
பேதைநெஞ்சந் தென்றல் பிரமரமீ ரைந்துமே
தூதுரைத்து வாங்குந் தொடை"

எனத்தூதுவிடும் பத்துப் பொருள்களுள் வண்டும் ஒன்று என இரத்தினச் சுருக்கம் கூறுதலாலென்க.

எனவே 'அன்பில்லாதவர்களில் யானே தலைசிறந்தேன் என அடிகள் கூறினாரெனக் கொள்ளுதலால் மற்றத் தொடர்களுடன் மாறுபடாமையும், பெரியாரிலக்கணத்தின் முரணாமையுங் காண்க:—இப்பொருளேதான் முன்னோர் களுங் கொண்டனரென்பதற்கு,

"கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக்—கண்ணப்பர்,
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்
றாரறியு மன்பன் றது"

என்னுந் திருக்களிற்றுப்படியார் சான்றாதல் காண்க.

இனி, அன்பின் ஊற்றுக்கு நிலைக்களனாக விளங்கிய நமது அடிகள் அவ்வன்பின் முடிந்த எல்லையாகிய கண்ணப் பரை எடுத்துக் காட்டியது அவ்வன்புநிலை ஒன்று பற்றியா? அன்றி, வேறுகாரணங்களும் உளவா? என்பதில் சிறிது கருத் தைச் செலுத்துவோமாக.

# 4. மணிவாசகரும், கண்ணப்பரும்.

திருவாசகத்தின்கண் கண்ணப்பரைப் பற்றி மேற் காட்டிய செய்யுளன்றி மற்றொன்றும் காணப்படுகின்றது; அது.

"பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள்போல் விளங்க
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்ற வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்கு
அருட்பெற்று நின்றவா தோணோக்க மாடாமோ"

என்பது. ஆனால் இது முன்னையது போலின்றி அந்நாய னாரின் வரலாற்றைச் சுருக்கிக் கூறுகிறது. இங்ஙனமே மற்றும் சமய குரவர் மூவரும் ஏனைய திருமுறையாசிரியர் பலரும் பெரும்பாலும் நாயனார் வரலாற்றைக் குறிப்பன வாகவே பாடியிருக்கின்றனர்; அவை,

"வேயனைய தோளுமையொர் பாகமது வாகவிடை
யேறி சடைமேல்
தூயமதி சூடிசுடு காட்டில்நட மாடிமலை தன்னை
வினவில்
வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்மல ராகு நயனம்
காய்கணையி னாலிடந் தீசனடி கூடுகா ளத்திமலையே"

"கானலைக் கும்மவன் கண்ணிடந் தப்பநீள்
வானலைக் குந்தவத் தேவுவைத் தானிடம்
தானலைத் தெள்ளமூர் தாமரைத் தண்டுறை
தேனலைக் கும்வயற் றென்குடித் திட்டையே"

"கண்ணனு நான்முகன் காண்பரியார்
வெண்ணாவல் விரும்பு மியேந் திரரும்
கண்ணப்பர்க் கருள்செய்த கயிலை யெங்கள்
அண்ணலா ரூராதி யானைக் காவே"

(திருஞானசம்பந்தர்)

"காப்பதோர் வில்லு மம்பும் கையதோ ரிறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலச
மாட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய குருதிநீ ரொழுகத் தங்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கைவீ ரட்ட னாரே"

"குவப்பெருந் தடக்கை வேடன் கொடுஞ்சிலை யிறைச்சிப்
பாரம்
துவர்ப்பெருஞ் செருப்பா னீக்கித் தூயவாய்க்
கலசமாட்ட
உவப்பெருங் குருதி சோர வொருகணை யிடந்தங் கப்பத்
"தவம்பெருந் தேவு செய்தார் சாய்க்காடு மேவி னாரே"

"கண்ணப்பன் கண்ணப்பக் கண்டுகந்த கழிப்பாலை மேய
கபாலப்பனார்".

"காலாலக் காலனையுங் காய்ந்தான் கண்டாய்
கண்ணப்பர்க் கருள்செய்த காளை கண்டாய்"

(திருநாவுக்கரசர்)

"அணிகொ ளாடையம் பூணணிமாலை யமுதுசெய் தமுதம்
பெறுசண்டி
இணைகொ ளேழெழு நூறிரும் பனுவ லீன்ற வன்றிரு
நாவினுக் கரையன்
கணைகொள் கண்ணப்பன் என்றிவர் பெற்ற காதலின்
அனருளாதரித் தடைந்தேன்
திணைகொள் செந்தமிழ்ப் பைங்கிளி தெரியுஞ் செல்வத்
தென்றிரு நின்றியூ ரானே"

(திருநாவலூரர்)

"நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக் கரையன்
நாளாளைப் போவானும்
கற்றசூத னற்சாக்கியன் சிலந்தி கண்ணப் பன்கணம்
புல்ல னென்றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங் கொள்கை
கண்டுநின் குரைகழ லடைந்தேன்

பொற்றிரள் மணிக் கமலக்கண் மலரும் பொய்கை சூழ்
திருப்பன்கூ ருளானே''
''எறிந்த சண்டி யிடந்த கண்ணப்ப னேத்தும் பத்தர்கட்
கேற்றம் நல்கினீர்''
''கடியார் கணம்புல்லர் கண்ணப்ப ரென்றி வர்கள்''
(ஒன்பதாந்திருமுறை, பூ நம்பி காடநம்பி)

''கான வேடுவன் கண்பரிங் தப்ப
வானநாடு மற்றவர்க் கருளியும்''

''நேசத்தால்; வாயினீர் கொண்டு மகுடத் துமிழ்ந்திறைச்சி
ஆயசீர்ப் போனகமா ஆங்கமைத்துத்—தூயசீர்க்
கண்ணிடந்த கண்ணப்பர் தம்மைமிகக் காதலித்து
விண்ணுலக மீந்தவிறல் போற்றி''
(பதினோராந்திருமுறை-நக்கீரர்)

''சென்றுசெருப் புக்காலாற் செல்ல மலர்நீக்கிச்
சென்று திருமுடிவாய் நீர்வார்த்துச்-சென்றுதன்
கண்ணிடந்தன் றப்புங் கருத்தற்குக் காட்டினான்
கண்ணிடந்தன் றப்பாமைப் பார்த்து''
(பரண தேவநாயனார்

''ஏவுசெய் மேருத் தடக்கை யெழிற்றில்லை யம்பலத்து
மேவுசெய் மேனிப் பிரானன்றி யங்கணர் மிக்குளரே
காவுசெய் காளத்திக் கண்ணுதல் வேண்டும்
வரங்கொடுத்துத்
தேவுசெய் வான்வாய்ப் புனலாட் டியதிறல் வேடுவனே''
(நம்பியாண்டார் நம்பி)

''கல்லெறிந் தானும்தன் வாய்நீர் கதிர்முடி மேலுகுத்த
நல்லறி வாளனு மீளா வழிச்சென்று நண்ணினரே''

என்பன. இவையன்றிப் பன்னிரண்டாம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்து அவர் வரலாறு விரித்துக் கூறப் படுகின்றது. இதுவன்றிப் பதினோராந் திருமுறையில்'திருக் கண்ணப்ப தேவர் திருமறம்' என்னும் பெயரிய இரண்டு

நக்கீர தேவராலும், கல்லாட தேவராலும் இயற்றப்பட்டுள்ளன. அவற்றிலும் அவர் வரலாற்றுச் சுருக்கமே காணப்படுகின்றது. எனவே, அவர் வரலாறு தன்னைக் கூறுவார்க்கு ஆண்டவன் திருவடிக்கண் அன்பை விளைவிப்பதில், வல்லதெனக் கருதியே அப்பெரியாரனைவரும் அதனைக் கூறி மகிழ்ந்தாரென்பது உய்த்துணரத் தக்கதொன்றாகும் இதனை,

'வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்
கேளார்கொ லந்தோ கிறிபட்டார்—கீழாடை
அண்ணற் கணுக்கராய்க் காளத்தி யுண்ணின்ற
கண்ணப்ப ராவார் கதை''

என்னும் நக்கீரர் நல்வாக்கும் வலியுறுத்துதல் காண்க இன்னும் தொண்டர் சீர்பரவுவார். அவர் இரண்டாவது நாள் வேட்டையைக் கூறத் தொடங்கி அன்பினாற் பரவசராகிக் கூறிய,

'இவ்வண்ணம் பெருமுனிவர் ஏகினார் இனியிப்பால்
'மைவண்ணக் கருங்குஞ்சி வனவேடர் பெருமானார்
கைவண்ணச் சிலைவளைத்துக் கான்வேட்டை தனியாடிச்
செய்வண்ணத் திறமொழிவேன் தீவினையின்
திறமொழிவேன்''

என்னும் ஓர் செய்யுளும் அக்கருத்தை ஆதரிப்பது காண்க கல்லாட தேவர் திருக்கண்ணப்ப தேவர் திருமறத்திறுதியில்

''திருவேட்டுவர் தந்திருவடி கைதொழக்
கருவேட்டுழல் வினைக் காரியம் கெடுமே'' எனக் கூறியதூஉம் இங்குக் கருதத்தக்கதாகும்.

''தித்திக்குந், திண்ணப்ப னாஞ்சிறுபேர்''

என நக்கீர தேவர் நவின்றது, அவர் அந்நாயனாரின் பிள்ளைத் திருநாமமாகிய 'திண்ணனார்' என்பதில் ஈடு

பட்டு எண்ணியெண்ணிச் சுவைத்து மகிழ்ந்தமையை விளக்குதல் காண்க.

இங்ஙனம் பன்னிரண்டு திருமுறைகளில் பத்தாவது திருமுறை நீங்க, ஏனைய அனைத்துமாகிய கலைகளிலும் பிற நூல்களிலும் கண்ணப்பர் புகழ் மலிந்து கிடக்கின்றமை யாற்றான் திருநாவலூரர் திருத்தொண்டத்தொகையின்கண்

**"கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்"**

எனக் கூறியருளியதூஉமென்க. (இதற்கு வேறுபொருளு முரைக்கப்படும்)

அடிகள் குதிரை வாங்கும் பொருட்டுச் சென்று திருப் பெருந்துறை எல்லையை அணுகியவுடனே அவர் தலை மீதிருந்த பாரம் ஒன்று இறங்கியது போலும் பல இன்ப நுகர்ச்சிகள் அவர்க்குத் தோன்றினவென மேலே காட்டி னோம். எனவே, ஒருவர் தாம் பெற்ற இன்பம் போலத் தமக்கு முன்னரே ஒருவர் பெற்றிருந்தாரானால் அவரைப் பலமுறையும் தம் நினைவில் வைத்துப் பாராட்டுவது உல கியல்பன்றோ? அம்முறையில் கண்ணப்பர் காளத்தி மலை யைக் கண்டவளவில் நாணனை நோக்கி 'நாணனே தோன் றுங் குன்றில் நண்ணுவேம்' என்று கூற அவனும் "அங்குச் செல்லின் இயற்கைக் காட்சிகள் நின் மனதை மகிழ்விக்கும்; அன்றியும் குடுமித்தேவர் அங்கு இருப்பர்; அவரைக் கும்பிட லாம்" என்றான். உடனே நாயனாருக்குப் பல இன்பங்கள் நிகழா நிற்க,

**"ஆவதென் அதனைக் கண்டிங்கு இணைதொறும் என்மேற் பாரம்**
**போவதொன் றுளது போலும் ஆசையும் பொங்கி மேன்மேன்**
**மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா நிற்குந்**
**தேவரங் கிருப்ப தெங்கே போக"**

என நாணனை நோக்கிக் கூறினார். எனவே இவ்வியைபு பற்றி அடிகள் நாயனாரைப் பாராட்டியதென்க. மற்றுமுள்ள காரணங்களைக் காண்பதற்கு முன்னரே நாம் உலகியல்பு ஒன்றை நினைவில் வைத்துக்கொள்வேமாக. அதாவது:—

ஒருவன் இவ்வுலக வாழ்க்கையில் தான் இன்ன இன்ன இடம் பொருள் ஏவலைப் பெற்று இவ்விவ்வாறு நலந்துய்க்க வேண்டுமென்று கருதி அதனை அருளுமாறு ஆண்டவனை வேண்டுவானாயின் பலகாலும் தன் விருப்பத்தைத் தனித் தனிக் கூறி வேண்டுவான். ஒரோவழி தான் வேண்டுவ அனைத்தும் ஒரு சாத்தானிடத்தில் இயல்பாய் அமைந்து கிடந்தனவானால் 'அச்சாத்தானைப்போல' யான் வாழ்க்கையுடையேனா என நினைத்து இரங்குவான் என்பது. நமது அடிகள்,

> ''சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கு
> மத்தன்''

> ''காணுங் கரணங்க ளெல்லாம்பே ரின்பமெனப்
> பேணு மடியார்''

என அருளியிருத்தலை நோக்குங்கால் சீவகரணங்களனைத் துஞ் சிவகரணமாக நிகழப்பெற்றவர் செய்யும் எவ்வகை வினையும் நல்வினையேயாகுமெனவும், அத்தகைய பேறு தமக்கு அருளவேண்டி ஆண்டவனை விரும்பி வேண்டினா ரெனவும் அறிகிறோம். ஆயின் அடிகள் இந்நிலையை அடையவில்லையோ வெனின், பெரியாருக்குத் தமது வெற்றி தோன்றுவதில்லை யென முன்னரே காட்டப்பட் டிருப்பதனால் அடைந்த அவர் அடையவில்லை யெனக் கருதலே இயல்பென்க. அற்றேல்,

> ''சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட''

எனவும்,

> ''சித்தமல மறுவித்துச் சிவமாக்கியெ னையாண்ட''

எனவும் கூறினாராலோவெனில் அதற்கும் தம்மையறியாது அவர் வெற்றி ஒரோவழி வெளி வந்து விடுமென முன்னரே கூறப்பட்டதென்க.

இனி கண்ணப்பர் இந்நிலையை அடைந்தவரென்பதை,

"திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர்
காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்க மெய்தித்
தங்கிய மலத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழற் பொருவிலன்பு உருவ மானார்"
(கண்ணப்ப நாயனார் புராணம்)

எனவரும் செய்யுளால் அறிக. அவர் செய்தன அனைத்துந் தவமாயின வென்பதை,

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்க லன்பென்றும்
அவனுடைய வறிவெல்லாம் நமையறியு மறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையிவ்வாறு அறிநீயென்று
அருள்செய்வார்"
"அவன்மனம் நமக்குக் கோயில் அவனுரை பலவும்
ஒத்தாம்
அவன்முய றொழில்க ளெல்லாம் அறத்தொழில்
ஐயமில்லை"
(சீகாளத்தி புராணம்)

எனச் சிவபிரான் சிவ கோசரியாரின் கனவிற் றோன்றிக் கூறியவாற்றால் அறிக.

இன்னும் நமது அடிகள் இறைவனை நோக்கித் தம் விருப்பத்தைக் கூறுமுகத்தால், 'நின் திருவடியை என் இரண்டு கரங்களாலும் இறுகப் பிடித்து என் முடிமீதிருத்தித் தொழவும், உன் திருநாமங்களை என் வாயார வாழ்த்தவும், நின்னை நினைந்து என் மனம் அழலிற்பட்ட அரக்குப் போல உருகவும் எனது விருப்பம்' என வேண்டி நிற்கின்றார்.

இதனை,

'கையாற் றொழுதுன் கழற்சே வடிகள் கழுமத்
தழுவிக்கொண்டு
எய்யா தென்றன் தலைமேல் வைத்தெம்
பெருமான் என்றென்று
ஐயா வென்றன் வாயா லரற்றி யழல்சேர்
மெழுகொப்ப
ஐயாற்று அரசே ஆசைப் பட்டேன் கண்டா யம்மானே''
(ஆசைப்பத்து)

என்னுஞ் செய்யுளாற் காண்க. (மனம் மொழி மெய் மூன்றாலும் வழிபாடாற்ற வேண்டுமென்று விரும்பியபடி)

கண்ணப்பர் காளத்தி மலையிலேறிக் குடுமித் தேவனைக் கண்ட அளவில், பன்னாள்வரையுங் காணாது போய் ஒரு நாள் எதிர்ப்பட்ட குழந்தையைத் தாயானவள் எங்ஙனம் விரைந்து ஓடி இறுகத் தழுவுவாளோ, அங்ஙனமே தமது தோள்கள் அழுந்தும்படி அப்பெருமானைக் கட்டிப் பிடித்து அழலிற்பட்ட அரக்குப் போன்று மனம் உருகா நிற்க் முத்தமிட்டுத் தமது தூய வாய் திறந்து பல கூறுகிறாரென்பதை,

''நாள்பல பிரிந்திருந்து நண்ணிய சிறுசதங்கைத்
தாளிள மகனைக்கண்ட தாயெனத் தாழாதோடி
நீளெ ழுவனைய தோள்கள் ஞெமுங்குறத் தழுவிமோந்து
வாளழ லாக்கி னன்ன மனத்தினான் முத்தங்கொண்டான்''

''செய்யகண் ணீரரும்பச் செறிமயிர் பொடிப்ப வாதன்
கையகப் பட்டதெய்வக் கதிர்விடு மணியின் நாயேற்
கையன்வந் தகப்பட்டானென்று அணியெயி றிலங்கநக்கு
மெய்யெலா மெய்யன்பர்ய விடலைமற் றின்னசொல்வான்''
(சீகாளத்தி புராணம்)

என்பவற்றால் அறிக. எனவே அடிகள் விரும்பியவை நாயனார் நிகழ்ச்சியில் அமைந்து கிடத்தல் காண்க.

இன்னும் நமது மணிவாசகனார் "உற்றார் முதலிய யாரும் எவையும் எனக்கு வேண்டாம்; நின் திருவடியை நினைந்து ஈன்றணிமைத்தாய பசு தன் கன்றை நினைந்துருகுமாறு உருக வேண்டுகின்றேன்" என்பார்,

"உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையுங்
குற்றாலத்து அமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"

என்றருளினர்.

திண்ணனாரோ, குடுமித்தேவரைக் கண்டது முதல் தமது அருமை இருமுதுகுரவர் முதலிய உற்றாரையும் மற்றவரையும் வேண்டாராகி அத் தேவனுக்கு உணவு கொண்டு வரும்பொருட்டுப் போகத்துணிந்தவர் பிரிந்து செல்ல மனம் ஒருப்படாமல்,

"போதுவர் மீண்டு செல்வர் புல்லுவர் மீளப் போவர்
காதலி னோக்கி நிற்பர் கன்றகல் புனிற்றாப் போல்வர்"

ஆனார். எனவே இங்கும் அடிகள் வேண்டியது நாயனாரிடம் அமைந்து கிடத்தல் காண்க.

இன்னும் நமது வாதவூரடிகள், "இறைவன் திருவடியை இடையறாது நினைந்துருகி, கண்டவரெல்லாம் 'இவன் மால்கொண்டவன்' என்று சொல்லுமாறு யான் ஆவது எஞ்ஞான்றோ?" எனக் கவல்வார்,

"உத்தம னத்த னுடையா னடியே நினைந்துருகி
மத்தம னத்தொடு மாலிவ னென்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட வூரூர் திரிந்தெவரும்
தத்த மனத்தன பேசவெஞ் ஞான்றுகொல் சாவதுவே"

என்று கூறியருளினர்.

வேடர் பெருமானோ, ஆண்டவன் அருட்கழலை அணுத்துணையும் மறவாது உன்னியுன்னி உருகியதுடன்,

**"என்செய்தாய் திண்ணா நீதா னென்ன மால் கொண்டாய்"**

எனவும்,

**"தேவு மால் கொண்டானிந்தத் திண்ணன்"**

எனவும் முறையே காடனாலும், நாணன், காடன் இருவ ராலும் கூறப்பட்டனர். எனவே ஈண்டுள்ள ஒற்றுமையும் ஓர்ந்துணர்க.

மேல் வருவனவெல்லாம் முன் காட்டப்பட்டவை எனினும் ஒரு படி சிறந்தனவாகும்; என்னை? அடிகள் எவ்வெவ்வாதரவு தமக்கு அளிக்க வேண்டுமென்று ஆண்ட வனை வேண்டுகின்றாரோ, அவ்வவ்வாதரவுகளை யெல்லாம் அவ்வாண்டவனுக்கு நமது அன்பர் பெருமான் தமது அன்பின் முதிர்ச்சியால் அளிக்கின்றாராகலினென்க.

நமது அழுதடியடைந்த அன்பர், "யான் ஓர் துணை யின்றி வருந்துகின்றேன்; நீயே எனக்கு உறுதுணையாய் நின்று உதவல் வேண்டும்" என்பார்,

**"நைஞ்சேன் நாயேன் ஞானச் சுடரே நானோர்**
**துணைகாணேன்"**

**"தனித் துணை நீநிற்க"**

**"மனத் துணையே"**

என அரற்றுகிறார்.

கானவர் பெருமானாம் கண்ணப்பரோ, இறைவனை இறுகத் தழுவிக் கொண்டு,

**"வெம்மறக் குலத்து வந்த வேட்டுவச் சாதி யார்போல்**
**கைம்மலை கரடி வேங்கை அரிதிரி கானந் தன்னில்**
**உம்முடன் துணையா யுள்ளா ரொருவரு மின்றிக் கெட்டேன்**
**இம்மலைத் தனியே நீரிங் கிருப்பதே யென்று நைந்தார்"**

(பெரிய புராணம்)

"யானையும் புலியும் எண்கும் யாளியு முளவுங்
கூர்ங்கோட்டு
ஏனமுந் திரியுங் காட்டி லெந்தைநீ துணையு மின்றிக்
கூனல்விற் றடக்கை வேடர் குலமென இருப்ப தென்னே
ஊனுணவு உனக்கு யாவருண் கெனத் தருவா ரந்தோ"
(சீகாளத்தி புராணம்)

என உலகனைத்திற்கும் உறுதுணையாம் ஒப்பற்ற ஒருவனுக்குத் துணையில்லையென வருந்துகின்றார். இன்னும் அடிகள்,

"ஆதமிலி யான்பிறப் பிறப்பென்னு அருநரகில்
ஆர்தமரு மின்றியே அழுந்துவேற் காவாவென்று
ஓதிமலி நஞ்சுண்ட உடையானே யடியேற்குன்
பாதமலர் காட்டியவா றன்றேயெம் பரம்பரனே"

எனத் தமர் யாருமில்லாத தம்மை அவன் 'அஞ்சற்க' என்று ஆண்டருளியதைக் குறிப்பிட்டு, அவன் தமரான வகையை,

"அன்னை யொப்பா யெனக்கத் தனொப்பாய்"

எனவும் 'அம்மையே அப்பா' எனவும் 'அம்மான்' எனவும், 'அண்ணா' எனவும், அருளுகின்றார்.

இங்ஙனம் எல்லாவுலகிற்கும் அப்பனாய், அம்மையாய் அன்புடைய மாமனுமாய், மாமியாய், அனைத்துமாயுள்ள ஆண்டவனுக்குத் தமரில்லையெனக் கருதி.

"ஆர்தமராக நீரிங் கிருப்பதென் றகலமாட்டேன்"

எனக் கண்ணீர் வடிக்கின்றார் கானத் தலைவர்.

இன்னும், எதற்கும் அஞ்சாதவராய், பிறவிப் பெரும் பகைக்குப் பெரிதும் அஞ்சுதலையுடைய மணிவாசகப் பெருமான், அப்பகையை வேரொடுங் களைபவனாகிய பிறப் பிறப்பில்லாப் பெருமான், தம்மை 'அஞ்சேல்' என அருள விரும்பி,

"அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி"
"என்னையப்பா அஞ்சலென் பவரின்றி
நின்றெய்த் தலைந்தேன்"

''அருளாதொழிந் தாலடி யேனையஞ் சேலென்பார்யார்''
''ஆவா வென்னாவிடி லென்னையஞ் சேலென்பாரோதான்'
''அஞ்சேலென்ன ஆசைப்பட்டேன் கண்டாயம்மானே''

எனப் பலவிடங்களிற் பாரித்துக் கூறி,

''உய்ஞ்சேன்எம் பெருமானே உடையானே வருகவென்று
அஞ்சே லென்றருளியவாறு ஆர்பெறுவா ரச்சோவே''

என அவர் 'அஞ்சேல்' என்றருளினமையுங் கூறியருளினார்.

இங்ஙனம், ''புலனைந்தும் பொறிகலங்கி நெறி மயங்கி யறிவழிந்திட்டைடம் மேலுந்தி அமைந்த போதாக அஞ்சே லென்றருள் செய்யும்'' கூத்தபெருமானைக் குன்றவர் பெருமான்.

''குன்றிடை யெனக்கு வாய்த்த குலமணி விளக்கே யெந்தாய்
உன்றழற் பசித ணிப்ப வுறுசுவை யிறைச்சி கொண்டே''
''உழுந்துருள் பொழுதின் மீள்வேன் ஒருகண மேனுந் தாழேன்
வழங்குறு கொடுவி லங்கு வருமென அஞ்சேல் ஐய
எழுந்துமேல் வந்த தாயின் என்னைஒய் யெனக்கூவு''
(சீகாளத்தி புராணம்)

என்கின்றார். இந்நிகழ்ச்சிகளனைத்திற்கும் முதற் காரணமாயிருந்தது எது? அவருடைய அன்பன்றோ! அவரது அன்பு பரிணமித்த இந்நிகழ்ச்சிகளை அன்றி வேறு நிகழ்ச்சி அவரிடத்து இல்லாமையாலன்றோ அவர் அன்பின் வடிவமெனப் பட்டார். திருஞான சம்பந்தர் திருக்காளத்தியை வணங்கச் சென்ற தோற்றத்தைத் தம் கூர்த்த மதியால் முதலில் தமது உள்ளத்தில் எழுதிக் கொண்டு பின் நமக்கு விளக்குகிறார் தொண்டர்சீர் பரவுவார்; அது,

''தாழ்ந்தெழுந்து திருமலையைத் தொழுது கொண்டே
தடஞ்சிலா தலசோபா னத்தா லேறி

வாழ்ந்திமையோர் குழாநெருங்கு மணிநீள் வாயின்
மருங்கிறைஞ்சி யுட்புகுந்து வளர்பொற் கோயில்
சூழ்ந்துவலங் கொண்டிறைவர் திருமுன் பெய்தித்
தொழுதுதலை மேற்கொண்டு செங்கை போற்றி
வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன்காண் பார்போல்
மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்''

''உள்ளத்தில் தெளிகின்ற அன்பின் மெய்ம்மை
உருவினையும் அவ்வன்பின் உள்ளே மன்னும்
வெள்ளைச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண்
விமலரையும் உடன்கண்ட விருப்பம் பொங்கிப்
பள்ளத்தில் இழிபுனல்போற் பரந்து செல்லப்
பைம்பொன்மலை வல்லிபரிந் தளித்த செம்பொன்
வள்ளத்தில் ஞானஆ ரமுத முண்டார்
மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்கு கின்றார்''

என்பது, இங்கு நமது அருண்மொழித் தேவர் 'கடவுளை வணங்கியதனா லுண்டாகிய பயனைக் கண்ணெதிரே கண்டாற்போல, கானவர் பெருமானைக் கண்டார் காழியர் கோன்' என்றதும் 'கருத்துப்பொருளன்றிக் காட்சிப் பொருளாகாத அன்பிற்கு உருவம் உண்டுகொல்? என வினவுவார்க்குக் கண்ணப்பரின் கவின் வடிவத்தைச் சுட்டிக் காட்டி 'இது தான்' என்பார் போன்று 'அன்பின் மெய்ம்மை உரு' என்றதும் எண்ணி மகிழத்தக்கன.

இன்னும், ஒருவர் மாட்டு அன்பு செய்தாரொருவர் அவ்வன்பின் முதிர்ச்சியால் தம்மினும் பன்மடங்கு சிறந்த அவ்வன்பு செய்யப்பட்டாரைத் தம் நிலையிலே வைத்து எண்ணி அவருக்கு ஊறு அல்லாதனவற்றை யெல்லாம் ஊறாக வெண்ணி வருந்துவதாகிய அன்பினது ஓரிலக்கணம் நமது நாயனாரின் வரலாற்று நிகழ்ச்சிகளில் காணப்படுதலும் இங்குக் கருதத் தக்கதாகும். என்னை? எல்லாம் வல்ல இறைவனுக்குப் பசிப்பிணி உண்டென்றும், அதை நீக்குதற்

பொருட்டுத் தான் உணவு கொண்டுவரச் சென்றால் அங்கு வாழும் கொடிய விலங்குகள் வந்து ஐயனுக்கு ஊறு விளைத்து விடுமென்றும், யாரைத் துணையாக வைத்து யான் செல்வேன் என்றும் 'எந்தாய்! உனக்கு உணவுத் தேடிக்கொண்டு விரைந்து வருவல் நீ இங்குள்ள விலங்குகள் வருமோ என்று அஞ்சற்க; வரின்என்னை விரைந்து அழைப் பாயாக' என்றும் கூறியதனாலும், இவற்றோரன்ன பல நிகழ்ச்சிகளாலுமென்க. 'நன்று நன்று, கண்ணப்பர் நூலா ராய்ச்சியால் கடவுளிலக்கணந் தெரிந்து கொள்ளாதவராக வின் இங்ஙனங் கூறினார்! எனின் அவ்வறிவு கைவரப் பெற்றார் மாட்டும் அன்பின் முதிர்ச்சியில் இது நிகழ்தல் இயல்பே யென்க. என்னை? சேரமான் பெருமாணாயனா ரோடு கோடிக் குழகரைக் கும்பிடுதற்குச் சென்ற தம்பிரான் தோழர், ஆங்குக் குடியிருப்போர் யாருமின்றி ஆண்டவன் தன்னந்தனியாக, விரைந்த கடற்காற்றுத் தன்மேல் இடைய றாது வந்து மோத இருத்தலைக் கண்டு மனம் புழுங்கி அவனது எல்லாம் வல்ல தன்மை தமது அன்பின் முதிர்ச்சி யின்கண் மறைய அவனை நோக்கி,

"கடிதாய்க் கடற் காற்றுவந்து எற்றக் கரைமேற்
குடிதானி அயலே இருந்தாற் குற்ற மாமோ
கொடியேன் கண்கள் கண்டன கோடிக்குழகீர்
அடிகே ளுமக்கு ஆர்துணை யாக விருந்தீரே!"

என வருந்துவதனாலென்க. ஆயின், அவ்விருவர் தம்முழு வேற்றுமையாதோ வெனின் முன்னவர் அவ்வுணர்ச்சி மயமாகி நின்று விடுவார். பின்னவர் உடனே தெளிந்து விடுவரென்க.என்னை? திண்ணனார் அதே நிலையில் நின்ற தனாலும், அங்ஙனம் வருந்திக் கூறிய வன்றொண்டப் பெரியார் உடனே தெளிந்து 'ஆ' கெட்டேன்; எல்லாம் வல்ல நமது இறைவனைக் காற்று மோதி என் செய்யும்? அவனது இயற்கைத் திருவடிவத்தின் கூறுகளில் காற்று ஒன்றன்றோ? உயிர்களனைத்திலும் ஊடுருவி நின்று தோன்றாத் துணையாகிய அவனுக்கும் ஒரு துணை வேண்

டுமோ? எனக்கருதி, அன்பின் முதிர்வால் தாம் மறந்து கூறியதை மறைக்கும் பொருட்டுத் தன் தோழனைக் கேலி செய்வான் போன்று,

> ''ஒற்றி யூரென்ற வூனத்தி னாலது தானோ
> அற்றப் படவா ரூரதென் றகன் றாயோ
> முற்றா மதி சூடிய கோடிக் குழகா
> எற்றாற் றனி யேயிருந் தாயெம் பிரானே''

எனக் கூறியதனாலுமென்க.

எனவே, மேற்காட்டியவற்றால் நமது அடிகள் ஆண்டவனிடத்து எவ்வெவற்றை வேண்டிக் குறையிரந்து நின்றனரோ, அவையெல்லாம், கானவர் தலைவன் வாழ்க்கையில் கவின்பெற விளங்கினவாகலின், அதற்குக் காரணம் அவரது பேரன்பே எனக் கருதித் தமது அன்பின்மைக்கு மறுதலையுவமமாக அவரது அன்புண்மையை அடிகள் கூறினாரென்பதும், அஃது ஓர் உலகியல் பென்பதும் பிறவும் பெறப்பட்டன.

இங்கு மாணிக்கவாசகரையும் கண்ணப்பரையும் சீர் தூக்கி யார் பெரியர்? யார் சிறியர்? என்று செய்த ஆராய்ச்சியன்று இதுவென்பதையும், அங்ஙனம் கருதிச் சீற்றங் கொள்ளக் கூடாதென்பதையும், பெற்றுப் பெறாதாரைப் போல வருந்தும் பெரியாரிலக்கணத்திற்றலைநின்ற நமது அடிகளின் கருத்துக்கு இது சாலுமென்பதையும் அன்பர்கட்கு நினைவூட்டுகின்றேன்.

இது கற்போர்க்குச் சிறிது பயன் விளைக்குமேவெனக் கருதி சற்று விரித்தெழுத நேர்ந்தது. அறிஞர் பொறுப்பாராக. இனி, இதனை இம்மட்டில் நிறுத்தி மேற்செல்வேமாக.

இங்ஙனம் தமக்கு 'அன்பில்லை, அன்பில்லை' எனப் பலபடக் கூறிய நமது அன்பர் ஆண்டவனை நோக்கி அவ்வன்பை அருளுமாறும் பலபட வேண்டுகின்றார்.

அவை,

''நின்றன் வார்கழற் கன்பெனக்கு, நிரந்தரமாயருளாய்''

''இடையறா வன்புனக்கென், ஊடகத்தே நின்றுருகத்
தந்தருள்''

''அன்பு நின் கழற்கணே, புணர்ப்பதாக''

''மெய் கலந்த அன்பரன் அன்புஎனக்கு மாக வேண்டுமே''

''வேண்டு நின் கழற் கணன்பு''

''மெய்யன் புடையாய் பெறநான் வேண்டுமே''

''தொண்ட னேற்கு முண்டாங் கொல் மிக்கவன்பே
மேவுதலே''

''பெறவே வேண்டும் மெய்யன்பு''

''அடியா ருனக்குள்ள வன்புந் தாராய்''

*என்பன,*

*பேரன்பராகிய நமது பெரியார் இங்ஙனம் தமக்கு அன்பில்லையெனக் கருதி அவ்வன்பைப் பெறுதற்கு ஆண்டவனிடங் குறையிரந்தமைக்குக் காரணம் என்னை? ஒருவாறு கற்பனைக் களஞ்சியமாகிய சிவப்பிரகாச அடிகள்,*

''அருங்கவி வாத வூரனே முதலோ ரன்பிலேம் என்றது
வேண்டி
இரங்குதல் பொய்ம்மை யன்பிலே னெனயா னிரங்கலே
மெய்யெனக் கருளாய்''

*எனச் சோணசைலமாலையிற் கூறியவாறு நமது அடிகள் ஆண்டவன் திருமுன்னர்ப் பொய்தான் கூறினரோவெனின், அறுநூற்றைம்பத்தெட்டு பாடல்களடங்கிய திருவாசகமென்னும் ஒரு சிறு நூலின்கண் சற்றேறக்குறைய முப்பத்திரண்டு இடங்களில் பொய்யைக் கடிந்து கடிந்து கூறும் நம் 'பொய்யடிமையில்லாத புலவர் பெருமான்' 'பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே' எனத் தம்மாலழைக்கப்பட்ட பரம்பொருளின் முன் பொய் கூறினாரெனக் கருதுவதும் பொருந்துவதொன்றாகுமோ? ஆகாது; ஆகாது.*

இனி, அச்சிவப்பிரகாசனாரும் சில இல்லங்களிலுள்ள ஆண் மக்களுக்கு ஏற்ற பெற்றி பேசி அவர்களிடைச் சில பொருளும் ஆங்குள்ள பெண் மக்களிடைப் பொருந்துமாறு பேசிப் பொருள் சிலவும் பெறுகின்ற சூழ்ச்சியுடையார் போலக் கடவுள் திருமுன்னர் வாதவூரடிகள் முதலாயினோர் 'அன்பில்லை' என்று கூறுவது பொய்; யான் 'அஃதில்லை' யென்பது மெய். ஆதலால், எனக்கு அருள் செய்வாயாக' எனக் கூறி நமது அழுதடி யடைந்த அன்பர் திருமுன்னர்,

"வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கும்
அருள்செய் சிவனே யலந்தே னந்தோ
முறையோ முறையோ விறையோ னேயென்
றழுது செம்பொ னம்பலக் கூத்தன்
அருளாற் பெற்ற அன்பினி லொருசிறி
தடிய னேற்கும் அருளல் வேண்டும்
நீயே கோடல் நின்னருட் பெருக்கிற்
கேற்ற தன்றிள வேறுகந் தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக!
திருந்திய வேதச் சிரப்பொருண் முழுதும்
பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நீழலிற் கொள்ளைகொண் டோயே"

எனவும்,

"பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெறாரி னழுங்கி
நெஞ்சநெக் குருகி நிற்பை நீயே
பேயேன் பெறாது பெற்றார் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே
அன்ன மாடு மகன்றுறைப் பொய்கை
வாதவூ ரன்ப வாத லாலே
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
'நெஞ்சத் தவலமில' ரெனுஞ்
செஞ்சொற் பொருளின் றேற்றறிந் தேனே"

எனவும், நால்வர் நான்மணிமாலையில் கூறுவதனால் அவர் வாக்கும் நம்புதற்கில்லை; அன்றியும், 'பேரருள் பெற்றும் பெறாரினழுங்கி, நெஞ்சநெக்குருகி நிற்பை நீயே' என்றதனால் அவர் தம்கருத்து இது வென்பதையும் ' தம்முடைய வெற்றி தமக்குத் தோன்றாதிருப்பது பெரியாரிலக்கணங்களில் ஒன்று" என மேலே காட்டியதையும் வெள்ளிடைமலை போல் விளக்கிவிட்டார்.

இனி அடிகள் அங்ஙனங் கூறியதற்குக் காரணந்தான் என்னவென்பதை நோக்குவோமாக.

அடிகள், யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையனாகிய ஆண்டவன் யாவர்க்குங் கீழாகிய தம்பொருட்டு அருட்டிருமேனிகொண்ட ஆசிரியனாய்ப் போந்து யாவரும் பெற்றறியாவின்பத்துள் வைத்ததையும்; பெருந்துறையிடத்துக் குருந்த நீழலிலிருந்து பார்த்த அருட்பார்வையால் காய்ந்த இரும்பு நீரைப் பருகுமாறு தமது சீவபோதத்தைப் பருகி, நீராயுருகவும், என்பெலா நெக்குருகவும் புன்புலால் யாக்கை புரை புரை கனியவும், அன்பினாலாவி யோடியாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருகவும், ஊனையுமென்பையும் உருக்கித் தேனும் பாலுந் தீங்கன்னலு மமுதுமாய்த் தித்திக்கவும் செய்ததையும்; தமக்குக் கற்போலுந் தோன்றிய மனதைப் பிசைந்து கனியாக்கியதையும்;, வழிமறித்து, வழிமறுத்து அவனருளாரமுதம் ஊட்டியதையும்;; தாம் மறுத்து மறுத்து ஓடியதையும்; அடித்தடித்து அக்காரந் தீற்றியதையும் நினைந்து நினைந்து ஆற்றாராகி, சொல்லுவதறியேன். என்றும், 'ஆற்றேன்' என்றும், 'தெரியேன்' என்றும் 'தரியேன்' என்றும் கதறுவார்க்குப் பின்னும், தம் பொருட்டு அவன் நரிபரியாக்கிப் போந்த பான்மையும், தத்துவங்கடந்த, தனது திருமுடியின் கண் அத்தத்துவங்கட்கெல்லாம் கீழாய மண்ணைச் சுமந்தது மமையாமல் பொன்மேனி புண்மேனியாமாறு பிரம்படி பட்டதும் நினைவில் வருமானால் அப்பெரியாரின் திருவுள்ளம் என்ன பாடுபட்டிருக்குமென்பதை, சில ஆண்டுகட்கு முன்னர் நமது நாட்டின்கண் தோன்றி மக்களுக்குச் சமரச சன்மார்க்கத்தைப் போதித்து,

சைவ சமயப் பெருங்குரவர் நால்வரின் பெருமைகளை நன்குணர்ந்து அவர்கட்குப் பப்பத்துப் பாக்களாலாகிய ஒவ்வொரு மாலை சாத்தி, அல்லும் பகலும் ஆண்டவனை நோக்கிக் கதறிக் கதறி அழைத்துத் தம் அன்பனைத்தையும் பாட்டு வடிவங்களாக்கி மறைந்தருளிய இராமலிங்க அடிகளே தாம் அறியவில்லையென்று கூறுவாரானால் புழுத்த நாயினுங் கடையனான யானோ அறிந்து கூறவல்லேன்? அவ்விராமலிங்கனார், அடிகளின் பொருட்டு ஆண்டவன் மண்சுமந்து அடிபட்ட பகுதியில் ஈடுபட்டுக் கூறுவதாவது:—

"வன்பட்ட கூடலில் வான்பட்ட வையை வரம்பிட்டநின்
பொன்பட்ட மேனியிற் புண்பட்ட போதிற் புவிநடையாந்
துன்பட்ட வீரரந்தோ வாத வூரர்தந் தூயநெஞ்சம்
என்பட்ட தோவின்று கேட்டவென் னெஞ்ச மிடிபட்டதே"

என்பது.

இப்பெரியார் இச்செய்யுளின்கட் பெய்துவைத்த சுருங்கிய சில சொல் நுட்பங்களால், தம் இழிவையும் அடிகளின் உயர்வையும், ஆண்டவன் மண்சுமந்து அடிபட்டகாலை அடிகளின் திருவுள்ளம் அளவிறந்த துன்பமடைந்திருக்கும் என்பதையும் விளக்கும் அழகு காணத்தக்கதாகலின் இதன் பொருளைச் சிறிது விரித்துக் காண்போமாக. இதன் பொருள்;- வன்புகஅட்ட கூடலில்=(போக்குதற்கரிய) பல தீவினைகளைப் போக்கிய மதுரை மாநகரின்கண், வான்பட்ட வையை=வானுலகத்தை அளாவுமாறு பெருகி வந்த வையை யாற்றிற்கு, வரம்பு இட்ட நின்=கரை சுமத்தும் பொருட்டு மண்சுமந்த தேவரீரது, பொன்பட்டமேனியில்= பொன் போலுந் திருமேனியின் கண், (அன்று) பட்டபுண்= தேவரீர் வாதவூரடிகளின் பொருட்டுக் கூலியாளாக வந்து மண்சுமந்த அக்காலத்தில்(பாண்டியன் ஒச்சிய பிரம்படியால்) உண்டான புண்ணை, இன்று கேட்ட=இஞ்ஞான்று வரலாற்று வாயிலாகக் கேட்ட, என் நெஞ்சம்=(உலகப் பற்

றாகிய பகையால் வெல்லப்பட்ட பேடியாகிய) அடியேனது (தூய்தல்லாத) உள்ளம். இடி பட்டது = துன்பப்பட்டது. (ஆனால்) புவி நடையாம் துன்பு அட்ட வீரர் = உலகப் பற்றாம் பகையைச் செற்று வென்ற வீரராகிய, வாதவூரர் தம் தூயநெஞ்சம் = அத்திருவாதவூரடிகளின் தூய்தான உள்ளமானது, (பார்த்த) போதில் = நேரிற்பார்த்த காலத்து. அந்தோ = ஐயோ என் பட்டதோ = எத்துணைத் துன்பம் அடைந்திருக்குமோ (அறியேன்) என்றவாறு.

'இன்று' என்றதனால் 'அன்று' என்பதும் 'கேட்ட' என்றதானாற் 'பார்த்த' என்பதும், புவிநடையாம் துன்பு அட்ட வீரர்' என்றதனால் 'உலகப் பற்றாகிய பகையால் வெல்லப்பட்ட பேடி' என்பதும், 'தூய' என்றதனால் 'தூய் தல்லாத! என்பதும் வருவித்துரைக்கப்பட்டன. வன்பு = வன்மை. அது இங்குத் தமக்கும் பிறர்க்கும் இரக்கமில்லாத மனங் காரணமாகச் செய்யப்படுந் தீவினைகளைக் குறித்து நின்றது' அவை மாபாதக முதலியன; விரிவைத் திருவிளை யாடற் புராணத்துட் காண்க; எனவே, 'வன்பட்ட கூடல்' என்றது மதுரையின் பெருமையைக் குறித்தவாறு; வன் பட்ட எனக் கொண்டு பகைவரால் வேறற்கரிய வலிமை பொருந்திய எனவும் சமணர்கள் நாகம், பசு, யானை முதலிய வற்றை விடுத்துச் செய்த வலிமைகளனைத்தும் அழியப் பெற்ற எனவுங் கூறினும் பொருந்தும்; நாக முதலிய கதை களைப் புராணத்துட் காண்க. 'வான்பட்ட வையை' என்றது வையையினது பெருக்கின் மிகுதி குறித்தவாறு 'வரம்பு இட்ட' என்றது கரையில்லானாகிய கடவுள் அடியார் பொருட்டுக் கரை போகட்ட எளிமை குறித்தவாறு 'நின் பொன்பட்டமேனி' என்றது அவன் கூலியாளாக வந்த அஞ் ஞான்றுமுள்ள அவன் திருமேனியழகில் ஈடுபட்டுக் கூறிய வாறு; என்னை! கூலியாளாக வந்த அவன் வேலை செய் யாமல் விளையாடுவதைக் கண்ட ஏனைய கூலி ஆட்கள் கூற் றாக வைத்து;

''கரும்பனும் விரும்ப நின்ற கட்டழ குடைய யென்பார்
அரும்பெற லிவன்றான் கூலிக் காட்செய்த தெவனோ
வென்பார்
இரும்பெருங் குரவ ரற்ற தடியனோ வென்பார் வேலை
புரிந்தவ னல்ல னென்பா ரதுமேனி புகலு மென்பார்''

எனப் பரஞ்சோதி முனிவர் கூறுதலாலெண்க.

'புண்பட்டபோதில்' என்றது இறைவன் உடல், என்பு இறைச்சி முதலிய எழுவகைத் தாதுக்களாலாக்கப்பட்ட மக்களுடல் போலாது அருளாலாக்கப்பட்டதாகலின் அது புண்படாது என அறிந்துவைத்தும், அன்பின் மேலீட்டால் அதனை மறந்து கூறியவாறு; அன்றியும்,

''மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய்''

எனவரும் அடிகளின் திருவாசகத்தை அடியொற்றிப் 'பொன்பட்ட மேனியிற் புண்பட்ட போதில்' என்றதூஉங் காண்க. 'புவிநடையாம் துன்பு அட்ட வீரர்' என்றார்; அடிகள் ஆண்டவன் திருவடியை இறுகப்பற்றி, அதனால் உலகப்பற்றை ஒழித்தவரென்பதையும், அங்ஙனம் ஒழிக்க முயலுங்கால் உட்கருவிகளால் நேரும் பெரிய போரின்கண் வென்று வெற்றிபெற்றவரென்பதையுங் குறிப்பித்தற்கு பிறிதொரு இடத்தைப் பற்றிக்கொண்டே தான் முன் பற்றியிருந்த இடத்தை நெகிழ விடுகின்ற ஒருவகைப் புழுவைப் போல உயிர்கள் தாம் பற்றியிருக்கும் உலகத்தை விட வேண்டுமானால் கடவுளைப் பற்றிக் கொண்டுதான் விட வேண்டுமென்பதை,

''பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''

என்னுந் திருக்குறளானும்,

பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவுக்கே சென்றூதாய் கோத்தும்பீ''

''பற்றாங்கவை அற்றீர் பற்றும் பற்றாங் கதுபற்றி''

என வருஉம் அடிகள் மணிமொழிகளானுமறிக.

இனி, அவ்வுபாயத்தால் உலகப்பற்றை ஒழிக்க முயலுங்கால் நேரும் இன்னல்களை அல்லது போரை நமது அடிகளாகிய வீரரே,

''தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின''

என அருளுகின்றார். இதனை நோக்குழி 1914ஆம் ஆண்டு தொடங்கி, 1918ஆம் ஆண்டுவரை நடந்த ஐரோப்பிய மகா யுத்தமும் இதற்கு இணையாகாதென்னலாம். என்னை? அப்போரின் கண்ணும் சில நூறாயிரக்கணக்கான போர் வீரர்களையும் அவர்களிற் பலர் ஒன்று கூடி நின்று, வரையறுக்கப்பட்ட சில உபாயங்களாற் போர் செய்ததையுங் கேட்டோமேயன்றி, இங்ஙனம் ஆறுகோடிபோர் வீரர்களென்றும், அவர்கள் தனித்தனி நின்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான மாயப்போர் செய்தனரென்றும் கேட்டோமில்லையாகலின். ஆகவே, புறக்கருவிகள் கொண்டு வெளிப் பகையை வெல்லுதனினும் அகக் கருவி கொண்டு உட்பகையை வேறல் அருமை என்பது பெற்றாம். இவ்வுண்மை கடவுள் காட்சியைக் குறிக்கோளாகக்கொண்டு அதற்குரிய நெறியிலொழுகும் பெரியார்க்கு நன்கு புலனாகுவதன்றி ஏனையோரால் அறியப்படுவதொன்றன்று; அந்நெறியின் கண் உறைத்து நின்றொழுகும் வாய்மை வடிவாகிய காந்தியடிகள் தமது' 'சத்தியசோதனை'யின் முடிபுரையில், 'ஆத்மத் தூய்மைநெறி எளிதானதன்று; அது பெரிதுங் கஷ்டமான, செங்குத்தான பாதையாகும், ஒருவன் பூரண பரிசுத்தனாக வேண்டுமானால், மனோ வாக்குக்

காயங்களினால் காமக் குரோதங்களை முற்றும் விலக்கியவனாக வேண்டும். எவ்வளவோ இடைவிடா முயற்சிகள் செய்தும் நான் இன்னும் அத்தகைய மூவகைத் தூய்மையும் பெற்றவனில்லை யென்பதை அறிந்துள்ளேன். ஆகையினாற்றான் இவ்வுலகத்தவரின் புகழ் எனக்கு மகிழ்ச்சி தருவதில்லை. உண்மையில், அஃது எனக்கு அடிக்கடி துயரமே உண்டாக்குகின்றது. "ஆயுத பலத்தினால் வெளியுலகை வெற்றி கொள்வதைவிட நுட்பமான காமக் குரோத உணர்ச்சிகளை வெல்லுதல் கஷ்டமானதாக எனக்குக் காணப்படுகிறது" என்று கூறிய அநுபவ மொழிகளை அன்பர்களுக்கு நினைவூட்டுகின்றேன். இன்னும் இவ்வுண்மையை.

"மோத்தையைக் கண்டகாக்கை போலவல் வினைகள்
மொய்த்துன்
வார்த்தையைப் பேச வொட்டா மயக்கநான்
மயங்குகின்றேன்'"

என அப்பரடிகளும்.

"கண்மூடி யொருகண மிருக்கவென் றால்பாழ்த்த கண்
கன்மங்கள் போராடுதே"

எனத் தாயுமான அடிகளும் கூறுமாற்றானுமறிக.

இத்தொண்டர்கள் வெளிக்கு வேலையற்றவர் போற் காணப்பட்டு அகத்தின்கண் இத்துணைப் பேரலுவலை மேற்கொண்டிருப்பதனாற்றான் திருஞான சம்பந்தப் பெருமான்,

"தொழிலான் மிகுதொண்டர்கள் தோத்திரஞ் சொல்ல"

எனவும்,

"தொழிலான் மிகுதொண்டரவர் தொழுதாடிய முன்றில்"

எனவுங் கூறினாரென்க. இவ்வலுவல்கள் யாவை என்பதை

''உடுப்பது சீல முணவுவிட் டமுத முவப்பது ஞானமா
மடந்தை
கொடுப்பது மருளைக் கொள்வது மறத்தை யிருப்பது
மருந்தவக் குகையுள்
விடுப்பது கோபந் தொடுப்பது சாந்தம் வெல்வதுந்
தம்மைமெய்க் குரவன்
அடித்தல மலரே முடிப்பது பிறப்பை யறுப்பவர்க்
கருந்தொழி லிவையே''

என்னும் மெய்ம்மொழிச் சரிதப் பாவாலறிக.

இவ்வாறு எதிர்த்த அந்த ஆறுகோடி மாயப் படையுடன் நமது அடிகள் புறங்கொடாமற் போர் புரிகின்றனர். இதனைத் திருவாசகத்தின்கண் 'திருப்படையெழுச்சி' என்ற தலைப்பில் அவரருளிய,

''ஞானவா ளேந்து மையர் நாதப் பறையறைமின்
மானமா ஏறும் ஐய மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோநா மாயப்படை வாராமே''

''தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணி யுந்தீர்கள்
திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நா டாள்வோநாம் அல்லற்படை வாராமே''

என்னும் இரண்டு பாடல்களானும், இப்படையெழுச்சி 'பிரபஞ்சப்போர்' எனக் கூறப்படுதலானும் அறிக. வெளிப் போருக்குக் கருவிகள் வேண்டுவதுபோல அகப்போருக்கும் இன்னின்ன கருவிகள் வேண்டுமென முதற்பாட்டிலும், சரியை, கிரியை, யோகம், ஞான மென்பதனாற்றான் அப் பகையை வெல்லலாமென உபாயத்தை இரண்டாம் பாட்டிலும் அடிகள் கூறியருளியதை நுனித்தறிக. இப்போரின்கண் அடிகள் வெற்றிபெற்றதை 'தெய்வமென்பதோர்' எனத் தொடங்கி மேலே காட்டிய தொடர்களுக்குப்பின் வரும்

'தப்பாமே தாம் பிடித்தது சலியா' என்பது முதலிய பல அடிகளால் அறிக.

இனி, வெளிப்போரிற் பல படைகளை வென்ற ஒருவன் எங்ஙனம் வெளிநாட்டம் கொண்ட உலகினரால் 'வீரன்' எனப்படுகின்றானோ அங்ஙனமே அகப்போரில் வெற்றி கொண்டவரை உள்நாட்டமுடைய சமய உலகத்தவர் 'வீரர்' என்பாராகலின், இப்பெரு வெற்றிகொண்ட நமது அடிகள் இராமலிங்க அடிகளால் 'புலிநடையாந் துன்பட்ட வீரர்' எனப்பட்டார். பெரியபுராணத்துட் கூறப்படும் அடியார்களனைவரும் கடவுளை அடைதலைக் குறிக்கோளாகவைத்து உலகியல்புக்கு ஒத்தனவும் ஒவ்வாதனவுமாகிய கொள்கைகளை மேற்கொண்டு ஒழுகுங்கால் அக்கொள்கைகளை அழிக்கப் புறத்திலும் அகத்திலும் எழுந்த பகைகட்கு அஞ்சாது எதிர்த்து நின்று அவற்றால் தம் உயிருக்கு இறுதி நேரின் அதனையுங் கொடுத்துத் தங்கொள்கைகளை ஓம்பி ஆண்டவனடியை அடைந்தார்களாகலின் அவர்களின் குணம், செயல் முதலியவற்றைக் கூறுமிடத்து,

"ஆரங் கண்டிகை யாடையுங் கந்தையே
பார மீசன் பணியல தொன்றிலார்
ஈர வன்பினர் யாதுங் குறைவிலார்
வீர மென்னால் விளம்புந் தகையதோ"

எனவும்,

"வீரத்தா லெல்லார்க்குந் தனித்தனிவே றடியேயென்று
ஆர்வத்தாற் றிருத்தொண்டத் தொகைப்பதிக
மருள்செய்தார்"

எனவும் அருண்மொழித்தேவர் அறைந்து சென்றமையும் அறிக. இன்னும் அவர் மேற்கொண்டொழுகுங் கொள்கையே ஒரு வடிவெடுத்து வந்து 'ஒன்று என்னை விட்டுவிடு, அல்லது உன் உயிரைக் கொடு' என்று கேட்பின் உடனே உயிரைக் கொடுத்துக் கொள்கையைப் போற்றுவார். அவர் உயிர் விடுத்தது புறவுலகத்திற்குத் தோல்வி போலத் தோன்றும். ஆனால், அக உலகத்திற்கு அஃது ஒரு

பெரிய வெற்றியாவதுடன் அவர் அவ்வுலகத்தால் 'மகாவீரர்' எனப்படுவர். இதற்கு இலக்கியமாகவுள்ளவர் 'மெய்ப் பொருணாயனாரென்பார்; ஆதலாற்றான் தம்பிரான் தோழரால் திருத்தொண்டத் தொகையுள் அவர்,

''வெல்லு மாமிக வல்ல மெய்ப்பொருள்''

எனப்பட்டார். தொண்டர்சீர் பரவுவார், இத்தொடருக்கு உரைவிரிப்பார் போல, அம்மெய்ப்பொருளார் 'சிவவேடமே மெய்ப்பொருள்'என்னுங் கொள்கையை மேற்கொண்டொழுகுங்கால், அவ்வேட வடிவாக வந்த முத்திநாதனால் குத்துண்டு கீழேவிழும் அவர் கருத்தாக வைத்து,

''மெய்த்தவ வேடமே மெய்ப்பொரு ளெனத் தொழுது
வென்றார்''

எனக் கூறினாரென்க.

அமைச்சின் இலக்கணங் கூறுமுகத்தால்,

''தம்முயிர்க் கிறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட
போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும்
வீரர்''

எனக் கம்பநாடர் கழறிய கவின்றரு செய்யுளுங் காண்க.

வெளியுலகில் வெற்றி கொண்ட வீரன் ஒருவன் என் செய்வான்? அடிக்கடி தன் வாழ்நாளைப் பற்றி எண்ணுவான்; அங்ஙனம் நினைந்து தன் முகத்திலும் மார்பிலும் படுதலாகிய விழுப்புண் பெறாத (போரில்லாத) நாட்களை யெல்லாம் கணக்கிட்டு ஒதுக்கி அவற்றைக் கொன்னே கழிந்த நாள் என்று கொண்டு வருந்துவான். இதனை,

''விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து''

என்னுந் தேவர் வாக்கால் தேர்க.

இங்ஙனம் உட்பகையை வெற்றி கொண்ட நமது மாபெரு வீரரும் 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே''

என்பர்; பேசும் நாள், ஈண்டு ஆறு கோடி வீரருடன் போர் புரியு நாளெனக் கொள்க. பேசுதல், உபலக்கணத்தால் நினைத்தல், செய்தலையும் தழுவிக்கொள்ளுமென்க; எனவே, இறைவனைச் சிந்தித்தல் முதலியன தொடங்கின் அகத்தின்கண் பெரும்போர் நிகழுதலை முன்னரே காட்டி யமையின், அப்போர் பெறாத நமது வீரர் 'பேசாத நாளெல்லாம்' போரில்லாத நாளெனக் கொண்டு அவற்றை வறிதே கழிந்தன வென்பார் 'பிறவா நாளே' என்றமை யுங் காண்க. 'அந்தோ!' என்றது 'அடிகளின் திருவுள்ளம் என்ன பாடு பட்டிருக்குமோ' எனத் தாம் நினைக்குங்கால் உண்டாகும் ஆற்றாமையின் மிகுதி தோன்றக் கூறியவாறு, 'தூய நெஞ்சம்'' என்றார்; இறைவன் இடையறாது வீற் றிருத்தற்கு இடமாயுள்ளது என்பதை அறிவித்தற்கு. என்னை?

''கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட் டருத்தியோடு
உள்ளம் ஒன்றி உள்குவார் உளத்துளான்''

என ஆளுடைய பிள்ளையார் அருளுதலாலென்க. அன்றி, தூய நெஞ்சு அல்லது மனத்தூய்மைக்குக் காரணம் வாய்மை யாகும். என்னை?

''புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்''

எனத் தமிழ்மறை சாற்றுவதனாலென்க. இனி அவ்வாய்மை என்பது யாது? அஃது எவ்வுயிருக்கும் எத்துணையும் துன்பம் தராத மொழியைப் பேசுதலாகும். என்னை?

''வாய்மை யெனப்படுவ தியாதெனில் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்''

என அப் பொதுமறை புகல்வதனாலென்க. எனவே, உயிர் களிடத்து வைத்த கழிபெருங்கருணையே வாய்மை என் பதூஉம், அவ்வாய்மையே மனத்தூய்மையைத் தருமென் பதும் பெற்றாம். பெறவே அவ்வருளின் காரியமாகிய

தூய உள்ளத்தின்கண்ணே ஆண்டவன் இடையறாது அருள்நடம் புரிந்து கொண்டிருப்பன். இதனை,

'எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந் தம்முயிர்போல்
எண்ணி யுள்ளே''
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாவரவ
ருளந்தான்சுத்த''
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியு மிடமெனநான்
யான்தெரிந்தேன்'

என்னும் இராமலிங்க அடிகளின் இன்மொழியால் அறிக.

எனவே, மேற்காட்டிய 'வன்பட்ட' என்ற பாட்டினால் அவ்விராமலிங்கனார் சொக்கலிங்கக் கடவுளை நோக்கி, கருணைக் கடலே! உலகத்தைப் பற்றி உன்னைப் பற்றாத (நீ எத்துணைத் துன்பமுறினும் அது குறித்து வருந்துவதற்குக் காரணமில்லாத என்றபடி) எனது களங்கமுள்ள (நீ சிறிதுந் தங்கப் பெறாத என்றபடி) நெஞ்சமானது தேவரீர் என் பொருட்டன்றி நெடுங்காலத்திற்கு முன் மாணிக்க வாசகர் பொருட்டுக் கூலியாளாக வந்து மண் சுமந்து பிரம் பால் அடியுண்டதை இன்று கேட்டு என் நெஞ்சம் இடி யுண்டதனால் நின்னையன்றி வேறு பற்றுக் கோடில்லாத அவரது தூய உள்ளம் தம்பொருட்டு வந்து நீ அடியுண்டதை நேரிற் பார்த்த அஞ்ஞான்று எத்துணைத் துன்பம் அடைந் திருக்குமோவென எண்ணுங்கால் அந்தோ என்னால் பொறுக்க முடியவில்லையே! என்று கூறி அதனை நினைந்து நினைந்து கரைந்து கரைந்து உருகினாரென்பதை உன்னி யுன்னி உருகுவோமாக.

இப்பெரியார் இங்ஙனமே நாயன்மார்கள் வரலாற்றின் ஒவ்வொரு பகுதியிலீடுபட்டு அந்த வண்ணமாக நின்று அப் பயனை நுகர்தலை அவரியற்றிய திருவருட்பா வெனும் அன்பு நூலின்கண் பலவிடங்களிற் பரக்கக் காணலாம்.

நமது அடிகளின் வரலாற்றிலுள்ள இப்பகுதியில் ஈடு பட்டு இடருழந்த இவர் வாகீசப் பெருந்தகையாரின் வர

லாற்றுப் பகுதியில் ஒன்றாகிய சிவபெருமான் திருநல்லூரின் கண் அந்த அப்பர் பெருமான் வேண்டுகோளின்படி அவர் திருமுடிமேல் தனது திருவடியை வைத்ததின்கண் ஈடுபட்டு மனங்குளிர்ந்ததைக் காணின் அவர் துன்பம் அறிந்து புழுங்கிய நமது உள்ளமும் குளிருமாகலால் அதனை அறிந்து மேற் செல்வோமாக. அது,

''துடிவைத்த செங்கை யரசேநல் லூரினின் றூமலர்ப்பொன்
அடிவைத்த போதெங்க ளப்பர்தஞ் சென்னி
யதுகுளிர்ந்தெப்
படிவைத்ததோ வின்ப மியாளெனுந் தோறுமிப்
பாவிக்குமால்
குடிவைத்த புன்தலை யொன்றோ மனமுங்
குளிர்கின்றதே''

என்பது.

இனி, ஆண்டவன் அடிகளின் பொருட்டு மண் சுமந்து மாறனால் மாறடி பட்டதை நினைந்து அடியார்களின் உள்ளம் புழுங்குமென்பதையும், அங்ஙனம் புழுங்குவதற்குக் காரணம் அவர்களுடைய அன்பே என்பதையும் குமரகுருபர அடிகள் திருவாரூர் நான்மணிமாலையுட் கூறிய,

''என்பணிந்த தென்கமலை ஈசனார் பூங்கோயில்
முன்பணிந்த தெய்வ முனிவோர்கள்—அன்பென்னாம்
புண்சுமந்தோ நந்தி புடைத்தென்னார் புண்ணியனார்
மண்சுமந்தா ரென்றுருகு வார்!''

என்னுஞ் செய்யுளால் நன்கு அறியலாம்.

எனவே, அடியார்க்கெளியனாகிய ஆண்டவன் தம் பொருட்டுச் செய்த அருளிப்பாடுகளனைத்தையும் உன்னி யுன்னி உருகும் நமது அடிகள் கருத்தில் யாது தோன்றியிருக்கும்? அவ்விறைவனுக்குக் கைமாறாகத் தாம் யாதேனுஞ் செய்யக் கருதுதல் அறிவுடைய மக்களின் இயல்பேயன்றோ? அங்ஙனங் கருதிய அடிகள் தங்கூர்த்த மதியால் எண்ணி

யெண்ணிப் பார்த்து எல்லாம்வல்ல முழு முதற் கடவுளுக்கு ஒன்றுக்கும் பற்றாத அடியேனாற் செய்யக்கிடப்பது யாது? ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்து, அதனைத் தமது மணிவாசகத்திற் பலவிடங்களிலும்,

''மற்றறி யேன் செய்யும் வகை''

என்றும்,

''யானிதற் கிலனோர் கைம்மாறே''

என்றும்,

''உண்டாமோ கைம்மாறுரை''

என்றும் கூறிவிட்டு, தாம் ஆண்டவனுக்கு ஒரு பேரன்பனாக இருக்க வேண்டுமென்னும் முடிவுக்கு வந்தார்.

''அன்பலாற் பொருளு மில்லை ஐயன் யாறனார்க்கே''

என்னும் அப்பரடிகளின் அருளிப்பாடு இங்குக் கருதத்தக்கது.

அங்ஙனம் முடிவு செய்த நமது அடிகள் அந்த அன்புக்கு ஓர் வரையறை செய்தார்; எங்ஙனமெனின், இத்துணை அருள் செய்த அவ்விறைவனை இடையறாமல் நினைந்து நினைந்து உள்ளந்தாளிலிருந்து உச்சியளவும் உள்ளமாக இருந்து உருக வேண்டும்; உடம்பு முழுதுங் கண்ணாக இருந்து இன்ப அருவி பெருக்க வேண்டும் என இக்கருத்தினை அடிகள் ஒரு திருப்பாட்டால் விளக்குதல் காண்க. அப்பாட்டு:-

''வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மேலாகப் பதைத்துருகுமவர்
நிற்க என்னை யாண்டாய்க்(கு)
உள்ளந்தான் நின்றுச்சி யளவுநெஞ்சாய் உருகாதால்
உடம்பு
எல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங் கண்ணி
ணையு மரமாந்தீ வினையி னேற்கே''

என்பது.

அடிகள் தமது அன்பிற்கு இவ்வாறு அளவின்றி ஓர் வரையறை செய்து கொண்டாராகலின் பெரும் பொருள் தேடக்கருதிய ஒருவன் முன்னரே தன்னிடமுள்ள பொருளைப் பொருளெனவே கருதாதது போலத் தமது ஒரு உள்ளம், ஓயாது உருகுவது தோன்றப் பெறாதவராய் 'நெஞ்சம் கல்லாம்' என்றும், இரண்டு கண்களும் இடையறாது நீரொழுக்குதலை அறியாது 'கண்ணிணையு மரமாந்தீவினை யினேற்கே' என்றும் அருளினரென்க.

"நூறாயிரம் பொற்காசுகள் ஈட்டினாற்றான் யான் ஒரு செல்வன்" என்னும் வரையறை செய்துகொண்டு தேடும்ஒருவன் அத்தொகையில் பத்துப்பொற்காசுகள் குறையினும் அவன் தன்னை ஒரு வறியவனென்று சொல்லிக் கொள்வானேயன்றிப் பொருளுடையவனென்று சொல்ல மாட்டான்; என்னை? தான் வரையறுத்துக் கொண்டது அவ்வாறாகலின்: எனினும் அவனை ஏனையோர் ஒரு பெரும் பொருளுடையான்' என்று கூறுவாரே யன்றி 'வறியவன்' எனக் கூறமாட்டாரென்பது கண்கூடு. அது போல, அடிகள் தாம் வரையறுத்தவாறு ஆகவில்லை எனக் கருதித் தம்மை 'அன்பில்லாதவன்' என்று பல விடங்களிலும் கூறினரேனும் ஏனையோர் அவரை ஒரு 'பேரன்பர்' எனக் கொள்ளுதலே ஏற்புடைத்தென்க.

இது தமது வெற்றி ஒரோவழித் தோன்றினும் அது தாம் வரையறுத்தவண்ணம் இல்லாமையின் அதனைத் தாம் அடைந்ததாகக் கருதாதது பெரியாரியல்பில் ஒன்று என மேலே காட்டியதனுள் அடங்கும் என்க.

இனி,

'நானுனக்கோ ரன்பனென்பேன்"

"உலப்பிலா அன்பருளி" என ஒரோவழி வருவன வெல்லாம் "அவர் தமது வெற்றியை மகிழ்ச்சி மேலீட்டால் தம்மை மறந்து ஒரோவிடத்துக் கூறிவிடுவர்" என மேலே காட்டியதனுள் அடக்கிக் கொள்க.

பரஞ்சோதி முனிவர் திருவாசகப் பயிற்சி மிகுதியால் ''அழுதடி அடைந்த அன்பர்'' என மணிவாசகனாரைக் கூறினாரென மேலே காட்டியதற்கு ஏற்ப அத் தொடரைத் திருவாசகக் கருத்துக்கு மாறுபடாமல் அதிலுள்ள ஆதரவுகளைக் கொண்டே வகுத்தும் விரித்தும் கூறினேம். இன்னும் அத் தொடரை ஈற்றடியிற்கொண்ட ''எழுதருமறைகள் தேறா'' எனும் (இது மேலே காட்டப்பட்டது) செய்யுளில் அடிகள் இடையறாது பூசனைபுரிந்து அழுது ஆண்டவன் அடியடைந்தார்''எனக் கூறப்படுவதால் அதற்கு அப்பரஞ்சோதி முனிவர் திருவாசகத்திற் கண்ட ஆதரவுகளையும் காண்போமாக. அவை,

''பாசவே றறுக்கும் பழம்பேரருள் தன்னைப் பற்றுமாறு
அடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து பூங்கழல்
காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி செல்வமே
சிவபெரு மானே
ஈசனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்
தருளுவ தினியே''

''சித்த மேபுகுந்து எம்மை யாட்கொண்டு தீவினைகெடுத்
துய்யலாம்
பத்தி தந்துதன் பொற்க ழற்கணே பன்மலர் கொய்து
சேர்த்தலும்
முத்தி தந்திந்த மூவுலகுக்கும் அப்புறத்து எமை வைத்திடும்
அத்தன் மாமலர்ச் சேவடிக் கணஞ் சென்னி மன்னி
மலருமே''

என்பன.

வாழ்க மணிவாசகரின் மலரடி

முற்றிற்று

# 5. அழுது அடியடைந்த அன்பர் புகழ் மாலை.

1. எழுதரு மறைக டேறா விறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருண் முழ்கி
அழுதடி யடைந்த வன்ப னடியவர்க் கடிமை செய்வாம்.

2. கந்தமொ டுயிர்படுங் கண்பங் கம்மெனச்
சிந்தைகொள் சாக்கியர் தியங்க மூகராய்
முந்தொரு மூகையை மொழிவித் தெந்தைபால்
வந்திடு மடிகளை வணக்கஞ் செய்குவாம்.

3. உரைத்தற் கரிய முதுக் குறைவி னுமைபேச வுரைபுகன்று
நிரைத்தேற் றெதிர்ந்த சாக்கியர்புன் சமயக் குறும்பினிலை யெறிந்து
வரைத்தோள் வழுதிதனை விடுப்ப வையை யழைத்து மணி மன்றிற்
பரத்து டமர்ந்த வாதவூர்ப் பரமன் பாதம் வணங்குவாம்.

4. வழுதிமனு நெறிசெலுத்து மந்திரியாய்ப் புரவிகொள்ள வந்த செம்பொன்
முழுதும்வளர் திருப்பணிசெய் திலகுதிரு வாசகமு மொழிந்து பாரோர்
தொழுதுசிர மேற்கொண்டு துதிப்பநிறை கோவையார்த் துறைகள் யாவும்
பழுதுபடா தெடுத்துரைத்த வாதவூ ரன்பர்பதம் பணிதல் செய்வாம்.

5. எழுதிடும் வேலை பூமேல் இருப்பவன் இயற்றப் போக்கி
எழுதுதல் இல்லா நூல்சொற்று இனி தமர்தரு மாதேவை
எழுதெழு தெனப்பல் பாச்சொற்று இயைதரப் பெயரும் ஈற்றில்
எழுதிடச் செய்த கோமான் இணையடி முடிமேல் வைப்பாம்.

6. சகலரா யிருந்து மேலாஞ் சிவானந்த போகஞ் சாரா
தகலரா வணையான் பூவா னாதியர் நாணுட் கொள்ளச்
சகலரா யிருந்து மேலாஞ் சிவானந்த போகமேசார்ந்
தகலரா தரியா வாதவூரர் தாள் சார்ந்து வாழ்வாம்.

7. பேசுபுகழ் வாதவூர்ப் பிறந்துபெருந் துறைகடலுண்
டாசிலெழி றடித்தயா வஞ்செழுத்தா லதிர்த்தெழுந்து
தேசமலி தரப்பொதுவார் சிவபோக மிகவிளைவான்
வாசகமா மாணிக்க மழைபொழிமா முகில்போற்றி.

8. அத்தனார் பெருந்துறைபுக் கரியவினைக் கடல்கடந்து
புத்தனார் மதங்கடிந்து புனிதமா கியசீவன்
முத்தனார் மாணிக்க வாசகனார் முத்திக்கு
வித்தனார் வாதவூர் வித்தகனார் தாள்போற்றி.

9. பெருந்துறையிற் சிவபெருமான் அருளுதலும்
பெருங்கருணைப் பெற்றி நோக்கி
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத்
துரியநிலை கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்
வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ
ரடிகளடி யிணைகள் போற்றி.

10. தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை
நானூறும் அமுதூற மொழிந்தருளும் நாயகனை
வானூறும் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை இருபோதும் இறைஞ்சுவனே.

# மணிவாசகர்

## வரலாறும் காலமும்

தமிழ் இலக்கியம் பற்றியும் தமிழர்களாகிய நம்மைப் பற்றியும் பரவலாகப் பேசப்படுகின்ற குறை ஒன்றுண்டு. அது என்னை யெனில் தமிழர்களாகிய நமக்கு வரலாற்று அறிவு கிடையாது என்பதேயாம். நம்முடைய மிகச் சிறந்த கவிஞர்கள்கூட என்று தோன்றினர்? எங்கே தோன்றினர்? என்பதுகூட நமக்குச் சரிவரத் தெரியாது. ஒப்புயர்வற்ற குறளை இயற்றிய ஆசிரியனைப் பற்றியோ நெஞ்சை அள்ளும் சிலம்பைப் படைத்த புலவனைப் பற்றியோ உலக காப்பியங்களுடன் ஒப்புமை சொல்லக் கூடிய இராமாயணம் இயற்றிய கம்பநாடனைப் பற்றியோகூட யாதொன்றும் தெரியாது. இவர்கள் இயற்பெயரையும் என்று தோன்றினார்கள் என்பதையுங்கூட நாம் அறியவில்லை. எனவே, வரலாற்று அறிவு குறைந்தவர்கள் என்று பிறர் குறை கூறும் பொழுது நாம் அதனை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை. இப்பெருமக்களின் நூல்கள் இன்றுள்ளன என்றாலும் இவற்றில் எத்துணைப் பாட பேதங்கள்! எத்துணை இடைச் செருகல்கள்! ஷேக்ஸ்பியருக்குள்ளது போன்ற 'வேரியோரம் பதிப்புகள்' கம்பனைப் பொறுத்தவரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் உதவியால் நம்மிடம் உண்டெனினும் இப்பாட பேதங்களுள் எது புலவனுடையது? அவனே முதலில் ஒரு சொல்லைப் போட்டுப் பாடிவிட்டுப் பின்னர் மற்றொரு சொல்லைப் பயன்படுத்தினானா என்று கேட்டால் விழிப்பது தவிர வேறு வழி இல்லை. இவை எல்லாம் ஏன் நிகழ்ந்தன? சரியான முறையில் புலவர்கள் வரலாற்றையும், அவர்கள் வாழ்ந்த காலத்தையும் குறித்து வையாமையினால்தான் இத்தகைய பிழைகள் நிகழ்ந்தன என்பது நியாயமானதே. அப்படியானால் ஏன் நம்மவர்கள் இந்த இன்றியமையாத தகவல்களைச் சேகரித்து வையாமற் போயினர்? தமிழ் நாட்டு வரலாற்றின் கதியே இவ்வாறு என்றால் தமிழ் இலக்கிய வரலாற்றின் கதியும் இதுதான்.

தமிழ் இலக்கிய வரலாறும் அவ்விலக்கியங்களை ஆக்கித் தந்த புலவர்கள் வரலாறும், அவர்கள் வாழ்ந்த காலம் பற்றிய குறிப்பும் இன்று நமக்குக் கிடைக்கவில்லையே ஏன்? மாபெரும் நூல்களை ஆக்கித் தந்த நம் புலவர்களை அடியோடு மறந்துவிடும் நன்றி கெட்டவர்களா தமிழர்கள்? ஒருவேளை இவைபற்றிக் கவலைப்படாமல் இருந்துவிட்டனர் என்று கூறிவிடலாமா என்றால் அதுவும் இயலாது. ஏன் எனில் இந்நூல்களை எல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளாகக் காத்து இன்று நாம் கற்கும் வண்ணம் வழங்கியவர்கள் இந்நூற்களின் ஆசிரியர்களைப்பற்றி மட்டும் கவலைப் படாதவர்கள் என்றோ, ஆசிரியர்களை மறந்த நன்றி கெட்டவர்கள் என்றோ கூறுவதும் பொருத்தமாக இல்லை. அப்படியானால் இதற்கு ஏதேனும் ஒரு காரணம் இருந்திருத்தல் வேண்டும்.

எதனை வரலாறு என்ற பெயரால் இன்று பேசுகிறோம்? எந்த வரலாற்று நூலை எடுத்துப் பார்த்தாலும் மன்னர்களின் வாழ்க்கை அவர்கள் பட்டத்திற்கு வந்த தேதி, அவர்கள் நடத்திய போர்களின் வருணனை, காலக் குறிப்புகள், என்பவைதாம் வரலாறு என்ற பகுதியில் இடம் பெறுகின்றன ஆனால், இதுவா உண்மையான நாட்டு வரலாறு? தனி மனிதர்களாகிய அரசர்கள் வாழ்க்கைபற்றி அறிந்து நமக்கு ஆகப்போவதென்ன? ஒரு நாட்டின் வரலாறு என்றால் அந்நாட்டில் வாழும் மக்கள் என்ன நினைந்தனர், என்ன குறிக்கோள் கொண்டிருந்தனர், என்ன உண்டனர், யாருடன் எவ்வாறு பழகினர் என்பவற்றைத்தாமே அறிவித்தல் வேண்டும். இக்கருத்தைத்தான் 'தாமஸ் கார்லைல்' என்ற பேரறிஞர், 'பாஸ்வல்' எழுதிய 'ஜான்சன்' என்ற நூலின் ஒரு பதிப்பிற்குத் தாம் எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்நாட்டு வரலாற்று அறிஞரான பி. டி. சீனிவாச அய்யங்கார் தாம் எழுதிய "பண்டைத் தமிழர் வரலாறு" என்ற நூலின் முகவுரையில் "கால முறையை அறிந்து அதன்படி நிகழ்ச்சிகளைக் கூறுவது தான் வரலாற்றின் கண்போன்ற சிறந்த பகுதி என்று நினைப்பதானால் தென்னாட்டு வரலாறு என்றும் குரு

டாகவே இருக்க நேரிடும். ஆனால், வரலாறு என்ற சொல்லுக்கு மக்களின் நாகரிகம் பண்பாடு என்பவற்றை அறிதல் தான் பொருள் என்று கொண்டால் தென்னாட்டு வரலாற்றை அறியச் சங்க நூல்கள் உண்டு[1]'' என்று கூறினார்.

அவ்வாறானால் தமிழர்கள் தம்முடைய இனத்தில் தோன்றிய பெரியோர்களைப் பற்றிய குறிப்புக்களை ஏன் திரட்டி வைக்கவில்லை? அவர்கள் நூல்களை மட்டும் பாதுகாத்துக்கொண்டு அவர்கள் வாழ்க்கை வரலாற்றை ஏன் காற்றில் விட்டனர்? ஆழ்ந்து சிந்தித்தால் இதில் ஓர் உண்மை அடங்கி இருப்பதைக் காண்டல் கூடும். ஒப்பற்ற கவிஞனேயாயினும் அவன் இன்ன சமயத்தைச் சேர்ந்தவன், இன்ன கொள்கை உடையவன், இன்ன காலத்தில் வாழ்ந்தவன் என்ற விவரங்கள் அறியப் பெற்றவுடன் அதனால் விருப்பு வெறுப்புக் கொள்பவர் நிறைந்தது இந்தச் சமுதாயம். திருவள்ளுவன் என்ற தெய்வப் புலவன் ஆக்கித் தந்த உலகம் போற்றும் திருக்குறளை இன்று வேண்டா என்பார் யார்? ஆனால், அவன் சைவன் என்றோ, வைணவன் என்றோ,சமணன் என்றோ அறியப்பட்டிருப்பின் இத்தனை நூற்றாண்டுகள் அதனைப் பாதுகாத்து வைத்திருப்பார்களா என்பது ஐயத்திற்கு இடமானதுதான். கம்பனுடைய நூல் வைணவ சமயத்தைச் சார்ந்தது என்பதற்காக அதனைத் தொடாத சைவப் பெருமக்களும், திருவாசகம் சிவபெருமானைப் பற்றிப் பாடுவதால் அதனைத் தொடாமலும், அப்பெயரை உச்சரிக்காமலும் இருக்கின்ற வைணவப் புலவர்களும் இற்றை நாளிலும் இருக்கின்றனரே! அப்படி இருக்க பன்னூறு ஆண்டுகளின் முன்னர் இந்த விவரம் அறியப்படுமானால் காழ்ப்புக் கொண்ட மக்கள் திருக்குறளையல்லவா படியாமல் ஒதுக்கி விடுவர்! மேலும்

---

1. "If Chronology is the eye of History then South Indian History should always remain blind. If by history you mean the the culture and civilization of the people then South Indian History abounds in material"

தன் சமயம் யாது என்பதைக் குறிப்பாலும் காட்டாமல் உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொது மறையை ஆக்கித் தந்த ஒரு பெருமகனைச் சமயம், சாதி, காலம் என்ற கூட்டுக்குள் அடைப்பது எத்துணைத் தவறானது?

காலத்தையும், தேசத்தையும், நடைமுறையையும், கடந்து முழுமுதல் போல் நிற்கும் ஒரு நூலை ஆக்கித் தந்தவன் யாவர்க்கும் பொதுவானவன் அல்லனோ? அவன் ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட சமயத்தைப் பின் பற்றி வாழும் பெற்றோர்களின் பிள்ளையாகப் பிறந்து விட்ட ஒரே காரணத்திற்காக அவனை இன்ன சாதி, சமயத்தைச் சேர்ந்தவன் என்று முத்திரை இட்டுவிட முடியுமா? அவ்வாறு இடுவதால் சாதாரண மக்கள் அவனு டைய வாழ்க்கை வரலாறு காரணமாக அவனுடைய நூலை யுமன்றோ படியாமல் ஒதுக்கிவிடுவர்! இவற்றை யெல்லாம் மனத்துட் கொண்ட நம்முன்னோர் ஓர் அற்புதமான செயலைச் செய்தனர். வள்ளுவன் என்ற தனிமனிதன் வேறு; அவன் ஆக்கித் தந்த நூல் வேறு. அந்த நூலின் உள்ளே, வள்ளுவனுடைய உயிர் நாடியாகிய கொள்கை, கருத்து, குறிக்கோள் ஆகிய அனைத்தும் அடங்கியுள்ளன. அப்படி இருக்க அவனுடைய உடம்புபற்றிய ஆராய்ச்சி நமக்கு எதற்கு? இவ்வாறு கருதியே நம் முன்னோர்கள் நூலை மட்டும் வைத்துக் கொண்டு நூலாசிரியனின் வாழ்க்கைக் குறிப்புக்களை மறையுமாறு விட்டனர் என்று நினைக்க வேண்டியுளது.

மேலும், மிகச் சிறந்த நூலை ஆக்கித் தந்தவர்களைப் பற்றி அறிய நேரிடுகையில் நூலைவிட்டு அவர்களைப் போற்றும் மரபும் மக்களிடையே தோன்றிவிட இடமுண்டு மனிதன் குறைபாடு உடையவன். எல்லா மனிதர்களும் தனி ஒருவனுடைய குற்றம் குணம் இவற்றை ஆராய்ந்து கண்டு தான் ஒரு முடிவுக்கு வருகின்றனர் என்று கூற முடியாது. தனிமனித வழிபாடு (Personality cult) மனித இனத்தில் எளிதாகப் படியக்கூடிய ஒரு பழக்கம். சில காலத்துக்கு

முன்னர் வாழ்ந்த இரஷ்யநாட்டுத் தலைவர் ஸ்டாலினை யும், இப்பொழுது வாழும் சீனத்தலைவர் மாசேதுங்கையும் பார்த்தால் இவ்வுண்மை நன்கு தெரியும். மாசேதுங்கின் உபதேசங்களைப் பயிர்கட்கு ஒலிபெருக்கி மூலம் கூறினால் அவை செழித்து வளர்கின்றன என்று அவர்கள் நம்பும் அளவிற்குத் தனிமனித வழிபாடு இட்டுச் செல்கிறது. இது எத்துணைத் தீமை பயக்கும் என்பதை ஸ்டாலின் வாழ்ந்த காலத்தும் அவர் மறைந்த காலத்தும் ஏற்பட்ட நடவடிக்கை களைப் பார்ப்பதன்மூலம் அறிந்து கொள்ளலாம். இவற்றை அல்லாமல் மற்றோர் உண்மையையும் அறிதல் வேண்டும். 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்' (423) என்ற குறளுக்கு உரை வகுத்த பரிமேலழகர் 'குணங்கள் மூன்றும் மாறி மாறி வருதல் யாவர்க்கும் உண்மையின், உயர்ந்த பொருள் இழிந்தார் வாயினும், இழிந்த பொருள் உயர்ந் தார் வாயினும், உறுதிப் பொருள் பகைவர் வாயினும், கெடு பொருள் நட்டார் வாயினும் ஒரோவழிக் கேட்கப்படுத லால் எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் என்றார்' என்று எழுதிச் செல்கிறார். இந்த அடிப்படையில் கண்டால் சிறந்த நூலை ஆக்கித் தந்த ஒருவன் தனிப்பட்ட வாழ்க்கை யில் மட்டமானவன் என்று தெரிந்தால் அவன் நூலைக் கற்பார் வெறுப்படைவரன்றோ?

மார்க்கஸ் அரேலியஸ் என்ற உரோமப் புவிச் சக்கர வர்த்தியின் தனிப்பட்ட வாழ்க்கை மிக மட்டமானது; அவ ருடைய 'சிந்தனைகள்' என்ற நூல் மிக உயர்ந்தது. ஆனால் அவரைப் பற்றி அறிந்த பிறகு அவருடைய நூலை யாரும் விரும்பிப் படிக்க முன்வரார் அன்றோ?

இத்தகைய இடையூறுகளிலிருந்து மக்கள் காக்கப்பட வேண்டுமாயின் ஒரே வழி, நூலை மட்டும் போற்றிக் கொண்டு நூலாசிரியனைப்பற்றி அதிகம் கவலைப்படா திருப்பதேயாகும். பருவுடலோடு, சமுதாயச் சட்டதிட்டங் கட்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த நூலாசிரியன் ஒருவன். ஆனால், அதே நூலாசிரியன் அனைத்துக் கட்டுக்களையும்

தகர்த்துவிட்டுத் தன் கற்பனைக்கு அல்லது கருத்துக்கு வடிவு தருகின்றான் எனில் அதுவே அவன் இயற்றிய நூலாகும். எனவே கால தேச வர்த்தமானங் கடந்த அவனுடைய நூலை மட்டும் எடுத்துக் கொண்டு, கால, தேச, வர்த்தமானத்துக்குக் கட்டுப்பட்ட அவனுடைய வாழ்க்கையைப் பற்றி அதிகம் கவலைப்படாமல் விட்டுவிட்டனர். நம்முடைய முன்னோர் என்று கூறுவதில் தவறில்லை. துறவி இயற்றிய நூலை இல்லறத்தார் ஏற்க மறுக்கலாம்; ஓர் ஊர்க்காரன் என்றால் பிற ஊர்க்காரர்கள் அதனை ஏற்க மறுக்கலாம். இவற்றை எல்லாம் கடந்தவன் என்று ஒவ்வொருவரிடமும் கூறிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் அவனுடைய வாழ்க்கை வரலாற்றை மறைத்துவிடுவதன் மூலம் பிற்காலத்தார் ஒவ்வொருவரும் தத்தம் ஊரவன் என்றும், தத்தம் கொள்கையினன் என்றும், தத்தம் சமயத்தவன் என்றுங் கூறிக்கொண்டு அந்த ஆசிரியனைத் தம்மவனாக ஆக்கிக் கொள்ளப் பாடுபடுகின்றனர். அவன் வாழ்க்கை வரலாறுதெரிந்திருந்தால் பலரும் அவனை ஒதுக்க நேரிடும். ஆனால், இப்பொழுதோ எனில் அனைவரும் அவனைத் தம்முடையவனாகவே ஆக்க முந்துகின்றனர். எனவே, தமிழர்கள் வரலாற்று அறிவு படைத்தவர்களாயினும் எதிர் காலத்தை நெடிது நோக்கும் தம் கூர்த்த அறிவு காரணமாகவே இவ்வாறு நூலாசிரியனைப் பற்றிய குறிப்புக்கள் சேகரிப்பதை விட்டுவிட்டனர் என்று கூறலாம்.

உதாரணமாக இளங்கோவடிகளை எடுத்துக்கொள்வோம். அவர் குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த சமணர் என்றும், சைவ சமயத்தைப் பின்பற்றியவர் என்றும் இருவேறு கருத்துக்களைக் கூற இடமுண்டு. ஆனால், அவருடைய நூலை மட்டும் எடுத்துக் கொண்டால் அவருடைய சமயம் இதுதான் என்று அறுதியிட்டுக் கூறல் முடியாதன்றோ? 'நுதல்விழி நாட்டத்து இறையோன்கோயில் (சிலம்பு 14-7) என்றும் 'தெண்ணீர்க் கரந்த செஞ்சடைக் கடவுள் வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்' (சிலம்பு 26-64, 65) என்றும் பாடியவர் ஒரு சைனர் என்றால்

யார்தான் அதனை ஏற்கமுடியும் என்பார்க்கும் விடை கூறுவது போலத் தம் சமயம் எது என்பதை அறிவுறுத்துதற்காகவே கவுந்தியடிகள் என்ற பாத்திரத்தைப் படைத்தார். அவருடைய சமயச் சார்பை விளக்கவும்கூட ஒரு பாத்திரத்தைப் படைத்து அப்பாத்திரத்தின் கூற்றாகவே ஜைன சமயக் கருத்துக்களைப் பரவச் செய்யும் பண்புடையாளர் இளங்கோ. எனவேதான் அவரைத் தத்தம் சமயத்தைச் சேர்ந்தவர் என்று ஒவ்வொருவரும் வாதிட முன் வருகின்றனர். அவர் சமயம் எது என்பது நன்கு வெளிப்பட்டிருப்பின் சமயக் காழ்ப்பு மிகுந்திருந்த இடைக்காலத்தில் சிலப்பதிகாரம் கற்கப்படாமல் ஒதுக்கப் பெற்றிருக்கவும் கூடுமன்றோ! இவற்றையெல்லாம் மனத்துட் கொண்ட நம்முன்னோர் சிறந்த நூல்களை மட்டும் போற்றி எடுத்துக்கொண்டு அவற்றை இயற்றிவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் மறந்துவிட முயன்றுள்ளனர். ஒரு நூல் காலத்தை வெல்லும் தகுதியும் உள்ளீடும் பெற்றிருக்குமானால் அந்நூல் தானாகவே வாழும். ஆசிரியனுடைய பெருமையை வைத்து வாழவேண்டிய நிலையில் ஒரு நூல் இருக்குமானால் அந்நூல் இருப்பதைவிட அழிவதே மேலாகும்.

இந்த அடிப்படையை மனத்துட்கொண்டு பார்த்தால் தான் உலகம் போற்றும் திருவாசகம் போன்ற நூலை இயற்றிய மணிவாசகப் பெருமானுடைய] வரலாறுகூட அறுதியிட்டுக் கூறக் கூடிய முறையில் ஏன் பேசப்படவில்லை என்பதை அறிய முடியும். அப்பெருமானுடைய வரலாறு மூன்று பெருமக்களால் பாடப் பெற்றுள்ளது. எனினும், அம்மூவரும் அவருடைய பெயர், ஊர் தவிரப் பல விஷயங்களில் தம்முள் மாறுபட்டுப் பேசுகின்றனர். உண்மையிலேயே தமக்கு முன்னர் வாழ்ந்த பெரியார் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றைத்தானே பாடுகிறோம்; எனவே அது வரலாற்றுண்மை நிறைந்ததாக இருத்தல் வேண்டும் என்றுகூடக் கருதாமல் தத்தம் காலத்தில் வழங்குகிற கதைகளையெல்லாம் சேர்த்துப் பாடிவிடுகின்றவழக்கம்

இந்நாட்டிற்குமட்டு மல்லாமல் எல்லா நாட்டிற்கும் உண்டு. தங்கள் காலத்தில் எவற்றைச் சிறந்தவை என்று கருதினார்களோ அவற்றை எல்லாம் தாம் பாடும் வரலாறுகளில் வைத்துப் பாடிவிடும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. தமக்கு முன்னர் அதே வரலாற்றைப் பாடியவர்கள் கூறியவற்றைக் கூட மாற்றியும், திரித்தும் பாடும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. இதில் தவறான நோக்கம் எதுவும் இல்லை; அவர்களுடைய ஆர்வம் ஒன்றுமட்டுமே இவ்வாறு பாடக் காரணமாயிற்று இந்த அடிப்படையை மறவாமல், நாம், மணிவாசகர் வரலாற்றைப் பாடிய மூவர் கூற்றுக்களையும் ஆய்தல் வேண்டும்.

மனிதன் சந்திரமண்டலத்தில் சென்று இறங்குகின்ற இற்றை நாளில் பழைய வரலாறுகள், கருத்துக்கள், நூல்கள் ஆகியவற்றுள் எவற்றையாவது படிப்பதானால், அவை இக் காலச் சூழ்நிலைக்கு எவ்வாறு பயன்படுகின்றன என்ற அடிப்படையிலேயே; காண்டல் வேண்டும். திருவாசகம் இன்றைய மனிதனுடைய வாழ்வுக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது என்பதை அறிவதே நாம் இன்று திருவாசகத்தைப் பயன்படுத்தத் தூண்டு கோலாகவும் அமைகிறது. திருவாசகம் பக்திநூல் என்பது உண்மைதான். ஆனால், அதே நேரத்தில் இவ்வுலகில் இன்று வாழும் மனிதன் இத் துயர் நிறைந்த உலகில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதையும் கற்றுத்தருகிறது. அது ஏதோ குருட்டுத்தனமாகப் பாராயணம் செய்ய வேண்டிய நூல் என்று மட்டும் கருதிப் பொருளைக்கூட அறிய முற்படாமல் பாட்டை மட்டும் முணுமுணுப்பதால் பயன் ஒன்றும் ஏற்பட்டுவிடாது இக் காலத்திற்கும், ஏன், எக்காலத்திற்கும் பயன்படக்கூடிய நூல் திருவாசகம். இந்நாட்டிற்கு மட்டுமல்லாமல் எல்லா நாட்டிற்கும் பயன்படக்கூடிய நூல் திருவாசகம். ஆம்! அணுயுகம் என்று கூறப்பெறுகிற இக்காலத்துக்கு வேறு எந்த நூல் பயன்பட்டாலும் படாவிட்டாலும் திருவாசகம் மிகமிக இன்றியமையாது, பயன்படக்கூடிய ஒன்றாகும்

என்பதை மனத்துட் கொள்ள வேண்டும். எனவே திருவாசகமும், அதனை இயற்றிய மணிவாசகர் வரலாறும் திருநீறு இட்டுக்கொண்டு, நடராசரைத் தரிசனம் செய்கின்ற சைவ மெய்யன்பர்கட்கு மட்டும் உரியது என்று இளஞ் சமுதாயம் தயைகூர்ந்து நினைத்துவிட வேண்டா. வருங்காலத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து இந்நாட்டை உயர்வடையச் செய்ய வேண்டிய இளஞ்சமுதாயம் வீடுபேற்றைப் பற்றி இப்பொழுது கவலைப்படத் தேவை இல்லை. அப்படிப் பட்டவர்கட்கும் கூட இத்திருவாசகம் தேவைதான்!

இந்த விஞ்ஞான யுகம் எவ்வளவு முன்னேறிச் சென்றாலும் மனிதன் சில அடிப்படை உண்மைகளை விட்டுவிட முடியவில்லை. ஆதிமனிதராகிய ஆதாம் ஏவாளுக்கிருந்தது போலவே இன்றைய விஞ்ஞான யுக மனிதனுக்கும் பசி, தாகம், பால் உணர்வு, முதலியவை இருக்கின்றன. எனவே, பழமையிலிருந்து மனிதன் என்றைக்கும் தன்னை முற்றிலும் பிரித்துக் கொள்ளமுடியாது என்பது உறுதி. இதனிடையில் திருவாசகம் எத்துணைதூரம் முன்னோக்கிச் செல்பவர்கட்கும் இடந்தரக் கூடிய ஒன்று என்பதை மட்டும் அறிதல் வேண்டும். இந்த அணுயுகம் கண்ட ஒப்புநோக்குக் கொள்கை (Relativity Theory) முதல், அணுக்களின் சிற்றெல்லைவரைத் திருவாசகக்காரர் அறிந்திருந்தார் என்று கூறினால் அது மிகைபடக் கூறல் போலத் தோன்றலாம். இவ்வாறு கூறுவதால் மணிவாசகர் ஐன்ஸ்டினின் முன்னோடி என்று கூற வரவில்லை. இத்துணை அறிவுப் பெருக்கமுடைய மணிவாசகர் கண்டவழி அறிவின் துணையை நாடி முன்னேறுகின்ற இந்த யுகத்திற்கும் பொருத்தமானதாகவே இருக்கும் என்பதுதான் தெளியப் பட வேண்டிய ஒன்று.

இத்தகைய பெரியோர்கள் ஆன்மிகத் துறையில் முன்னேறிச் சென்றதால், அறிவுத் துறையில் பயிற்சி இல்லாதவர்களோ என்று நினைத்துவிட வேண்டா. அறிவுத் துறையில் நெடுந்தூரம் முன்னேறிச் சென்று மீட்டும்

இவ்வுலகைத் திரும்பிப் பார்த்து உலகின் அல்லல்களைப் போக்க அறிவுத் துறை முற்றிலும் துணையாக நிற்கவில்லை என்பதைக் கண்டு, இறுதியில் இந்த அல்லலிலிருந்து விடுபட வேண்டுமாயின் ஆன்மிகத் துறையே சிறந்த வழி என்று கண்டு 'திருவாசகம்' பாடினார் மணிவாசகர். எனவே, இக்காலத்துக்கு ஏற்றவை எவை என்று ஆய்ந்தால் திருவாசகமும் மிக இன்றியமையாத சாதனங்களுள் ஒன்று என்று கூறலாம்.

மணிவாசகர் திருவாதவூரில் பிறந்தவர். இவருடைய வரலாறு, பெரும்பற்றப் புலியூர் நம்பி திருவிளையாடலிலும், பரஞ்சோதியின் திருவிளையாடலிலும், திருவாதவூர்ப் புராணத்திலும் பேசப்படுகிறது. அக்கால முறைப்படி, பிறந்த ஊரின் பெயரையே பெற்றுத் திருவாதவூரர் என்று அழைக்கப் பெற்றார். திருவாதவூரர் திடீரென்று மணிவாசகராக மாறிவிடவில்லை. அதன் மறுதலையாகக் கல்விக் கடலைக் கரைகண்டு நின்றார். 'கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும்' (போ. அகவ. 38) என்பது அவருடைய வாக்குத்தான். இது ஏதோ உபசார வழக்கில் கூறப்பெற்றதன்று. ஒருதுறையில் அல்லாமல் பல்வேறு துறைகளிலும் புகுந்து புறப்பட்ட அப்பெருமான் பிற்காலத்தில் தம்முடைய வாழ்க்கையை நினைந்து பார்த்துப் பாடியதாகும். 'கல்வி என்னும் பல்கடல்' என்ற சொற்றொடர்.

இத்தகைய அறிவுத்திறனும் கல்விப் பெருக்கமும் உடைய ஒருவரைத் திருவாதவூரை அடுத்திருந்த மதுரையில் ஆட்சி புரிந்த பாண்டியன் அழைத்து அமைச்சராக ஏற்றுக் கொண்டான். பேர் அறிவாளிகளை, அவர்களுடைய வயதைப் பற்றிக் கவலைப்படாமல் அமைச்சராக ஆக்கிக் கொள்ளும் மரபு உலகிடை உண்டு என்பதற்கு இங்கிலாந்து மன்னனாகிய எட்டாவது ஹென்றி தாமஸ் உல்ஸியை அமைச்சனாக ஆக்கிக் கொண்டதும், இளைய வில்லியம் பிட் இங்கிலாந்தின் முதல் அமைச்சனாக இருந்ததும் சான்றுகளாகும். திருவாதவூரர் வரலாறு பாடிய மூவரும், எந்த

மன்னன் இவரை அமைச்சராக அமைத்துக் கொண்டான் என்றுகூடக் கூறவில்லை.பரஞ்சோதியார் மட்டும் அரிமர்த்தன பாண்டியன் என்று கூறுகிறார். எனினும், அவன் எந்த அரிமர்த்தன பாண்டியன் என்று தெளிய முடியவில்லை.

தக்க அறிவும், கல்வியும் உடைய ஒருவர் திருவாதவூர் போன்ற ஒரு கிராமத்தில் இருப்பினும் அவரைத் தேடிச் சென்று அழைத்து வந்து பாண்டியன் அமைச்சராக ஆக்கிக் கொண்டான் எனில் 'சூழ்வார் கண்ணாக ஒழுகலான் மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்' (குறள் 455) என்ற குறள் கூறும் முறையில் அமைச்சர்களின் பெரும் பொறுப்பை அறிந்தவன் மன்னவன் என்பதும், அதனை அறிந்த காரணத்தால் தேடிச் சென்று திருவாதவூரரை அழைத்து வந்தான் என்பதும் பெறப்படுகிறது.

அரிமர்த்தன பாண்டியன் திருவாதவூரரைத் தானே அவருடைய அறிவுத் திறம் காரணமாகத் தேடிச் சென்று அழைத்து வந்து அமைச்சராக ஆக்கினாலும் அவர் தவறு இழைத்துவிட்டார் என்று அவன் கருதிய பொழுது இத்துணைப் பெரியவராயிற்றே என்று கவலைப்படவில்லை; ஒரு சிறிதும் கண்ணோடாமல் தண்டனை வழங்கிவிட்டான். இதுவும் தமிழ்ப் பண்பாடேயாகும்.

பாண்டியனிடம் அமைச்சராகத் திருவாதவூரர் பணியேற்ற சில ஆண்டுகள் கழித்துப் பாண்டியன் குதிரைகள் வாங்க வேண்டும் என்று முடியு செய்தான். பழந்தமிழ் வரலாற்றில் அரசர்கள் குதிரைகள் வாங்கும் இச்செயல் வேடிக்கையான செயலாகும் என்று பிறநாட்டு அறிஞர்கள் கூறிச் சென்றுள்ளனர். அரபுநாடு போன்ற பகுதிகளிலிருந்து இந்நாட்டிற்குக் குதிரைகளைக் கப்பல்மூலம் கொணர்ந்து வாணிபம் செய்யும் பழக்கம் உண்டு என்பதைப் பட்டினப்பாலை கூறும் 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்' (பட்டினப்-185) என்ற அடியால் அறிய முடிகிறது' ஆனால், வாங்கிய போர்ப் புரவிகளைப் பாதுகாக்கும் முறை

தெரியாமல் அவை விரைவில் இறந்துவிடுவதும் மறுபடியும் குதிரைகள் வாங்குவதும் இங்குப் பழக்கமாக இருந்து வந்துள்ளது. குதிரை வாங்க வேண்டும் என்று நினைத்தவுடன் 'கல்வி என்னும் பல்கடல்' கரைகண்டவர் ஆகலின் திருவாதவூரரை அழைத்து அவரிடம் பொன்னைக் கட்டிக் கொடுத்தான்.

திருவாதவூரர் குதிரை வாங்கச் செல்லும் வழியில் உள்ள திருப்பெருந்துறையினுள் நுழைந்தவுடன் விட்ட குறை தொட்டகுறை காரணமாக ஒரு நிகழ்ச்சி நடந்தது. முற்பிறவிகளில் எங்கு விட்டோமோ அங்கிருந்து இப் பிறவியில் தொடர்கிறோம் என்ற நம்பிக்கை பிற நாடுகளிலும் இருக்கக் காண்கிறோம். கணித மேதை; இராமானுஜம், செவிடராகிய இசை மேதை பீத்ஹோவன், இன்று நம்மிடையே வாழும் வயலின் மேதை யாதி மெனுஹின் போன்றவர்கள் மிக இளம் பருவத்திலேயே தங்கள் துறைகளில் ஈடு இணையற்று விளங்கினர். தருக்க ரீதியிலும் வேறு வழியிலும் இத்தகைய கருவில் திருவுடையவர்களின் வளர்ச்சிக்குக் காரணம் கூற முடிவதில்லை. எனவேதான், இது ஏதோ ஒரு பிறவியில் விடப்பட்டு இப்பொழுது தொடர்ந்து வருகிறது என்று கூறுகிறோம்.

ஒவ்வொருவர் வாழ்விலும் சில சந்தர்ப்பங்களில், ஒவ்வொரு நிகழ்ச்சி, புதிய ஒரு வழி வகுத்துத் தருகிறது. திண்ணனாராகிய கண்ணப்பர் வேட்டையாடிச் செல்கையில் ஒரு மலை எதிர்ப்படுகிறது. அப்பொழுதுதான் அம்மலையைக் கண்டாராகலின் உடனிருந்த நாணன் என்ற ஏவலாளனிடம் இது யாது என்று வினவுகிறார். அவன் அது காளத்தி மலை என்றும், அங்குள்ள கடவுளுக்குக் 'குடுமித்தேவர்' என்ற பெயர் உண்டு என்றும் கூறுகிறான். உடனே திண்ணனார்

> **"ஆவது என்? இதனைக் கண்டு இங்கு அணைதொறும்**
> **என்மேல் பாரம்**
>
> **போவதொன்று உளது போலும்"** (கண். புரா. 97)

என்று பேசுவதாகச் சேக்கிழார் பாடுகிறார் அன்றோ. அதுதான் விட்டகுறை தொட்டகுறை என்று கூறப் பெறு கிறது. திருஞான சம்பந்தப் பிள்ளையாரைத் தந்தையார் குளத்தங் கரையில் நிற்க வைத்துவிட்டுத் தண்ணீரில் மூழ்கு கிறார். குழந்தை அழுகிறது. அன்றுவரை அவர் வீட்டில் அழுதிருக்கலாம். ஆனால், அந்த அழுகைக்கும் இன்று அழும் அழுகைக்கும் வேறுபாடு உண்டு என்று கூறவந்த சேக்கிழார் 'முறைபுரிந்த முன் உணர்வு மூள அழத் தொடங் கினார்' (ஞா. பு. 61) என்று பாடுமுகமாக ஞானசம்பந்தர் விட்டகுறை காரணமாக அழுதார் என்று கூறுகிறார்.

மணிவாசகர் திருப்பெருந்துறையினுள் நுழைந்தவுடன் ஒரு முழுமாற்றம் அடைகிறார். அங்கு மரத்தடியில் அமர்ந் திருந்த துறவியைக் கண்டார். யாரோ ஒரு துறவியைக் கண்ட மாத்திரத்தில் அவர் காலடியில் வீழ்ந்துவிட்டார் என்று நினைந்துவிட வேண்டா. அமைச்சராயிருந்து பல்வேறு வகையான மனிதர்களையும் கண்டு தம் கூர்த்த மதியாலும் கல்வியாலும் அவர்களை எடைபோட்டு அறி கின்ற பழக்கமுடையவர் மணிவாசகர் என்பதை மறந்து விடக் கூடாது. எனவே, குருந்த மரத்தடியில் அமர்ந்திருந்த துறவியார் சாதாரண மனிதரோ துறவியோ அல்லர் என்பதை அடிகளார் உடனே கண்டுகொண்டார்.

காணற்கரிய ஒரு பெரியார் என்பதை அறிந்துகொள் வது வேறு; அத்தகையவரிடம் ஈடுபடுவது வேறு. அதிலும் ஒரு பேரரசின் தலைமை அமைச்சர், குதிரை வாங்கவேண் டும் என்ற குறிக்கோளுடன் பணத்துடனும், ஏவலருடனும் வருபவர் தம் குறிக்கோளை மறக்கின்ற அளவுக்குத் துறவி யிடம் ஈடுபட்டுவிட்டார். இந்த ஈடுபாடு அவரையும் மீறி நடைபெற்றது என்று அறிகிறோம். அறிவின் துணை கொண்டு இளவயதில் அமைச்சராய் அமர்ந்த ஒருவர் ஒரு பெரிய செயலைச் செய்யப் புறப்பட்டுச் செல்லும் வழியில் தம்மை மறந்து, தம் நிலைமையை மறந்து, தம் கடமையை மறந்து, தம் உடன் வருகின்ற பரிசனங்களையும் மறந்து

எதிரே காட்சி தந்த ஒரு துறவியிடம் ஈடுபட்டுவிட்டார் என்றால் அந்த ஈடுபாட்டின் ஆழத்தை என் என்பது? இதனையே முழுமாற்றம் (Metamorphosis) என்று கூறு கிறோம்.

ஈடுபாடு ஏற்பட்டதன் காரணமாக அத்துறவியை நெருங்கிச் சென்று வழிபட்டார். அந்த வினாடியிலிருந்து திருவாதவூரர் என்ற ஒருவர், பாண்டிப் பேரரசின் அமைச்சர் என்ற ஒருவர் இல்லை. அந்த வினாடியிலிருந்து அத் துறவியின் பால் ஈடுபட்ட ஓர் அடியார், பக்தர், யான், எனது என்ற அகங்கார, மமகாரம் அற்ற ஓர் அடியார்தாம் அங்குள்ளார். இதனிடையில் குதிரை வாங்கக் கொண்டு சென்ற பணம் செலவாகிவிட்டது. அப்பணத்தை யார் செலவிட்டனர் என்பது பற்றிய ஆராய்ச்சி பயனற்றது. திருவாதவூரர் பழைய நிலையில் இருந்திருப்பின் தாம் யார். இப்பணம் யாருடையது என்ற வினாக்கட்கு விடை கிடைத் திருக்கும். ஆனால், துறவியிடம் ஈடுபாடு கொண்டு, யான் எனது என்பவற்றைக் கடந்து அன்பராகி விட்ட ஒருவர் பாண்டியன், குதிரை, பணம் என்பவற்றை வேறுபடுத்திக் காண்கின்ற அளவு சென்றிருக்க முடியாது. நம்போன்றவர் கட்கு இயல்பாகத் தோன்றும் இந்த வேறுபாடு, அவரு டைய மனத்துள் தோன்றி இருப்பின் அவர் மாணிக்க வாசகராக ஆகி இருக்கவும் முடியாது. எனவே, பணத்தைச் செலவு செய்தது யார் என்ற வினாவை எழுப்புவதும், அதற்குரிய பொறுப்பு யாருடையது என்றாராய்வதும் அத் துணைச் சிறப்புடையதன்று. வேறு யார் அப்பணத்தைச் செலவிட்ட பொறுப்பை மேற்கொண்டாலும் திருவாத வூரருக்கு அப்பொறுப்பை ஏற்றுவது பயனுடையதன்று.

திருவாதவூரருடன் திருப்பெருந்துறைவரை உடன் வந்தவர்கள் பாண்டியனிடம் சென்று நடந்தவற்றைக் கூறிய துடன் பணம் கரைந்துவிட்டதையும் கூறினர். இந்நிலை யில் நடைபெற்றது யாது என்பதைக் கூறுவதில் திருவாத வூரர் வரலாறு கூறும் மூவரும் மாறுபடுகின்றனர். பெரும்

எதிரே காட்சி தந்த ஒரு துறவியிடம் ஈடுபட்டுவிட்டார் என்றால் அந்த ஈடுபாட்டின் ஆழத்தை என் என்பது? இதனையே முழுமாற்றம் (Metamorphosis) என்று கூறு கிறோம்.

ஈடுபாடு ஏற்பட்டதன் காரணமாக அத்துறவியை நெருங்கிச் சென்று வழிபட்டார். அந்த வினாடியிலிருந்து திருவாதவூரர் என்ற ஒருவர், பாண்டிப் பேரரசின் அமைச் சர் என்ற ஒருவர் இல்லை. அந்த வினாடியிலிருந்து அத் துறவியின் பால் ஈடுபட்ட ஓர் அடியார், பக்தர், யான், எனது என்ற அகங்கார, மமகாரம் அற்ற ஓர் அடியார்தாம் அங்குள்ளார். இதனிடையில் குதிரை வாங்கக் கொண்டு சென்ற பணம் செலவாகிவிட்டது. அப்பணத்தை யார் செலவிட்டனர் என்பது பற்றிய ஆராய்ச்சி பயனற்றது. திருவாதவூரர் பழைய நிலையில் இருந்திருப்பின் தாம் யார்? இப்பணம் யாருடையது என்ற வினாக்கட்கு விடை கிடைத் திருக்கும். ஆனால், துறவியிடம் ஈடுபாடு கொண்டு, யான் எனது என்பவற்றைக் கடந்து அன்பராகி விட்ட ஒருவர் பாண்டியன், குதிரை, பணம் என்பவற்றை வேறுபடுத்திக் காண்கின்ற அளவு சென்றிருக்க முடியாது. நம்போன்றவர் கட்கு இயல்பாகத் தோன்றும் இந்த வேறுபாடு, அவரு டைய மனத்துள் தோன்றி இருப்பின் அவர் மாணிக்க வாசகராக ஆகி இருக்கவும் முடியாது. எனவே, பணத்தைச் செலவு செய்தது யார் என்ற வினாவை எழுப்புவதும், அதற்குரிய பொறுப்பு யாருடையது என்றாராய்வதும் அத் துணைச் சிறப்புடையதன்று. வேறு யார் அப்பணத்தைச் செலவிட்ட பொறுப்பை மேற்கொண்டாலும் திருவாத வூரருக்கு அப்பொறுப்பை ஏற்றுவது பயனுடையதன்று.

திருவாதவூரருடன் திருப்பெருந்துறைவரை உடன் வந்தவர்கள் பாண்டியனிடம் சென்று நடந்தவற்றைக் கூறிய துடன் பணம் கரைந்துவிட்டதையும் கூறினர். இந்நிலை யில் நடைபெற்றது யாது என்பதைக் கூறுவதில் திருவாத வூரர் வரலாறு கூறும் மூவரும் மாறுபடுகின்றனர். பெரும்

இருக்கையில் அரசுக்குரிய பொருளை வேறுவழியில் செலவு செய்தல் தவறு என்பதும், அங்ஙனம் செய்தவர்கள் அரச தண்டனைக்கு ஆளாக வேண்டும் என்பதும் அவர் அறிந் திருந்த ஒன்று. அவ்வாறு செய்த ஒரு சிலரைத் திருவாத வூரரே அமைச்சர் என்ற முறையில் தண்டித்திருத்தலும் கூடும். எனவேதான், தம் அனுபவத்திலிருந்து கீழிறங்கிய வுடன் தாம் உலகியல் முறையில் செய்த தவற்றை நினைந்து அதன் பயன் யாதாய் விளையும் என அஞ்சுகிறார். இவ்வாறு அச்சங்கொள்ளும் அவர், துறவி மாட்டுத் தம்மை இழந்து நின்ற மணிவாசகர் அல்லர். அந்நிலை மாறிப் பழைய திருவாதவூரராய் நின்று பேசிய பேச்சுக்களாகும் இவை. எத்துணைப் பெரியவர்களாயினும் உலக நிகழ்ச்சிகள் வந்து மோதும்போது ஒரு வினாடி கலங்கத்தான் செய்கிறார்கள். அப்படியானால் நாமும் கலங்கத்தானே செய்கிறோம். அவர்களும் கலங்கினார்கள் எனில் வேறுபாடு எங்கே என்ற வினா எழலாம். மானுட உடல் எடுத்தமையால் கலக்கம் என்பது இருவருக்கும் பொது. ஆனால், அவர்கள் நம்மினும் வேறுபட்ட பெரியோர்கள் ஆகலின் உடனே அக்கலக்கத் தினின்றும் தெளிவுபெற்றுவிடுகிறார்கள். இந்த உண் மையை எடுத்துக் காட்டிய புலியூர் நம்பி சிறந்த புலவரா கிறார்.

தென்னவன் ஓலை வருமுன்னர் திருவாதவூரர் இருந்த உலகமும் அனுபவமும் வேறானவை. அந்த அனுபவத்தை அவரே திருவாசகத்தில்,

> ''சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு
> திரண்டு உன் திருவார்த்தை
> விரிப்பார்...........................................''(384)

என்ற முறையில் பாடிக் காட்டுகிறார். இந்த அனுபவம் பாண்டியன் ஓலையைக் கண்டவுடன் சிதறிவிடுகிறது. இந்நிலையில் யாரிடஞ் சென்று முறையிடுவது? யாவும் அவனே என்று அவனிடம் உடல், பொருள், ஆவி அனைத் தையும் அடைக்கலமாகத் தந்துவிட்ட பின்னர் யாரிடஞ்

சென்று முறையிட முடியும்? 'இங்கு எனக்குப் பேசிய தந்தையும் தாயும் நீயே. ஆதலால், அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும் அம்மையப்பா இனி ஆற்றேன்' என்று இராமலிங்கவள்ளலார் 'தடித்தவோர் மகனை' என்ற பாடலில் பாடிக்காட்டுகிறார். அதுபோலத் திருவாதவூரரும் இறைவனிடம் சென்று முறையிடுகின்றார்.

இந்நிலையில் அவரும் நாமும் எதிர்பாராத ஒன்று நடைபெறுகிறது. இறைவன் 'அன்பனே! நீ அஞ்சத் தேவை இல்லை. குதிரைகள் வந்து சேரும் என்று பாண்டியனுக்கு ஓலை அனுப்பிவிடு' என்று கூறிவிட்டான்.

**''நினக்குயாம் உண்டு! உளம்அஞ்சேல் நிலைமை உடனே**
**கைதவற்கு**
**கனத்த புரவிவரும் என்று கருணையுறவேண்டும் விட்டுப்**
**பனைப்பை ஓலை நிறைத்தெழுதிப் பரிவின் விடுப்பாய்''**

என்ற முறையில் நம்பி திருவிளையாடல் இதனைக் கூறுகிறது. இதில் ஒரு வியப்பும் உண்டு. குதிரைகள் எதுவும் அங்கில்லை; குதிரை வாங்கக் கொண்டு வந்த பணமும் செலவழிக்கப்பட்டுவிட்டது; ஆனால், குதிரைகள் வருமென்று ஓலை அனுப்பிவிடு என்று இறைவன் கட்டளை இட்டுவிட்டான். பழைய அமைச்சராக இருப்பின் குதிரைகள் ஏது? எங்கிருந்து வரும்? எப்போது வரும்? ஆகிய வினாக்களை நம்மைப்போல் எழுப்பிக்கொண்டு அல்லற்பட்டிருப்பார்.

இதன் எதிராக அக்கட்டளையை அப்படியே ஏற்றுக்கொண்டு ஓலை அனுப்பிவிட்டார் திருவாதவூரர். இவ்வாறு செய்வதன் மூலம் அவருடைய நம்பிக்கை, ஆண்டான் அடிமைத்திறம் ஆகிய அனைத்தையும் நிரூபித்துவிட்டார். அடியவர்களுடைய நம்பிக்கை எத்தனை வலுவானதும் அசைக்கமுடியாததுமானது என்பதற்கு இதுவே எடுத்துக் காட்டு. பகுத்தறிவும் உலகத்தாரும் இயலாது என்று கூறுகிற ஒன்றை, நடவாததை, நடக்க வைப்பவன் என்தலைவன்

என்று அகமனம் கூறுகிறது. எனவேதான், இறைவனிடம் சென்று முறையிட்டபோது அவன் யாது ஏவினானோ அதனை அப்படியே செய்து முடித்துவிட்டார். இறைவன் ஆண்டான்தான் அடிமை என்ற முடிபை ஏற்றுக் கொண்ட பிறகு ஆண்டான் ஏவலை ஏற்காமல் மறுப்பதும் அதனை அறிவின் துணை கொண்டு ஆய முற்படுவதும் ஆண்டான் அடிமைத் திறத்திற்கு முரண்பாடாகுமன்றோ!

வாழ்க்கையில் இம்மாதிரி நடை பெறுவதை இன்றுங் காண்கிறோம். நம்முடைய நம்பிகைக்குப் பாத்திரமான வர்கள் கூறுவதை, யார் எதிர்த்துக் கூறினும், நாம் ஏற்றுக் கொள்கிறோம் அன்றோ? சாதாரணமான நம் போன்ற மனிதர்களிடங்கூட நாம் இத்தனை நம்பிக்கை வைக்கிறோம் என்றால் அனைவரினும் மேம்பட்டவன் என்று திருவாதவூர ரால் கண்டு கொள்ளப்பட்ட ஒருவன் ஏவலில் நம்பிக்கை வைத்துப் பாண்டியனுக்குக் குதிரைகள் வரும் என்று அவர் ஓலை அனுப்பியதில் தவறு என்னை?

இதன் பின்னர் நடந்தவை நாம் அறிந்த ஒன்றேயாகும். திருவாதவூரர் குதிரைகள் வரும் என்று கூறியநாளில் குதிரை கள் வரவில்லை. மன்னன் திருவாதவூரரைத் தண்டிக்கும்படி ஏவினான். தானே தேடிக் கொணர்ந்த அமைச்சராயினும் அவருடைய பண்புடைமைமாட்டு அவன் பெருநம்பிக்கை கொண்டிருந்தான் எனினும் தனி மனிதனாகிய தன்னுடைய விருப்பு வெறுப்புக்களை அரச நீதியில் புகுமாறு அரசன் விடவில்லை. அரசுக்குரிய குதிரைகள் வரவில்லை; அதற் குப் பொறுப்பேற்றவர் தண்டனைக்குள்ளாவது நியாயமான தேயாகும். எனவே, இச் செயலில் பாண்டியன் மேல் தவறு கூறல் இயலாது.

பாண்டியன் தண்டனையை மாணிக்கவாசகர் பெற்ற மையால்தான் இன்று நமக்குத் திருவாசகம் கிடைத்துள் ளது. உலகில் தோன்றும் பெரியோர்கள் தாம் பிறந்ததால் ஏற்படும் பயனை உலகுக்கு வழங்க வேண்டுமாயின் அவர்கள்

ஓரளவு துன்பப்பட்டேதான் தீரல் வேண்டும் போலும்! இராமன் காடு சென்றதால்தான் இராவணன் வீழ்ச்சி ஏற்பட்டது. அவன் காடு செல்லக் காரணமாயிருந்த கைகேயி கருணையற்ற மனமும் ஒரு பெரும் பயனை விளைவிக்கக் காரணமாயிருந்தது. மாணிக்கவாசகர் தண்டனை பெற்றார் என்றால் அதனால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை. நான், எனது என்ற இரண்டையும் அறுத்தெறிந்தவர்கட்கு உடலுக்கு ஏற்படும் துன்பம் உண்மையில் துன்பஞ் செய்வதில்லை. அவர்கள் கொப்பரைத் தேங்காய் போன்றவர்கள். அவர்கள் உடல் படும் வாதனை அவர்களை ஒன்றுஞ் செய்வதில்லை. இயேசு பெருமான் சிலுவையில் அறையப்பட்டதும், திருநாவுக்கரசர் நீற்றறையில் இடப் பெற்றதும் இத்தகைய நிகழ்ச்சிகளேயாகும். இவற்றால் அவர்கள் அவதியுறுவதில்லை. மணிவாசகர், நாவுக்கரசர், இயேசு போன்றவர்கட்கு உடல் துன்பம் உண்டாக்கப் பெற்றமையின் முறையே திருவாசகம், தேவாரம் உலகம் ஏற்றுக்கொண்ட ஒரு சமயம் என்பவை கிடைத்தன. மணிவாசகர் பாண்டியன் தந்த தண்டனையால் துன்புறவில்லை என்பதைப் பரஞ்சோதியார் மிக அழகாகக் கூறுகிறார்.

"...................................

**செங்கனல் சிதறநோக்கும் சினங்கெழு காவலாளர்**
**மங்குலின் இருண்ட கண்டர் தொண்டரை மறுக்கஞ்**
**செய்வார்"**

"...................................

**நடந்தவர் செம்பொற் பாத நகைமலர் புணையாப் பற்றிக்**
**கடந்தனர் துன்ப வேலை புலர்ந்தது கங்குல் வேலை"**
(நரி. பரி. படலம் 13-14)

திருவாதவூரரைப் பாண்டியன் துன்பஞ்செய்த மறுநாள் வேதநாயகன் கணக்கற்ற புரவிகளைக் கொண்டு வந்தான். பாண்டியன் எல்லையற்ற மகிழ்ச்சியுற்றான். பரிமாச்சேவகனாக வந்த அண்ணல் பாண்டியனிடம் குதிரைகளைக் கொடுப்பதற்கு அடையாளமாக அவற்றின் கயிறுகளை மாறி

னான். குதிரை வாணிகத்தின் நுட்பம் ஒன்றைப் பாண்டிய னுக்குக் கூறினான் குதிரைகள் தலைவன். 'அரசே! இந்தக் குதிரை வாணிபத்தில் ஒரு நுணுக்கம் உண்டு. கவனமாகக் கேட்பாயாக. கயிறு மாறிக் கொண்ட இந்த வினாடிக்குப் பிறகு இக்குதிரைகளின் சொந்தக்காரன் நீ யாகிவிடுவாய். அந்தக்கணத்திலிருந்து இக்குதிரைகட்கு வரும் நலம், தீங்கு ஆகிய அனைத்திற்கும் நீதான் பொறுப்பே தவிர, நாங்கள் பொறுப்பேற்க மாட்டோம். நாளை இக் குதிரைகள் என்ன வானாலும் நாங்கள் பொறுப்பில்லை' என்று கூறிவிட்டுக் குதிரைச் சேவகர் தலைவன் தான்கொணர்ந்த குதிரைகளின் இலக்கணங்களையும் எடுத்துரைத்தான். 'இக்குதிரைகள் சமயம் வந்தால் மதிலைத் தாண்டும், மிக இடுக்கான சாக் கடையுள்ளும் நுழைந்து செல்லும். திறந்த வெளியெலாம் ஓடும், பசி வந்துவிட்டால் குதிரைகள் தின்காதவற்றையும் தின்னும் என்றான்.

"இன்னவாம் பரிகள் என்பால் இன்றுநீ கயிறு மாறி
நின்னவாக் கொள்ளும் நீரால் நின்னவாம் பரியே நாளை
என்னவாய் இருந்த வேனும் எனக்கும் உன்தனக்கும் கொண்டு
மன்னவா! கருமம் இல்லை பரிவிலை வழக்குஈது என்றார்"

"காயும்வேல் மன்ன! ஓரிக் கடும்பரி சமயம் வந்தால்
ஞாயிலும் தாண்டிச் செல்லும் நாட்டமும் நுழையாச் சால
வாயிலும் நுழையும் கண்ட வெளியெலாம் வழியாச் செல்லும்
தீயவெம் பசிவந்து உற்றால் தின்னாத எனினும் தின்னும்"

(நரி. பரி. பட. 82-86)

மணிவாசகரிடம் பொன்னைத்தந்து குதிரை வாங்கப் பாண்டியன் அனுப்பினான்; குதிரைகள் வந்தன; அவனும் பெற்றுக்கொண்டான். குதிரையின் கயிற்றைப் பாண்டியன் கையில் பெற்றுக்கொண்ட அந்த வினாடியே குதிரை

களின் பொறுப்பு பாண்டியனிடம் வந்துவிட்டது. குதிரைகள் வருவதற்கு முன்னர் அவன் மணிவாசகரைத் தண்டித்ததை யாரும் தவறு என்று கூறமுடியாது. அரசனாகிய அவன் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டுத் தன் கடமையை நிறைவேற்றினான் என்றுதான் கூறவேண்டும். அவன் கடமையை நிறைவேற்றுகையில் மணிவாசகர் தண்டனை பெற்றார். எனின் அது அவருடைய செயலுக்கு ஏற்ற ஒன்றே என்றுதான் கூறல் வேண்டும்.

ஆனால், குதிரைகளை எந்த வினாடி பாண்டியன் பெற்றுக்கொண்டானோ அந்த வினாடியே மணிவாசகரும் தம் ஒப்பந்தத்திலிருந்து விடுதலை பெற்றுவிடுறார். மறுநாட் காலை ஒரு கொள்ளை நோய் காரணமாகக் குதிரைகள் இறந்திருப்பின் என்ன செய்திருப்பான் பாண்டியன்? வாயை மூடிக்கொண்டு தன் தீவினையை நினைப்பது தவிர வேறு ஒன்றுஞ் செய்திரான். இந்த நிகழ்ச்சியில் குதிரைகள் இறப்பதற்குப் பதிலாக யாவும் நரிகளாய் மாறி ஓடிப்போயின. குதிரைகள் இறந்தாலும், நரிகளாய் மாறினாலும் மணிவாசகர் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு விட்டமையின் அவரைக் குற்றங்கூற வழியே இல்லை.

என்றாலும், குதிரைகள் நரிகளாக மாறி ஓடிப்போனவுடன் மறுபடியும் பாண்டியன் மணிவாசகரைத் துன்புறுத்திய செயல் அடாதது. அதனைப் பொறுத்துக் கொண்டிருந்த மதுரை மக்களும் தவறிழைத்தவர்களே என்று இறைவன் கருதியதால்தான் மதுரை மக்கள் துன்பம் அனுபவிக்குமாறு வையையைப் பெருகவிட்டான். பாண்டியன் இழைத்த தவற்றுக்காக அவன் பிரம்படி படும்படியான தண்டனை விதிக்கப்பட்டது. பிறருக்குப் பிரம்படி கொடுக்குமாறு ஆணையிடும் பாண்டியன் அந்த ஆணையின் சுவையைத் தானும் அனுபவிக்கும்படி நேரிட்டது.

இவ்வரலாற்றில் நாம் கூர்ந்து காணவேண்டிய ஒரு பகுதி உண்டு. வரலாற்றின்படி மணிவாசகர் இருமுறை பாண்டியனால் தண்டிக்கப்படுகிறார். குதிரைகள் வரும்

என்று கூறிய நாளில் குதிரைகள் வராமற்போகவே மணி வாசகர் தண்டிக்கப்படுகிறார். இரண்டாம் முறையாகக் குதிரைகள் நரிகளாயின. பின்னர் தண்டிக்கப்படுகிறார். இரண்டாவது தண்டனையின்போது இறைவன் வையை யைப் பெருக்கினான் எனில் முதல் தண்டனையின்போது யாது செய்தான்?

முதல் தண்டனை பலநாள் நீடித்தும் இறைவன் அதனை மாற்ற வழி செய்யாதது ஏன்? என்ற வினாவைக் கேட்டுவிட்டால் கிடைக்கும் விடையில் ஓர் அற்புதத்தைக் காண்டல் கூடும். அரசாங்கப் பணத்தை எடுத்துச் சென்று பொறுப்புள்ள ஒருவர் அது எதற்காக எடுத்துச் செல்லப்பட் டதோ அதனைச் செய்யாமல் வேறு எது செய்தாலும் அது தவறுதான். கோயில் கட்டினார், அடியார்கட்குச் செலவு செய்தார் என்றெல்லாம் கூறுவது பொருளற்ற வாதம் கண்ணை மூடிக்கொண்டு சமயம் என்ற போர்வையில் புகுந்துகொண்டு இதற்கு விடைகூற முற்படுவது தவறு. போலிச் சமயவாதிகள் இதற்குக் கூறும் சமாதானத்தை இறைவன்கூட ஏற்கவில்லை என்பதையே வரலாறு கூறு கிறது.

நீதி என்ற ஒன்றை வகுத்த இறைவன் அந்த நீதியிலி ருந்து யார் வழுவினாலும் அவர்களை ஒறுக்காமல் விடுவ தில்லை. இயற்கையின் சட்டத்தை இறைவனும் மீறுபவ னல்லன். திருவாதவூரர் பொதுப் பணத்தை எடுத்தார் என்பது குற்றம். ஆனால், அதனைத் தம்முடைய நலத்துக் குச் செலவு செய்தாரா இல்லையா என்பது வேறு வினா! எனவே, முதல் குற்றத்திற்குரிய தண்டனையை அவர் அனுப விக்கின்ற வரை இறைவன் வாளா இருந்துவிட்டான்.

ஒருவர் செய்த குற்றத்தின் அளவு நோக்கித் தண்டனை வழங்கப்படுகிறது. திருவாதவூரர் செய்த குற்றத்தின் அளவு நோக்கிச் சில நாட்கள் அவர் தண்டனை அடைவதை இறைவன் வாளா விட்டுவிட்டான். ஆனால், பாண்டியன் குதிரைகளைப் பெற்ற பின்னர் மறுபடியும் திருவாதவூரர்

மேல் பொறுப்புச் சுமத்தி அவரைத் தண்டிப்பது முறை கடந்த செயலாகும். எனவே, இரண்டாம் முறை தண்டனை தொடங்கியவுடன் வெள்ளம் வந்தது.

இக் கருத்து வலுவுடையது என்பதற்கு இந்நாட்டின் பிற வரலாறுகளும் சான்று பகர்கின்றன. தம்பிரான் தோழரேயாயினும் சுந்தரமூர்த்திகள் சங்கிலியாருக்குச் செய்துதந்த வாக்குறுதியை மீறித் திருவொற்றியூர் எல்லையைத் தாண்டியவுடன் கண்கள் இழக்கப் பெற்றன. திருவாரூர்ப் பெருமானை நினைந்து அவனைக் காண வேண்டும் என்ற அவாவினால்தானே புறப்பட்டார் என்ற வாதம் பொருளற்றது. சத்தியஞ் செய்து தந்தவர் அதனை மீறினால் கண்களை இழந்துதான் ஆக வேண்டும்.

இராமதாசருடைய வரலாறும் இதனை வலியுறுத்தல் காணலாம். வரிப் பணத்தை இராமனுக்குக் கோயில் கட்டி விட்டார். அதனால் 12 ஆண்டுகள் சிறையிலிருக்க நேர்ந்தது. அதன் பிறகு இராமபிரான் அவர் தரவேண்டிய பணத்தைத் தந்து அவரை மீட்கிறான். அதேபோல இறைவனும் பாண்டியனுக்குச் சேர வேண்டிய குதிரைகளைத் தந்துவிடுகின்றானே! ஆனால், இவை முறையே இராமதாசரும், திருவாதவூரரும் தண்டனை பெறுமுன் நடைபெறக் கூடாதா? அடியார்கள் இத் தண்டனையை அனுபவித்த பிறகு இக் கடன்களைத் திருப்பித் தருகிற இறைவன் முன்னரே இதனைச் செய்தல் ஆகாதா? ஆகாது! ஏனெனில் செய்த பிழைக்குரிய தண்டனையை அனுபவிக்கச் செய்து அதனால் விளையும் பாவம் அவர்களைச் சேராமல் செய்து விடுகிறான் இறைவன்.

இதுவே இவ்வரலாறுகளில் காணப்பெறும் சிறப்பாகும்.

இதன் பிறகு வையை பெருகியதும், இறைவன் வந்திக்குக் கூலியாளாய் வந்ததும், ஒரு கூடை மண்ணால் வெள்ளத்தைத் தடுத்ததும், பாண்டியன் பிரம்படி பெறுமாறு செய்ததும், பாண்டியன் திருவாதவூரர் பெருமையை அறிந்து தன்பிழைக்கு இரங்கி வருந்தி, அவரிடம் மன்னிப்பு

வேண்டி, அவரை விடுதலை செய்ததும், அவர் பல ஊர்களுக்குச் சென்று திருவாசகம் பாடி இறுதியில் தில்லையம்பலக் கூத்தனின் சேவடி மலரில் ஒன்றியதும் யாவரும் அறிந்த பகுதிகளாகலின் அதுபற்றி ஒன்றும் விரித்துக் கூறத் தேவை இல்லை.

பெருமானின் வரலாற்றைப் பாடிய மூவரும் அவருடைய காலம் யாது என்று நாம் அறிந்து கொள்ளும் முறையில் ஒரு குறிப்பும் தரவில்லை. அப்படியானால் மணிவாசகரின் காலத்தை அறிய வேறு ஆதாரங்கள் உளவா என்று பார்ப்பதுடன் அகச் சான்றுகள் எவையேனும் திருவாசகத்தில் உள்ளனவா என்றும் பார்த்தல் வேண்டும். சட்டம் மிகுதியும் வளர்ந்துள்ள இற்றை நாளிற்கூட அகச் சான்றுகளை யாரும் புறக்கணிக்கத் துணிவதில்லை. அகச் சான்றுகளைக் கொண்டே இவர் வரலாற்றை ஓரளவு துணியவும் முடிகிறது.

திருஞானசம்பந்தப் பெருமான் ஞானப்பால் உண்டதும், மூன்று வயதில் பாடத் தொடங்கியதும் அவருடைய திருவாக்கிலேயே,

'போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாதுெனத்
தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்
காதையார் குழையினன்..............'' (ஞா. தே. 3-24-2)

என்று வருதலைக் காண்கிறோம். அதேபோன்று திருநாவலூரராகிய சுந்தரமூர்த்தி நாயனார் திருமணத்தில் தம்மை இறைவன் வந்து தடுத்து ஆண்டுகொண்டான் என்பதைக் ''கற்பகத்தினைக் கனகமால் வரையை'' என்று தொடங்கும் பாடலில்,

''வெண்ணெய் நல்லூரில்
அற்புதப் பழ ஆவணங் காட்டி அடியனாய் என்னை
ஆளது கொண்ட
நற்பதத்தை.....................'' (சு. தே. 67-68-6)

என்று காட்டும் அகச் சான்றால் அறிகிறோம். திருநாவுக்கரசர் பெருமானுக்கு நஞ்சுகலந்த பாற்சோறு தரப்பெற்றதும், கல்லோடு சேர்த்துக் கட்டப் பெற்று அவர் கடலில் எறியப்பட்டதும் கீழ்வரும் அவருடைய வாக்காலேயே அறியமுடிகிறது.

"..............................
வஞ்சனைப் பாற்சோறு ஆக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சு அமுது ஆக்கிவைத்தார் நனிபள்ளி அடிகளாரே"
(அப்பர் தே. 14-70-5)

"கல்லி னோடுஎனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லி நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடிஅரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேனன்றே"
(அப்பர் தே. 5-72-7)

தேவாரம் பாடிய பெரியார்கள் மூவரைப் போன்று மணிவாசகப் பெருமானும் தம் வாணாளில் நடந்த சிறந்த செயல்களைத் தம் பாடல்களிற் கூறியுள்ளார். இப் பெருமக்கள் அத்தகைய செயல்களைக் கூறுவதன் நோக்கம் என்ன எனில், தம் சிறப்பைக் குறிக்க வன்று; தம்மையும் ஒரு பொருளாக்கி இறைவன் தமக்காகச் செய்தவற்றைக் குறிப்பதற்கே யாம். இதனால் இறப்ப உயர்ந்த இறைவனுடைய எளிவந்த தன்மையை வியந்து கூறியவாராயிற்று.

அடிகள் வாழ்வில், குதிரையின் இருப்பை அறியாமல் அவை வந்து சேரும் என்று பாண்டியனுக்குத் தாம் ஓலை அனுப்பியதைப் பெரிதும் நினைந்து வருந்துகிறார். ஓலை அனுப்பியபடி குதிரைகள் வரவில்லை; அவை வந்து சேருமா, சேராவா என்பதை அறியும் வாய்ப்பும் அவருக்கு இல்லை. தம் அடிமைத் திறத்தின் காரணமாக இறைவன் கூறியவற்றைத் தலைமேற்கொண்டு குதிரை வரும் என எழுதியது சரியே என்று அகமனம் கூறவும், குதிரைகள் உள்ளனவா, அவை வருமா என்பதைப் பகுத்தறிவின்

துணை கொண்டு ஆய்ந்து பாராமல் எழுதியது பிழை என்று அறிவு இடித்து உரைக்கவும் இவற்றின் இடையே அடிகள் 'தேய்புரிப் பழங்கயிறு' போல ஊசலாடுகின்றார். எல்லாம் நடந்து முடிந்த பிறகுங்கூட இந்த ஊசலாட்டம் அவரைவிட்டு நீங்கவில்லை என்று தெரிகிறது. நீண்ட காலமாக அறிவின் துணை கொண்டு அமைச்சு நடாத்தி விட்டா ராகலின் உள்மனம் கூறுவதை ஏற்பதைக் காட்டி லும் அறிவு கூறுவதைக் கேட்பதே சரியென்று நினைத்தார் போலும்! இந்த ஒரு நிகழ்ச்சியில்தான் மெய்ம்மைக்கு மாறாக அடிகள் ஓலை அனுப்பினார். குதிரைகள் திருப் பெருந்துறையில் இல்லை என்பதும், இருப்பினும் அவற்றை வாங்கும் பொருள் வாய்ப்புத் தம்பால் இல்லை என்பதும் அவர் அறிந்த மெய்ம்மைகள். இந்த மெய்ம்மைகட்கு (Facts) எதிராகக் குதிரைகள் வரும் எனப் பாண்டிய னுக்கு ஓலை எழுதியது பொய்தானே (Factual lies) என்ற துயரம் அடிகளைவிட்டு நீங்கினதாகத் தெரியவில்லை.

இறைவனுடைய ஆற்றலுக்குக் குதிரைகளைவரவழைத் துத்தருவது மிக எளிதான காரியமாயினும், அவனால் அது முடியும் என்பதை அவர் நன்கு அறிவாராயினும், இப் பொழுது பாண்டியனுக்கு ஓலை அனுப்பியவன் இறைவன் அல்லனே! அவன்தானே ஓலை அனுப்பியிருப்பின் அந்த நிலையே வேறுதான். ஆனால் மணிவாசகர் தாமேயல்லவா ஓலை அனுப்பினார். எனவே இறைவனேயாயினும் அவன் கூற்றைத் தாம் அப்படியே ஏற்பதும் அதற்குத் தாம் ஈடுபடு வதும் வேறு, அதன் மறுதலையா அக்கூற்றில் பாண்டி யனை ஈடுபடுத்துவது வேறு. எனவேதான் தாம் ஓலை அனுப்பியது தவறு என்றும் அந்த ஒரு விஷயத் தில் தாம் பொய் கூறிவிட்டதாகவும் அடிகள் வருந்து கிறார், திருவாசகம் முழுவதிலும் தம்மைப் பொய்யன், பொய்யன் என்று நாற்பது இடங்கட்கும் மேலாக அடிகள் கூறிக்கொள்வதன் அடிப்படைக் காரணம் இதுவாகத்தான் இருத்தல் கூடும்.

'பொய்யர் பெறும்பேறு அத்தனையும் பெறுதற்குரியேன்' (56)

'வஞ்சனேன் பொய்கலந்தது அல்லது இல்லை' (77)

'விச்சுக்கேடு பொய்க்கு ஆகாதென்று எனஈங்கு வைத்தாய்' (85)

'யானும் பொய்யும் புறமே போந்தோமே' (89)

'புறமே போந்தோம் பொய்யும் யானும்' (90)

'யானே பொய் என்நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்' (94)

'பொய் இலங்கு எனைப் புகுதவிட்டு' (81)

'பொருத்தம் இன்மையேன் பொய்மை உண்மையேன்' (97)

'பொறுப்பர் அன்றோ பெரியோர், சிறுநாய்கள்தம் பொய்யினையே' (110)

'பொய்யவனேனைப் பொருளென ஆண்டு' (111)

'பொய்யனேன் அகம்நெகப் புகுந்து' (396)

'பொய்யெலாம் விடத் திருவருள் தந்து' (567)

'பிறப்பிவை நினையாது பொய்களே புகன்று' (570)

'நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து' (569)

என்றெல்லாம் கூறல் நோக்கற்குரியது.

'தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்' (குறள் 433)

என்ற குறள் அடிப்படையில் இப்பெருமக்கள் வாழ்க்கை அமைந்திருப்பதைக் காணலாம்.

இப் பெரியார்களைப்பற்றி மரபு வழி பேசுபவர்கள் இவர்கள் பிறப்பிலேயே இந்நிலை அடைந்து விட்டவர்கள் என்றும், இந்த மானிட வாழ்க்கையில் தவறே இழைக்காதவர்கள் என்றும் கூறுவதுண்டு. அவ்வாறு கூறும் கூட்டத்தாரைச் சேர்ந்தவனல்லன் யான். அப்படித் தவறே செய்யாமல் பிறப்பிலேயே இவர்கள் பெரியவர்களாக இருந்திருப்பின் இவர்களுடைய வாழ்க்கை நம் போன்றோருக்கு எவ்விதத்திலும் துணை புரியாது. நம்மைப் போல் பிறந்து

ஆனால், நம்மைப்போல் வாழ்க்கையில் தவறு புரிவதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிராமல் வாழ்ந்தவர்கள். ஆனால், வாழ்க்கையில் என்றோ ஒருநாள் ஏதோ ஒரு தவற்றை இழைத்துவிட்டு அதனை நினைந்து நினைந்து வருந்தி அழுது புலம்புவதன் மூலம் தன் குற்றத்தைக் கழுவ முனைந்தவர்களாவர்.

பிழை செய்தல் என்பது மனிதனுக்குரிய ஒன்றுதான். ஆனால் அப் பிழைக்கு இரங்கி இரங்கி அழுவதன் மூலம் அப்பிழைக்குக் கழுவாய் தேடிக் கொள்ள முடியும் என்று நம்மவர் நம்பினர். இக் கருத்து மணிவாசகரைப் பொறுத்த மட்டில் மிக வலுவாக ஊறி இருந்தமை அவருடைய திருவாசகத்தில் அறியப்படுகிறது.

'பிழைத்தவை பொறுக்கை யெல்லாம்
பெரியவர் கடமை போற்றி' (70)
'சிறியேன் பிழை பொறுக்குங் கோனே' (89)
'ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே' (94)

'பொறுப்பர் அன்றே பெரியோர் சிறு
நாய்கள்தம் பொய்யினையே' (110)
'அரைசே! அறியாச் சிறியேன்
பிழைக்கு அஞ்சுல் என்னில் அல்லால்' (141)
'ஏசினும் யான்உன்னை ஏத்தினும்
என்பிழைக்கே குழைந்து
வேசறு வேனை விடுதி கண்டாய்' (154)
'பேயனது உள்ளப் பிழை பொறுக்கும் பெருமையனை' (226)
'.................என்பிழைக்கு இரங்கும்
அங்கணனே'................ (412)
'குன்றே அனைய குற்றங்கள் குணமாம் என்றே நீ கொண்டால்
என்தான் கெட்டது? இரங்கிடாய்...' (496)

என்பவை போன்ற அடிகள் மணிவாசகர் தாம் செய்த பிழையை நினைந்து வருந்தினால் உய்கதி கிட்டும் என்று

உறுதியாக நம்பினார் என்பதை வலியுறுத்துகின்றன. அழுது அடி அடைய முடியும் என்று நிரூபித்துக் காட்டிய பெருமை மணிவாசகப் பெருமானுக்கே உண்டு. இக் கருத்தை என் தந்தையார் 'பெருஞ் சொல் விளக்கனார்' அ. மு. சரவண முதலியாரவர்கள் தாம் எழுதிய அழுது அடி அடைந்த அன்பர்' என்ற நூலில் விரிவாக எழுதியுள்ளார்கள்

குற்றத்தை நினைந்து வருந்தினால் உய்கதி கிட்டும் என்பதை நிரூபித்துக் காட்டியமையினால்தான் போலும் போப் போன்ற மேனாட்டாரையும் திருவாசகம் கவர்ந் திழுத்தது. இப் பெருமக்கள் போன்றவர்கள் மனித சமுதாயத்திற்கு நம்பிக்கை என்ற ஒன்றைத் தந்து போயினர். எத்துணைக் கடைகெட்ட வாழ்வு வாழ்பவர்களும் என்றாவது ஒருநாள் தம் பிழையை நினைந்து உண்மையிலேயே வருந்துவார்களாயின் நிச்சயமாக அவர்கட்கும் உய்கதி உண்டு. வாழ்க்கையில் என்றுமே நம்பிக்கையை இழக்க வேண்டிய தேவை இல்லை என்பதை நமக்குத் தம் வாழ்வின் மூலம் எடுத்துக் காட்டிய பெருமை அடிகளாருக்கு உண்டு. ஜான் பன்யனின் 'யாத்ரீகனின் யாத்திரை' (Pi.grim's Progress) என்ற நூலில் இறுதியாக நம்பிக்கை என்ற வாள்பற்றிப் பேசப் படுவதை இங்கு நினைவுகூர வேண்டும்.

பெருமானின் வாழ்வு திசைமாறி இந்நிலையை அடைதற்குக் காரணமாக அமைந்தது ஒரு சொல்லாகும். உலகில் ஒருவர் வார்த்தையை நம்பி ஒருவர் வாழ்வதும் நடப்பதும் உண்டு. ஆனால் அது நம்போன்ற மனிதருடைய வார்த்தையையேயாகும். பாண்டியன் போன்றவர்கள் இறைவன் கூறினான் என்பதை அறிய வாய்ப்பின்மையின் 'குதிரைகள் வரும்' என்பதை மணிவாசகரின் வார்த்தை என்றே கருதினார்கள். இவ்வாறு தாமாகக் கூற அடிகளார்க்கு உரிமை இல்லை யல்லவா? குதிரை வாங்கும் பணம் போய்விட்டமையின் 'குதிரை வரும்' என அவர் எழுதுவது சரியன்றுதானே! இறைவன் கூறினான் என்பதை நாமும் அடிகளும் அறிவோம். ஆனால் மன்னனைப் பொறுத்தவரை வேறு

விஷயம். மேலும் தம் வார்த்தையில் இறைவனை அடகு வைக்கவும் அடிகட்கு உரிமை இல்லை. நம்மைப் பொறுத்த வரை அவர் எழுதி அனுப்பியது பொய் அன்று என்று கருதுகிறோம். ஆனால் அவரைப் பொறுத்தவரை தாம் பொய் எழுதிப் பாண்டியனுக்கு அனுப்பியதாகவே நம்பி அப் பிழைக்கு வாணாள் முழுதும் வருந்துகிறார்.

'யானும் பொய்யும் புறமே போந்தோம்' (89) என்று மனம் உருகிப் பாடும் அப் பெருமான் அடுத்த பாடலினும் அதனைத் தொடர்ந்து 'புறமே போந்தோம் யானும் பொய் யும்' (90) என்று கூறுவாரேயானால் அவருடைய மன உளைச்சல் எத்துணை ஆழமானது என்பதை அறிய முடிகிறது. உலகத்தில் பொய் என்ற ஒன்று இல்லாமற் போய்விடக்கூடாது என்பதற்காகவே இறைவன் தம்மை இவ்வுலகில் படைத்துவிட்டான் என்ற பொருளில் 'விச்சுக் கேடு பொய்க்கு ஆகாதென்று எனை ஈங்கு வைத்தாய்' (85) என்று பாடுகின்ற அவர் அவ்வளவு கீழான தமக்கு இறைவன் அருள் பாலித்தமையை நினைக்குந் தோறும் நினைக்குந்தோறும் இறும்பூது எய்துகிறார். பொய்யர் கட்கு எட்டாதவன் இறைவன் ஆகலின் பொய்யனாகிய தமக்கு அவன் கிட்டினான் எனில் அது அவனுடைய பரம கருணையே தவிர தம்முடைய தகுதியன்று எனப் பெருமான் நினைந்து உருகுகிறார்.

இவ்வாறு பொய்யன் என்று தம்மை அவர் கூறிக்கொள் வது அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச் சியேயாகும் என்பதை நினைக்கும் பொழுது அது அகச் சான்றாய் முடிகிறது.

இதனை அடுத்து அவருடைய வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் நிகழ்ச்சிகள் இறைவன் குதிரைச் சேவகனாக வந் ததும், மீட்டும் அவன் கொணர்ந்த குதிரைகள் நரிகளாக மாறியதும், வையையில் வெள்ளம் வந்ததும், இறைவன்

அதனை அடைத்துப் போனதும் ஆம். இவற்றை ஒவ்வொன் றாகக் காணலாம்.

முதலாவது இறைவன் குதிரைச் சேவகனாக வந்தமை யாகும்.

'கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கி............' (194)

'கதிரை மறைத்தன்ன சோதி
கழுக்கடை கைப்பிடித்து
'குதிரையின் மேல்வந்து கூடிடு
மேல் குடிகேடு கண்டீர்' (525)

'தெரிவர நின்றுருக்கிப் பரிமேற் கொண்ட
சேவகனார்' (524)

'பரிமேற் கொண்ட பாண்டியனார்' (526)

'மாவேறி வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள்' (623)
'அரியோடு பிரமற்கு அளவறி யாதவன்
பரிமாவின் மிசைப் பயின்ற வண்ணமும்' (கீர்த்தி-116-7)

'ஞாலம்மிகப் பரிமேற் கொண்டு நமைஆண்டான்' (334)
'பாண்டியன் தனக்குப் பரிமா விற்று
ஈண்டு கனகம் இசையப் பெறாஅது
ஆண்டான் எங்கோன்' (கீர்த்தி 38, 39)

இவ்வடிகள் இறைவன் குதிரைச் சேவகனாக வந்த மையை அறிவுறுத்தப் போதுமானவையாகும். இறுதி யாகக் காட்டப்பெற்ற அடி ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. குதிரைச் சேவகனாக வந்த பெருமான் குதிரைகளைப் பாண்டியனிடம் தந்து அவற்றுக்குரிய பொன்னைப் பெறவில்லையாம். ஏன்? இக்குதிரைகள் திருவாதவூரர் முன்னரே பெற்றுச் சென்ற பொன்னுக்கு ஈடாகப் பாண்டியன் பெற்றவை என்பதையும் அடிகள் குறிப்பால் வெளியிடுதல் அறியத்தக்கது.

இதனை அடுத்துக் காணவேண்டியது நரிகள் குதிரைகளாக வந்த வரலாறும் மீட்டும் அவை நரிகளான வரலாறுமாகும். இவ்விரண்டு நிகழ்ச்சிகட்கும் வேண்டுமான அளவு அகச்சான்றுகள் திருவாசகத்தில் உள்ளன.

'நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்' (கீர்த்தி 35)
'நரிகள் எல்லாம் பெருங்குதிரை ஆக்கியவாறு அன்றே
நின் பேரருளே' (544)
'நரியைக் குதிரை பரியாக்கி' (647)

என்பன போன்ற அடிகள் அகச் சான்றாய் அமைகின்றன.

இனி அடுத்திருப்பது வையைப் பெருக்கும், பிட்டுக்கு மண் சுமந்ததுமாகும். அவை,

'ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந்து அருளிய பாங்கும்' (2-47)
'மண்பால் மதுரையில் பிட்டமுது செய்தருளி
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட' (290)
'பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும்
பித்தனே' (467)

'கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி..............' (182)

என்பன போன்ற அடிகளாற் பாடப்பெற்றுள்ளன. இதில் ஒரு வியப்பு என்னையெனில் தம்மைப் பொய்யன் என்று பற்பல விடங்களிற் பேசிக்கொள்ளும் பெருமான் தம்முடைய வாழ்க்கையில் நடைபெற்றவையும் அப் பொய்யிலிருந்து விளைந்தவையுமான அற்புதங்களைப் போகிற போக்கிற் பேசுகிறாரே தவிர அதுபற்றிப் பெரிதுபடுத்தவே இல்லை.

இக் குறிப்புக்களும் இறைவனுடைய பரம கருணையைக் காட்டவும், அவன் செய்கின்ற பேருதவிகட்குத் தம் தகுதி இன்மையை அறிவிக்கவும், இப் பாடல்களில் இடம் பெற்றுள்ளனவே தவிர இவை செயற்கருஞ் செயல் என்ற கருத்தில்

பாடப்பெற வில்லை. இவற்றை யெல்லாம் செயற்கருஞ் செயல்களாக இப் பெரியோர்கள் எண்ணாமையாலேயே அவைபற்றிய குறிப்புக்கள் அதிகம் இடம் பெறவில்லை.

இப் பெருமகனின் வரலாற்றில் இவை நடைபெற்றன என்பதை அறிவுறுத்த இவை பயன்படுகின்றனவே தவிர இவற்றை அறிவதால் வேறு பயன் ஒன்றும் இல்லை. பரம் பொருளாகிய இறைவன் இச்சாமாத்திரத்தில் அனைத்துல கையும் வைத்து வாங்குபவனாகலின் இவை அரிய பெரிய செயல்கள் அல்லவே! எனவேதான் இவை பற்றிய விரிவான குறிப்புக்கள் தரப்பெறவில்லை. அவருடைய வரலாற்றிற் குத் தேவையான அகச் சான்றுகள் இருக்கின்றன. இச் செயற்கருஞ் செயல்களினால் மணிவாசகர் பெருமை பெற் றார் என்று நினைப்பது தவறு. இவை ஒன்றும் இன்றியும் திருவாசகம் மட்டும் பாடியிருப்பாரேயானாலும் அவர் பெருமை நிலைபெற்றிருக்கும்.

இனி அடிகளாரின் காலம்பற்றிய சில குறிப்புக்களைக் காண்டல் வேண்டும். மறைமலையடிகளின் 'மணிவாசகர் வரலாறும் காலமும்' என்ற நூல் மிகப்பெரியது. பல்வேறு காரணங்களைக் காட்டி மறைமலை அடிகளார் மணிவாசகர் மூவர் முதலிகட்கும் முந்தியவர் எனக் கூறிப்போனார். இக்கூற்றை மறுக்கும் முறையில் 'தமிழ் வரலாறு' எழுதிய சீனிவாசபிள்ளை மூவர்க்கும் பிற்பட்டவர் என்று கூறினார். முற்பட்டவராயின் சுந்தரமூர்த்திகள் திருத்தொண்டத் தொகையில் ஏன் வாதவூரர் இடம்பெறவில்லை என்ற வினாப் பெரிதாக இருக்கிறது. 'பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்' என்ற திருத்தொண்டத் தொகை யில் வரும் அடி திருவாதவூரரையே குறிக்கும் என்றும், நம்பியாண்டார் நம்பிகள் இதனை விளங்கிக் கொள்ளாமல் திருவந்தாதியில் தொகையடியாரைக் குறிக்கும் தொடராக இதனைக் கூறினார் என்றும், ஆதலால்தான் பின்னர் வந்த சேக்கிழார் இதுபற்றி ஒன்றுஞ் செய்ய முடியவில்லை

என்றும், தம் கருத்தை, மணிவாசகர் வரலாறும் காலமும் முதல் முறை வெளிவந்த பொழுதே என் தந்தையார் பெருஞ் சொல் விளக்கனார் அ. மு சரவணமுதலியா ரவர்கள் மறை மலை அடிகட்கு எழுதி அனுப்பினார்கள். அதனைத் தமக்குத் தக்க சான்று என்று குறிப்பிட்டெழுதிய மறை மலை அடிகள் அடுத்த பதிப்பில் அதனையும் சேர்த்துப் போடுவதாகத் திரு முதலியாருக்கு எழுதினார்கள்.

அது எவ்வாறாயினும் முதலியாரவர்கள் கூறிய முக்கிய மான இரண்டொரு கருத்துக்கள் இவண் அறியத் தக்கன. முதலாவது பொய்யடிமை இல்லாத புலவர் என்று வரும் அடி ஏழாம் பாடலில் வருகிறது. அப்பாடல் முழுவதும் தனியடியார் பட்டியலே தவிர தொகையடியார் பட்டிய லன்று. இதனாலும் சுந்தர மூர்த்திகள் பொய்யடிமை இல்லாத புலவர் என்று யாரைக் குறித்தார் என்பது ஆயத் தகுந்தது.

அன்றியும் திருத்தொண்டத் தொகையில்ஒரு சிறப்பைக் காண்டல் கூடும். ஒவ்வோர் அடியாரின் வாழ்க்கையையும் பருப் பொருளாக நோக்கும் பொழுது ஒரு கருத்துத் தோன் றும், அக்கருத்துத் தவறானதாக இருப்பின் சுந்தரமூர்த்தி அதனை மறுத்துரைக்கும் முகமாக ஒரு சொல்லைப் பெய்து பாடியுள்ளார். உதாரணமாகக் கண்ணப்பர் என்று எடுத்துக் கொண்டால் அவர் வேடர், கல்வி அறிவில்லாதவர் என்று நினைப்போம். இதை மறுக்கு முகமாகக் "கலைமலிந்த சீர் நம்பிக் கண்ணப்பர்க்கு அடியேன்" என்று திருத்தொண்டத் தொகையில் பாடுவார். தண்டியடிகள் என்று கூறினவுடன் கண்கள் இல்லாதவர் என்று நினைப்போம். உடனே 'நாட் டம் மிகு தண்டி' என்பார் சுந்தரர். மெய்ப்பொருள் நாய னார் என்று கூறியவுடன் முத்தநாதனிடம் தோற்றுப்போன வர் என்ற எண்ணம் தோன்றும். இதனை மறுக்கும் முறை யில் 'வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருள்' என்று கூறிச் செல்லும் திருத் தொண்டத் தொகை. இந்த அடிப்படையை மனத்துட் கொண்டு மணிவாசகர் வரலாற்றைக் கண்டால்

தம்மை ஓயாது பொய்யன் என்று அவர் கூறிக்கொள்வதை வைத்து அவர் 'குதிரை வரும்' என்று பொய்யாகப் பாண்டியனுக்கு ஓலை அனுப்பியவர் என்ற எண்ணம் தோன்றும். அதனை மறுத்துரைக்கும் முறையில் 'பொய் அடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்' என்று கூறினார். அமைச்சராயிருந்தவரைப் புலவர் என்று கூறுதல் சரிதானே! ஆனால் தனியடியார்கள் அனைவரையும் பெயர் கூறியே பாடி வரும் பொழுது மணிவாசகரை மட்டும் 'புலவர்' என்ற பெயரால் குறிப்பிடுவது ஏன் என்பன போன்ற வினாக்கட்கு விடை கிடைப்பது அரிது. இக்கருத்து என் தந்தையாரவர்கள் எழுதியவையாகும்.

இக்கருத்துப்படி மணிவாசகர் தேவார மூவர்க்கும் முற்பட்டவர் என்றுகொண்டால் தேவார மூவருள் ஒருவராவது இவரைக் குறிப்பிடாத காரணம் யாது? சுந்தரமூர்த்திகள் திருத்தொண்டத் தொகையில் 'பொய்யடிமை இல்லாத புலவர்' என்று குறிப்பிட்டது இவரையே என்று கொண்டால் அவர் தேவாரத்துள் யாண்டும் மணிவாசகர் பற்றிய குறிப்பு வாராமை ஏன்? பிற இடங்களில் திருவாதவூரர் பற்றிய குறிப்பு வரவில்லையாயினும் சிதம்பரம், மதுரை என்ற இரண்டு இடங்களுக்கு மூவரும் சென்று பாடியுள்ளனரே! அவ்வாறு சிதம்பரம் சென்றால் திருவாசகத்தின் பொருள் சிற்றம்பலக் கூத்தனே என்று காட்டிவிட்டு அவன் திருவடியடைந்த மணிவாசகரைப் பற்றிக் கேள்விப்படாமலா இருந்திருப்பார்? எங்கோ, என்றோ வாழ்ந்த காரைக்காலம்மையார், தலையால் நடந்த ஊர் என்று அஞ்சி அதனுட் புகாது திருவாலங்காட்டு எல்லையில் நின்றே ஞானசம்பந்தர் பாடுகிறாரே. அவ்வாறு இருக்க மணிவாசகரையும் திருவாசகத்தையும் பாடாமல் விட்டிருப்பார்களா?

சுந்தரமூர்த்திகள் 'நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்' என்று தொடங்கும் திருப்புன்கூர்ப் பதிகத்துள் உலகியல் நிலையில் நின்று காண்பார் குற்றம் என்று கூறக் கூடிய

செயலைச் செய்தவர்கள் பட்டியல் ஒன்று தருகிறாரே! அப் பட்டியலிற்கூட மணிவாசகர் பெயர் கூறப்படவில்லை என்பதை நோக்க மணிவாசகர் தேவார மூவர்க்கும் பிற்பட் டவர் என்ற முடிபே வலியுறுகின்றது.

அப்படியானால் மணிவாசகர் ஏன் மூவர் முதலிகள் பற் றிப் பாடவில்லை என்பதும் ஆய்தற்குரியது. ஏனைய மூவர் போல மணிவாசகர் பிறருடைய வரலாற்றில் ஈடுபட்டுப் பாடியதாகவே அறியக்கூடவில்லை. கண்ணப்பர் ஒருவர் வரலாறு தவிரப் பிற 'அடியார்கள் யார் பற்றியும் அவர் குறிக்கவில்லை. மேலும் திருக்கோவையாரில் 20க்கு மேற் பட்ட புராணச் செய்திகள் இடம் பெறுகின்றன. ஆகம நூற் கருத்துக்கள் பெரிதும் இடம் பெற்றுள்ளன. (பன்னிரு திரு முறை வரலாறு —2. திரு. க. வெள்ளை வாரணனார் பக் 271, 2) என்றாலும் இக்கருத்து மேலும் ஆராய்வதற்குரிய யது. இதில் ஏதேனும் உண்மை புலப்பட்டால் மணிவாசகர் மூவருக்கும் முற்பட்டவர் என்பது பெறப்படலாம்.

மூவர் காலத்துக்கும் முற்பட்டவர் என்று கூறுவதில் பல இடர்ப்பாடுகள் உண்டு. ஞானசம்பந்தர் காலத்திய வழி பாட்டு முறைக்கும், மணிவாசகர் காலத்திய வழிபாட்டு முறைக்கும் வேறுபாடு நிரம்ப உண்டு. இயற்கையில் இறை வனைக் காண்கிற சூழ்நிலை ஞானசம்பந்தர், அப்பர் காலத்தே இருந்து வந்தது. இது சுந்தரர் காலம் வரை ஓரளவு நீடித்தது எனலாம். 'சம்பிரதாயங்கள்' கிரியைகள் என்பன ஞானசம்பந்தர் காலத்தில் அத்துணைச் சிறப்புப் பெற்றிருக்கவில்லை. புறச்சமயத்திலிருந்து சைவ சமயத் திற்கு மீண்ட திருநாவுக்கரசருக்கு, எவ்வித பிராயசித்தமும் இன்றித் திருநீற்றை அளித்துக் கோயிலுக்குப் போகுமாறு ஏவிவிட்டார் அவர்தம் தமக்கையார்.

மூவர் காலத்தில் ஆகமங்கள் மணிவாசகர் காலத்துப் பெற்ற சிறப்பைப் பெறவில்லை. மணிவாசகர் ஆகமங்கள் பற்றிப் பன்முறை பேசுகிறார்.

ஞானசம்பந்தர் காலத்தில் இறைவிக்குத் திருக்கோயில் களில் தனி இடம் இருந்ததாகத் தெரியவில்லை. அப்படியே இருந்திருப்பினும் இறைவியைத் தனியே விவரித்துப் பாடும் மரபு இருந்ததாகத் தெரியவில்லை, உமையொரு பாகனாக இறைவனைப் பாடும் மரபும், கங்கையைத் தாங்கியவன் என்று பாடும் மரபும் உண்டே தவிர இறைவியைத் தனியே பாடும் இயல்பு இல்லை. சிவன் கோயிலில் உமைக்குத் தனிப் பகுதியை முதன் முதலில் ஏற்படுத்தியவன் முதலாம் குலோத் துங்கனே என்றும் கூறுவர் அறிஞர். அன்றியும் இராச ராசனுடைய தேவாரப் பதியக் கல் வெட்டில் மூவர் பெயரு டைய தேவாரம் பாடுவார் காணப்படுகின்றனரே யன்றித் திருவாதவூரன் என்ற பெயரையோ, மாணிக்கவாசகன் என்ற பெயரையோ உடைய பதியம் பாடுவார் யாரையும் காண முடியவில்லை. அவனுக்கு முந்திய கல்வெட்டுக்களி லும் இப்பெயர் காணப்படவில்லை. இவை இரண்டு செய்தி களும் அடிகள் பிற்காலத்தவர் என்ற கட்சிக்கு வலுத்தரு கின்றன என்பது காரைக்குடி திரு சா. கணேசன் அவர் களுடைய கருத்தாகும்.

இதன் எதிராக மணிவாசகர் இறைவியின் குழற் சிறப்பு, அணிச் சிறப்பு, இடையழகு என்பவைபற்றியும் 47 இடங்களில் பாடுதல் அவர் காலத்தாற் பிற்பட்டவர் என்பதை அறிவிக்கிறது.

அடிகள் 'ஏகன் அநேகன்' போன்ற மொழிகளால் இறைவனைப் பாடுவதும், சமணத்தை விட்டுவிட்டு பௌத் தத்தைச் சாடுவதும் இவர் களப்பிரர் (சமணர்) இடை யீட்டுக்கு மிகவும் பிற்பட்டவர் என்பதைக் காட்டுகின்றன. 'மிண்டிய மாயா வாதமென்னும் சண்டமாருதம்' என்ற அடியால் குறிப்பிடப்படும் 'மாயா வாதம்' மறைமலையடி கள் கருத்துப்படி ஆதிசங்கரருக்கு முற்பட்டது என்று கூறுதல் பொருந்துமாறில்லை. 'மிண்டிய' என்ற அடை மொழியும், 'சண்டமாருதம்' என்ற அடையும் கவனிக்கத்

தக்கன. 'அத்வைதம்' பெரு வழக்காகப் பரவியதும் அது இரண்டாகப் பிரிந்ததும், 'மாயாவாதக் கொள்கை' வலுப் பெற்றதும் சங்கரருக்குப் பின்பேயாம்.

மூவரும் குறிப்பிடாத பல திருவிளையாடல்களை அடிகள் குறிப்பது ஆயத்தக்கது.

1. அட்டமா சித்தி உபதேசித்தது—(2—63)
2. மெய்க் காட்டிட்டது—(2—67)
3. விருத்தகுமார பாலரானது—(293)
4. பன்றிக்குட்டிக்குப் பால் தந்தது—(4—166)
5. கரிக்குருவிக் கருளியது—(4—209)
6. தண்ணீர்ப் பந்தல் வைத்தது—(2—59)
7. இரசவாதஞ் செய்தது—(2—17)
8. வலை வீசியது—(589)
9. வளையல் விற்றது—(596)

இவற்றையெல்லாம் நோக்குமிடத்து அடிகள் மூவருக்கும் காலத்தாற் பிற்பட்டவர் என்ற கருத்தே வலியுறுகின்றது.

வரகுண பாண்டியன் என்பவனை அடிகள் திருவாசகத்தும், திருக்கோவையாரிலும் பெயர் கூறியே குறிப்பிடுகின்றார்.

'நரகொடு சுவர்க்க நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி' என்றும்
(போ. அக. 213, 14)

'வரகுணனாம் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்' (கோவை 306) என்றும் பாடுகிறார். இவ்வாறு அடிகளே கூறுவதனால் அவன் பெரிய சிவபக்தனாக இருத்தல் வேண்டும் என்பது ஒருதலை. இவ் வரகுணன் செயல்களா

கப் பலவற்றை எடுத்துக்கூறி, இறுதியாகப் 'பெரிய அன்பின் வரகுண தேவரும்,(திருவிடை. மு. கோ. 29)என்று பட்டினத்துப் பிள்ளையார் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் இவனைப் பற்றிப் பாடுகிறார்.

அவ்வாறானால் வரகுணன் என்று பெயர் பூண்டிருந்த பாண்டியனைக் கண்டு விட்டால் அடிகள் காலம் தெள்ளிதாக அறியப்படலாமே என்று நினைக்கலாம். இரண்டு வரகுண பாண்டியர்கள் இருந்ததை அறிய முடிகிறது. முதலாம் வரகுண பாண்டியன் கலியாண்டு 3871க்குச் சரியான கி.பி. 770ல் ஆட்சி புரிந்தவன். இவன் முதல் பராந்தகன் என்றும் குறிக்கப்படுகிறான். இவனை அடிகள் குறிப்பிட்டார் என்று திரு. பண்டாரத்தார் கூறுவதையும் ஒப்ப முடியவில்லை. காரணம் இவன் போர் விருப்பனே தவிரப் பக்தி வலையிற்பட்டவன் அல்லன்.

அவ்வாறானால் இரண்டாம் வரகுணன் யார் என்று காண்டல் தேவைப்படுகிறது. இவன் கி. பி. 862 முதல் 880 வரை அதாவது 9-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சி புரிந்துள்ளான். இவனைப்பற்றிய சிறப்பான செய்தி யாதெனில் இவன் காலத்திலேயே இவனுடைய தம்பியாகிய வீரநாராயணன் என்பவன்தான் ஆட்சி செய்து வந்துள்ளான். மன்னனாகிய இரண்டாம் வரகுணன் பற்றி ஒரு சாசனம் மிக முக்கியமான செய்தி ஒன்றைக் குறிப்பிடுகிறது. வேறு எந்தப் பாண்டியனுக்கும் கூறப்படாத சிறப்பை இவனுக்கு வழங்குகிறது தளவாய்புரம் செப்பேடுகள்.

இந்த தளவாய்புரச் செப்பேடுகள் ஆலவாயின் அவிர் சடைக்கடவுள் இயற்றிய பல திருவிளையாடல்களைக் குறிப்பிடுகிறது. 1. இந்திரன் முடிமேல் வளை எறிந்தது 2. இந்திரன் மாலையை அணிந்தது. 3. சங்கம் நிறுவியது. ஆகிய மூன்று செய்திகளை 98 வது வரியில் குறிப்பிட்டு விட்டு அன்றைய ஆட்சி மன்னனாகிய இரண்டாம் வர

குணன் பற்றி 108. 109வது வரிகளில் கீழ்வருமாறு பேசுகிறது.

வரி. 108—...ஒளிறிலைவேல் உபாயபஹுலன் உம்பர்
வான் உலகணைந்தபின் மற்றவற்

வரி. 109—கு மகனாகிய கொற்றவனெங்கோ வரகுணன்
பிள்ளைப் பிறைசடைக்கணிந்த பினாகபாணி

வரி. 110—எம்பெருமானை உள்ளத்திலினி திருவி
உலகங் காக்கின்ற நாளில்

இம் மன்னனைப்பற்றி வேறு ஒரு விசேடமும் அச்செப்பேடு குறிப்பிடவில்லை என்பதும் அம் மன்னன் காலத்திலேயே அவன் தம்பி வீரநாராயணன் ஆட்சியை மேற்கொண்டிருந்தான் என்பதும், அந்த வீரநாராயணனே இந்தச் செப்பேட்டை வழங்கினான் என்பதும் காணும் இடத்து இதிற் குறிக்கப் பெற்ற வரகுணனே நாம் தேடும் வரகுணன் என்பது புலனாகிறது. எல்லையற்ற இறையீடுபாடு காரணமாக ஆட்சிப் பொறுப்பில் அதிக நாட்டங் கொள்ளாமல் இருந்தான் வரகுணன் என்றும் அதனாலேயே அவன் தம்பி வீரநாராயணன் அண்ணன் உயிருடன் இருக்கும்போதே ஆட்சிப்பொறுப்பை மேற் கொண்டிருந்தான் என்றும் நினைக்க இடமேற்படுகிறது 'பிள்ளைப் பிறைச் சடைக்கணிந்த பினாகபாணியை உள்ளத்தில் இனிது இருவி உலகத்தை ஆண்டான்' என்று செப்பேடு கூடக் கூறிவிட்டது என்றால் பட்டினத்துப் பிள்ளையும், மணிவாசகரும் குறிப்பிடும் அளவுக்கு எல்லையற்ற பக்தி பூண்டு வாழ்ந்தவன் இவனே என்பதும் பெறப்படும். அன்றியும் வீரநாராயணன் அண்ணன் பெயரால் ஆட்சி செய்ததுபோல மணிவாசகரைத் துன்புறுத்தவும் முற்பட்டிருப்பான் என்று நினைக்கவும் இடமுண்டு.

இது உறுதிப்படுமானால், மணிவாசகப்பெருமான் 9 ஆம் நூற்றாண்டின் இறுதியில் திகழ்ந்தார் என்று கொள்வதில் தவறு இல்லை.

புலமை நயம் என்ற தலைப்புக் கொடுக்கப்பட்டிருப்பினும் திருவாசகம் புலமை நயந் தெரிவதற்காக ஏற்பட்ட நூலன்று என்பதை நினைவில் கொள்வது நலம். ஒரு பொருளை ஆராயப் புகுமுன்னர் அது எதுபற்றியது என்ற தெளிவான எண்ணம் இருத்தல் வேண்டும். 'சி. எஸ். லூயி' என்பார் மில்டனுடைய 'சுவர்க்க நீக்கத்து'க்கு ஓர் அழகிய திறனாய்வு வரைந்துள்ளார். அந்நூலின் தொடக்கத்தில் திறனாய்வு செய்பவன் கவனிக்க வேண்டிய ஒன்றை வலியுறுத்துகிறார்.

"புட்டிகளின் மூடியைத் திறப்பதற்குரிய ஸ்க்ருவையும் (Cork screw) மாதா கோவிலையும்பற்றி ஆயத் தொடங்கு முன், முன்னது புட்டிகளைத் திறப்பதற்காக அமைந்தது என்பதையும் பின்னது மக்கள் சென்று வழிபடுவதற்காக அமைந்தது என்பதையும் மனத்துட் கொள்ள வேண்டும்.

கார்க் ஸ்குரு என்பது காய்கறி நறுக்குவதற்கு ஏற்பட்டதென்றும், மாதாகோவில் சீட்டுக் கச்சேரி நடத்த ஏற்பட்ட இடம் என்றும் நினைப்பவன் அவை இரண்டுபற்றியும் ஆராயாமல் இருப்பதேமேல்" என்பது லூயியின் கூற்று. அதே போலத் திருவாசகம் எத்தகையது என்பதை அறிந்து கொள்ளாமல் அதன் புலமை நயத்தைப் பேசப் புகுவது முறையன்றுதான். ஆனால், திருவாசகம் ஓர் இலக்கிய நூலன்று என்பதையும், மலங் கெடுத்து மனங் கரைக்க ஏற்பட்ட பக்தி நூல் என்பதையும் நன்கு அறிந்துகொண்ட பிறகு அதுபற்றி ஆராயப் புகுவதில் தவறு இல்லை.

திருவாசகத்தில் புலமை நயம் உண்டு என்று கூறுவது தேவையில்லாத ஒன்று 'கல்வி என்னும் பல்கடற் பிழைத்து'க்(4—38)'கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்' (556) என்று பாடிய ஒரு பெருந்தகையின் பாடல்களில் கவிதை நயம், சொல் ஆட்சி, இனிய ஓசை முதலியன அமைதலில் வியப்பு ஒன்றும் இல்லை. என்றாலும்,

இவற்றைத் தேடவேண்டிய இடம் திருவாசகம் அன்று என்பதை மட்டும் மனத்துட் கொள்ள வேண்டும்.

திருக்கோவையாரும் அடிகள் இயற்றியதுதான். எனினும் திருவாசகத்திற்கும் திருக்கோவையாருக்கும் வேறுபாடு நிரம்ப உண்டு. முன்னது அனுபவம் ஒன்றையே சாறாகப் பிழிந்து தருவது; பின்னது புலமை நயந்தெரி பாடலாகும். கோவை, மரபு பற்றிப் பாடப் பெற்றது. திருக்கோவையாரை அடுத்துப் பல்வேறு கோவைகள் தோன்றின. இதற்கு முன்னரே கூடப் 'பாண்டிக் கோவை' என்ற நூல் தோன்றியிருந்தது. இறையனார் களவியல் உரையில் எடுத்து ஆளப் பெறும் கோவைப் பாடல்கள், பாண்டிக் கோவையிலிருந்து எடுக்கப் பெற்றவை யாகும். ஆதலின், புலமை நயந்தெரியத் திருக்கோவையாரிடம் செல்வதில் தவறில்லை. அதுவும் பக்தியை ஊட்டுவதாயினும் முதலாவதாக அதனை ஓர் இலக்கியம் என்றுதான் கொள்ளல் வேண்டும்.

திருவாசகத்தை இதுவரை யாரும் இலக்கியம் என்று கூறினதில்லை. காரணம், ஓர் அனுபவ நூல், அதனை ஆக்கியவருடைய அனுபவத்தைமட்டும் எடுத்துக் கூறுமே தவிர, அனைவருக்கும் பொதுவான சுவை பேசும் இலக்கியம் ஆகாது. கம்பன், மில்டன் என்ற கவிஞர்களைப் போன்று இலக்கிய நயந் தெரிவிப்பதற்காக அடிகள் திருவாசகத்தைப் பாடவில்லை என்பதை மறவாமல் மனத்தில் இருத்தல் வேண்டும். கவிதை, சிறப்புடன் அமைகிறதா என்ற ஆராய்ச்சியே திருவாசகத்தில் தேவைப்படுவதன்று.

இந்த எண்ணத்துடன் திருவாசகத்தில் நுழைந்தால் ஆசிரியரையும் அறியாமல் அமைந்துவிட்ட சில கவிதை நயங்களைக் காணலாம். இந்நூலை ஆக்கியவர் பெருங் கல்விக் கடல் என்பதையும், தம் அறிவுத் திறங் காரணமாக அமைச்சராகத் தேர்ந்து எடுக்கப்பட்டவர் என்பதையும் நினைக்கும்பொழுது இவருடைய அறிவுக் கூர்மை

இவருடைய பாடல்களில் நிச்சயமாகப் பிரதிபலிக்கும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை. அவருடைய உணர்வு உலகம் எத்துணை விரிந்ததோ அத்துணைப் பெரியது அவருடைய அறிவுலகுமாகும் என்பதனைத் திருவாசகம் நன்கு காட்டுகிறது.

திருவாசகத்தைப் பேச எடுத்துக்கொண்டு அதன்கண் காணப்பெறும் பக்திப் பெருக்கத்தைப் பேசாமல் இலக்கிய நயம், விஞ்ஞானப் புதுமை என்பவைபற்றி ஏன் பேச வேண்டும்? பக்தியைப் பெருக்க எழுந்த நூலில் இவற்றைப் பற்றி ஆராய்வது சரியன்று என்று இப்பொழுதுதானே கூறினாய் என்று கேட்கப்படலாம். உண்மையைக் கூறவேண்டுமானால் இதனை மனத்துட் கொண்டே இவ்வாறு பேச முற்படுகிறேன். காரணம் யாது? நேற்றைச் சொற்பொழிவில் திருவாசகம் இந்த அணுயுகத்திற்கும் மிகவும் தேவைப்படுகிற நூல் என்று கூறினேன் அல்லனோ? அந்த அடிப்படையில் தான் திருவாசகத்தில் விஞ்ஞானம் என்ற பகுதியைப் பார்க்கப்போகிறோம்.

இன்றைய இளைஞர் உலகம் யாருடைய கொள்கைகளை ஏற்றுக் கொள்கிறது? விஞ்ஞானி ஒருவன் மட்டுமே இன்றைய இளைஞர் உலகத்தில் அறிவுடையவனாக. வாழ்க்கைக்கு வழி காட்டுபவனாகக் கண்ணில்படுகிறான். அந்த விஞ்ஞான அறிவு படைத்த ஒருவனே அதனாற் பயனில்லை என்று கூறுவானேயானால் இன்றைய உலகம் அதனைக் காதுகொடுத்துக் கேட்கத்தானே வேண்டும். வெறும் பக்தி மட்டுங் கொண்ட ஒருவன் எத்துணைத் தூரம் அதனுடைய பெருமையை எடுத்துக் கூறினாலும் அது செவியில் நுழையாது. ஆனால், அறிவுத் துறையிலும் துறைபோகிய ஒருவன் "அறிவுத் துறையில் சென்று பார்த்தேன்; அதிகம் பயன் விளையவில்லை; மீண்டும் வந்துவிட்டேன்; இதோ இந்த உணர்வுத் துறைதான் நம் துயரத்தைப் போக்கக் கூடியதாக அமைந்துள்ளது" என்று கூறினால் அது பெரிதும் போற்றி ஏற்றுக் கொள்ளப்பெறும் என்பது

னாலேயே திருவாசகம் காட்டும் விஞ்ஞான உலகைக் காட்ட முற்படுகிறேன்.

ஓயாது இளைஞர்களுடன் பழகும் காரணத்தாலும் ஓயாமல் ஊர்சுற்றிக்கொண்டு வருவதாலும் இன்றைய இளைஞர் சமுதாயம் என்ன நினைக்கிறது; எதில் ஈடுபடுகிறது; ஏன் அவதிப்படுகிறது என்பவற்றை அறியும் வாய்ப்பைப் பெற்றுள்ளேன். மணிவாசகர் மற்றொரு சந்தர்ப்பத்தில் கூறியதுபோல இன்றைய சமுதாயம் 'இனி என்னே உய்யுமாறு' என்று எண்ணிக் கலங்கி நிற்கிறது. இதனைக் காணுகின்ற நான் திருவாசகம் நமக்கு விடை தருகிறது என்று நினைக்கிறேன்.

திருப்பெருந்துறையில் பாண்டி மன்னனின் அமைச்சராயிருந்த திருவாதவூரர் ஒரு பெரிய முழு மாற்றத்தைப் பெற்று (Metamorphosis) மாணிக்கவாசகராக மாறி விடுகின்றார். அவ்வாறு மாறுவதற்கு முன்பு திருவாதவூரராக இருந்த நிலையில் பல கலைகளையும் கற்றுத் தேர்ந்த அவர், சிறந்த அறிவு படைத்த அறிவுவாதியாக இருந்தபொழுது கண்ட சில புதுமைகள் அவருடைய திருவாசகப் பாடல்களிலும் இடம் பெறுகின்றன.

15-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு மேலை நாட்டார் கண்ட சிலவான இயல் புதுமைகள் 9-ஆம் நூற்றாண்டில் தோன்றிய திருவாசகத்தில் இடம் பெறுகின்றன. இன்று, அறிவுலகம் என்றும் விஞ்ஞானம் படைத்த உலகம் என்றும் நம்மால் புகழப்படும் மேனாட்டார், உலகம் தட்டையானது என்றும் சூரியன்தான் பூமியைச் சுற்றிவருகிறது என்றும் கூறிக்கொண்டிருந்த காலத்தில் 'கலிலியோவும்' 'கோப்பர் னிகசும்' முறையே தம் தொலைநோக்கியாலும், கணித அறிவாலும் இவ்வுலகம் உருண்டை வடிவானது என்றும், இவை அனைத்தும் சூரியனைச் சுற்றி வருகின்றன என்றுங் கூறினர். அவ்வாறு அவர்கள் கூறினமைக்குக் கிடைத்த பரிசு யாது என்பதை நாம் அறிவோம்.

ஆனால், இவர்கள் இருவரும் தோன்றுவதற்குப் பன்னூறு ஆண்டுகளின் முன்னரே திருவாசகம் சில விஞ்ஞான மெய்ம்மைகளைக் (Facts) கூறிச் செல்கிறது.

இங்குக் கூறப்பெற்ற மெய்ம்மைகளை மணிவாசகர் எங்ஙனம் கண்டார்? வெறும் கற்பனையில் எழுந்தவை அல்ல இச் சொற்கள் என்றால் இவற்றைத் தம் கூர்த்த அறிவின் துணைகொண்டும், கற்றறிவின் துணைகொண்டும் கண்டிருத்தல் வேண்டும். அவ்வாறாயின் அவர் உணர்வின் துணைகொண்டு மணிவாசகராக மாறுவதற்கு முன்னர் அறிவின் துணைகொண்டு கண்ட விஞ்ஞான மெய்ம்மைகள் பிற்காலத்தில் பக்திமானாக மாறிய காலத்திலும் கை கொடுத்து உதவியுள்ளன. வேறு வகையாகக் கூறுமிடத்து விஞ்ஞான அறிவு சமய உணர்வுக்கு உரம் ஊட்டுவதாக அமைந்துள்ளதே தவிர அதனை மறுத்துரைக்கவோ எதிர்க்கவோ செய்யவில்லை.

இனி, சிவபுராணம் என்ற தலைப்புடன் விளங்கும் திருவாசகத்தின் முதல் அகவற்பாடலில் உயிர்களின் தோற்றத்தில் ஏற்படும் கூர்தல் முறை (Evolution) பேசப்படுவதை நாம் அறிவோம்.

'புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்துஇளைத்தேன் எம்பெருமான்'

உயிர்வளர்ச்சி முறை கூர்தல் அறத்தின் (Evolution) பாற்படும் என்பதை இவர் அறிந்திருந்தார் என்று காட்டவே இது பேசப்படுகிறது. இத் தொகுப்பினுள் முதுகு எலும்பு உள்ளவை, முதுகெலும்பு அற்றவை, குளிர்ந்த இரத்தப் பிராணிகள், சூட்டிரத்தப் பிராணிகள் ஆகிய அனைத்தும் இடம் பெறுதல் காணலாம். விஞ்ஞான அடிப்படையில்

கூர்தல் அறத்தைப் பேச வரவில்லையாதலால் அதில் வரிசைக் கிரமம் பேசவேண்டிய தேவை அவருக்கில்லை. ஆனால், டார்வின் இக் கூர்தல் முறையைப் பற்றி 1859ஆம் ஆண்டில் கூறுமுன்பே மணிவாசகர் இக் கருத்தை அறிந்து கூறிச் செல்கிறார். 'திரு அண்டப்பகுதி' என்பது திருவாசகத்தில் உள்ள மூன்றாவது அகவல். இப் பாடலுக்கு விளக்கம் தர வந்த இடைக்காலப் பெரியோர்கள் 'சிவனது தூல சூக்குமத்தை வியந்தது' என்று கூறினார்கள். இப் பாடலில் முதல் ஐந்து வரிகள் மட்டும் கீழே தரப்படுகின்றன.

'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றஎழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்
சிறிய ஆகப் பெரியோன்...........'

இதன் பொருள் : "அண்டமாகிய பேருலகின் பகுதிகளில் உருண்டை வடிவமான பெருக்கம் அளத்தற் கரிய தன்மையுடையனவாய், வளமிக்க காட்சியுடையனவாய், ஒன்றை யொன்று அடுத்து நிற்கும் நிலையினை அளவிட்டுக் கூறப் புகுந்தால் நூறு கோடியின் மேம்பட்டனவாகும். இத் துணைப் பெரிய அண்டம் முழுவதும், வீட்டினுள் இருளில் நுழையும் சூரிய கிரணங்களில் காணப்பெறும் சிறிய அணுக்கள் போல உள்ளது என்று கூறும்படி அவ்வளவு பெரியோனாக விரிந்தும் பரந்தும் உள்ளான் இறைவன்."

இப்பாடலில் காணப்பெறும் சில விஞ்ஞான உண்மைகளை மட்டும் எடுத்துக்கொண்டு அவை தற்காலப் விஞ்ஞானப் புதுமைகளுடன் எவ்வளவு ஒத்துள்ளன எனக் காண்போம். 'அண்டப்பகுதி' என்று பெருமான் கூறியதை இற்றை நாளில் 'Universe' என்று கூறுகிறோம். அதில் உள்ள 'உண்டைப் பிறக்கம்' என்பதனை 'Galaxies' என்று கூறுகிறோம். 'நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன'

என்பதனை 'Expanding Universe' என்கிறோம். 'அண்டமாகிய பெரும் பகுதியில் நூறு கோடியின் மேலாக உண்டைகள் பெருக்கமுற்று விரிந்தன' என்கிறார். பெருமான் பக்தர் ஒருவர் பக்தி மேலீட்டால் கண்ணை மூடிக்கொண்டு 'அளந்தவை' யல்ல இவை என்பதை நன்கு மனத்தில் பதித்துக்கொண்டு கீழ்வரும் விஞ்ஞானிகள் கூறும் கூற்றைச் சற்றுக் காணவேண்டும்.

'ஐன்ஸ்டினின் கணக்கின்படி இவ்வண்டத்தின் அரைவிட்டம் (Radius) *3,500* கோடி ஒளி வருடங்கள். இதனை நாமறிந்த மைல் கணக்கில் *210*ன் பிறகு *21* பூஜ்ஜியங்கள் என்று எழுத வேண்டும்; அதனைப்படிக்கக் கூடியவர்கள் படித்துப்பார்க்கட்டும். ஒரு வினாடிக்கு *186,000* மைல்கள் வேகம் செல்லக்கூடிய சூரிய ஒளியானது அண்டத்தில் ஓரிடத்தில் புறப்பட்டு அதனைச் சுற்றிக் கொண்டு மீட்டும் புறப்பட்ட இடத்திற்கு வர *20,000* கோடி மானிட வருடங்கள் ஆகும்.'[1] மணிவாசகப் பெருமான் கூறியபடி அண்டப்பகுதி

1. Applied to Einstein's field equations this figure yields a positive value for the curvature of the universe, which in turn reveals that the radius of the universe is 35 billion light years or 210, 000, 000, 000, 000, 000, 000, 000 miles. Einstein's universe, while not infinite, is nevertheless sufficient by enormous to encompass billions of galaxies, each containing millians of flaming stars and incalculable quantities of rarefied gas, cold systems of iron and stone and cosmic dust. A sunbeam setting out through space at the rate of 186, 000 miles a second would in this universe, describe a great cosmic circle and return to its source after a little more than 200 billion terrestrial years:- 'The universe & Dr. Einstein's by Lincoln Barnett, Page. 105.

யில் உள்ள உண்டைகளின் பெருக்கம் நூறு கோடியின் மேம்பட்டன என்பதை இற்றைநாள் வானநூலார் ஒப்புக்கொள்வது மட்டுமன்று; அவை எண்ணி மாளாதவை என்றே கூறுகிறார்கள். அடிகளும் 'நூற்றொரு கோடியின் மேற்பட என்ற சொல்லால் அவை எண்ணி மாளாதன என்ற கருத்தையே வலியுறுத்துகிறார்.

மனத்திற்கு மயக்கந்தரும் இக் கணக்கு ஒருபுறம் நிற்க, அடிகள் பாடலின் நான்காவது அடியின் கடைசிச் சொல் நம் வியப்பை இன்னும் மிகைப்படுத்துகிறது. அச்சொல் 'விரிந்தன' என்ற ஆழமான பொருளையுடைய சொல். ஏனைய நாடுகளோடு மிகுதியும் தொடர்புடைய தமிழர்கள் அற்றைநாளில் வானநூற் புலமையுடையவர்களாக இருந்திருப்பர் என்றே நினையவேண்டி உளது. 'உண்டை' என்ற இந்த ஒரு சொல்லால், 'கோப்பர்நிகஸ்'(Copernicus) உலகம் உருண்டை வடிவமானது என்று கூறுமுன்பே இத் தமிழர் அண்டத்தில் உலவும் உலகங்கள் அனைத்தும் உண்டை வடிவம் உடையன என்று கூறியதைக் கண்டோம். அதனினும் பார்க்க வியப்பானதாகும். 'அவ்வுண்டைகள் விரிந்தன' என்று கூறியது இற்றை நாள் வான நூலாரும் அண்டம் விரிந்துகொண்டே செல்கிறதென்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

''அண்டத்தில் அரைவிட்டம் ஒளி அலைகளைவிட வேகமாகப் பெருகிக் கொண்டே செல்லுகிறது; இன்னும் வேகமாகப் பெருக ஏதுவும் உண்டு. இப்பொழுதுகூட ஓரிடத்தில் இருந்து புறப்பட்ட ஓர் ஒளி அலை அண்டத்தைச் சுற்றிவர இயலாதபடி அதன் பரிதி விட்டம் மிகுந்துகொண்டே செல்கிறது.''[1] இங்குப் பேசப் பெற்ற விரிவின் வேகத்தைக் கணக்கிட்டு ஒருவாறு தருகிறார் ஐன்ஸ்டீன்.

---

1. It is probable that the radius of space is already increasing faster than the velocity of light, and this rate of expansion will grow greater. Already it would be impossible for a ray of light to go all round the world, for the circumfrence of the world is growing faster than light could overtake it... J. W. N. Sullivan in Limitations of Science. Page. 21.

"விண்மீன் மண்டலத்தின் உள்ளே இயங்கும் நமது சூரிய மண்டலம் வினாடிக்கு 13 மைல் வேகத்திலும், இவ்விண்மீன் மண்டலம் பால் வெளிக்குள் (Milky way) வினாடிக்கு 200 மைல் வேகத்திலும், இப்பால்வெளி இன்னும் தூரத்திலுள்ள மண்டலங்களை நோக்க வினாடிக்கு 100 மைல் வேகத்திலும் விரிந்து போகின்றன; இவை அனைத்தும் வெவ்வேறு திசைகளில் செல்லுகின்றன என்பதே விந்தை.[1]

"அண்டத்திற்குப் பரிமாணம் என்பதில்லை, ஏன் எனில் அது விரிந்துகொண்டே செல்கிறது. சில ஆண்டுகளாகவே இவ்விரிவை விஞ்ஞானிகள் அறிந்துள்ளனர். இவைகளின் விரிவு வேகத்தைக் கணக்கிட்டே அண்டத்தின் விரிவை அறிகிறோம்."[2]

---

1. The entire solar system, more over, is moving within the local star system at the rate of 13 miles a second; the local star system is moving within the Milky Way at the rate of 200 miles a second; and the Milky Way is drifting with respect to the remote external galaxies at the rate of 100 miles a second and all in different directions! "A distant universe in the constellation of Bootes has been found to be receding with a velocity of 24,300 miles a second"—"The Universe & Dr. Einstein," Page. 44 & 'Life in Other World" Page. 19.

2. Space has no definite volume, for it is continually expanding. It has been known for some years that they are scattering apart rather rapidly, and we accept their measured rate of recession as a determination of the rate of expansion of the world...Limitations of science, Page. 12.

---

அண்டம், அதிலுள்ள உண்டைகள், அவற்றின் விரியும் இயல்பு என்பவை பற்றி மணிவாசகர் கூறியன போக இன்னும் எத்தனையோ உண்மைகளும் கூறப்படுகின்றன. பருமைக்கு உதாரணமாக இவ்வண்டத்தைக் கூறி இறைவன் இதனைவிடப் பெரியோன் ஆகலின் அவன் பெருமையை நோக்கக் கற்பனைக்கடங்காத இவ்வண்டமும் துன்அணுவை ஒப்பச் சிறியதாய்விட்டது என்கிறார். அண்டத்தைப் பற்றி அவர் அறிந்திருந்தது போலவே அணுவைப் பற்றியும் அறிந்திருந்தார். இவ்விடத்தில் அணுவுக்கு 'துன் அணு' என்ற அடைமொழி தரப்பட்டுள்ளது. இனி மற்றொரு பாடலில் அணுவும் பிரிந்து சிறிதாம் தன்மை பேசப்படுகிறது. 'இன்று எனக்கருளி' என்று தொடங்கும் 'கோயில் திருப்பதிம்' ஏழாம் பாட்டில் 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்' என்று பாடிச் செல்கிறார். மேலும் 'அணுத்தரு தன்மையில் ஐயோன் காண்க' (அண்டப் பகுதி-45) என்றும் பேசுகிறார். ஒரு காலத்தில் சிறந்த விஞ்ஞானியாகிய டால்டன் (Dalton) என்பார், 'உடைக்க முடியாதது' என்ற பொருள்பட இதற்கு அணு(Atom) என்று பெயரிட்டார். ஆனால், இற்றை நாளில் இவ்வணுவை உடைத்து இதனுள் ஓர் உலகமே இயங்குகிறது எனக் கூறுகிறார்கள். அணுவினுள் அடங்கியிருக்கும் இவ் வியக்கத்தகு தன்மையைத்தான் அடிகள் 'அணுத்தரு தன்மையில் ஐயோன்' என்று கூறினார் போலும். ''ஐயோன் என்ற சொல்லுக்கு 'மிகச் சிறியவன்' என்பது ஒரு பொருள். அன்றி 'ஐ வியப்பாகும்' என்ற தொல்காப்பியனார் கருத்துப்படி அணுவினுள் வியத்தகு முறையில் மின் அணுவாய்(Electron) பரமாணுவாய் (Proton) நியூட்டரானாய் (Neotron), பாசிட்ரானாய் (Positron) விளங்கும் சக்தி வடிவங்களைத்தான் அடிகளார் குறிப்பிட்டாரோ, ஏதோ அறியோம்!

இனி முக்கூட்டுப் பரிமாணம் (Three Diamensional) உடைய உலகத்தையும் (எல்லா உலகங்களும் இச்சொல்லால் குறிக்கப் பெறுகின்றன) அவ் வுலகம் தோன்றி யழிய இடந்

தருகின்ற விசும்பையும் ஆசிரியர் அறிந்திருந்தது வியப் பன்று. 'காலம்' என்று கூறப் பெறும் நான்காவது பரி மாணத்தை இம்மூன்று பரிமாணமுடைய உலகத்தோடு தொடர்புபடுத்திக் கூறுவது தான் வியப்பினும் வியப்பாகும்! திருவாசகத்தில் 47 ஆவது பாடலாக வரும் இப்பாடலைச் சற்றுக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

> மேலை வானவ ரும்அறியாத(து) ஓர்
> கோல மேஎனை ஆட்கொண்ட கூத்தனே!
> ஞாலமே! விசும்பே! இவை வந்துபோம்
> காலமே! உனை என்றுகொல் காண்பதே?

''ஞாலமாகவும், விசும்பாகவும், இவை இரண்டும் தோன்றி மறைதற்குக் காரணமாகவும் நிலைக்களமாகவும் உள்ள காலமே! உன்னை என்று காணமுடியும்?' என்று பெருமான் கூறும்பொழுது கொஞ்சம் வியப்படையத்தான் வேண்டியிருக்கிறது. இறைவனைக் காலம் கடந்தவன், 'கால காலன்' என்றெல்லாம் கூறுவது மரபு. ஆனால், ஞால மும் விசும்பும் தோன்றி மறைதற்குரிய 'காலம்' என்று கூறுவது புதுமை என்பது மட்டுமன்று; ஐன்ஸ்டினுக்கு ஆயிரம் ஆண்டுகள் முன்னரே அவர் கண்டக் கனவைக் கண் டதுபோல் அல்லவா இருக்கிறது? என்றும் உள்ளவனாகிய இறைவனை என்றும் உள்ளதாகிய காலம் என்று குறிப்பிடு வது எவ்வளவு பொருத்தருமுடையது.

ஐன்ஸ்டின் கண்ட காட்சியில் காலத்தில் வந்து போம் ஞாலம் காட்சியளிக்கிறது. விஞ்ஞானி தனது 'தொலை நோக்கி'யின்மூலம் கற்பனைக்கு அடங்காத தூரத்தில் இருப் பதாகக் கூறப்படும் ஓர் உலகைக் காணும்பொழுது இன்று அவ்வுலகம் இருக்கும் நிலையைக் காணவில்லை; காணவும் முடியாது. அவனுடைய ஒப்புயர்வற்ற, அந்தத் தொலை நோக்கி 50 கோடி ஒளி ஆண்டுகட்கு முன் செல்கிறது. அன்று அந்த உலகம் எவ்வாறு இருந்ததோ அதையன்றோ இன்று காணுகிறது; காட்டுகிறது. உலகில் கல் தோன்றி

மண் தோன்றாத அந்த நாளில் அத் தூர உலகிலிருந்து புறப்பட்ட ஒளியன்றோ இன்று விஞ்ஞானியின் தொலை நோக்கியில் பிரதிபலிக்கிறது. பன்னூறு ஆண்டுகளின் பின்னர் அவ் வுலகம் அழிந்துகூட இருக்கலாம். ஆனால், அவ்வழிவை நாம் அறிய இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆகும்.[1]

இவற்றை எல்லாம் ஓரளவு உணர்ந்த அடிகளார் அன்று திருவாசகத்தில்,

**வண்ணந்தான் சேய(து) அன்று வெளிதே அன்று;**
**அநேகன்ஏகன் அணு அணுவில் இறந்தாய் என்(று)**
**அங்(கு)**
**எண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம்**
**எய்துமா(று) அறியாத எந்தாய்!............**

என்று பாடிச் செல்வதை மொழிபெயர்த்ததுபோல

---

1. When the astronomer peers through his telescope he looks not only outward in space but backward in time. His sensitive camera can detect the glimmer of island universes 500 million light years away - faint gleams that began their journey at a period of terrestrial time when the first vertebrates were starting to crawl from warm palleozoic seas on to the young continents of Earth. His spectroscope tells him, moreover, that these huge other systems are hurtling into limbo, away from our own gelaxy, at incredible velocities ranging upto 35,000 miles a second. Or more precisely they were receding from us 500 million years ago. Where they are "NOW" or whether they even 'exist now' no one can say. 'The Universe & Dr. Einstein', Page. 78.

உலகப் பேரறிவாளியான ஐன்ஸ்டின் கூறும் மொழிகளுடன் இதனை முடிப்போம்.

"My religion consists of a humble admiration of the illimitable superior spirit who reveals. Himself in the slight details we are able to perceive with our frail and feeble minds. That deeply emotional conviction of the presence of a superior reasoning power which is revealed in the incomprehensible universe, forms my idea of God". The cosmic religious experience is the strongest and noblest mainspring of scientific research.

"He to whom this mystical experience is a stranger, who can no longer wonder and stand rapt in awe, is as good as dead. To know that what is impenetrable to us really exists, manifesting itself as the highest wisdom and the most radiant beauty which our dull faculties can comprehend only in their most primitive forms this knowledge, this feeling is at the centre of true religiousness."

இதுகாறுங் கூறியவை மணிவாசகரின் விஞ்ஞான அறிவுக்கு எடுத்துக்காட்டுகளாகும். ஆனால், ஓரிடத்திலாவது தாம் கூற வந்த விஞ்ஞான மெய்ம்மைகளை விளக்கிச் செல்லவில்லை. எவ்வாறு அந்த மெய்ம்மைகளை அவர் கண்டார் என்பதையும் கூறவில்லையே! ஏன் என்றால், அவர் விஞ்ஞானம் போதிக்கவந்த ஆசிரியரன்று என்ற விடையைத்தான் தரவேண்டும். தாம் கண்ட மெய்ம்மைகள் தாம் கூறவந்த பெருங் கருத்துக்கு அரண் செய்வதாக இருத்தலின் போகிற போக்கில் கூறிவிட்டுச் செல்கின்றார். அஃதல்லாமல் இவ் விஞ்ஞானப் புதுமைகளை நமக்கு எடுத்துக் கூறுவது அவருடைய கருத்தன்று.

எனவேதான் அவைபற்றிய விளக்கம் யாண்டும் பேசப் படவில்லை.

இனி இவருடைய புலமை நயத்தைக் காட்டுகிற திரு வாசகம், திருக்கோவையார் என்பவற்றைப்பற்றிப் பேசு முன் பலருடைய மனத்தில் உள்ள ஒரு வினாவுக்கு விடை கூறிவிட்டே மேலே செல்லவேண்டும். திருவாசகமும் திருக்கோவையாரும் ஒருவரே பாடி இருத்தல் கூடுமா? என்பதே அந்த ஐயம். இதற்கு விடை காணத் திறனாய் வாளர் பகுத்துள்ள இருவகைப் பாடல்களைப்பற்றி அறிய வேண்டும். முதலாவது 'பொள்ளெனத் தோன்றும் கவிதை' (Dionysian Poetry) இரண்டாவது 'ஆய்ந்து செய்யும் கவிதை' (Appolinian Poetry) அல்லது மரபுக் கவிதை (Conventional Poetry) என்று கூறப்பெறும். இதில் முதல்வகைப் பாடலாகிய பொள்ளெனத் தோன்றும் கவிதை, அனுபவம் தோன்றியவுடன், அப்படியே அதற்கு வடிவு கொடுப்பதாகும். அனுபவத்திற்கு அப்படியே அதற்கு வடிவு கொடுக்கின்ற காரணத்தாலும் அதுபற்றிச்சிந்தித்துப் பார்த்து அழகு செய்யப்படாத காரணத்தாலும் அது ஒரு தனிப்பட்ட தொகுப்பாகவே இலங்குகிறது. ஏனைய கவி தைகளைப் போலக் கற்பனை, சொல்லாட்சி முதலிய பிற நயங்களை இதில் காணமுற்படுவது சரியன்று. இவ்வாறு கூறுவதால் இத்தகைய பாடல்களில் கற்பனை முதலிய நயங்கள் இரா என்பது கருத்தன்று. இருப்பினும் அவற் றுக்காக இக் கவிதைகள் சிறப்படைவதில்லை. இவை அனுபவத்தைச் சொற்கள் மூலமே தாங்கி வருகின்றன. ஆதலால், அச் சொற்களை ஒருவன் படித்தவுடன் அந்த அனுபவம் அப்படியே அவனுள் இறங்குகிறது.

இத்தகைய கவிதைகள் தாமே எழுதப்பெறுகின்றன என்றும், இக் கவிஞர் ஆட்பட்டவர் (Inspired) அதாவது கோட்பட்டவர்கள் (Possessed) என்றும் மேனாட்டுத் திற னாய்வாளர் கூறுவர் பாடி முடிக்கின்றவரை இக் கவிஞர் கள் சுய உணர்வுடன் இருப்பதில்லை. ஏதோ ஒன்று

தம்முள் புகுந்து (Divine madness) தம்மை ஆட்கொண்டு கவிதை எழுதுமாறு செய்கிறது என்றும் கூறுகின்றனர் இக் கவிஞர்கள். இக்கருத்து மேனாட்டார் மட்டுங் கண்டு கூறியதன்று என்பதை நம்மாழ்வார் பாடல்களும் அறிவிக்கின்றன. தம்முடைய பாடல்கள் தாம் பாடியன அல்ல என்றும் இறைவன் தம் மூலமாகத் தன்னைத் தானே பாடிக் கொண்டான் என்றும் பாடுகிறார் நம்மாழ்வார்.

'என்னால் தன்னை இன்தமிழ்பாடிய ஈசனை
'...............திருந்து நல் இன்கனி
நேர்பட யான் சொலும் நீர்மை இலாமையால்
ஏர்வு இலாத என்னைத் தன்னாக்கி, என்னால் தன்னை
பார் பரவு இன்கவிபாடும் பரமரே' (7,9-1,5)

இவ் வரிகளுள் இறைவன் 'தம்மைப் பாடுவித்தான்' என்று ஏவல் வினையாற் கூறாமல், தானே பாடினான் என்றே ஆழ்வார் கூறுவது ஆய்தற்குரியது.

ஏனைய வகைப் பாடலில் சொல், சொல் குறிக்கும் பொருள், அதனை நன்கு விளக்க உதவும் அணிகள், கற்பனை ஆகிய அனைத்தும் சேர்ந்து கவிஞனின் அனுபவத்தை நமக்குத் தருகின்றன. இவ்வகைப் பாடல்களைக் கவிஞன் ஆய்ந்து தெளிந்து தேர்ந்தெடுத்த சொற்களின் மூலம் நமக்கு வழங்குகிறான். எந்தச் சொல்லைப் பெய்தால் தான் நினைந்த முறையில் அனுபவத்தைக் கற்பார் மனத்தில் புகுத்த முடியும் என்றுகூட ஆராய்கிறான். அல்லது எந்தச் சொல்லைப் பெய்தால் தான் கருதிய சிந்தனை அதில் வெளிப்படுகிறது என்று ஆய்ந்தே கவிஞன் இவ்விரண்டாவது வகைக் கவிதைகளில் சொற்களைப் பயன்படுத்துகிறான். ஆதலால், இவை பெரிதும் மரபு பற்றியே வெளிப்படுகின்றன. கற்பவர்களும் அந்த மரபை அறிந்தவர்கள் ஆதலிற் கவிஞனுடைய சொல்லுக்கு உண்டான மரபுப் பொருள் அனைத்தையும் பெறுகின்றனர். ஆனால், பொள்ளெனத் தோன்றும் கவிதையில் இதற்கு வாய்ப்பு

இல்லை. அனுபவத்தைப் பெற்றவனுடைய இலக்கிய அறிவு, கல்விப் பெருக்கம் என்பவற்றிற்கேற்பவே அவன் பயன்படுத்தும் சொற்கள் அமையும். அவனுடைய கல்விப் பெருக்கத்திற்கேற்ப அதிகமான பொருளாழம் உள்ள சொற்களை அறிந்திருத்தல் கூடும். அதிகமான சொற்களை அறிந்திருந்தால் தன் அனுபவத்தைச் செம்மையாக அறிவிக்கக்கூடிய துல்லியமான சொற்களைப் பயன்படுத்திக் கவிதை அமைப்பான். இவ்வாறு கூறுவதால் கவிஞன் தேவையான சொற்களை ஆராய்ந்து பெறுகின்றான் போலும் என்று நினைய வேண்டா. அவன் தேவைக் கேற்பச் சொற்கள் தாமே வந்து கை கொடுக்கும்.

குழந்தை, வஞ்சகம் என்பது ஒரு சிறிதும் இன்றி, உள்ளத்தில் தோன்றியதை அப்படியே வெளியிடுதல் போலப் பொள்ளெனத் தோன்றும் கவிதையிலும் ஒளிவு மறைவின்றி உள்ளத்துணர்ச்சி வெளிப்படுகிறது. உதாரணமாக ஒன்றைக் காணலாம். இறைவன், தம் தகுதியறியாது மிக உயர்ந்த பதத்தைக் கொடுத்து விட்டதாக மணிவாசகர் கருதுகிறார்.

'என்னால் அறியாப் பதம் தந்தாய்' (642)

'நாயிலாகிய குலத்தினுங் கடைப்படும்
என்னைநன் னெறிகாட்டித்
தாயிலாகிய இன்னருள் புரிந்தஎன்...'(43)

'நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே'(32)

'கானின்று வற்றியும் புற்றெழுந்தும் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு' (178)

'நாட்டார் நகைசெய்ய நாம் மேலை வீடெய்த
ஆட்டான் கொண்டு ஆண்டவா.........' (180)

இவ்வாறு இறைவன் கருணையை நினையும் போதெல்லாம் அவன் மாட்டு நன்றியுணர்வு மிகுகின்றது.

ஆனால் அவன் கருணையை நினைக்குந்தோறும் தம் தகுதி யின்மையையும் உடன் நினைக்கின்றார். இவ்வாறு பலமுறை தம் தகுதி இன்மையை நினைப்பதால் ஒருமுறை 'ஆண்டவன் எவ்வளவு பைத்தியக்காரன்! தகுதி பாராமல் வந்து ஆண்டு கொள்கிறானே! என்று கூட நினைக்கின் றார். திடீரென்று தோன்றிய இந்த நினைவு அவர் ஆழ்ந்த அனுபவத்தில் ஈடுபட்டு மீண்டவுடன் வருகிறது. தம்மையும் மறந்து, இறைவனுடைய இந்த உயர்ந்த தன்மையை மறந்து அவன் பரமகருணையில் வேண்டு மென்றே ஆட்கொண்டான் என்பதை மறந்து 'இறைவா! நீ முழுப் பைத்தியக்காரன்' என்று பாடிவிடுகிறார்.

> 'தாதாய்' மூவேழ் உலகுக்கும் தாயே நாயேன்
> தனையாண்ட பேதாய்!' (444)

தாதாய்க்கு எதுகை வேண்டும் என்பதற்காகவா பேதாய் என்று கூறுகிறார்? இதுதான் பொள்ளெனத் தோன்றுங் கவிதை. திடீரென்று தோன்றிய உணர்ச்சிச் சுழிப்பால் இறைவனேயானாலும் தகுதியற்ற தம்மை யாண்டமையின் அவன் அறியாமை யுடையவனாகத்தான் இருத்தல் வேண்டும் என்று மனத்தில் தோன்றும் எண்ணம் அப்படியே கவிதை வடிவில் வெளிவருகிறது.

இந்த அனுபவம் எத்துணைப் பெரியதாயினும் அதனை வெளியிடச் சொற்கள் என்ற ஒரே ஒரு கருவிதானே உள்ளது. சொற்கள் கருத்தை வெளியிட மிகச் சிறந்த கருவியன்று (Word is an imperfect vehicle of thought) என்பர். அப்படியானாலும் பொள்ளெனத் தோன்றும் கவிதை பாடுபவர்கள் வேறு வழி இன்மையால் தம் அனுப வத்தைச் சொல்லில் வடிக்கத்தானே முனைகின்றனர். இதில் ஓரளவு வெற்றியும் பெறுகின்றனர். ஆனால் சில சமயங்களில் எவ்வளவு சிறந்த முறையில் சொன்னாலும் அனுபவம் அல்லது விருப்பம் சொல்லில் அடங்கவில்லை. அவ்வாறு அடங்காத பொழுது தம் ஆற்றாமையை வெளி யிடுகின்றனர்.

இராம, இலக்குவர்கள் பிராட்டியுடன் கானகம் புகுகின்றனர்; மாலை நேரம். கவிஞன் இக் காட்சியை மனத் திரையில் கொணர்ந்து பார்த்து அதனை நன்கு அனுபவித்து விட்டு அந்த அனுபவ உணர்வுக்கு வடிவு கொடுக்க முனைகின்றான். 'ஓவியத்து எழுத ஒண்ணா அந்த உருவ'த்தைக் கவிஞன் கற்பனையில் காண்கிறான்; முன்னே. நடக்கின்றவர்களின் வடிவழகில் ஈடுபட வாய்ப்பில்லை, எனவே நிற அழகில் மட்டுமே ஈடுபடுகிறான். பின் அழகில், வண்ணத்தில் (நிறத்தில்) ஈடுபடுகிறான்; கவிதை பிறக்கிறது. ஆனால், கவிதைச் சொற்கள் தாமாகவே வெளிவருகின்றன. நாம் அந்தச் சொற்களில் ஈடுபடுவது போலவே கவிஞனும் ஈடுபடுகிறான் போலும்! ஈடுபட்டுப் பாடிக் கொண்டே வருகையில் திடீரென்று அவன் மனத்தில் ஓர் ஐயம் தோன்றி விடுகிறது. இராமபிரானின் வண்ணத்தில் ஈடுபட்ட கவிஞன், மனித மனத்துக்குரிய இயல்பான முறையில், அந்த வண்ணத்துக்கு உவமைகள் கூறுகிறான். உவமைகளாகச் சிலவற்றைக் கூறிக்கொண்டு வரும் பொழுதே, அந்த உவமைகள் மூலம்கூடத் தான் அனுபவிக்கும் அந்தப் பேரழகைக் கூற முடியாத நிலை ஏற்படுவதை அறிகிறான் கவிஞன்.

இந்த உவமைகள், தான் அனுபவிக்கும் அனுபவத்தை வெளியிடுவதற்குப் பதிலாக அதன் அளவைக் குறைத்து மதிக்குமாறு செய்துவிட்டனவோ என்று அஞ்சுகிறான் கவிஞன். எனவே மேலும் அது பற்றிக் கூறுவதை நிறுத்திக் கொண்டு தன் ஏலாமையை அறிவித்து விடுகிறான்.

> "வெய்யோன்ஒளி தன்மேனியில் விரிசோதியின் மறையப்
> பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும்
> போனான்.
> மையோ! மரகதமோ! மறிகடலோ! மழை முகிலோ!
> ஐயோ! இவன்வடிவு என்பதோர் அழியா அழகு உடை
> யான்" (கங்கைப்-1)

பொள்ளெனத் தோன்றும் கவிதையில்தான் இத்தகைய புது மையைக் காண்டல் கூடும். திடீரென்று கவிஞனுக்குத் தன் இயலாமை புலப்படுகிறது. அப்பொழுது ஐயோ! அந்தோ! முதலிய சொற்களால் தன் ஆற்றாமையை அறிவிப்பது தவிர வேறு செயற்பாலது ஒன்றும் இல்லை.

மணிவாசகர் இறைவன் தம்மாட்டுக் கொண்ட கருணை யால் 'வினையில் கிடந்து உழல்கின்ற தம்மை வந்து வலிய ஆட்கொண்டு, தான் இன்னான் என்று தன்னைத்தானே அறிவித்துக் கொண்டு, பிறகு ஆண்டும் கொண்டானாம்!' அத்தகைய பரம கருணைக்குத் தாம் என்ன முறையில் நடந்து கொண்டிருக்க வேண்டும் என்று கருதுகிறார் பெரு மான். ஆனால் அவ்வாறு செய்யவில்லை என்று நினைத்த வுடன் அந்தோ! என்று சொல்வது தவிர வேறுவழியே இல்லை.

> ''வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
> போதுநான் வினைக் கேடன் என்பாய் போல
> இனையன்நான் என்றுஉன்னை அறிவித்து என்னை
> ஆட்கொண்டு எம்பிரான் ஆனாய்க்கு இரும்பின் பாவை
> அனைய நான் பாடேன் நின்று ஆடேன் அந்தோ!
> அலறிடேன் உலறிடேன் ஆவிசோரேன்
> முனைவனே முறையோ நான் ஆன வாறு
> முடிவு அறியேன் முதல் அந்தம் ஆயினானே'' (26)

கம்பநாடன் பாடலில் காட்சியளிக்கும் 'ஐயோ' என்ற சொல் ஆழ்ந்த சிந்தனையின் பிறகு பெய்யப்பட்டதாகும். அவனுடைய கவிதை ஆய்ந்து செய்யப்பெற்ற கவிதை (Appolonian Poetry) யாகும் ஆனால், அதே பொருளு டைய 'அந்தோ' என்ற சொல்லை மேலே காட்டிய திருவா சகத்தில் காணும்பொழுது அது பொள்ளெனத் தோன்றிய (Dionysian Poetry) பாடல் என்பதை அறியமுடிகிறது. கம்பநாடன் உவமைகள் பல அடுக்கிய பிறகு நினைத்துப் பார்த்துத் தனது இயலாமையை அறிவிக்க 'ஐயோ' என்ற

சொல்லைப் பெய்கிறான். ஆனால், மணிவாசகர், இறைவன் அருட்டிறத்தை எண்ணியவுடன் 'ஐயோ, நான் அழுது ஆடிப் பாடி அகங் கரைந்தேனில்லையே!' என்று வருந்துவதால் வெளிவரும் பாடலாகும் இது. கம்பன் பாடலில் கற்பனை, சொல்லோவியம், உவமை இவற்றிடையே 'ஐயோ' என்ற சொல் வருகிறது. இவருடைய பாடலில் உள்ளத்தின் துயரத்தில் தோய்ந்து அச்சொல் வெளிவருகிறது!

இவ்வாறு உணர்ச்சியில் மூழ்கியதன் பயனாக வெளிவரும் கவிதைகளில், ஏனைய கவிதைகளிற் காணப்பெறும் கட்டுக் கோப்பும் தொடர்ச்சியும் காணப்பெறா.

**''நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்தும்**
**பெரிய தென்னன் மதுரை யெல்லாம் பிச்சதேற்றும் பெருந்துறையாய்!**
**அரிய பொருளே! அவிநாசி யப்பா! பாண்டி வெள்ளமே!**
**தெரியஅரிய பரஞ்சோதி!செய்வதொன்றும் அறியேனே!''**
**(647)**

இப் பாடலைச் சற்றுக் கவனிப்போமானால் ஓர் உண்மை நன்கு விளங்கும். 'நரிகளை யெல்லாம் விரைந்து செல்லும் குதிரைகளாக மாற்றி உலக முழுதும் நடக்கச் செய்து பெரிய பாண்டியனது மதுரை முழுவதும் திகைப் படையும்படி செய்த பெருந்துறைப் பெருமானே!' என்பது முதல் இரண்டு அடிகளின் பொருளாகும். மூன்று நான்காவது அடிகள் முழுவதும் விளிகள். ஆனால் ஒன்றுக் கொன்று தொடர்பில்லாத விளிகள்! மதுரைத் திருவிளையாடலைப் பாடுபவருக்கு அவிநாசிப் பெருமானின் நினைவு ஏன் வந்தது? வந்த அந்த நினைவு தொடர்ந்ததா? உடனே பாண்டி நாட்டு வெள்ளம் ஏன் நினைவிற்கு வந்தது? இவ்வாறு ஒன்றுக் கொன்று தொடர்பில்லாத நினைவுகள் வருவதே இக் கவிதை பொள்ளெனத் தோன்றியது என்பதை அறிவுறுத்துகிறது.

ஆய்ந்து செய்த கவிதைக்கும், பொள்ளெனத் தோன்றும் கவிதைக்கும் உள்ள வேறுபாட்டைப் படிக்கும் பொழுதே அறிந்து கொள்ளமுடியும். ஒன்று படிக்கும் போதே நேரிடையாக உள்ளத்தைச் சென்று தொடும் ஏனையது அறிவு வழிப்புகுந்து புலன் உணர்வின் உதவி கொண்டு மனத்தில் சென்று தைக்கும்.

திருவாசகம் பொள்ளெனத் தோன்றும் உணர்ச்சி வழிப்பட்ட பாடல் என்றால், இதே மணிவாசகப் பெருமானால் யாக்கப் பெற்ற 'திருக்கோவையார்' ஆய்ந்து செய்த கவிதை யாகும். வேறு வகையாகக் கூற வேண்டுமாயின் திருக்கோவையார் மரபு வழிப் பாடல் (Conventional Poetry) ஆகும், இவ்வாறு பிரிவினை செய்வதால் திருக்கோவையார் மட்டம் என்று கூறுவதாக யாரும் நினைத்து விட வேண்டா. இவை இரண்டனுள் அமைந்த அடிப்படை வேறுபாட்டைக் காட்டத்தான் இந்தப் பிரிவினையே தவிர இவற்றுள் உயர்வு தாழ்வு கற்பிப்பதற் கன்று.

ஒரே கவிஞன் இருவகைப் பாடலையும் பாடமுடியுமா என்று நினைய வேண்டா. வேர்ட்ஸ்வொர்த் டாஃப்டில்ஸ் (Daffadils) சாலிட்டரி ரீப்பர் (Solitary Reaper) போன்ற பொள்ளெனத் தோன்றும் பாடல்களையும், ப்ரிலூட் (Prelude) போன்ற சிந்தித்து எழுதும் கவிதைகளையும் பாடியுள்ளார். ஷெல்லியைப் பொறுத்தமட்டில் வானம் பாடி (Skylark) ஒட்டு எ கீரிஷன் அர்ன் (Ode to a Grecian urn) முதலிய பொள்ளெனத் தோன்றும் பாடல்களையும் ரிவோல்ட் ஆஃப் இஸ்லாம் (Revolt of Islam) போன்ற ஆய்ந்து செய்யும் கவிதைகளையும் பாடியுள்ளார். எனவே திருவாதவூரர் திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் பாடியதில் வியப்பு ஒன்றும் இல்லை.

திருக்கோவையார், கோவை நூல்களுள் தலைசிறந்து நிற்கின்ற ஒன்றாகும். பாண்டிக் கோவை, தஞ்சைவாணன் கோவை, திருச்சிற்றம்பலக் கோவை (திருக்கோவை) இம் மூன்றையும் மேலெழுந்தவாரியாகப் படிப்பவர்கூட முதலி

ரண்டும் நொண்டிமாடு போல் நடப்பதையும், திருக்கோவை பந்தயக் குதிரைபோல் வீறுநடை போடுவதையும் அறிய முடியும். ஆனால், திருக்கோவையாரின் இச் சிறப்பு மணி வாசகருடைய புலமை நயத்தை எடுத்துக் காட்டுகிறதே தவிர, அவருடைய கனிந்த அனுபவத்தைத் திருவாசகம் ஒன்றுமட்டுமே காட்டிநிற்கிறது. என்றாலும் திருக்கோவை யாரும் திருவாசகமும் ஒருவராலேயே பாடப் பெற்றன என்பதில் ஐயம் இல்லை. ஆனால் திருவாசகத்தில், சொல், சொல்குறிக்கும் பொருள், அது தரும் அனுபவம் என்ற மூன்றும் ஒன்றாய் விளங்கக் காண்கிறோம். திருக்கோவை யாரில் சொல், அது குறிக்கும் பொருள், அது தரும் இன்ப அனுபவம் என்ற மூன்றும் தனித்தனியே விளங்கக் காண லாம். திருவாசகத்தின் அனுபவம் நேரிடையாகச் சொல் லாகக் காட்சி தருகிறது.

சிந்தித்தல், ஆராய்தல் இரண்டும் நிகழ்ந்த பிறகுதான் திருக்கோவையார் பாடல்கள் தோன்றின எனினும் இவை இரண்டு நிகழ்ச்சிகளும் ஏறத்தாழ ஒரே நேரத்தில் நிகழ் கின்றன. இந்த ஆராய்ச்சியின் பயனாக வெளிவருகின்ற கவிதைச் சொற்களும் உடனடியாகவே தோன்றுகின்றன. இதனைச் சிந்தித்தல், கருதுகோள்,வெளிப்பாடு (Percepti-on, Conception and Delivery) என்ற மூன்றும் ஒரே நேரத்தில் நிகழ்வதாகக் கூறிவிடலாம். காட்சியைக் கண்டு அதில் ஈடுபட்டுக் கருதுகோள் கொண்டு உடனேயே கவிதையாக வெளிவருகிறது. ஆனால் உணர்ச்சிப் பாட லில் இந்தக் கால இடையீடு என்பது முற்றிலும் அற்று விடுகிறது.

ஓர் உதாரணத்தால் இதனை விளக்கிக் கொள்ளமுடி யும். உவமை, உவமைத் தொகை, உருவகம் என்ற மூன்று ஏன் தோன்றின? உவமை கூறும்பொழுது மூன்று சொல் இரண்டு இடைவெளி உண்டு. 'மதி/போன்ற/முகம்' என்ற இதில் இரண்டு இடைவெளி யுளதாகலின் இந்த உணர்வு

தோன்ற ஆகின்ற கால தாமதத்தைக் குறைக்க விரும்பிய கவிஞன் இரண்டு இடைவெளியை ஒன்றாகக் குறைத்து மூன்று சொற்களை இரண்டாக்கி 'மதி/முகம்' என்று கூறினான். உவமத்தொகை என்ற பெயரில். இன்னும் இதில் தோன்றும் தாமதத்தைக் குறைக்க விரும்பியே இடைவெளியைப் போக்குவதுடன் எண்ண ஓட்டத்தையும் மாற்றுகிறான். முதலில் மதியை நினைந்து பிறகு முகத்தை நினைப்பதற்குப் பதிலாக முகத்தை நினைந்து மதியை நினைக்கும் முறையில் மாற்றிப் போடுவதால் அதிகப்படியான உணர்வை ஊட்டமுடியும் என்று கருதிய கவிஞன் 'முகமதி' என்று இடைவெளியற்ற உருவகத்தை உண்டாக்கினான். இதனையே தொல்காப்பியம் 'பொருளே உவமம் செய்தனர் மொழியினும் மருளறு சிறப்பின் அஃது உவமமாகும்' (உவம இயல்-9) என்று கூறிற்று. இதற்கு உருவகம் என்ற பெயர் தொல்காப்பியனார் காலத்தில் இன்றேனும் இதனால் விளையும் சிறப்பை உணர்ந்த தொல்காப்பியனார், 'மருள் அறு சிறப்பின் அஃது' என்ற அடைமொழியால் இதன் தனித்தன்மையை விளக்கிச் செல்கிறார். எவ்வாறு இடைவெளியைக் குறைப்பதால் அதிகமான உணர்ச்சியை ஊட்ட முடிகிறதோ, அதே போலப் பொள்ளெனத் தோன்றும் பாடலில உணர்ச்சியை விரைவாகவும் அதிகமாகவும் ஊட்ட முடிகிறது.

ஒரு புலவனுடைய புலமை நயத்தை அறிதற்கு, அவன் பெய்யும் உவமைகள் நல்ல சான்றுகளாகும். ஒரே பொருளுக்குப் பலர் உவமை கூறி இருப்பினும் கூறுவானுடைய விரிவான அனுபவத்திற் கேற்ப அது சிறந்து விளங்கக் காணலாம். ஒரே பொருளை இருவர் கண்டாலும் இருவருடைய மனத்திலும் தோன்றும் எண்ணங்கள் வெவ்வேறானவையாய்த்தான் இருக்கும். உதாரணமாக ஒன்றைக் காணலாம்: கண்ணபிரானுடைய திருவாயை ஆண்டாள் நினைக்கின்றார். 'கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ?'

(நாச்சியார் திருமொழி-7-1) என்று அவர் பாடுகிறார். வில்லிபுத்தூரார் அதே வாயை நினைத்து 'அளைகமழ் பவள வாயனை' என்று பாடுகிறார். அதே கண்ணனுடைய அதே வாயைத் துரியோதனன் கண்டு 'முடை எடுத்த நவநீதம் தொட்டுண்டு கட்டுண்டு' (14-ஆம் போர்—172) என்று பாடுகிறான். ஒருத்திக்குக் கமலப்பூ நாறிய வாய், மற்றொருவருக்கு வெண்ணெயின் மணம் வீசும் வாயாகக் காட்சி தருகிறது. மூன்றாவது ஒருவனுக்கு நாற்றம் பிடித்த வெண்ணெயைத் திருடி உண்டதால் நாற்றம் அடிக்கும் வாயாகிறது. பொருள் ஒன்றேயாயினும் காண்பார் அனுபவத்திற்கேற்ப அதன் இயல்பு மாறுபடுவது உண்மையாயின் உவமை பேசுவதிலும் இந்த மாறுபாடு இருக்கத்தானே செய்யும்?

உவமை பேசுவதிலும் புலவனுடைய அனுபவம் வெளிப்படுகிறது. நெற் பயிர் விளைந்து-முற்றித் தலை சாய்ந்து நிற்பதும், தூங்கு மூஞ்சி மரத்தின் இலைகள் மாலை நேரத்தில் வளைந்து உறங்குவதுபோல் நிற்பதும் நாம் கண்ட காட்சிகள்தாம். ஆனால் இவற்றுக்கு உவமை கூறுவதிலும், அந்தந்தப் புலவனுடைய மன நிலை, அவன் எதனைப் பெரிதாகக் கருதுகிறான் என்பது பற்றிய குறிப்பு ஆகியவை நமக்குக் கிடைக்கின்றன.

'தம்புகழ் கேட்டார்போல் தலை சாய்த்து மரம் துஞ்ச (நெய்தற்கலி—2) என்ற, உவமை சங்கப்பாடலாகிய நெய்தற்கலியில் காணப்படுகிறது. இதேபோன்று நெற் பயிர் விளைந்து முற்றி வளைந்திருப்பதைக் கூறவந்த சிந்தாமணி ஆசிரியர்,

''கல்வி சேர்மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே''

என்று பாடுகிறார். இவற்றுள் கலித்தொகையின் உவமை மனிதப் பண்பாட்டின் உயர்வை அறிவுறுத்தி நிற்கிறது கல்வி சேர் மாந்தர் வணக்கம் இல்லாமலும் இருத்தல் கூடும். வெறுங்கல்வி பண்பாட்டைத் தந்துவிடாது. எனவே கல்வியுடன் பண்பாடும் கூடியவழியே தலை சாய்த்தல் ஏற்படுகிறது. இதனை விட யாராக இருப்பினும் தம் புகழ்

(நாச்சியார் திருமொழி-7-1) என்று அவர் பாடுகிறார். வில்லிபுத்தூரார் அதே வாயை நினைத்து 'அளைகமழ் பவள வாயனை' என்று பாடுகிறார். அதே கண்ணனுடைய அதே வாயைத் துரியோதனன் கண்டு 'முடை எடுத்த நவநீதம் தொட்டுண்டு கட்டுண்டு' (14-ஆம் போர்—172) என்று பாடுகிறான். ஒருத்திக்குக் கமலப்பூ நாறிய வாய், மற்றொருவருக்கு வெண்ணெயின் மணம் வீசும் வாயாகக் காட்சி தருகிறது. மூன்றாவது ஒருவனுக்கு நாற்றம் பிடித்த வெண்ணெயைத் திருடி உண்டதால் நாற்றம் அடிக்கும் வாயாகிறது. பொருள் ஒன்றே யாயினும் காண்பார் அனுபவத்திற்கேற்ப அதன் இயல்பு மாறுபடுவது உண்மையாயின் உவமை பேசுவதிலும் இந்த மாறுபாடு இருக்கத்தானே செய்யும்?

உவமை பேசுவதிலும் புலவனுடைய அனுபவம் வெளிப்படுகிறது. நெற் பயிர் விளைந்து-முற்றித் தலை சாய்ந்து நிற்பதும், தூங்கு மூஞ்சி மரத்தின் இலைகள் மாலை நேரத்தில் வளைந்து உறங்குவதுபோல் நிற்பதும் நாம் கண்ட காட்சிகள்தாம். ஆனால் இவற்றுக்கு உவமை கூறுவதிலும், அந்தந்தப் புலவனுடைய மன நிலை, அவன் எதனைப் பெரிதாகக் கருதுகிறான் என்பது பற்றிய குறிப்பு ஆகியவை நமக்குக் கிடைக்கின்றன.

'தம்புகழ் கேட்டார்போல் தலை சாய்த்து மரம் துஞ்ச (நெய்தற்கலி—2) என்ற, உவமை சங்கப்பாடலாகிய நெய்தற்கலியில் காணப்படுகிறது. இதேபோன்று நெற் பயிர் விளைந்து முற்றி வளைந்திருப்பதைக் கூறவந்த சிந்தாமணி ஆசிரியர்,

''கல்வி சேர்மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே''

என்று பாடுகிறார். இவற்றுள் கலித்தொகையின் உவமை மனிதப் பண்பாட்டின் உயர்வை அறிவுறுத்தி நிற்கிறது கல்வி சேர் மாந்தர் வணக்கம் இல்லாமலும் இருத்தல் கூடும். வெறுங்கல்வி பண்பாட்டைத் தந்துவிடாது. எனவே கல்வியுடன் பண்பாடும் கூடியவழியே தலை சாய்த்தல் ஏற்படுகிறது. இதனை விட யாராக இருப்பினும் தம் புகழ்

தமக்கு நேரே பேசப்படும் பொழுது தலை சாய்ப்பர் என்ற கருத்தை உவமையாகக் கூறிய சங்கப்பாடல் சிந்தாமணி யினும் சிறந்தது என்று கூறினால் தவறு இல்லை.

இதே நெற்பயிர் வளைந்து நிற்பதற்குச் சேக்கிழார் காட்டுகின்ற உவமை அவர் பக்திச் சுவையில் திளைப்பது மட்டுமின்றி அதனைப் பாடவும் வல்லவர் என்பதை அறி வுறுத்துகின்றது.

"பத்தியின் பாலர் ஆகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர்
தத்தமில் கூடினார்கள் தலையினால் வணங்கு
மாபோல்
மொய்த்த நீள் பத்தி யின்பால் முதிர்தலை
வணங்கிமற்றை
வித்தகர் தன்மைபோல் விளைந்தன சாலி எல்லாம்"
(நாட்டுச் சிறப்பு-22)

இவ்வாறு தோன்றும் உவமைகள் அப் புலவனுடைய மனத்தில் எந்த ஒரு கருத்து வலுவாக இடம் பெற்றுள்ளதோ அதிலிருந்தே அவை பிறக்க அதிக வாய்ப்பு உண்டு. செறிந்த இருளுக்கு உவமை கூறவந்த சேக்கிழார்,

'வஞ்ச மாக்கள்தம் வல்வினையும் அரன்
அஞ்செழுத்தும் உணரா அறிவிலார்
நெஞ்சம் என்ன இருண்டது நீண்டவான்'

(தடுத்து—159)

என்று பாடுவார். இப்புலவர் பெருமக்களுடைய உவ மைகளை எல்லாம் தொகுத்துக்கூட எழுதிப்பார்க்கும் பழக் கம் நம்மாட்டு இல்லை. என்றாலும் தமிழ் வாழ்க என்று கூக்குரல் இடுவதாலேயே தமிழ் வாழ்ந்துவிடும் என்று கருதும் பண்பாளர் நாம்.

ஓர் உவமையைப் பயன்படுத்தும்போது அதில் ஏற்படு கின்ற குற்றங் குறைகள் எவையேனும் உண்டா என்று ஆராய்ந்து பார்த்துப் பயன்படுத்துவதே சிறப்பாகும் மணி வாசகர் காட்டும் உவமைகள் சிலவற்றைக் காணலாம்.

''மையிலங்குநற் கண்ணி பங்கனே!
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை என்றுனைக் கருது கின்றிலேன்'' (96)

இறைவன் தம்மாட்டுக் கொண்ட அருள் காரணமாக அவரை அடிமை கொண்டான் ஆயினும், தம் அறியாமை காரணமாக அவனுடைய அருமைப்பாட்டையும் அவன் எவ்வளவு அரிய பொருள் என்பதனையும் நினைத்தும் பார்க்கவில்லை என்று கூற வருகிறார் பெருமான். ஆனால், இத்துணைக் கருத்தையும் விரித்துக் கூறாமல் 'மழக் கையிலங்கு பொன் கிண்ணம்' என்ற உவமையைத் தருவதன் மூலம் மாபெரும் உண்மைகளை அறிவித்து விடுகிறார். இறைவன் பொற்கிண்ணம் போல்வான். மாசு மறுவற்றது பொன்னாகலின் அவனுடைய தன்மைக்கு அது உவமையாயிற்று. பொன் பயன்படுதற்காகக் கிண்ணத்தின் உருவம் பெற்றதுபோல இறைவன் அருள் புரிதற்காக மானுட வடிவு தாங்கி வந்தான். பொன், கிண்ண வடிவு பெற்றாலும் பெறாவிட்டாலும், பொன்னுக்கு எவ்விதப் பயனும் இல்லை. அதுபோல மானுட வடிவந் தாங்கி வந்ததால் இறைவன் அடையும் பயன் யாதொன்றும் இல்லை. பொற் கிண்ணத்தில் சோறு உண்பதால் உண்பார்க்கு மனமகிழ்ச்சியே தவிரக் கிண்ணத்திற்கு எவ்விதப் பயனும் இல்லை. அதுபோல மானுட வடிவு தாங்கித் திருவாதவூரரை ஆண்டு கொண்டமையின் பயன் பெற்றவர் வாதவூரரே தவிர இறைவன் அல்லன். இதே கருத்தைப் பின்னரும் பேசுகிறார். 'தந்தது உன் தன்னைக் கொண்டது என்தன்னைச் சங்கரா யார்கொலோ சதுரர்? அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்யான் யாது நீ பெற்றது ஒன்று என்பால்?' (395) என்ற திருவாசகத்தில்.

இறைவனைப் பொற்கிண்ணம் என்று கூறியதில் இத்துணைப் பொருளும் அடங்கும். இனித் தம்மை 'மழக் கை' அதாவது மிக இளங்குழவியின் கைகளுக்கு உவமை கூறு

வதன் மூலம் பல கருத்துக்களைப் பெற வைக்கிறார். இளங் குழந்தை என்பதை விட 'மழ' என்ற சொல்லில் இன்னும் அதிகமான இளமை வெளிப்படுகிறது. இளமையில் நிற வேற்றுமையாவது அறியக் கூடும். ஆனால், மழப்பருவம் என்பது நான்கு திங்கட்கும் குறைவான பருவம் என்ப தாகும். நான்கு திங்கட்கும் குறைவான பருவம் என்று கொண்டால் அப்பொழுது கையில் உள்ள பொற்கிண்ணத் தின் நிறத்திற்கூட ஈடுபடமுடியாத பருவமாகும். எனவே கையில் உள்ள பொற்கிண்ணத்தின் நிறம், மதிப்பு, சிறப்பு, வடிவம் ஆகிய ஒன்றையும் அறியாத சூழ்நிலை ஏற்படு கிறது. அதைப் பொருளுக்கு ஏற்றிப் பார்க்கும்போது தம்மை ஆண்டுகொண்ட இறைவனின் வண்ணம், மதிப்பு, சிறப்பு, வடிவம் ஆகிய ஒன்றையும் தாம் அறியவில்லை என்ற கருத்தையும் அடிகள் பேசுகிறார். அம்மட்டோடு இல்லை. அதே போன்று அடிகளார் இறைவனின் பண்பு களையும் அவன் கருணையையும் அறியாதது மட்டுமன்று; அறிய முயலவு மில்லை என்ற ஆழ்ந்த பொருளும் இந்த உவமையில் காணக்கிடக்கின்றன. ஆழ்ந்த புலமையில் உவமை கூறப்படும் பொருள் கவிஞனுடைய ஆழமான சிந்த னையைப் பலவிதத்திலும் எடுத்துக் காட்டுவதாய் அமை கின்றது.

இனி மற்றோர் உவமையைக் காணலாம்.

**"இருதலைக் கொள்ளியின் உள்எறும்பு ஒத்து**
**நினைப்பிரிந்த**
**விரிதலை யேனை விடுதிகண்டாய்..."** (113)

இரண்டு பக்கமும் தீப் பிடித்தபொழுது நடுவே ஓர் எறும்பு அகப்பட்டுக் கொண்டதாக உள்ள உவமை மிகப் பழையது தான். 'இருதலைக் கொள்ளி எறும்பு' எனப் பேசுதல் உண்டு. ஆனால் இந்த உவமையில் ஒரு சிறு குற்றம் உண்டு. இருதலைக் கொள்ளியின் இடையே அகப்பட்ட எறும்பு தப்பித்துக் கொள்ளும் வழி ஒன்றுண்டு. நெருப்பு நெருங்கி வர வர எறும்பு துடித்துக் கால்களின் பற்றை விட்டு

விட்டால் கீழே வீழ்ந்து பிழைத்துக் கொள்ள வழி உண்டு. இந்தக் குற்றத்தை நீக்கி அந்தப் பழைய உவமையை அடிகள் கையாள்கிறார். உள்ளே துவாரமுடைய குச்சி; அதன் இரு பக்கத்திலும் நெருப்பு; எறும்பு துவாரத்தினுள் இருக்கிறதாம். எத்துணைத் துடித்தாலும் எறும்பு பிழைக்கும் வழியே இல்லை. இதைத்தான் 'இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு' என்று குறிக்கிறார் அறிஞராகிய வாதவூரர். அனுபவிக்கின்ற துன்பம் இறுதிவரை விடாது நிற்றலைக் குறிக்க இதனைவிடச் சிறந்த உவமை கூறல் இயலாது.

> ''வெள்ளத்துள் நாவற்றி யாங்குன்
> அருள்பெற்றுத் துன்பத்தினின்றும்
> விள்ளக்கிலேனை விடுதிகண்டாய்' —(118)

வெள்ளத்துள் கிடந்தும் நாக்கு வறண்டதுபோல் என்று இதற்கு உரை கூறியுள்ளனர். இவ்வாறு கூறினால் வெள்ளத்துள் இருந்து கொண்டு அதனைக் குடிக்காமல் இருக்கும் குற்றம் கிடப்பவனையே சாரும். அவ்வாறு பொருள் கொண்டால் அது அடுத்த அடியோடு நன்கு பொருந்துமாறு இல்லை. நின் அருளைப் பெற்றும் துன்பத்தினின்றும் விடுபட்டேனில்லை என்று முதலடியின் பிற்பகுதிக்கும் பொருள் கூறப் பெறுகிறது. இவ்வாறு கூறுவதால் இரண்டு தவறுகள் நேர்கின்றன. 'திருவருள் பெற்றும் துன்பந் தொலைந்திலேன்' (தருமை ஆதீனப் பதிப்பு 118-ஆம் பாடல் குறிப்புரை) என்று கூறினால் அத் திருவருள் இத் துன்பத்தைப் போக்க முடியவில்லை என்றல்லவோ பொருளாகிறது. மேலும் பாடல் 'அருள் பெற்றும் துன்பத்தினின்றும் விள்ளக்கிலேன்' என்று இல்லை. உம்மை இல்லாமல் 'அருள் பெற்றுத் துன்பத்தினின்றும் விள்ளக்கிலேன்' என்றுதான் உளது. அதாவது அருளைப் பெற்று அதன் பயனாகத் துன்பத்தினின்றும் விடுபடவில்லை என்ற முறையில்தான் பாடல் அமைந்துள்ளது.

அவ்வாறாயின் இந்த உவமைக்கு எவ்வாறு பொருள் காண்பது? நாவற்றி என்பது நீர் மேல் வாழும் நான்கு

கால்களும் நீண்ட தலையும், கருமைநிறமும் உடைய ஒரு பூச்சி. நீர்மேல் அதனைக் கிழித்துக்கொண்டு ஓடும் இயல்பினது. இதனை 'நாவத்திப் பூச்சி' என்பர். வெள்ளத்தின் மேல் நாவத்திப் பூச்சி கிடப்பதால் வேண்டுமான அளவு நீர் குடிக்கலாம் என்று கண்டார். எல்லாம் கருதுவர் எனினும் அப் பூச்சி அந்த வெள்ளத்தைப் பயன்படுத்தி எவ்விதப் பயனையும் பெறவில்லை. அதுபோல நின் அடியார் நடுவுள் திளைப்பதாகப் பிறர் எண்ணினாலும் உண்மையில் நின் திருவருள் பெற்றுத் துன்பத்தினின்றும் விடுதலை பெறவில்லை. திருவருள் பெறவில்லை என்பது எங்ஙனம் தெரிகின்றது? துன்பத்தினின்றும் விடுதலை பெறாமையே திருவருள் பெறவில்லை என்பதை அறிவிக்கின்றது என்ற ஆழ்ந்த கருத்தை உள்ளடக்கியே இந்த உவமை பேசப்பட்டுள்ளது. உன் திருவருள் இருந்தும் யான் அதனைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்ற கருத்தைப் பின்னருங் கூறுகிறார். ஆதலின் நாவற்றிப் பூச்சியைப் போல அடியாரிடை இருந்தும் யான் அதனைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்ற பொருளே சிறப்புடையது போலக் காணப்படுகின்றது. இவ்வாறு பொருள் கொள்ள வேண்டுமாயின் வெள்ளம் என்பதை இறைவன் தலைமையிற் கூடியிருந்த அடியார் கூட்டமாகக் கொள்ள வேண்டும். வெள்ளத்துள் இருந்தும் நாவற்றி அதனால் பயனடையாதது போல அடியார் நடுவுள் இருந்தும் திருவருளைப் பெறவில்லை என்ற பொருள் நேரிதாகச் செல்கிறது.

இனி இப் பெருமானின் புலமைத் திறத்தைக் காட்டக் கூடிய இரண்டு உவமைகளைக் காண்டல் வேண்டும்.

> **''ஆனைவெம் போரிற் குறுந்தூறு எனப்புலனால் அலைப் புண்**
> **டேனையெந் தாய் விட்டிடுதி கண்டாய்...'' (125)**

> **''எறும்பிடை நாங்கூழ் எனப் புலனால் அரிப்புண்டு அலந்த**
> **வெறுந் தமியேனை விடுதிகண்டாய்...'' (129)**

பொறி புலன்களால் துன்புறுகின்ற மனிதனைக் குறிக்கவே இந்த இரண்டு உவமைகளும் பேசப் பெறுகின்றன. ஆனால் இரண்டு உவமைகளுக்கிடையே எத்துணை வேறுபாடு? முதலாவதை எடுத்துக் கொள்வோம். யானைகள் இரண்டு சண்டை இடுகின்றன. அவற்றின் காலடியில் பட்ட புதரின் கதி என்ன ஆகும்? யானையின் எடை முழுவதும் அதன் கால்களின் வழிப் புதர்மேல் தாக்குகிறது இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் புதரை மிதித்து அழிக்கவேண்டும் என்ற எண்ணம் யானைகட்குத் துளிக்கூட இல்லை. அவை தம் வேலையைப் பார்க்கின்றன.[1] ஆனால் அவற்றின் காலடியிற்பட்ட புதர் படுகின்ற பாடு சொல்லுந்தரத்ததன்று. புதரின் வலியை நோக்க யானையின் வலி மிகப் பெரிதாயினும் இப்புதர் யானை மிதிப்பதால் அவதியுறுமே தவிர அழிவதில்லை. அதேபோலப் புலன்கள் தொல்லை தருதலால் மனிதன் அழிந்துவிடுவதில்லை ஆனால் படும் தொல்லை மிகப்பெரிது. பல சமயங்களில் இத் தொல்லையை விட இறப்பதே மேல் என்று எண்ணத் தோன்றுகிறது. பொறிகள் தரும் பெரிய தொல்லைகளை, அவற்றைக் கடக்க முடியாமற் படும் அவத்தையை, இந்த உவமை மூலம் விளக்கியருளிய வாதவூரர் அடுத்துக் காணப் படும் பாடலில் உவமையை மாற்றி விடுவதன் மூலம் மற்றோர் அரிய உண்மையை விளக்குகிறார்.

இந்த அடியில் வரும் உவமை சிந்தித்துப் பார்ப்பதற்குரியது. எறும்புகளின் இடைப்பட்ட நாங்கூழ் (புழு) இங்கு உவமையாகிறது. புழுவை எறும்புகள் அரிப்பதைப் பார்த்திருந்தால்தான் திருவாசகத்தின் அருமைப்பாட்டை உணர முடியும். புழுவோ எறும்புகளை நோக்க வடிவில் மிகப் பெரியது. ஆனால் பல எறும்புகள் ஒன்றுகூடி உயிருடன் இருக்கும் புழுவைக் கொட்டிக் கொட்டி வதை பண்ணுவதையும் அவற்றின் இடைப்பட்ட அப்பாவியான புழு, துடிப்பது தவிர வேறு ஒன்றுஞ்செய்ய முடியாமல் அவதிப்படுவதையும்

1. அகநானூறு 8-ம் பாடல் இறைச்சிப் பொருள் காண்க.

இவ்வுவமை மூலம் காட்டுகிறார் பெரியார். ஒரு புழுவைப் பல எறும்புகள் அரிப்பதுபோல ஒரு மனிதனை ஐந்து பொறிகள் அலைக்கழிக்கின்றன. அந்த எறும்புகளும் ஒரே திசையில் அல்லது பக்கத்தில் புழுவைத் துன்புறுத்துவதில்லை ஆளுக்கொரு பக்கமாக இழுத்து வதை பண்ணும். அதுபோல ஐந்து பொறிகளும் அவற்றின் மூலமாகிய புலன்களும் ஆளுக்கொரு பக்கம் இழுத்து வதை பண்ணுகின்றன.

யானையால் மிதிப் புண்ணுவதற்கும் எறும்புகளால் கடிபடுவதற்கும் வேறுபாடுண்டு. முதலாவது பெரிய அவஸ்தை, பின்னது சிறுசிறு துயரமாயினும் பல கடிகளால் மொத்தத் துயரம் பெரிதாகிறது. இரண்டாவது உவமையால் புலன்கள் தரும் சிறுசிறு தொல்லைகளை அடிகள் காட்டுகிறார். மாபெரும் கவிஞராகிய அவர் பயன்படுத்தும் சொற்களும் அதற்கேற்ப அமைந்த அற்புதம் படித்துப் படித்து மகிழ்தற்குரியது. 'ஆனை போன்ற புலன்களால் அலைப்புண்டு' என்று முதற்பாடலில் பாடிய பெருமான் எறும்புகளைப் பற்றிக் கூறுகையில் 'எறும்புகள் போன்ற புலன்களால் அரிப்புண்டு' என்று பாடுகிறார். அலைப்புறுதல் ஒருவகைத் துயரம்; அரிப்புறுதல் ஒருவகைத் துயரம். ஓரே வகையான புலன்கள் பொறிகள் சில சமயம் நம்மை அலைத்தும், இன்னும் சில சமயங்களில் அரித்தும் துன்புறுத்துதலை எத்துணை அழகாக உவமைகள் மூலம் காட்டி விடுகிறார். பெருமானுடைய புலமை நயத்திற்கு இவற்றினும் வேறு சான்று வேண்டுமோ?

பெருமானின் இந்த இரண்டாவது உவமை மூலம் காட்டப் பெற்ற அனுபவத்தை நம் காலத்து வாழ்ந்த கவிஞனாகிய பாரதி பாடிக் காட்டுகிறார்.

**"சின்னக் கவலைகள் என்னைத் தின்னத் தகாதென்று**
**நின்னைச் சரண் அடைந்தேன்"**

என்று பாடுகிறார். சின்னக் கவலைகள் ஆளை ஒரே வழியாக அழித்து விடுவதில்லை. அப்படியானால் தொல்லை

விட்டது என்று இருந்து விடலாம். ஆனால் அவை ஆளை அழித்துவிடாமல் அல்லது விழுங்கி விடாமல் கொஞ்சங் கொஞ்சமாக மென்று தின்னத் தொடங்குகின்றன. எனவே தான் 'தின்னத் தகாது' என்ற அருமையான சொல்லால் பாரதி இதனைக் காட்டுகிறார்.

கவிதைகளின் பொருள் நேரிடையாக விளங்கிவிடும் பொழுது நாம் நின்று நிதானித்து ஏன் என்ற வினாவை எழுப்புவதில்லை. அவ்வாறு எழுப்பினால் மிக அழகிய பொருள் கிடைக்கும்.

**''பெருநீர் அறச்சிறுமீன் துவண்டாங்கு நினைப் பிரிந்த**
**வெருநீர்மை யேனை விடுதிகண்டாய்''...(130)**

என்ற பாடலில் பெருநீர் என்றும் சிறுமீன் என்றும் அடிகள் அடை தந்து பேசுவது ஏன்? சிறுமீனுக்குச் சிறு அளவு நீர் போதுமே! அவ்வாறு இருக்க பெருநீர் அற்ற குளத்தில் சிறுமீன் வாழுவது போல என்று கூறுவதன் நோக்கம் என்ன? பெரிய மீனானால் பெரிய அளவு நீர் வேண்டும். சிறிய இந்த மீனுக்குக் கூடப் போதிய அளவு பெரு நீர் இருந்த குளத்தில் இல்லாமற் போனது விந்தைதான். இறைவன் திருவருள் பெருநீர் போல இருப்பினும் இந்தச் சிறுமீன் அதனைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. அதற்கு வேண்டியது சிறிய அளவு நீர்தான். ஆனால் இப்பொழுது பெருநீர் வற்றிவிட்டது. எவ்வளவு வற்றியது! முற்றிலும் வற்றிவிட்டால் சிறுமீனும் அழிந்து ஒழிந்துவிடும். ஆனால் சிறுமீன் சாவதற்குரிய அளவுநீர் வற்றவுமில்லை; அது வாழ்வதற்குரிய தேவையான தண்ணீரும் இல்லையாம். சாகவும் விடாமல் வாழவும் விடாமல் இருக்கும் அவல நிலைக்கு இது சிறந்த விளக்கமாகிறது.

இத் திருவாசகத்தைப் படித்துத் தானோ யாதோ பாரதியார் 'உன் வெள்ளக் கருணையிலே அன்னாய் இந்நாய் சிறு வேட்கை தவிராதோ,' என்று பாடுகிறார். இதே போல மற்றோர் கவிதையிலும் உவமை மூலம் மிகச் சிறந்த கருத்தை விளக்குவதைக் காணலாம்.

அடியார்கள் இடையே தோன்றிய தலைவன் திருப் பெருந்துறையில் இவரை ஆட்கொண்டான். ஆனால் முழு வதுமாக இவர் விரும்புகிற முறையில் ஏற்றுக் கொள்ளாமல் இவரைப் பூதலத்திடை இருத்திவிட்டு மறைந்துவிட்டான். அவன் ஆட்கொண்டதால் ஏற்பட்ட மாற்றம் உள்ளே நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால் புறத்தே அதனுடைய அடையாளம் ஒன்றுந் தெரியவில்லை யாகலின், கண்டவர்கள் இவருள் நிகழும் மாற்றத்தை அறியாமல் ஏசுகிறார்கள். இந்நிலையை நீக்க வேண்டு கிறார் பெருமான்.

இவருள் மாற்றம் நடைபெறுகிறது. ஆனால் அது புறத்தே காணப்படவில்லை யாகலின் காண்பவர்கள் பழைய அமைச்சராகிய திருவாதவூர ராகவே இவரை நினைக்கின்றனர். இதனை எவ்வாறு வெளியிடுவது? ஓர் அற்புதமான உவமை மூலம் அடிகள் இதனைக் கூறிவிடு கிறார். பாலில் பிரை குற்றியாகிவிட்டது. ஏறத்தாழப் பத்துமணி நேரத்தில் அது தயாராகிவிடும். அதில் நெய் அல்லது வெண்ணெய் திரண்டுவிடும்; உண்மைதான். ஆனால், அந்தப் பத்து மணி நேரமும் அதை அருகில் வைத்துக் கொண்டு பார்த்துக் கொண்டே இருந்தால் கூட வெண்ணெய் திரள்வதைக் காணமுடியுமா? முடியாதன்றோ? ஒருவேளை இரசாயன மாற்றம் நடைபெற்றுக் கொண்டிருக் கிற அந்தப் பாலினுள் ஒரு கிருமியாக நுழைந்து சென்றால் நடைபெறும் மாற்றத்தைக் காண்டல் கூடும். மாற்றம் நடைபெறுவது தெரியாத காரணத்தால் பால் தயிராக ஆக வில்லையே என்று கூறுவது அறிவுடைமை யாகாதன்றோ?

தம்மாட்டு நிகழும் அக மாற்றத்தை உலகினர் காணமுடி யாமல் பழைய வாதவூரராகவே நினைத்து ஏசும் மக்களை யும் அவர்கள் அறியாமையையுங் காட்ட விஞ்ஞானியாகிய மணிவாசகர் ஓர் உவமையைக் கையாள்கிறார்.

கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசா திருந்தால் ஏசாரோ?'' (380)

பிரைசேர் பாலின் நெய்யை உவமையாக்குவதன் மூலம் தாம் பெற்றுள்ள அனுபவத்தையும் அதை அறியமுடியாத பிறருடைய அறியாமையையும் அற்புதமாக விளக்கியமை காண்டல் வேண்டும்.

ஏனைய கவிஞர்கள் கூறாத ஓர் உவமையை அடிகள் பல இடங்களிற் பேசுகிறார். 'நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில், வைப்பதுபோல' என்பது பழமொழியாகப் பிற் காலத்தில் வழங்குவதை நாம் அறிவோம். இதனை அடிகள் பல இடங்களில் பயன்படுத்துகிறார்.

'நாயினுக்குத் தவிசு இட்டு' —(32)
'நாய்மேல் தவிசிட்டு' —(234)
'நான் யார் அடி அணைவான் ஒரு
நாய்க்குத் தவிசிட்டு இங்கு' —(505)

இம் மூன்று இடங்களில் நாய்க்கு ஆசனம் இடுதல் இரண்டு இடங்களிலும் நாயின்மேல் ஆசனம் இடுதல் ஓரிடத்திலும் பேசப்படுகிறது. தகுதி இல்லாதவர்கட்குப் பொறுப்பைத் தந்து அதிகாரம் செய்யுமாறு செய்தல் நாய்மேல் தவிசு (ஆசனம்) இடுதல் போலவும், தகுதி அற்றவர்களை உயர்ந்த இடத்தில் இருக்குமாறு செய்தல் நாய்க்குத் தவிசு இடுதலாகவும் கொள்ளலாம். அடிகள் அமைச்சராக இருந் தமையின் பெற்ற அனுபவத்தாலேயே இந்த உவமைகள் வந்துள்ளன என்று நினைப்பதில் தவறு இல்லை.

பொறுப்பு வாய்ந்த பதவிகளைத் தகுதி அறியாமல் சுமத்தியும், தகுதியற்றவர்களை அளவு மீறி மரியாதை செய்தும் வாழ வேண்டிய சூழ்நிலை, அவர் வகித்த பெரும் பதவி காரணமாகச் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டி

ருக்கலாம். அதனால் மனம் புழுங்கிய அடிகளாருக்கு இந்த உவமை அடிக்கடி நினைவில் வந்திருக்க வேண்டும். ஆகவே தான் மூன்று இடங்களில் இதே உவமையைப் பேசியுள்ளார். நாய்க்குத் தவிசு இடுவதால், நாய்க்கு இல்லாத பெருமை தரப்படுகிறது. நாய்மேல் தவிசு இடுவதால் தவிசின் மதிப்புக் குறைக்கப்படுகிறது.

கவிதைக்குரிய கற்பனை முதலியவற்றைப் பக்திப் பாடலாகிய திருவாசகத்தில் காண முற்படுவது சரியன்று. ஆனாலும் அற்புதமான ஒரு முற்றுருவகம் செய்யப்படுவதைக் காணலாம். திரு அண்டப்பகுதியில் திருப்பெருந்துறை இறைவன் மழை பொழியும் மேகமாக உருவகம் செய்யப் பெறுகிறான். 66வது அடியிலிருந்து 95 அடிவரை ஒரே உருவகம் கொண்டு செல்லப்படுகிறது.

''ஆனந்தக் கடலாகிய இறைவன் கரிய மேகம் போல் திருப்பெருந்துறை என்னும் மலையில் தவழ்ந்து மின்னி, ஐம்புலன்கள் என்னும் பாம்புகள் பயந்து ஓடவும், துயரமாகிய கோடை ஒழியவும் எம் பிறவிமேற் கொண்ட கோபத்தால் அதைப் போக்கவும் இடித்து, இனிய அருள் என்னும் மழைத்துளிகளைப் பெய்து, துன்பமாகிய குளம் நிறைதலால் அதனை மாற்றி, ஆறு பிற சமயங்கள் என்று கூறப் பெறும் கானல்நீரை நம்பிவரும் மான்கணம் அச் சமயங்களின் மூலம் அமைதி பெற முடியாதது போலப் பேய்த்தேரினைக் கண்டு மருண்டு நிற்கையில், திருவருள் மழை இரு கரை பொருது ஓடி எங்களுடைய இருவினை என்ற மரங்களை வேருடன் பறித்துச் சென்று அருச்சனை என்ற வயலில் அன்பு என்ற வித்தை இட்டுத் தொண்டர் என்ற உழவர்கள் பயனடையும்படி பொழியும்'' என்ற கருத்தில் கீழ்வரும் பகுதி அமைந்திருத்தலைக் காண்க.

''பரமா னந்தப் பழங்கடல் அதுவே

அண்டத்து அரும்பெறல் மேகன் வாழ்க''

(அண்டம் 66—95)

இத் தகைய அரிய ஓர் உருவகம் பாடிய அப் பெருமானின் புலமை நயம் அறிந்து அனுபவிக்க வேண்டிய ஒன்றாகும்.

இனி இப் பெருமான் இயற்றிய திருக்கோவையார் பற்றியும் சிறிது காண்டல் வேண்டும். திருக்கோவையார் என்று கூறினவுடனேயே திருவாசகம் பாடிய ஒரு பெருமகனார் அதே வாயால் சிற்றின்ப நூலாகிய கோவை பாடியிருத்தல் கூடுமா என்ற ஐயந் தோன்றுகிறது சிலருக்கு. திருவாசகத்தில் பெரிதும் ஈடுபட்ட ஜீ. யூ. போப் போன்றவர்கள் கோவை, அடிகள் பாடியதன்று என்ற முடிவுக்கே வந்துவிட்டனர். இந்த நாட்டிலும் இடைக் காலத்தில் அப்படி ஒரு கட்சி தோன்றி இருத்தல் வேண்டும். அதனால் தான் திருக்கோவையாருக்கு உரை எழுதிய பேராசிரியர் காலத்தில் இல்லாத ஒரு புது வழக்குப் பிற்காலத்தில் தோன்றிற்று. அதாவது திருக்கோவையாருக்குப் பேரின்பப் பொருள் கூறும் வழக்கு ஏற்பட்டது. இவ்வாறு கூறுவதன் மூலமாகத் திருக்கோவை மணிவாசகர் பாடியதுதான் என்ற கொள்கையையும் நிலைபெறச் செய்து அதே நேரத்தில் சிற்றின்பம் பற்றிய நூலை அவர் பாடி இருப்பாரா என்று வினவுவார்க்கும் விடை கூறுகின்ற முறையில் இப்புதிய கரடியைப் புகுத்தினர் எனலாம்.

அகப்பொருள் பற்றிய பாடல்கள் பக்தி இலக்கியத்தில் நிரம்ப இடம் பெற்றுள்ளன. தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் ஆகிய அனைத்திலும் அகப்பொருள் துறையில் அமைந்துள்ள பாடல்கள் ஏராளமாக உள்ளன. அதனிலும் ஒரு தனிச் சிறப்பைக் காணலாம். சைவ சமய குரவர் நால்வரிலும் காதல்பற்றி உணரமுடியாத இளங் குழந்தையாவார் திருஞான சம்பந்தர். பன்னிரண்டு ஆழ்வார் பெருமக்களுள்ளும் மிக இளமைப் பருவத்திலேயே புளி நிழலில் அமர்ந்து பாடியவர் நம்மாழ்வார். ஆனால் தேவாரம், பிரபந்தம் என்ற இரு தொகுப்புகளிலும் அகப்பொருள் தொடர்பான பாடல்களை அதிகம் பாடியவர்கள் இளங்

குழந்தைகளாகிய திருஞான சம்பந்தரும், நம்வாழ்வாருமே யாவர். இருவரும் பாடிய முதல் பதிகத்திலேயே அகப் பொருள் தொடர்புடைய பாடல்கள் உள்ளன. இவை பாடப்பெற்ற காலத்தில் ஞானசம்பந்தரும் நம்மாழ்வாரும் மூன்று வயதைக் கூடத் தாண்டவில்லை.

இவ்வாறானால் இதற்கு ஏதாவது ஒரு காரணம் இருத்தல் வேண்டும். அகத்துறைத் தொடர்பான பாடல்கள் பக்தி இலக்கியத்தில் இடம்பெறுவதைத் தவறாக எண்ணாத காரணத்தால்தான் தேவாரம், பிரபந்தம் என்பவற்றில் இவை இடம் பெற்றன. அப்படியானால் தமிழர் என்ன கருத்தில் அகத்துறைப் பாடல்கட்குப் பக்தி இலக்கியத்தில் இடந் தந்தனர் என்பதை ஆராய வேண்டும்.

மிகப் பழங்காலத்திலேயே பால் உணர்ச்சி (Sex instinct) மிக வலுவானது என்றும் அதனை அடக்கி விடுதல் என்பது எளிதானது அன்று என்றும் இத்தமிழர் கண்டனர். அப்படியானால் அதனை அடக்காமலேயே விட்டுவிடலாமா என்ற வினாவிற்குப் பலரும் விடை காண முற்பட்டனர். பொறி உணர்வுகளை அடக்க முற் பட்டுக் காடுகள் சென்று கன சடைவைத்துத் துறவு மேற் கொண்டவர்களுங் கூடப் பலசமயங்களில் இதில் தோல்வியே கண்டனர் என்பதை அறிதற்கு நீண்ட தூரம் செல்லத் தேவை இல்லை. விசுவாமித்திரர் மேனகை போன்றார் கதைகளே சான்று பகரும். மிக உக்கிரமான தவஞ் செய்பவர்கள் தவத்தைக் கலைப்பதற்காகவே ஒரு மகளிர் படையை இந்திரன் வைத்திருப்பதாகத் தெரி கிறது. இவற்றை எல்லாம் மனத்துட் கொண்ட திருமூலர்,

'ஐந்தும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்
ஐந்தும் அடக்கும் அமரரும் அங்கில்லை'

என்று கூறிப் போனார்.

அடக்க முடியாதது என்ற காரணத்திற்காக இவற்றை அவை போம்வழி விட்டுவிடவேண்டும் என்றும் நம்மவர்

கூறவில்லை. இவற்றை எதிர்த்து நின்று முரட்டுத்தன மாக அடக்கி விடுகிறேன் என்று புறப்படுதலும் பயனற்ற செயலாகும். இதன் இயலாமையை அறிந்த இத் தமிழர் இப் பொறிபுலன்களைத் தம் வழிப்படுத்த ஒரு சிறந்த முறையைக் கையாண்டனர். அவை போகின்ற வழியில் ஓரளவு விட்டு நாளாவட்டத்தில் அவற்றைத் திசை திருப்பி விட்டுவிட்டனர். இவ்வாறு செய்வதால், அவற்றைத் தொழிற்படாமல் அடக்கும் வேலை இல்லை. அவை தொழிற்படத்தான் செய்கின்றன. ஆனால் தம் விருப்பம்போல் தொழிற்படாமல் தலைவனின் விருப்பம் போல் தொழிற்படத் தொடங்குகின்றன. இம் 'மடை மாற்ற'த்தை மேலைநாட்டார் (Sublimation) என்பர். இவ்வாறு பொறிபுலன்களின் ஆற்றலை உள்ளவாறு அறிந்து அவற்றை அடக்கும் பைத்தியக்கார முயற்சியில் ஈடுபடாமல் அவற்றை மடைமாற்றம் செய்வதே சிறப்புடை யது. அல்லாமல் தற்காலத்து ஹிப்பிகளைப் போல மயக்க மருந்து முதலியவற்றால் பொறிகளை அடக்கிவிட முயல்வது பயனற்றது. இதனையே வள்ளுவர்,

"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயனின்றே
மெய்யுணர்வு இல்லா தவற்கு" (354)

எனக் கூறிப்போனார்.

பால் உணர்ச்சியை மடைமாற்றஞ் செய்வதில் இத் தமிழர் கண்ட முதற்படி, அது வெறும் உடம்பை மட்டும் பற்றியதன்று என்பதே யாகும். மனத்தின் அடித் தளத்தி லிருந்து தோன்றும் அது மிக ஆழமான அடிப்படையை உடையது. வெறும் உடம்பை மட்டும் பற்றியதாக இருப் பின் இதனை எளிதில் வென்றுவிடலாம். ஆனால் உள் ளத்தோடு தொடர்புடையது பால் உணர்ச்சியாகலின் இதனை அவ்வளவு எளிதில் வெல்ல முடியாது. காதல் என்பது உடம்பின் தொடர்பைவிட மனத் தொடர்பை அதிகம் உடையது என்பதும், மற்றொரு மனத்தின் நிலை

யைப்பற்றிக் கவலைப்படாமற்கூடக் காதல் உணர்ச்சி தோன்றி வளர்ந்து பெரிதாக ஆக முடியும் என்பதும் இத் தமிழர் கண்ட உண்மைகளாகும். அவ்வாறு தோன்றும் ஒரு ஒருதலைக் காமத்தைக் கைக்கிளை என்று பெயரிட்டு அது அத்துணைச் சிறப்புடையதன்று என்று கூறினாலும் அதன் இருப்பை, அல்லது சக்தியை மறப்பதற்கோ, மறுப் பதற்கோ இயலாது. இது பற்றிக் கூறவந்த தொல் காப்பியம்,

'காமஞ் சாலா இளமையோள் வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்திச்
.............................................
சொல் எதிர் பெறான் சொல்லி இன்புறுதல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே''

(தொல். அகம்-53)

என்று பேசிச் செல்கிறது. எதிராளியினிடத்து எவ்வகை யான உணர்ச்சிப் பிரதிபலிப்பு இல்லாவிடினுங்கூட ஒருவன் இன்பம் அடைய முடியும் என்பதே இந் நூற்பாவால் போந்த திரண்ட கருத்தாகும்.

மேலும் இக்காதல் உணர்வு ஒருவகையான மன நிலையேயாகும் என்பதையும்,

'மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்' (1289)

என்ற குறளும்,

'காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே யானை
குளகுமென்று ஆள்மதம் போலப்
பாணியும் உடைத்தது காணுநர்ப் பெறினே'

(குறுந்—136)

என்ற குறுந்தொகைப் பாடலும் இக்கருத்தை வலியுறுத்து

வனவாகும். எனவே காமம் ஒரு மனநிலை யாகும் என்பது பெறப்படுகிறது.

மனித மனம் தன்னை மறந்து பூரணமாக அன்பு செலுத்தித் தன்னை அதன்பால் ஒப்படைக்கக் கூடிய ஒரு பொருளை நாடுவது முற்றிலும் இயற்கைதான் சாதாரணமாகக் காணும் பொழுது, எந்த ஓர் உயிரும் யாரிடம் மிக அதிகமான அன்பு செலுத்துகிறது. என்று பார்த்தால், அது தன் மேலேயே செலுத்திக் கொள்ளும் அன்புதான் மிக மிக அதிகமானதாகும். இந்த நிலையில் இருந்து விடுபட்டுப் பிறிதோர் உயிரிடம் சாதாரண அன்பைச் செலுத்தாமல், தன்மேல் தனக்குள்ள அன்பைவிட அதிகம் செலுத்தக் கூடுமேயானால் அதுவே காதல் எனப்பெறும். ஒவ்வொருவரும் அவரவருக்கேற்ற ஒரு பொருளிடத்து அல்லது உயிரினிடத்து அன்பு செய்வர். இதோ நாவுக்கரசர் பெருமான்,

'என்னில் யாரும் எனக்கு இனி யாரிலை
என்னிலும் இனி யான்ஒரு வன்உளன்
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே'

(5—ஆம் திரு—20—1)

என்று பாடுகிறார்.

தன் மேல் பெருகும் அன்பை ஓரளவு மாற்றி, குறிப்பிட்ட ஒருவன் மேலோ, ஒருத்தி மேலோ செலுத்துவது காதல் எனப்பெறும். அவ்வாறு ஒருத்தன், ஒருத்தி என்று குறிப்பிடாமல் அனைவரிடமும் செலுத்துவது அருள் எனப்பெறும். இவ்வாறு தன் மேல் மட்டும் வளரும் அன்பைப் பெருக்கி அகில உலகிலும் உள்ள நிலையியல் இயங்கியல் பொருள்கள் ஆகிய அனைத்திடத்தும் செலுத்துவதையே அருள் உடைமை என்கிறோம். தனியார் மாட்டுத் தோன்றும் பால் உணர்வு பால்வேறுபாட்டைக் கடக்கையில் அருள் (Sublime Love) எனப்பெயர் பெறுகிறது.

இக்கருத்தை நன்குணர்ந்த தமிழர் மிக ஆழ்ந்ததும் பரந்ததுமான காதல் உணர்ச்சியை யார் வெளிப்படுத்தி

னாலும் அது அனைத்துலகுக்கும் பொதுவான ஒன்றாகிறது என்ற உண்மையைக் கண்டனர். காதல் வாழ்வில் எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும் அது உணர்ச்சிப் பெருக்கின் ஒரு பகுதியைச் சுட்டியதாகவே முடியக் காண்கிறோம். சிலர் அந்த உணர்ச்சியின் ஆழத்தை அறிய மட்டும் முடிகிறது; சிலர் அதன் ஆழத்தை அறிவதுடன் அதனை எடுத்துக்கூறும் ஆற்றலும் பெற்றுள்ளனர். எடுத்துக்கூறினாலும் கூறமுடியாவிட்டாலும் இந்த அனுபவம் அனைத்துலகுக்கும் பொதுவான (Universal) ஒன்றாகும். அப்படிப் பொதுவான ஓர் அனுபவத்தைத் தனிப்பட்டவருடையது போலக் காட்டுதல் தவறாகும்.

தனிப்பட்ட ஒருவருடைய பெயருடன் எந்தப் பொதுவான அனுபவத்தைக் கூறினாலும் அது தனி மனிதனுடைய அனுபவமாக (Individual experience) ஆகிவிடுமே தவிர, உலகப் பொதுவாக ஆக முடியாது. இதனாலேயே அகத்துறை அனுபவங்களைக்கூறும் பாடல்கள் ஒருவருடைய பெயரையும் சுட்டுதல் கூடாது எனத் தொல்காப்பியம் கட்டளை இடுகிறது.

'மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறாஅர்'
'புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே'

(அகத்—57, 58)

இதனை அறிந்த தமிழர் உணர்ச்சியின் ஆழ்ந்த இயல்பையும் அது நீண்ட நேரம் நிலைபெறுவதில்லை என்பதையும் அறிந்தார்கள். அக உணர்ச்சியை நமக்கு ஊட்டவரும் பாடல்கள் கூடுமானவரை குறைந்த அளவுடையனவாகவே இருந்தால்தான் அவ் வுணர்ச்சிப் பிண்டமாக அப்பாடல்கள் இருத்தல் கூடும். என்பதையும் அறிந்தனர். இம்முறையில் தான் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலியவை தோன்றின. அக நானூற்றில் இருபதுக்கும் மேற்பட்ட அடி

கள் வருகின்றனவே என்றால் அவை ஏனைய தொகைகளைப்போல அக உணர்வை மட்டும் காட்டாமல், உவமை கூறுவதற்காக வரலாற்றுச் செய்திகளிலும், தேவையற்ற— ஆனால் சுவையான வருணனைகளிலும், பன்னிரண்டு அடிகள் வரையும் அதற்கு மேலும் செலவிட்டு அக உணர்ச்சியை ஒன்பது அல்லது அதற்கும் குறைந்த அடிகளில் கூறிற்று.

நாளாவட்டத்தில் இந்நிலை மாறிப் பழைய தொல்காப்பியனார் கூறிய கலிப்பா முறையில் அக உணர்ச்சியைக் கூறிப்பார்த்தனர் தமிழர். தரவுப்பகுதியில் ஒரு சொல்லோவியத்தைப் புனைந்து காட்டினர். தாழிசைப் பகுதியில் அற்புதமான அகவுணர்ச்சியை வெளியிட்டனர். சுரிதகத்தில் அந்த அகவுணர்ச்சிக்கு ஒரு முடிவு கூறினர். இம் முறையில் அமைந்த பாலைக்கலியும் குறிஞ்சிக் கலியும் அற்புதமாக அமைந்துவிட்டன. என்ன இருந்தாலும் பாடலின் நீளம் அதிகந்தானே! நாம் முன்னர்க் கூறிய கொள்கைக்கு இது இடையூறுதானே என வினவலாம். இசைப்பாடல் ஆகலின், அந்த இடையூற்றை, இசையைக் கொண்டு கலிப் பாடல்களில் வென்றனர். பாலைக்குரிய துயரச் சுவையைப் பல நெட்டெழுத்துக்களைக் கொண்டு அடியை நிரப்புவதன்மூலம் வெளியிட்டனர். எந்தப் பாலைக்கலிப் பாட்டையும் யதுகுலகாம்போதி அல்லது சாவேரி இராகத்தில் பாடிப்பார்த்தால் இவ்வுண்மையை விளங்கிக் கொள்ள முடியும். ஆசிரிய அடி இசைக்கு ஒத்துவராத ஒன்றாகும். எனவே இசையின் தொடர்பு அதிகம் இல்லாமல் சொற்களைக் கொண்டு மட்டும் உணர்ச்சியை ஊட்ட வேண்டிய கடப்பாடு இருந்தமையின் நற்றிணை முதலியவை அடிகளைக் குறைப்பதன் மூலம் சுவை உணர்வில் தொய்வு விழாமல் காப்பாற்றிக் கொண்டன.

எனினும் இத் தொய்வைக் கலிப் பாடல் இசை மூலம் வென்றுவிட்டது. பாலை, குறிஞ்சி ஆகிய இரு கலிகளி

லும் போக எஞ்சிய, முல்லை, மருதம், நெய்தல் ஆகியவற்றுள் புதிய அடிமுறையைப் பயன்படுத்திப் பார்த்துள்ளனர். முடிவு தோல்விதான். பாலை, குறிஞ்சி, ஆகிய கலிகளுள் காணப்பெறும் சுவை ஏனைய மூன்றிலும் இல்லை என்பதை நடுநிலையுடன் இவற்றைக் கற்பார் எளிதிற் காண்டல் கூடும். இவ்வாறு கூறுவதால் முல்லைக் கலி முதலியவற்றைக் குறைத்துக் கூறிவிட்டதாக யாரும் நினைய வேண்டா. ஒரு திறனாய்வாளனின் கண்ணோட்டத்தில் இவ்வாறு கூறப் பெறுகிறது. இதில் கருத்து வேற்றுமைக்கு இடம் உண்டு.

களப்பிரர் இடையீட்டுக்குப் பிறகு இப்பாடல் வகைகள் வழக்கொழிந்துபோயின. நாடகத் தனிநிலைச் (Dramatic monologue) செய்யுட்களாக அமைந்த அகத்திணைப் பாடல்களும், நாடக உரையாடல் (Dramatic Dialogue) பாடல்களாகவும், நாடகத் தனிநிலைப் பாடல்களாகவும் அமைந்த கலித் தொகைப் பாடல்களும் வழக்கொழிந்தன. விருத்தப்பா அரங்கம்ஏறி முன்னர்க் கூறிய பாடல்வகை அனைத்தையும் புறங்கண்டு ஓட்டிவிட்டது.

விருத்தமெனும் கூத்தி புனையாத வேடமே இல்லை எனலாம். பக்திப் பாடல்கள் எனப் பெறும் தேவார, திருவாசக, பிரபந்தங்கள் அனைத்தும் தன்னுணர்ச்சிப் பாடல்கள் (Lyrical poetry) எனினும் அனைத்தும் விருத்தப் பாடல் வகையிலேயே அமைந்தன. எந்தவகை உணர்ச்சியையும் வெளியிட விருத்தம் பேருதவி புரிந்தது. அந்த நிலையில் அக உணர்வின் ஆழம் என்றுமே அறியப்பட்ட தொன்றாகலின் பக்திப் பாடல்களும் அகத்தைப் பயன்படுத்தின.

தன்னுணர்ச்சிப் பாடல்கள் (Lyrical poems) என்பவை ஆழ்ந்த காதல், இறைவனுடைய பெருமை, படைப்பின் பல்வேறு இரகஸ்யங்களைக் கண்டு பெறும் வியப்பை வெளியிடுதல் ஆகியவற்றைப் பாடும் இயல்புடையன. எனவே காதலை அனைத்துலகப் பொதுவாக ஆக்கிய தமிழர் அதேபோன்று

அனைத்துலகப் பொதுவான பக்திப் பாடலிலும் காதல் வருவதில் தவறு இல்லை எனக் கண்டனர். நேரிடையாகத் தன் உணர்ச்சி வெளிப்பாட்டை அறிந்துகொண்டு தலைவி, பதிலுணர்ச்சி காட்ட முடியாத பொழுதும், கைக்கிளை என்ற பெயரில் அவள் மாட்டுக் கொண்ட காதலைப் பாடலாம் என்று இலக்கணம் வகுத்தனர். அதற்கு அடுத்த படி யாது? கண் காணாத கடவுளிடத்துத் தான் என்ற அகங்காரக் கலப்பில்லாத அன்பைச் செலுத்திப் பக்திப் பாடல் பாடினர். காதல், பக்தி என்ற இரண்டிலும் ஓரளவு அகங்காரம் மமகாரம் என்ற இரண்டும் குறைந்து தனி அன்பு ஊற்றெடுத்தது. இந்தப் பொதுத் தன்மை காரணமாகவே பக்திப் பாடலில் அகப்பொருள் துறைகள் நுழைந்தன.

இவை இரண்டின் தன்மையை அறிந்தவர்கள் இம்முயற்சியைத் தடை செய்யவில்லை. காதலிலும் அகங்காரம் கரைந்து 'தான்' என்ற பொருளை 'அவள்' என்ற பொருளில் கரைக்க முயன்றனர்; பக்தியிலும் அவ்வாறே. எனவே மணிவாசகர் திருக்கோவையார் பாடியது முற்றிலும் பொருத்தமான செயலேயாகும்.

அக உணர்வு பக்திப் பாடலில் இடம் பெறுவது முறை தான் என்றால், தேவார, திருவாசக, பிரபந்தம் போன்ற தன்னுணர்ச்சிப் பாடலில் அக உணர்வு வருவது முறை என்றுதான் பொருள். ஆனால் திருக்கோவையார் மரபு பற்றிப் பாடப்பெறும் (Conventional Poetry) பாடலாகும். கோவையில் இரண்டடிகள் அக உணர்வுக் கருத்தை விளக்குகின்றன. ஆனால் எஞ்சிய இரண்டடிகள் மணிவாசகரின் பக்தி நலத்தைக் காட்டுவனவாக அமைகின்றன.

காதல் தோன்றுகையில் அது பற்றிப் படர்வதற்கு ஒரு கொழு கொம்பாக ஒருத்தனோ ஒருத்தியோ வேண்டும். அக் காதல் முருகி வளர்ந்த நிலையில் அது தோன்றக் காரணமாக இருந்த அந்த ஒருத்தனோ ஒருத்தியோ கடைசிவரை இருத்தல் வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை.

எனவே, காதல் உணர்ச்சியில் 'தான்' என்ற ஒரு பொருளை மற்றொரு பொருளிடம் முற்றிலும் பறிகொடுத்துப் பழகி விட்ட ஒருவன், நாளாவட்டத்தில் தான் எந்தப் பொருளிடத்துத் தன்னைப் பறிகொடுத்தானோ அதிலிருந்து நீங்கி மற்றோர் பொருளிடம் அன்பைச் செலுத்த முடியும்.

இவ்வாறு கூறுவதால் ஒருத்தியிடம் அன்பு பூண்டு பழகியவன் நாளாவட்டத்தில் அந்த அன்பை வேறு ஒருத்தியிடம் செலுத்தலாம் என்று பொருள் கூறிவிட வேண்டா. ஒருத்தன் அல்லது ஒருத்தியிடம் தொடங்கும் அன்பு உண்மையில் வளர்ந்தால் அனைத்துலகிடமும் அருளாக விரியும். அப்படி விரியும் அன்பைக் கடவுள் மாட்டுச் செலுத்துதல் எளிதாக முடிகிறது. இதுகருதியே சிற்றின்பத்திலிருந்து பேரின்பம் செல்ல வழி உண்டு எனக் கூறினர் போலும்!

அன்பை ஒரு பொருளிடத்திலிருந்து மற்றொரு பொருளுக்கு மாற்றுவது முடியுமா? அது இயற்கையா என்பார் ஒன்றைக் கவனித்தல்வேண்டும். தலைவனுக்காகவே தான் என்று தன் அன்பு முழுவதையும் அவனுக்கே கொட்டிக் கொடுத்த தலைவி ஒரு குழந்தை பிறந்தவுடன் தலைவனிடம் செலுத்திய அன்பில் ஒரு பகுதியை மடைமாற்றஞ் செய்கிறாள். இப்படியே ஒன்று ஒன்றாக அன்பு விரிகையில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மடைமாற்றஞ் செய்தல் எளிதாகிவிடுகிறது. அதுபோலவே தன்னலமற்ற அன்பை அனைவரிடமும் செலுத்திப் பழகிய பிறகு இறைவனிடம் அதனை மடைமாற்றஞ் செய்வது எளிதாகிவிடுகிறது. காதல் இலக்கியம், கடவுள் பக்தி இலக்கியத்தில் புகுந்த வரலாறு இதுதான்.

இனி இலக்கிய நயஞ் செறிந்த திருக்கோவையாரில் புகுந்து அதிற் காணப்பெறும் சொல்லாட்சி, பொருளாழம், கற்பனை நயம், உவமைச் சிறப்புகள் என்பவற்றை நெடுகக் கூறிச் செல்ல வேண்டிய தேவை இல்லை. திருவாசகத்தில் காணப்பெறும் அழகு வேறு; திருக்கோவையாரில் காணப் பெறும் அழகு வேறு.

கோவையாரின் முதற் பாடலே அடிகளாரின் புலமை நயத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். தமிழில் முதலில் தோன்றியது இன்று கூறத்தக்க பாண்டிக் கோவை 175 துறைகளை மட்டும் வகுத்துக் கொண்டு 326 பாடல்களைப் பெற்றுள்ளது. அடிகளார் 400 துறைகள் வகுத்துக் கொண்டார் என்றால் அவரது புலமைச் சிறப்பை அறிய இதுவும் ஓர் எடுத்துக் காட்டாகும். பிற்காலத்தில் எழுந்த விருத்தப் பாக்களில் உள்ளுறை இறைச்சிப் பொருள் தோன்றப் பாடிய பெருமை அடிகளுக்கே உரியதாகும். பதினேழு பாடல்களில் உள்ளுறைகள் அமைந்துள்ளன.

மரபுபற்றிப் பாடப் பெறுவதேனும் கோவைப் பாடல்களில் முதலிரண்டு அடிகள் கவிஞன் மனத்தில் மேலோங்கி நிற்கும் எண்ணத்தை வெளியிடும் கருவியாய் அமைகின்றன.

'ஓங்கும் ஒருவிடம் உண்டு அம்பலத்தும்பர் உய்ய அன்று
தாங்கும் ஒருவன் தடவரை வாய்த் தழங்கும் அருவி'
(158)

என்ற பாடலில் இறைவன் பிறர் பொருட்டாக நஞ்சையும் உண்ணும் பரம கருணையுடையவன் என்பதையும்,

'தில்லையான் அருள்போன்று அலராய் விளைகின்றது'
(180)

என்ற பாடலில் இறையருள் நம்மையும் அறியாமல் புகுந்து விரிகின்றது என்ற கருத்தையும்

'பிழைகொண்டு ஒருவிக் கெடாது அன்பு செய்யில்
பிறவியென்னும்' (65)

என்ற பாடலில் உயிர்கள் பிழை எத்துணை செயினும் அன்பு செய்தால் அப் பிழையை மன்னிப்பவன் இறைவன் என்ற கருத்தையும், இதே கருத்தை,

'தொழுவார், வினைவளம் நீறுஎழ நீறணி அம்பலவன்'
(118)

என்ற பாடலிலும் கூறியருளுதல் காணலாம்.

'சோத்து உன்அடியம் என்றோரைக் குழுமித்தொல்
வானவர் சூழ்ந்து
ஏத்தும்படி நிற்பவன்' (173)

என்றவிடத்தில் தன் திருவடியை வணங்கினார்க்கு இமையவர் தொழும் பதம் தருபவன் (சோத்தம்-இழிந்தோர் உயர்ந்தோர்க்குச் செலுத்தும் அஞ்சலி) என்ற கருத்தையும் பேசல் காணலாம்.

இனி அடிகள் சங்க நூல்ளிகலும் திருக்குறளிலும், தேவாரங்களிலும் எந்துணைப் பயிற்சியுடையார் என்பதும் அவற்றுள் எத்துணைக் கருத்துக்களையும் சொற்றொடர்களையும் எடுத்து ஆளுகின்றார் என்பதும் அறியவேண்டுமாயின் பேராசிரியர்கள் வெள்ளைவாரணனார் அரிதின் முயன்று, ஆய்ந்து எழுதிய பன்னிரு திருமுறை வரலாறு இரண்டாம் பகுதியில் அவற்றை விரிவாகக் காணலாம்.

இறையனார் களவியல் உரை முதற் கொண்டு அடிகள் கற்றிருந்தார் என்பது மட்டுமன்று; அதில் வரும் குறையைக் கூட செப்பஞ் செய்து கூறியுள்ளார் என்பதையும் அறிதல் வேண்டும். களவியல் உரைக்காரர் எங்கோ பிறந்த ஒருவவனும் பிறிதெங்கோ பிறந்த ஒருத்தியும் வினை வயத்தால் ஒன்று கூடுகின்றனர் என்பதை அறிவிக்க, 'வடகடல் இட்ட ஒரு நுகம் ஒரு துளை, தென்கடலில் இட்ட ஒரு கழி சென்று கோத்தாற் போலவும்......' என்று எழுதிப் போனார். ஆனால் இந்தியாவில் யாண்டும் வடகடல் இல்லை. எனவே இதில் காணப்பெறும் பிழையை உணர்ந்த அறிஞராகிய அடிகள் தம் கோவையின் 6 ஆம் பாடலில்,

'வளைபயில் கீழ்கடல் நின்றிட மேல்கடல் வானுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத் தொல்லோன்'

என்று கூறும் முறையில் அந்த உவமையில் ஈடுபட்டமையின் அதனை விடாது போற்றிப் பயன்படுத்தும் அதே நேரத்தில் அதில் உள்ள பிழையையும் போக்கிவிடுகிறார்.

இக்கோவையாரின் முதற் பாடலில் அடிகளின் ஒப்பற்ற ஓசை நயமும், சொற்களைப் பொருளுக்காக மட்டுமின்றி அவற்றின் ஓசைச் செறிவை அறிந்து பயன்படுத்தும் சிறப்பும் விளங்குகின்றன.

'திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லை
குருவளர் பூங்குமிழ் கொங்கு பைங்காந்தள் கொண்
டோங்கு தெய்வ
மருவளர் மாலையொர் வல்லியின் ஒல்கி அனநடை
வாய்ந்து
உருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன்று ஒளிர்
கின்றதே'

இப்பாடலில் முதற்சீர் நான்கும் குறிலிணை இரண்டு பெற்ற சீர்கள். இனி முதலடியில் குறிலிணையில் தொடங்கி 2, 3, 4, 5 ஆகிய சீர்களில் முதலெழுத்து நெடிலாக வருமாறு பாடப் பெற்றுள்ளது. இரண்டாம் அடியும் அவ்வாறே. மூன்றாம் அடி, நான்காம் அடிகள் இதன் எதிராக இரண்டாவது சீர்மட்டும் நெடிலில் தொடங்கி ஏனைய 3, 4, 5 ஆகிய சீர்கள் குறிலில் தொடங்குதலையும் காணலாம். முதலடியில் 6 நெடிலும், இரண்டாம் அடியில் 5 நெடிலும் பயன்படுத்திய அடிகளார் மூன்றாம் அடியில் 3 நெடிலும், நான்காம் அடியில் 3 நெடிலும் பயன்படுத்துதல் காணலாம். முதல் இரண்டு அடிகளிலும் எல்லா நெடில்களும் (முதலடியின் ஈற்றுச் சீர் தவிர) சொற்களின் தொடக்கத்தில் வருதலும் மூன்று நான்காம் அடிகளில் உள்ள 6 நெடில்களில் 4 நெடில்கள் சீர்களின் இறுதியில் வருமாறு தொடுத்துள்ளார்.

முதலிரண்டு அடிகள் தலைவியைக் கண்ட தலைவனது வியப்பையும், பின் இரண்டு அடிகள் தலைவியின் கூசிக் கூசி நடக்கும் நடையையும் குறிப்பால் உணர்த்தும் வகையில் ஓசைநயம் பெற்று விளங்கக் காணலாம். தலைவியைக் கண்ட பொழுது உடனே தோன்றிய அதிர்ச்சியை, முதற் சீர்களைக் குறிலிணையிற் றொடங்குவதன் மூலமும்,

வியப்பை நெடிலால் தொடங்கும் முதலடி இரண்டாம் அடிகளின் 2, 3, 4, 5 ஆகிய சீர்கள் மூலமும் உணர்த்திய கவிஞர் மூன்று நான்காம் அடிகளில் பெண்ணின் ஒசிந்த நடையழகை உணர்த்த நெடிலை ஒதுக்கிப் பாடுவதை வழியாகக் கொள்கின்றார்.

ஆனால் இப்பாடல் இத்துணைச் சிறப்புடன் அமையாவிட்டாலும் திருநாவுக்கரசு பெருமானால் முன்னரே பாடப் பெற்றுள்ளது. அதன் ஓசை யழகிலும், சொல்லோவிய அழகிலும் ஈடுபட்ட அடிகளார் அப் பாடலை அப்படியே வாங்கிக் கொண்டு வேண்டும் மாற்றங்கள் செய்து கோவையாரின் முதற்பாடலாக அமைக்கின்றார். நாவுக்கரசரின் நான்காந் திருமுறையில் இப்பாடல் காணப்பெறுகிறது.

**'திருவளர் தாமரை சீர்வளர் செங்கழு நீர்கொள் நெய்தல்**
**குருவமர் கோங்கம் குராமகிழ் சண்பகம் கொன்றைவன்னி**
**மருவமர் நீள்கொடி மாடமலி மறையோர்கள் நல்லூர்**
**உருமவர் பாசத்து உமையாள் பாகனை உள்குதுமே' (4-97)**

முன்னோர் மொழி பொருளே யன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்றினர் நம் முன்னோர் என்பதற்கு இதனைவிடச் சிறந்த எடுத்துக் காட்டு தேவை இல்லை.

இத்துணைப் பெரிய அறிஞராகவும் சிறந்த கவிஞராகவும் விளங்கிய அடிகளார் திருவாசகத்தில் மிக எளிய சொற்களைக் கொண்டு கற்பனை முதலியவற்றிற்கு இடந் தாராமல் பாடியதை நோக்கல் வேண்டும் தன்னுணர்ச்சிப் பாடல் (Lyrical Poety) களாக உள்ள திருவாசகம் வெறும் உணர்ச்சி வெளிப்பாட்டுக் கருவியே யாகும்.

மணிவாசகர் போன்றவர்கள் வறட்டுப் புலமை மட்டும் உடையவர்கள் அல்லர். இவர்கள் கவிதைகள் அனுபவ வெளிப்பாடு என்றாலும் இவ்வனுபவத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணங்கூட இவர்கட்கு இல்லை. தம் அனுபவம் நிறைந்த பொழுது அவர்களையும் மீறி அது பாடலாக முகிழ்த்தது என்பதே சரியாகப்படுகிறது.

# ஆன்ம யாத்திரை

மணிவாசகப் பெருமானுடைய வரலாறு, புலமை நயம் என்பவைபற்றிக் கண்டோம். இத் தலைப்பு சற்று விநோதமானது. யாருடைய ஆன்ம யாத்திரைபற்றிப் பேச இங்கு எடுத்துக் கொண்டது? மணிவாசகரின் திருவாசகம் எல்லா ஆன்மாக்களும் செய்ய வேண்டிய இன்றியமையா யாத்திரை பற்றிப் பேசுவதாகும். உலகிலுள்ள எல்லா ஆன்மாக்களும் செய்து கொண்டிருக்கின்ற, செய்ய வேண்டிய யாத்திரை பற்றிப் பேசுவதுதான் இந் நூலின் தனிச் சிறப்பாகும். 'ஆசாரிய ஹிருதயம்' என்ற நூல் நம்மாழ்வாரின் பாடல்களே அவருடைய ஆன்மீக வரலாறாகும் என்று பேசுகிறது. அதே போலத் திருவாசகமும் மணிவாசகருடைய ஆன்மீக வரலாறு என்று கூறுவதில் தவறில்லை. பல பிறவிகளில் பிறந்து, பட்டு உழன்று, துன்புற்று, அடைய வேண்டிய துன்பங்கள் அனைத்தையும் ஒரே பிறவியில், அடைந்து உய்கதி பெற்றமையைத் தான் திருவாசகம் எடுத்துக் கூறுகிறது.

முதற் பாட்டிலிருந்து இறுதிப் பாடல்வரை அப்பட்டமான அனுபவத்தின் பிழிவாகும் இத்திருவாசகம் என்று கூறினால் தவறில்லை. ஆதலால்தான் ஏனைய பாடல்களிற் காணப்பெறும் தொடர்ச்சி, கற்பனை, வருணனை, சொல்லடுக்கு என்பவை இப்பாடல்களில் காணப்படுவதில்லை. இன்று, திருவாசகத்தை நாம் காணப்போகின்ற முறை ஓரளவு புதியதாகும். பழைய மரபு வழியை அடியொற்றி இத்தகைய பாடல்களுக்குப் பொருள் காண முற்படுவதும், ஆராய்வதும் தவறாகும் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. எந்த ஒன்றும் காலத்திற்கேற்பப் பயன்படவில்லையானால் அதன் பயன் இல்லையாய் முடியும். எனவே ஆராய்ச்சிக் கண்கொண்டு திருவாசகத்திலிருந்து ஒரு சில முடிபுகளைக் காண முற்படுகின்றேன். இவை தவறாகவும் இருக்கலாம். ஆனால் தவறு

ஏற்படுமோ என்று அஞ்சி அதன் அருகே போகாமல் இருப்பதைவிட இது பயனுடையது என்று கருதுகிறேன். தவறு இருப்பின் அதனை மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கலாம். இவ்வாறு ஆராய முற்படுவதால் திருவாசகத்தினிடம் அன்புக் குறைவு என்று தவறான முடிபுக்கு யாரும் வர வேண்டா.

இத்தகைய கண்ணோட்டத்தில் யான் கண்ட முடிபுகள் சிலவற்றை உங்கள் முன்னர் வைக்கத் துணிகின்றேன். முதலாவது தேவாரம் பாடிய மூவரினும் திருவாதவூரர் முற்றிலும் மாறுபட்டவர் என்று நினைக்க வேண்டியுளது. இந் நாட்டில் நிலவி வரும் பழைய கொள்கைகளின்படியே இம் முடிபுக்கு வந்துள்ளேன். திருஞான சம்பந்தர் போன்றவர்கள் 'சீவன் முக்தர்' எனப்படுவர். அப் பெருமானே,

> 'துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
> மறக்குமா றிலாதவென்னை மண்ணின் மேல்,
> பிறக்குமாறு காட்டினாய் ....................'
>
> (திருமுறை—2—98—2)

என்று பாடுகிறார். ஞானசம்பந்தர் போன்றவர்கள் இப் பிறவியை எடுத்து ஒரு சிலவற்றைச் செய்துதான் வீடு அடைய வேண்டும் என்ற நியதி இல்லாதவர்கள். பிறப்பு, இறப்பு என்பவற்றைக் கடந்து நிற்கின்ற இவர்கள் ஏன் இவ்வுலகிடை தோன்றினர் என்றால் இறைவன் கட்டளையை நிறைவேற்றவேயாகும். தபால்காரர் தாம் கொண்டு வருகின்ற கடிதங்கள் நற்செய்தி கொணர்கின்றனவா அன்றா என்ற வேறுபாடு பாராட்டாமல் தம் கடமையை நிறைவேற்றிச் செல்வதுபோல இப் பெருமக்கள் எந்தச் சூழலிலும் சிக்காமல் இறைவன் கட்டளையை நிறைவேற்றிப் போவதற்காகவே இந்த உடம்பெடுத்தவர்கள்.

இதன் எதிராக ஒரு சில பெருமக்கள் நம்போன்ற வாழ்க்கையுடையவர்கள். நம்போன்றது என்று இவர்கள் வாழ்க்கையைக் கூறினாலும் ஒரு பெரிய வேறுபாடு உண்டு.

இன்னும் பல பிறவிகள் எடுத்து விடுதலை அடைய வேண்டிய நிலையில் உள்ளவர்கள் நாம். ஆனால் மணிவாசகர் போன்றவர்கள் பல பிறவிகளையும் பிறந்து தாண்டியவர்கள். 'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்' என்று அவரே கூறுமாறு போல இறுதிப்படியாக இப் பிறப்பை எடுத்துள்ளவர்கள். இவர் போன்றவர்கள் நம்மைப் போன்ற குற்றம், குணம் இரண்டும் உடையவர்கள். இவ்வாறு கூறுவதற்காக யாரும் சினக்க வேண்டா. குற்றம் ஒரு சிறிதும் குணம் மலைபோன்றும் உடையவர் இப் பெருமான். இன்னுங் கூறப்போனால் பாண்டிப் பேரரசின் தலைமை அமைச்சராயிருந்தமையின் அதிகார வர்க்கத்தினர்க்குரிய இயல்புகள் இருக்க வேண்டிய இடத்தில் அதிகாரத்தால் பாதிக்கப்படாத ஒருவர் என்று கூறவேண்டும். 'அறம் நிரம்பிய அருளுடை அருந்தவர்க்கேனும் பெறலரும் திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்' (அயோத்...மந்-சூழ்-77) என்று கம்பநாடன் கூறுவ்தற்கு மாறாக எத்துணைப் பெரிய அதிகாரத்திலிருந்தும் சிந்தனை பிறிதாக ஆகாதவர்.

மணிவாசகரைப் பொறுத்தமட்டில் மாபெரும் அறிவாளியாக இருந்தமையின் அவருடைய பெருமையை அறிந்த மன்னன் அவரை அமைச்சராக ஏற்றுக் கொண்டான். உலகியல் வாழ்க்கையில் நன்கு தோய்ந்து வாழ்க்கையின் நெளிவு சுளிவுகள் அனைத்தையும் நன்கு அறிந்திருந்தார் பெருமான். அவர் திருமணம் செய்து கொண்டிருந்தாரா இல்லையா என்பன போன்ற ஆராய்ச்சிகளில் நான் புக விரும்பவில்லை. பொறி புலன்கள் வழியாக இவ்வுலகை எங்ஙனம் ஒருவன் அனுபவிக்க முடியுமோ அப்படி அனுபவித்தவர். அதிலும் அதிகாரத்தின் முடியில் இருந்தமையின் உலகையும் வாழ்க்கையையும் இவர் மிக நன்கு அனுபவித்திருந்தார் என்றே கருதுகிறேன். அதிகார வர்க்கத்தின் உச்சியிலிருந்து இன்பம், துன்பம், புகழ், இகழ் ஆகியவற்றின் எல்லைவரை சென்று அனுபவப் பட்டவர். எனவே அவருடைய சொற்கள் தம் அனுபவத்தை நேரிடை

யாகக் கூறாமல், ஏறட்டுக் கொண்டு கூறப்பட்டவை அல்ல. ஷேக்ஸ்பியரின் எட்டாவது ஹென்றி என்ற நாடகத்தில் வரும் 'தாமஸ் உல்சி' என்ற பாத்திரம் பேசுவது நினைவுக்கு வருகிறது.

* 'பெருமை என்பதன் ஆழமான பகுதிகளையும்
மேடான பகுதிகளையும் அனுபவித்தவனாகிய
நான் கூறுகிறேன்.........' என்று உல்சி பேசுகிறான்.

ஆகவே தன் சொற்களுக்கு அதிகம் மதிப்புத் தர வேண்டும். என்கிறான் அவன். இது அடிகட்கும் முற்றிலும் பொருந்தும். இத்தகைய அனுபவங்களை அடிகள் பெறுமாறு இறைவன் பணித்தமைக்கு ஒரு காரணம் உண்டு. அவருடைய வாழ்க்கை முழுத்தன்மை பெற்றிருப்பின் மட்டுமே பிற்காலத்தில் அவர் பெறப் போகின்ற மாற்றம் முழுப் பயனைத் தரமுடியும். ஏனையோருக்கும் இத்தகைய இருநிலைப்பட்ட அனுபவம் வாய்க்கிறதெனினும் அவர்கள் அதிலிருந்து ஒன்றையும் கற்றுக் கொள்வதில்லை. இன்பம் வரும்போது அதில் ஆழ்ந்து அனுபவிப்பதும், துன்பம் வருங்கால் அதனை ஏற்க மறுத்துப் போராடி மனத்துயர் எய்துவதும் சாதாரண மக்கள் மனநிலை. ஆனால் கீதை கூறுகிற 'ஸ்திதப் பிரஞ்ஞ' மனநிலை வரவேண்டுமானால், இரட்டையை அதாவது 'இன்ப துன்பம்' 'சூடு—குளிர்ச்சி' என்பவற்றை ஏற்றுக் கொண்டு இரண்டிலும் ஒரே மனநிலையில் இருக்கப் பழக வேண்டும்.

இவை இரண்டினாலும் உந்தப்படாமல், பாதிக்கப்படாமல் இருக்கும் மன நிலையைக் கீதை'சமதிருஷ்டி' என்று கூறும். மணிவாசகரின் வளர்ச்சி இத்தகைய நிலையைப் பெற்றது. அமைச்சராக இருந்த பொழுதே இம்மன

---

* "Say Wolsy, that once trod the depths and shoals of honour Found thee a way..........." (Henry VIII A. 3. S. 2 line 435)

நிலையை அவர் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு பெற்றிருக்க வில்லையானால் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின் அடியில் ஞானாசிரியனைப் பார்த்தவுடன் முழு மாற்றத்தை அவர் அடைந்திருக்க முடியாது. அடிப்படை செம்மையாக இருந்தாலொழிய ஒரு பெருமாற்றம் ஏற்பட வழி இல்லை.

இந்த அடிப்படையை நம் முன்னோர் நன்கு அறிந்திருந்தனராகலின் ஒரு பெரியார் ஒரு நாட்டின் ஓரிடத்தில் தோன்றினார் என்று கூற வரும்பொழுது அதற்குக்கூட ஒரு நிலைக்களம் அமைத்துப் பேசுகின்றனர். இராமன் பிறப்பதற்குக் கோசலம் தனியுரிமை யுடையதாகப் புலவன் கூறுகிறான். 'ஆசலம்புரி ஐம்பொறி வாளியும்..... நெறியின் புறஞ்செலாக் கோசலம்புனை நாடு' (பால 1) என்பது தொடங்கி அந் நாட்டில் 'வண்மை இல்லை; வறுமை இல்லை, இல்லாரும் இல்லை உடையாரும் இல்லை' என்றெல்லாம் நிலைக்களம் அமைப்பதன் மூலம் இராமன் பிறக்க ஏற்ற இடம் என்பதைக் கம்பன் கூறுவான்.

அதே போன்று திருஞானசம்பந்தர் அவதரித்தார் என்று கூறவேண்டிய இடத்தில் சேக்கிழார் இதே உத்தியைக் கையாளுகின்றார். 'அவ்வூர் மரங்களும் ஆகுதி வேட்கும் தகையவால்' (ஞான. புரா 7) என்று கூறுகிறார். வேதநெறி தழைத் தோங்கப் பிறப்பவர் தோன்றக் கூடிய நாட்டில் மரங்களும் ஆகுதி வேட்டல் முறைதானே! இவற்றை யெல்லாம் மனத்தில் வாங்கிக்கொண்டு பார்க்கும் பொழுது எந்த ஒன்றும் திடீரென்று தோன்றுவதில்லை. அது தோன்றுதற் குரிய சூழ்நிலை அமைந்தாலொழியப் புதியதொன்று தோன்ற முடியாது என்பது விளங்கும். திருவாதவூரர் என்ற பாண்டிய நாட்டின் முதலமைச்சர் திருப்பெருந்துறையில் மரத்தடியில் ஒருவரைச் சந்தித்தவுடன் திடீரென்று முழுமாற்றம் பெற்று மணிவாசகராக ஆகிவிட்டார் என்று கூறுவது பொருத்த முடையதாகத் தெரியவில்லை.

அமைச்சராக இருந்த காலத்திலேயே வாழ்வு முழுவதையுங் கண்டு அதன் நெளிவு சுளிவுகளை அறிந்து, முற்றிலும் அனுபவம் நிறைந்து அவற்றில் ஒரு சம நோக்கைப் பெற்று, முழுத்தன்மையுடன் விளங்கினார் என்றே நினைக்க வேண்டியுளது. இதனாலேயே திருப் பெருந்துறையில் எழுந்தருளியிருந்த ஞானாசிரியன் ஒரு சொல்லைச் சொன்னவுடன் முழுமாற்றத்தைப் பெற முடிந்தது. சமநோக்கு என்பது நிரம்பியிருந்த காரணத் தால் ஞானாசிரியனின் சொற்கள் மூடியைத் திறந்துவிட் டதுபோல் ஆகிவிட்டது. இவர் அனுபவத்தில் முற்றுப் பெறவில்லையானால் இத்தகைய மனநிலை வருதலுங் கடினம்; வந்தாலும் அது நின்று நிலைத்துப் பயன்தரு தலும் கடினம்.

ஆதி சங்கரர் மண்டன மிசிரரோடு தர்க்கம் செய்யத் தொடங்கிய தாகவும், இச் சொற்போர் முடிவை அறி விக்கும் நடுநிலையாளராக மண்டன மிசிரரின் மனைவி யார் சரசுவதி தேவியார் அமர்ந்ததாகவும், தர்க்கத்தின் முடிவில், உலகின் ஒரு செம்பாதியாகிய பெண்ணையும் அவள் மன நிலையையும் அறியாதவர் என்றும் அவருடைய அனுபவம் முழுத் தன்மை பெறாதது என்றும் சரசுவதி தேவியார் சங்கரரை ஒதுக்கி விட்டதாகவும் கதை கூறப் படுகிறது. இக்கதை எத்துணைத் தூரம் உண்மையோ இல்லையோ அறியோம். எனினும் ஓர் உயர்ந்த கருத்தை உள்ளடக்கி நிற்கக் காண்கிறோம். மனிதன் உலக அனுபவம் முழுவதையும் பெற்றாலொழிய முழுத் தன்மை பெற முடியாது. இச் சட்டம் திருஞானசம்பந்தர் போன்ற சீவன் முத்தர்கட்குக் கிடையாது என்பதையும் அவர் போன்றோர் இதிலிருந்து விதிவிலக்குப் பெற்றோர் என்ப தையும் மனங் கொள்ளவேண்டும். எனவேதான் மணி வாசகர் இவர்களிலும் வேறுபட்டவரோ என்று நினைக் கத் தோன்றுகிறது. இக் கருத்து மேலும் ஆராய்வதற் குரியது என்ற அளவில் இதனை விட்டுவிடுகிறேன்.

காலஞ் சென்ற தமிழறிஞர் மறைமலையடிகளும் திருவாசகத்தில் வரும் குறிப்புக்கள் அனைத்தையும் தொகுத்து ஆராய்ந்த பிறகு திருவாதவூரர் திருமணஞ் செய்து கொண்டு வாழ்ந்தவரே என்ற முடிபுக்கு வந்து அவ்வாறே எழுதினார். பிற்காலத்தில் நம் நாட்டில் போலித் துறவும் அத்வைதக் கொள்கையும் மிகுதியும் புகுந்த பிறகுதான் திருமணம் செய்து கொண்டவர்கள் வீடுபேற்றை அடைய முடியாது என்ற தவறான எண்ணம் புகுந்தது. அதன் பயனாகவே பெரியோர்களையெல்லாம் மணமாகாதவர்கள் என்று கூறத் தொடங்கினர் என்றும் நினைக்க வேண்டியுளது.

அனுபவத்தால் நிறைந்து முழுத் தன்மை பெற்று வாழ்ந்த பெரியோர்களின் வாழ்க்கையை எடுத்துப் பார்த்தால் அவர்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பங்கள் ஏதோ ஒரு சொல்லாலேயோ அல்லது ஒரு சிறு நிகழ்ச்சியினாலேயோ நிகழ்ந்திருக்கக் காணலாம். மோகன்தாஸ் கரம்சந் காந்தி என்ற குஜராத்திப் பெரியார் மகாத்மா காந்தி என்ற 'உலக' மானுடன் (World citizen) ஆவதற்கு அவர் பார்த்த அரிச்சந்திர நாடகம் துணை செய்தது. சதாசிவப் பிரமேந்திரர் அவ்வாறு ஆவதற்கு அவருடைய தாய் கூறிய ஓரிரண்டு சொற்கள் காரணமாயின. நரேந்திரன் என்ற கல்விக் கடல் விவேகாநந்தர் என்ற ஞானியாவதற்குத் ததாகதர் என்ற குருவின் ஒரு சொல் காரணமாயிற்று. திருவாதவூரர் என்ற பாண்டி நாட்டு அமைச்சர் மணிவாசகராக ஆவதற்குக் குருந்த மரத்தடியிலிருந்த ஆசிரியனின் ஒரு சொல் காரணமாயிற்று. இவர்கள் இத்துணைப் பேரும் இப் பிறவியிலேயோ முற் பிறவிகளிலோ முழு அனுபவத்தையும் பெற்றுத் தயாராக இருந்தமையின் ஒரு சொல் அல்லது நிகழ்ச்சி அவர்கள் வாழ்க்கையில் ஒரு பெரிய மடைமாற்றம் நிகழக் காரணமாய் இருந்தது.

திருப்பெருந்துறையில் இருந்த குருவைத் திருவாதவூரர் மட்டுமா கண்டிருப்பார்? அவருடன் சென்ற நூற்

றுக்கணக்கானவர்களும் கண்டிருக்கத்தானே வேண்டும். அப்படியானால் அந்தக் குருவின் சொல் அவர்கள் யாருடைய வாழ்க்கையையும் மாற்றியதாகத் தெரிய வில்லையே ஏன்? அதுவே அவர்கள் அனுபவம் முற்றுப் பெற்று விடுதலை அடையத் தயாராக இல்லை என்பதை நன்கு விளக்கும்.

குருந்த மரத்தடியில் இருந்த பெருமகன் ஏதோ ஒன்றைக் கூறினார் என்பதற்காகப் பாண்டி நாட்டின் தலைமை அமைச்சராகிய ஒருவர் பகல் இரவாவது அறியாதவராக, தாம் யார் என்பதையும் அறியாதவராக, தாம் வந்த காரியத்தை அறவே மறந்தவராக மாறிவிட வேண்டுமெனில் அவர் அத்தகைய ஒரு நிலையை அடை தற்குரிய முழுத் தகுதியும் பெற்றிருந்தார் என்பது தவிர வேறு காரணம் கூறல் இயலாது.

இத்தகைய பெரு மாற்றத்தைத் திருப்பெருந்துறையில் பெற்ற பிறகு திருவாசகம் பிறந்தது. இத்தகைய மாற்றம் பெற்றவர்கள் உலக வரலாற்றில் இன்னும் பலர் இருக்க லாம். ஆனால், திருவாதவூரர் முன்னரே சிறந்த புலமை யும், கவிதை புனையும் ஆற்றலும் பெற்றிருந்தமையின் அவருடைய அனுபவம் கவிதை வாயிலாக வெளிப்பட்டது என்று கூறவேண்டியுளது.

சிறந்த அனுபவத்தைப் பெறுபவர் அனைவரும் அந்த அனுபவத்திற்குக் கவிதை மூலமோ அன்றி உரைநடை மூலமோ வடிவு கொடுக்கமுடியும் என்பதில்லை. மிக உயர்ந்த அனுபவத்தையோ உணர்வையோ பெறுபவர் பலரும் அவற்றை வெளியிட முடியாமையின் 'ஊமையன் கண்ட கனவாய்' அவை போய்விடுகின்றன. இக்கருத்தைத் தாமஸ் கிரே என்பவர் தாம் பாடிய 'சவக்குழிக் கையறு நிலை'* என்ற பாடலில் கீழ்வருமாறு பாடுகிறார்.

---

* Some inglorious Milton here may lie; A Cromwel guiltless of his country's blood-Grey's Elegy.

'புகழ்பெற இயலா மில்ட்டன்கள் பலரும்
நாட்டுமக்கள் குருதி சிந்தாத க்ராம்வெல்கள்
பலரும் இவண் புதையுண்டுள்ளனர்'

இவ்வரிகளில் புகழ்பெற இயலா மில்ட்டன்கள் என்ற தொடர் ஆய்தற்குரியது. மில்ட்டன் 'சுவர்க்க நீக்கம்' பற்றிக் கண்ட கற்பனை அவன் ஒருவனுக்கு மட்டும் உரித்தன்று. பலர் அதனைக் கண்டிருத்தல் கூடும். ஆனால் தாம் கண்ட கற்பனைக்கு வடிவு கொடுக்கும் ஆற்றல் அவர்கள்பால் இல்லை; ஒரு மில்ட்டனுக்கு மட்டுமே வடிவு தந்து கவிதை இயற்றும் ஆற்றல் இருந்தமையின் அவன் புகழ்பெறு மில்ட்டனாக ஆயினான். ஏனையோர் புகழ்பெற இயலா மில்ட்டன்கள் ஆயினர்.

அதேபோல வாதவூரர் பெற்ற மாற்றத்தையும் அனு பவத்தையும் இன்னும் பலரும் பெற்றிருக்கலாம். ஆனால் அவர்கட்கு அந்த அனுபவத்தைக் கவிதை வடிவில் வெளி யிடும் ஆற்றல் இல்லை. திருவாதவூரர் ஒருவருக்கு மட்டுமே அஃது இருந்தமையின் 'திருவாசகம்' ஒன்று மட்டுமே இன்று நம்மிடையுளது.

இவ்விடத்திலும் பழைய மரபு வழியிலிருந்து ஓரளவு வேறுபடத் துணிகின்றேன். அடிகள் திருவாசகம் பாடிய பிறகே இறைவன் கோவை பாடுக என்று பணித்ததாக வும் பின்னரே 'திருக்கோவையார்' பாடியதாகவும் வழங்கும் வரலாற்றை என்னால் ஏற்றுக்கொள்ள முடிய வில்லை. அகத்துறை பற்றிய நூலைத் திருவாசகம் பாடிய ஒருவர் பாடமுடியுமா என்ற வினாத் தோன்றிய பிற் காலத்தில் இவ்வாறு பாடுமாறு இறைவனே பணித்தான் என்ற கதை தோன்றி இருத்தல் வேண்டும்.

அமைச்சராக இருந்த காலத்திலேயே மிகச் சிறந்த புலமையும், மாபெரும் இறையன்பும் படைத்திருந்தா ராதலின் அடிகள் திருக்கோவையாரை இயற்றினாராதல் வேண்டும். அகத்துறைபற்றிப் பாடவும் அதிலும் பக்திச்

சுவை நனி சொட்டப் பாடவும், ஒப்பற்ற கற்பனை சொல்லாட்சித் திறம், ஓசைநயம், சிறந்த உவமைகள், உருவகங்கள், பிற அணிகள் முதலியவற்றைப் பெய்து பாடவும் வல்லவராக இருந்தார் என்று கூறுவதில் தவறில்லை. இவ்வாறு கூறுவதால் ஆட்கொள்ளப் பெறு முன்பே நிறைந்த புலமையும் இறையன்பும் உடையவராக அடிகள் விளங்கி இருத்தல்வேண்டும் என்று முன்னர்க் கூறிய கருத்து வலுவடைகிறது. மேலும், கோவை திருவாசகம்போல் அல்லாமல் மரபுபற்றி எழுந்த (Conventional Poetry) பாடலாகும். இதன் மறுதலையாகத் திருவாசகம் பொள்ளெனத் தோன்றிய (Spontaneous Poetry) பாடல்களாகும். திருவாசகம் பாடும் நிலைக்குத் திரும்பிச் செல்லுதல் இயலாத காரியம் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

திருக்கோவையார் மரபுபற்றி எழுந்த பாடல் எனினும் ஏனைய இலக்கியங்கள் போலப் பிறந்த தன்று. இலக்கியத் தோற்றத்திலும் இருவகை அடிப்படையைக் காண்டல் கூடும். 'சுவர்க்க நீக்கம்' (Paradise lost) என்ற உலகம் போற்றும் இலக்கியத்தைப் பாடிய 'மில்டன்' 'உலகம் போற்றும் இலக்கியத்தைப் படைக்கப் போகிறேன்' என்று கூறிக்கொண்டு தன் இலக்கியத்தைப் படைத்தான். கவிச் சக்கரவர்த்தி கம்பனும் ஏறத்தாழ அவ்வாறே என்று கூறிவிட முடியும். ஆனால் தேவாரம், பெரியபுராணம், நாலாயிர திவ்யப் பிரபந்தம் போன்ற நூல்கள் இலக்கியம் படைக்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தோன்றியவை அல்ல. இவற்றை ஆக்கிய பெரியவர்கள் உயிர்கட்கு உபகாரஞ் செய்ய வேண்டும் என்ற அருள் நோக்கத்தாலேயே இவற்றைப் படைத்தனர். திருக்கோவையும் இலக்கியம் பாடிப் புகழ் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் தோன்றியதன்று. தம் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சிகட்கு மரபுவழி வடிவு கொடுக்க முற்பட்டதால் பிறந்த நூலாகும். ஆனால், கலைஞனாக

நின்று திருவாதவூரர் இதற்கு வடிவு கொடுத்தார். எனவே அது கலைச்செல்வத்தை மிகுதியும் பெற்றுத் திகழ்கின்றது. இக்கோவை பாடிய பிறகு திருவாதவூரர் அரசனிடம் தலைமை அமைச்சர் என்ற மரியாதையுடன் பெரும் புலவர், பெரிய பக்தர் என்ற மரியாதையையும் சேர்த்துப் பெற்றிருத்தல் வேண்டும்.

இதன் பின்னர் அவர் குதிரை வாங்கப் புறப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றிருத்தல் வேண்டும். இதிலும் ஒரு புதுமை உளது. ஒரு பெரிய அரசின் தலைமை அமைச் சருக்கு எத்துணையோ பணிகள் இருக்கும் என்பதை ஏற்றுக் கொள்ளலாம். அப் பணிகளுள் நல்ல குதிரை களைப் பார்த்து வாங்கச் செய்வதும் ஒன்றாக இருக்க லாம் வாங்குமாறு கட்டளையிடுவது ஒரு பணியாக இருக் கலாம் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அதாவது 'ஏவுதற் கர்த்தா'வாக ஓர் அமைச்சர் இருக்க முடியுமே தவிர, 'இயற்றுதற் கர்த்தா'வாக அவர் மாறியது சற்றுப் புதுமை தான். ஆனால் குதிரை வாங்க என்ற பெயரில் அவர் போனது உண்மை. அப்படியானால் இதற்கு' எப்படிச் சமாதானம் கூறுவது? அவருடைய 'நல்லூழ்' அவரை வருக என்று அழைத்தது. விதி நேரிடையாக எதனையும் செய்வதில்லை யல்லவா? எனவேதான் குதிரை வாங்கப் போவதாக ஒரு காரணத்தை (வியாஜம்) ஏறட்டுக் கொண்டு நல்லூழ் தொழிற்பட்டது என்று கூறவேண்டி யுளது.

திருவாதவூரரின் திருப்பெருந்துறைப் பயணம் வெறும் குதிரை வாங்கப் புறப்பட்ட 'யாத்திரை' என்று கூற முடியாமல் அவருடைய 'ஆன்ம யாத்திரை' என்று கூறு முறையில் அமைந்துள்ளது. இந்த ஆன்ம யாத்திரையில் புறப்பட்ட திருவாதவூரர் திருப்பெருந்துறையை அணுகும் போதே ஒருவகை மாற்றத்தை அடைகின்றார். தம்முள் ஒரு மாற்றம் நிகழ்கின்றது என்பதை அவரே உணர் கின்றார். ஆன்ம யாத்திரையில் ஏற்படும் மாற்றம் இரு

வகைப்படும். முதலாவது படிப்படியாக நிகழும் மாற்றம். இரண்டாவது திடீரென்று நிகழும் மாற்றம். பிறப்பிலேயே 'கருவில் திருவுடையராக'ப் பிறப்பவர்களும் உண்டு. விடா உழைப்பின் மூலம் பெரியவர்களாகிறவர்களும் உண்டு. கருவில் திருவுடைய தன்மை கணிதம், விஞ்ஞானம், இசை, ஆன்மீகம் முதலிய எத்துறைகளில் வேண்டுமானா லும் வெளிப்படலாம். அது வெளிவருவதற்குரிய ஒரு சந்த ருப்பம் தேவைப்படுகிறது. மணிவாசகரைப் பொறுத்த மட்டில் இத்தகைய சந்தருப்பம் திருப்பெருந்துறையில் கிடைத்தது. கிடைத்தவுடன் உள்ளே மறைந்திருந்த அப் புதுமை திடீரென வெளிப்பட்டது. இவருள் நிறைந்து வெளிவருவதற்குரிய சந்தருப்பத்திற்குக் காத்திருந்த மாற்றத்தைத் திருப்பெருந்துறையில் இருந்த ஞானாசிரி யன் திறக்க உதவினான் என்றாலுந் தவறில்லை.

இத்தகைய திடீர் மாற்றம் அடைந்த மற்றொரு பெரியார் கண்ணப்ப நாயனாராவார். திருவாதவூரர் திண் ணனார் என்ற இருவருமே இத்தகைய முழுமாற்றத்தை (Metamorphesis) அடைந்தவர்களாவர். இருவருடைய ஆன்ம யாத்திரையிலும் இம் மாற்றம் பிறர் எதிர்பாரா வகையில், இடத்தில் நிகழ்ந்தது. அந்த இடங்கட்கு இவர் கள் செல்லும்போதே ஏதோ ஒரு மாற்றம் தம்முள் நிகழ் வதை உணர்ந்தனர். அதற்குரிய காரணத்தை இருவரும் அறிய முடியவில்லையாயினும் அவ்விடத்தை நெருங்கும் போது தம்முள் நிகழும் மாற்றத்தை அறிந்தனர் என்றே இவர்கள் வரலாறு கூறுகிறது. திண்ணனார் காளத்தி மலையை முன்னர்ப் பார்த்திராமையின் நாணன் என்ற ஏவ லாளனிடம் 'இது யாது?' எனக் கேட்டார். அவன் அம் மலைமேல் 'குடுமித்தேவர் இருப்பர் கும்பிடலாம் வா' என்று அழைத்துப் போனான். நாம் எல்லாம் கோயிலில் சென்று கடவுளைக் கும்பிடும் முறையில்தான் நாணன் அழைத்தான். அம் மலையை நெருங்க நெருங்கத் திண்ணனார் தம்முள் ஒரு மாற்றம் நிகழ்வதை உணர்ந்து "ஆவதென் இதனைக்

கண்டு? இங்கு அணைதொறும் என்மேற் பாரம்போவ தொன்று உளது போலும்'' (கண். புரா—97) என்று கூறு கிறார். இதே போன்ற ஒரு நிலை திருவாதவூரருக்கும் திருப்பெருந்துறையை நெருங்குகையில் ஏற்பட்டதாக அறிகிறோம்.

திண்ணன் காளத்தி மலையை அடைந்த உடனேயும், திருவாதவூரர் திருப்பெருந்துறையில் ஞானாசிரியனைக் கண்டவுடனேயும், திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட வுடனேயும் மேலே கூறிய முழுமாற்றத்தை (Metamorphosis) அடைந்தனர். அது ஏற்படுவதற்கு முன்னர் முறையே திண்ணனாகவும் திருவாதவூரராகவும், ஞானசம் பந்தராகவும் இருந்த இம் மூவரும் கண்ணப்பராகவும், மணி வாசகராகவும், சிவஞானசம்பந்தராகவும் மாறிவிட்டனர் என அறிகிறோம். இந்த நுணுக்கத்தைப் பலரும் அறியா விடினும் தொண்டர் சீர் பரவ வல்லவராகிய சேக்கிழார் நன்கு அறிந்திருந்தார். எனவேதான் கண்ணப்பர் வர லாற்றில் பழைய திண்ணன் மறைந்து புதியவர் தோன்றி விட்டார் என்பதை ''தன் பரிசும் வினை இரண்டும் சாரும் மலம் மூன்றும் அற அன்பு பிழம்பாய்த் திரிவார்'' (கண். புரா 154) என்றும், திருஞான சம்பந்தர் புராணத் தில் ''தாவில் தனிச் சிவஞானசம்பந்தர் ஆயினார்'' (ஞான. பு. 69) என்றும் கூறினார். இங்குச் சேக்கிழார் குறித்துள்ள சொல்லைச் சற்றுக் கூர்ந்து கவனித்தல் வேண்டும். 'சிவ ஞானசம்பந்தர் ஆயினார்' என்று கூறுவதில் ஆயினார் என்ற சொல் பொருளாழம் உடையது. ஒன்று ஒன்றாக மாறுவதைத்தான் ஆயிற்று என்று கூறுகிறோம். அரிசி முழுமாற்றம் அடைந்து சோறாக மாறி விட்டதைத்தான் 'சோறு ஆயிற்று' என்று கூறுகிறோம். எனவே ஞானப்பால் உண்ட பின்னர் அவர் சிவபாத இருதயர் மகனல்லர் என் பதைக் குறிக்கவே 'ஆயினார்' என்ற சொல்லைப் பயன் படுத்துகிறார்.

இவ்வாறு சேக்கிழார் கூறக் காரணம் உண்டு. ஞானப் பால் அருந்தியதன் பின்னர் 'தந்தை' என்ற சொல்லைக்

கொண்டு ஞானசம்பந்தர் இறைவனைக் குறித்தாரே தவிரச் சிவபாத இருதயரைக் குறிக்கவே இல்லை. அதேபோலத் திண்ணனாரும் தம் தந்தை, உறவினர் யாரையும் அறிந்து கொள்ளும் மனநிலையை இழந்துவிட்டார். இம் மாறு பாட்டை நன்கு உணர்ந்தமையின் சேக்கிழார் 'ஆயினார்' என்ற சொல்லைப் பயன்படுத்தினார். துரதிஷ்டவசமாகத் திருவாதவூரர் புராணத்தைச் சேக்கிழார் போன்றவர்கள் பாடவில்லையாகலின் அவரிடை நிகழ்ந்த இந்த மாற் றத்தை அறிந்து நம்பியோ, அன்றிப் பரஞ்சோதியோ பாட வில்லை.

திருவாதவூரர் திருப்பெருந்துறையில் அடைந்தது திடீ ரென நிகழும்முழுமாற்றம் (Spontaneous metamorphosis) என்று கண்டோம். அப்படியானால் அவருடைய ஆன்ம யாத்திரையில் கிடைத்த இம் மாற்றம் கடைசி வரையில் நிலைத்திருந்ததா? இம் மாற்றத்தில் பெற்ற அனுபவம், பூரண இன்பம் இறுதிவரை மணிவாசகரிடம் இருந்ததா? திருவாசகம் முழுவதையும் பார்ப்பவர்கள் இந்த அனுப வத்தை இழந்து மணிவாசகர் துடிப்பதை அறிய முடியும். அப்படியானால் இறைவன் திருவருள் கிட்டினாலும் அதுவும் ஒரோவழி நிகழ்ந்து மறையக் கூடியதுதானா? என்ற வினா வும், கிடைத்த திருவருளை வைத்துக் கொள்ளக் கூடிய தகுதி மணிவாசகரிடம் இல்லாமற் போய்விட்டதா என்ற வினா வும் வரத்தான் செய்யும். திருவாசகத்தில் அவர் அனுப வத்தை இழந்து வருந்தும் பகுதிகள் அனைத்தும் நம் போன்றவர்களுடைய துயரத்தை ஏறட்டுக் கொண்டு பாடி யவை என்ற விளக்கத்தை ஏற்க என்மனம் இடந்தரவில்லை. அத்துயரம் உண்மையிலேயே அவர் அடைந்த துயரந்தான்.

அவர் அடைந்த உண்மையான துயரந்தான் என்றால், திருவருள் அவரைக் காக்க வலுவிழந்து விட்டது என்றோ, அவர் திருவருளை வைத்துப் படைக்கும் ஆற்றல் பெற வில்லை என்றோ முடிவுக்கு வரவேண்டிய இன்றியமை யாமை இல்லை. இவை இரண்டு தவிர, வேறு ஏதேனும்

காரணம் இருத்தல் கூடுமோவெனச் சிந்திப்பதில் தவறில்லை. திண்ணன் இவ்வாறு திடீரென்று முழு மாற்றம் பெறினும் அதை இழக்கவில்லை. ஆறு நாட்களில் வீடுபேற்றைப் பெற்றுவிட்டார். அப்படியானால் திருவாதவூரர் ஏன் அதனை இழக்க வேண்டும்?

திருவருளைப் பெற்றவுடனேயே மணிவாசகர் தாம் விரும்பும் வீடுபேற்றை அடைய முழுத்தகுதி பெற்றுவிடுகிறார் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு தகுதி பெற்றவர் பின்னர் ஏன் இவ்வுலகிடை இருந்து அந்த அனுபவத்தை இழந்து அவதியுற வேண்டும் என்றால் அதுவே திருவருட் குறிப்பு எனல் வேண்டும். தமக்குத் திருவருள் கிடைத்தமையை அவரே இதோ பேசுகிறார்:

'ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக்கு எளிவந்து அருளி அழிதரும்
ஆக்கை ஒழியச் செய்த, ஒண்பொருள்
இன்றெனக்கு எளிவந்து இருந்தனன் போற்றி'
(அண்டப்-116-119)

'ஆயினேன் ஆதலால் ஆண்டுகொண்டாய்'
(சதகம்-23)

'வண்ணந்தான் அதுகாட்டி வடிவு காட்டி
மலர்க் கழல்கள் அவைகாட்டி வழியற்றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்'
(சத-25)

'..............................நாயினேற்கே
காட்டாதன வெல்லாங் காட்டிப் பின்னும்
கேளாதன வெல்லாம் கேட்பித்து' (சத. 28)

இவ்வாறு ஆட்கொள்ளப் பெற்றும் இறைவன் இவரை உடன் அழைத்துச் செல்லாமல் இங்கேயே இருக்குமாறு பணித்து மறைந்தனன் என்பதை அவரே கூறுகிறார்.

'அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கு எழுந்தருளி இங்கெனை
இருத்தினாய் முறையோ என் எம்பிரான்!'

(சதக - 93)

'நாயி னேனை நலமலி தில்லையுள்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை ஈங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்'

(கீர்த்தி 127-130)

இவ்வாறு இறைவனே அவரை ஈண்டு இருக்க எனப் பணித்து மறைந்தான். என்று அவரே கூறுகின்றமையின் இது ஏன் நிகழவேண்டும் என்ற வினாத் தோன்றத்தான் செய்கிறது. ஒரு சில சமயங்களில் நம்முடைய அறிவை யெல்லாங் கொண்டு ஆராய்ந்தாலும் விளங்கிக் கொள்ள முடியாத சில நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அந் நிகழ்ச்சி நடைபெறும்போது நிகழ்ச்சிக்குடையாரும் நாமும் வருந்துகிறோம். ஆனால் பின்னர்த்தான் அது ஏன் நடந்தது என்பதை அறியமுடிகிறது.

சக்ரவர்த்தித் திருமகனைத் 'தாய் கையில் வளர்ந்திலன்' என்று கூறும்படியாக வளர்த்து 'விராவரும் புவிக் கெலாம் வேதமேயன இராமனைப் பயந்த எற்கு இட ருண்டோ?' (மந்.சூழ்.54) என்று கேட்ட அதே கைகேயி தான் கணவன் இறப்பதையும் பொருட்படுத்தாமல் இராமனைக் காட்டிற்கு அனுப்பினாள். அதனை விளக்க வந்த கவிஞன் அவள் "இரக்கமின்மை யன்றோ இன்று இவ் வுலகங்கள் இராமன், பரக்கும் தொல்புகழ் அமு தினைப் பருகுகின்றது" (மந்.சூழ்.85) என்று கூறுகிறான்.

அதேபோன்று மணிவாசகருக்குத் தந்த அனுபவத்தை மறுபடியும் வாங்கிக் கொண்டு 'இங்கு இருக்க' என இறைவன் கூறிப் போனதனால் என்ன நிகழ்ந்தது? இவ்வாறு செய்யவில்லையாயின் உடன் வந்த அடியருடன்

பெருமானும் சென்றிருப்பார். தனி ஒரு ஆன்மா விடுதலை பெற்றிருக்கும் என்பது உண்மைதான். ஆனால் இவ்வுலகம் 'திருவாசகம்' என்ற ஒப்பற்ற நூலை இழந்திருக்குமே! வேற்று நாட்டிலிருந்து தம் சமயத்தை இவண் பரப்புதற்காக வந்த டாக்டர் ஜி. யூ. போப் போன்றவர்களும் ''என்பு கரைக்கும் பாடல்'' என்று ஈடுபாட்டுடன் கூறும் ஒரு நூலை இவ் வுலகம் இழந்திருக்குமே!

பல சமயங்களில் திருவருள் என்ன குறிப்புடன் எதனைச் செய்கிறது என்பதைச் சிற்றறிவு உடைய நாம் அறிதல் முடியாத காரியம். இறைவன் தன் கருத்தை நிறைவேற்ற ஒவ்வோர் உயிரையும் ஒவ்வொரு முறையில் பயன்படுத்திக் கொள்கிறான். அதனை ஏன் என்று கேட்கும் உரிமையோ அதிகாரமோ நம்மாட்டு இல்லை. இதனை நன்கு அறிந்திருந்தார் மணிவாசகப் பெருமான். ஆனால், திருவாசகத்தின் முற்பகுதியில் அதாவது சதகத்திலும், நீத்தல் விண்ணப்பத்திலும் இதன் எதிராக இறைவன் மறைந்து விட்டமைக்கும் தம்மை விட்டு விட்டு அடியார்களை மட்டும் அழைத்துச் சென்று விட்டமைக்கும் வருந்தி அழுவது அதிகமாக இருக்கும். அனுபவத்தை இழந்த அணிமையில் இவ்வாறு வருத்தம் உண்டாவது முறைதான்.

தம்மிடம் ஏதோ குறை இருக்கக் கண்டுதான் இறைவன் தம்மை ஒதுக்கிப் போய்விட்டான் என்று சதகத்திலும், விண்ணப்பத்திலும் பலமுறை கதறுகிறார். ஆனால், நாட்கள் செல்லச் செல்லத் தம்மை இவண் இருத்தியதிலும் ஏதோ காரணம் இருத்தல் வேண்டும் என்பதை உணருகிறார் போலும்! எனவே 'தம்மை அழைத்துக் கொள்' என்பதற்கும் 'விட்டுப்போ' என்பதற்கும் தமக்கு அதிகாரம் இல்லை என்பதையும், முழுவதும் அவனிடம் சரணடைந்து விட்ட பிறகு இருப்பதற்கும் போவதற்கும் தமக்கு அதிகாரம் இல்லை என்பதையும் பெருமான் உணர்ந்து பாடுகிறார்.

பெருமானும் சென்றிருப்பார். தனி ஒரு ஆன்மா விடுதலை பெற்றிருக்கும் என்பது உண்மைதான். ஆனால் இவ்வுலகம் 'திருவாசகம்' என்ற ஒப்பற்ற நூலை இழந்திருக்குமே! வேற்று நாட்டிலிருந்து தம் சமயத்தை இவண் பரப்புதற்காக வந்த டாக்டர் ஜி. யூ. போப் போன்றவர்களும் "என்பு கரைக்கும் பாடல்" என்று ஈடுபாட்டுடன் கூறும் ஒரு நூலை இவ் வுலகம் இழந்திருக்குமே!

பல சமயங்களில் திருவருள் என்ன குறிப்புடன் எதனைச் செய்கிறது என்பதைச் சிற்றறிவு உடைய நாம் அறிதல் முடியாத காரியம். இறைவன் தன் கருத்தை நிறைவேற்ற ஒவ்வோர் உயிரையும் ஒவ்வொரு முறையில் பயன்படுத்திக் கொள்கிறான். அதனை ஏன் என்று கேட்கும் உரிமையோ அதிகாரமோ நம்மாட்டு இல்லை. இதனை நன்கு அறிந் திருந்தார் மணிவாசகப் பெருமான். ஆனால், திருவாசகத் தின் முற்பகுதியில் அதாவது சதகத்திலும், நீத்தல் விண்ணப் பத்திலும் இதன் எதிராக இறைவன் மறைந்து விட்டமைக் கும் தம்மை விட்டு விட்டு அடியார்களை மட்டும் அழைத்துச் சென்று விட்டமைக்கும் வருந்தி அழுவது அதிகமாக இருக்கும். அனுபவத்தை இழந்த அணிமையில் இவ்வாறு வருத்தம் உண்டாவது முறைதான்.

தம்மிடம் ஏதோ குறை இருக்கக் கண்டுதான் இறைவன் தம்மை ஒதுக்கிப் போய்விட்டான் என்று சதகத்திலும், விண்ணப்பத்திலும் பலமுறை கதறுகிறார். ஆனால், நாட்கள் செல்லச் செல்லத் தம்மை இவண் இருத்தியதிலும் ஏதோ காரணம் இருத்தல் வேண்டும் என்பதை உணரு கிறார் போலும்! எனவே 'தம்மை அழைத்துக் கொள்' என்பதற்கும் 'விட்டுப்போ' என்பதற்கும் தமக்கு அதிகாரம் இல்லை என்பதையும், முழுவதும் அவனிடம் சரணடைந்து விட்ட பிறகு இருப்பதற்கும் போவதற்கும் தமக்கு அதிகாரம் இல்லை என்பதையும் பெருமான் உணர்ந்து பாடுகிறார்.

'வேண்டத் தக்கது அறிவோய் நீ

.........................

வேண்டி என்னைப் பணிகொண்டாய்

.........................

வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே' (499)

'அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே அனையாய்! என்னையாட் கொண்டபோதே
கொண்டிலையோ?'

'.........................

ஆயக்கடவேன் நானோதான் என்னதோ இங்கு
அதிகாரம்?'

'.........................

மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே
புகுமாறும்

அண்ணா எண்ணக் கடவேனோ அடிமை சால
அழகுடைத்தே' (குழைத்த பத்து-6, 9)

இதனை அடுத்து ஒருபடி மேலே சென்று தாம் ஒன்றையும் கேட்க உரிமை இல்லை என்பதை நிலைநாட்டிய பிறகு அவன் இட்ட கட்டளையை நிறைவேற்றுதலே வாழ்வின் குறிக்கோள் என்பதையும்,

''எது எமைப் பணிகொளும் ஆறு அது கேட்போம்''
*(பள்ளி எழுச்சி—7)*

என்றும் கூறிவிடுகிறார். முற்றிலும் இறைவனுடைய திருவருளின்படி நடக்க வேண்டிய ஒரு கருவியாகத் தம்மைக் கருதிக் கொள்ளும் நிலையில்,

'இருந்து என்னை ஆண்டுகொள் விற்றுக்கொள்
ஒற்றிவை என்னின் அல்லால்' (விண்-18)

என்று கூறுவதன் மூலமும் இதனை அடிகள் நன்கு அறிந்திருந்தார் என்பதை அறியமுடிகிறது. மதுரையில் இருந்து

'வேண்டத் தக்கது அறிவோய் நீ

..........................

வேண்டி என்னைப் பணிகொண்டாய்

..........................

வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே' (499)

'அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே அனையாய்! என்னையாட் கொண்டபோதே
கொண்டிலையோ?'

'........................

ஆயக்கடவேன் நானோதான் என்னதோ இங்கு
அதிகாரம்?'

'........................

மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே
புகுமாறும்

அண்ணா எண்ணக் கடவேனோ அடிமை சால
அழகுடைத்தே' (குழைத்த பத்து-6, 9)

இதனை அடுத்து ஒருபடி மேலே சென்று தாம் ஒன்றையும் கேட்க உரிமை இல்லை என்பதை நிலைநாட்டிய பிறகு அவன் இட்ட கட்டளையை நிறைவேற்றுதலே வாழ்வின் குறிக்கோள் என்பதையும்,

''எது எமைப் பணிகொளும் ஆறு அது கேட்போம்''
(பள்ளி எழுச்சி—7)

என்றும் கூறிவிடுகிறார். முற்றிலும் இறைவனுடைய திருவருளின்படி நடக்க வேண்டிய ஒரு கருவியாகத் தம்மைக் கருதிக் கொள்ளும் நிலையில்,

'இருந்து என்னை ஆண்டுகொள் விற்றுக்கொள்
ஒற்றிவை என்னின் அல்லால்' (விண்-18)

என்று கூறுவதன் மூலமும் இதனை அடிகள் நன்கு அறிந்திருந்தார் என்பதை அறியமுடிகிறது. மதுரையில் இருந்து

பெருமானும் சென்றிருப்பார். தனி ஒரு ஆன்மா விடுதலை பெற்றிருக்கும் என்பது உண்மைதான். ஆனால் இவ்வுலகம் 'திருவாசகம்' என்ற ஒப்பற்ற நூலை இழந்திருக்குமே! வேற்று நாட்டிலிருந்து தம் சமயத்தை இவண் பரப்புதற்காக வந்த டாக்டர் ஜி. யூ. போப் போன்றவர்களும் ''என்பு கரைக்கும் பாடல்'' என்று ஈடுபாட்டுடன் கூறும் ஒரு நூலை இவ் வுலகம் இழந்திருக்குமே!

பல சமயங்களில் திருவருள் என்ன குறிப்புடன் எதனைச் செய்கிறது என்பதைச் சிற்றறிவு உடைய நாம் அறிதல் முடியாத காரியம். இறைவன் தன் கருத்தை நிறைவேற்ற ஒவ்வோர் உயிரையும் ஒவ்வொரு முறையில் பயன்படுத்திக் கொள்கிறான். அதனை ஏன் என்று கேட்கும் உரிமையோ அதிகாரமோ நம்மாட்டு இல்லை. இதனை நன்கு அறிந் திருந்தார் மணிவாசகப் பெருமான். ஆனால், திருவாசகத் தின் முற்பகுதியில் அதாவது சதகத்திலும், நீத்தல் விண்ணப் பத்திலும் இதன் எதிராக இறைவன் மறைந்து விட்டமைக் கும் தம்மை விட்டு விட்டு அடியார்களை மட்டும் அழைத்துச் சென்று விட்டமைக்கும் வருந்தி அழுவது அதிகமாக இருக்கும். அனுபவத்தை இழந்த அணிமையில் இவ்வாறு வருத்தம் உண்டாவது முறைதான்.

தம்மிடம் ஏதோ குறை இருக்கக் கண்டுதான் இறைவன் தம்மை ஒதுக்கிப் போய்விட்டான் என்று சதகத்திலும், விண்ணப்பத்திலும் பலமுறை கதறுகிறார். ஆனால், நாட்கள் செல்லச் செல்லத் தம்மை இவண் இருத்தியதிலும் ஏதோ காரணம் இருத்தல் வேண்டும் என்பதை உணரு கிறார் போலும்! எனவே 'தம்மை அழைத்துக் கொள்' என்பதற்கும் 'விட்டுப்போ' என்பதற்கும் தமக்கு அதிகாரம் இல்லை என்பதையும், முழுவதும் அவனிடம் சரணடைந்து விட்ட பிறகு இருப்பதற்கும் போவதற்கும் தமக்கு அதிகாரம் இல்லை என்பதையும் பெருமான் உணர்ந்து பாடுகிறார்.

புறப்பட்ட திருவாதவூரரின் ஆன்ம யாத்திரை திருப்பெருந்துறையில் முடிந்துவிடுகிறது. இதன் பிறகு அவர் அவருக்குச் சொந்தமில்லை; அவருடைய காலமும், நேரமும், செயலும் ஏன் எண்ணமும்கூட அவருக்குச் சொந்தமில்லை என்னும் நிலை ஏற்பட்டுவிடுகிறது.

இந்நிலையில் அவர் எது செய்யினும் அது இறைவனுடைய செயலேயாகும். என்ன செய்கிறார்கள், எத்தகைய பணிபுரிகிறார்கள் என்ற வினாவிற்கும் இப்பணி சிறந்தது, இப்பணி தாழ்ந்தது என்ற பேச்சுக்கும் அங்கு இடமில்லை. இதனையே 'மில்டன்' என்ற கவிஞன் தன் கண்களை இழந்த நிலையில் பாடிய பாடலில் கூறுகிறான்.

'இறைவன் எந்த மனிதனின் பணியையும் அவன் தரும் பொருளையும் வேண்டி நிற்கவில்லை. அவன் இட்ட பணியை எவன் மேற்கொள்கிறானோ அவனே சிறந்த பணியாளன். அவனுடைய ஆணையை ஏற்று ஓய்வின்றி உலகு முழுவதும் அலைந்து பணிபுரியும் ஆயிரக்கணக்கானவரும் அவன் ஆணையைத்தான் நிறைவேற்றுகின்றனர். அவன் ஆணைக்குக் காத்துக் கொண்டு நிற்பவர்களும் இறைவனின் ஆணையின்வண்ணம் நடப்பவர்களேயாவர்.*

திருப்பெருந்துறையில் மணிவாசகரின் ஆன்ம யாத்திரையை முடித்துக் கொள்ளுமாறு செய்த இறைவன் அவரைக் கொண்டு தன் பணியினை முடித்துக் கொள்ள முடிபு செய்தனன் போலும். அதனாலேயே அவரை

---

* "That murmur, soon replies, "God doth not need
Either man's
Work or his own gifts. Who best
Bear his mild yoke, they sarve him best. His state
Is Kingly: thousands at his bidding speed,
And post o'er land and ocean without rest:
They also serve who only stand and wait"
—Milton "on his Blindness"

'இருக்க' எனப் பணித்து மறைந்தான். இம்மாதிரி 'இருக்க' என்று கூறினால் இருப்பதனால் ஒரு பணி நடைபெற வேண்டும் என்பதையே அது குறிக்கிறது என்றுகூடக் கொள்ளலாம்.

வெட்டுண்டு கிடக்கும் தன் கணவனைக் கண்டு அவ்வுடல் மேல் விழுந்து அரற்றி அழுகிறாள் கண்ணகி. துண்டாடிய உடல் ஒன்று சேர்ந்து கோவலன் எழுந்தான். அவள் கண்ணீரைக் கையால் மாற்றினான். வேறு ஒன்றுங் கூறாமல் 'எழுதெழில் மலர் உன்கண் இருந்தைக்க' (சிலம்பு—19-67) எனப் போய் விட்டான். அவன் மீட்டும் இறந்த அதிசயத்தையும் அவன் கூறிய சொற்களையும் சிந்திக்கும் கண்ணகிக்கு, அவன் உடன் அழைத்துச் செல்லாமல் விட்டுச் சென்றதில் ஏதேனும் பொருள் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

'மாயங்கொல் மற்றுஎன்கொல்? மருட்டியதோர்
தெய்வங்கொல்?
போய் எங்கு நாடுகேன் பொருள் உரையா ஈதென்று'
(சிலம்பு—19-69-40)

இரு என்று கூறிப்போனது பொருளுரை என்று கொண்டமையின் 'தீ வேந்தன்தனைக் கண்டு இத்திறங் கேட்பல்' எனப் போகிறாள். கோவலன் கண்ணகியை இருவென்றமையின் வழக்குரை காதை முதலியன நடந்தன.

இறைவன் மணிவாசகரை இருமென்று இருத்தியதால் 'திருவாசகம்' பிறந்தது. இதுவன்றி, அடிகள் தாம் வருந்துவது போல், இவரது தகுதி இன்மை நோக்கி இறைவன் விட்டுப் போகவில்லை என்பது உறுதி. அத்துணை விரைவில் அவனே வந்து ஆண்டுகொள்ள வேண்டுமாயின் அவருடைய தகுதிக்கு அதனினும் சிறந்த சான்று தேவை இல்லை. இனி அவர் கூறுவதை விவகாரத்திற்காக — ஓரளவு ஏற்றுக் கொள்வதாக—வைத்துக் கொண்டாலும் அவரிடம் இருந்ததாக அவர் கூறிக் கொள்ளுங் குற்றங்கள் இறைவனுடைய

அருளைப் பெற்றபின் உறுதியாக அழிந்திருக்கும். அப்படி இருக்க விட்டுப் போனதன் நோக்கம் அவரால் உலகு ஒரு பயனைப் பெறவேண்டும் என்பதாகவே இருத்தல் வேண்டும் என்பது உறுதி. இந்த வினாடியிலிருந்து திருவாதவூரர் என்ற பாண்டி மன்னனின் அமைச்சர் இல்லை. இறைவன் பணியை நிறைவேற்றும் ஓர் அடிமைதான் உள்ளார்.

இந்நிலையில் ஒரு சிலர் மனத்திலாதல் ஓர் ஐயம் நிகழ இடனுண்டு. திருவாசகம் போன்ற ஒரு நூல் தோன்ற வேண்டும் என்று இறைவன் நினைத்தால் அதனை முடித்தற்குத் திருவாதவூரர் போன்ற ஒருவரை இத்துணைத் தொல்லைப்படுத்தி அவர் அழுது அழுது பாடுமாறு செய்ய வேண்டுமா? இத்துணைத் துயரத்தை அவர் அடையாமலும் பாடுமாறு செய்திருக்கலாமே என்று கருதிக் கேட்க இடம் உண்டு. அது உறுதியாக நடந்திருக்கக் கூடியதுதான்; இறைவன் கருதி இருப்பின் திருவாசகத்தை மணிவாசகர் பாடி இருத்தலுங்கூடும். அதற்குத் திருவாசகம் என்ற பெயர் வந்திருத்தலுங்கூடும். ஆனால் அது இன்று நாம் படித்து உருகும் திருவாசகமாக அமைய முடியாது. பிறர் படுந்துயரை ஏறட்டுக் கொண்டு பாடுவது வேறு; தாமே அந்த அனுபவத்தைப் பெற்றுப் பாடுதல் வேறு.

இதனை நன்கு அறிந்து கொள்ள வேண்டுமாயின் தன்னுணர்ச்சிப் பாடல்கள் (Lyric poetry) பலவற்றைப் படித்துப் பார்த்தால் நன்கு விளங்கும். பாரி மகளிர் தம் தந்தை இறந்தமை குறித்துப் பாடியதாக உள்ள பாடலின் இறுதி வரியை நோக்க வேண்டும்.

'.........................
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றுங் கொண்டார்யாம் எந்தையு மிலமே'

(புறம் 112)

'யாம் எந்தையும் இலமே' என்பதிற் காணப்பெறும் அவலத்திற்கும் பிற பிற புலவர்கள் பிற மன்னரின் இறப்புக்

குறித்துப் பாடிய கையறுநிலைப் பாடல்கட்கும் உள்ள வேறுபாட்டைப் படிக்கையிலேயே நாம் உணரமுடியும். இப்பாடல் தோன்றி இரண்டாயிரம் ஆண்டாயினும் இது நம் மனத்தைக் கவர்ந்து ஈர்ப்பது எதனால்? அவர்கள் நிகழ்ச்சியை நேரே கண்டு உணர்ச்சிப் பெருக்கத்தால் அப் பொழுதே பாடினர். அதனால் அப்பாடல் அவர்களுடைய உணர்ச்சியை அப்படியே தாங்கி நிற்கின்றன. ஆனால் பாரியின் இறப்புக் குறித்து இன்று வரலாற்றில் படிக்கின்ற ஒருவர் கையறுநிலை பாடினால் எத்துணை முயன்றாலும் இத்துணை உணர்ச்சிப் பெருக்கத்தைப் பெற முடியாது. மேலும் நிகழ்ச்சியில் தொடர்பு பட்டவர்கள் பெறும் உணர்ச் சியின் ஆழத்தளவு பிறர் பெறவும் முடியாது.

இந்த அடிப்படையில்தான் திருவாசகம் தோன்றியது. மணிவாசகர் தம் வாணாள் முழுவதும் விரும்பிய ஒன்றைத் திருப்பெருந்துறையில் பெற்றார். தம்மை மறந்து ஆனந்தக் கடலில் மூழ்கினார். வாழ்வின் பயனை அடைந்ததாக நினைந்து ஆனந்தப்படுகையில் அவ்வனுபவம் மறைந்து விடுகிறது! தாம் தனியனாக நிற்பதை உணர்கின்றார். எனவே அனுபவம் கிடைத்த உடனடியாக அந்த அனுப வத்தை நினைந்து நினைந்து பாடமுடிகிறது. அவரே பெற்ற அனுபவத்தை, அவ் வனுபவம் முடிந்து கைவிட்டுப் போன நிலையில், அதனை நினைவு கூர்ந்து பாடுகிறார். ஆகலின் அது நம்மை இன்றும் ஈர்க்கிறது. பிற நாட்டிலி ருந்து வந்தவரையும், சைவத்தையும் சிவபெருமானையும் ஏற்றுக்கொள்ள மறுக்கும் போப் போன்றவர்களையும் அவ் வனுபவப்பாடல் பிடித்து இழுத்துக் கொள்கிறது. அனுப வத்தை நேரே பெற்றவர் அதிர்ஷ்டவசமாகத் தம் உணர்ச்சி கட்கு வடிவு கொடுக்கும் ஆற்றல் பெற்ற கவிஞராகவும் இருக்கிறார். திருக்கோவையார் போன்ற புலமை நயம் நிரம்பிய நூலை முன்னரே இயற்றி உள்ளத்து உணர்வுகட்கு வடிவு கொடுக்கும் கலையை நன்கு அறிந்த கவிஞராகவும் உள்ளார். இத்தகையவர் தாம் பெற்ற நேரடி அனுபவத்தை

அப்பொழுதே கவிதையில் பிழிந்து தருகிறார். ஆகலின் எத்துணைக் காலமாயினும் அப்பாடல்கள் தம்மைப் படிப்பவர்களை உலுக்கிவிடும் ஆற்றல் பெற்றுள்ளது.

இதில் ஒரு வியப்பு என்னையெனின் திருக்கோவையார் பாடல்களில் காணப் பெறும் கவிதைச் சிறப்பு, கட்டுக்கோப்பு, கற்பனை, சொல் சிறப்பு, உவமை உருவக நயங்கள் எதுவும் திருவாசகத்தில் இல்லை; என்றாலும் அனுபவம் பிட்டுப் பிட்டு வைக்கப் பெற்றுள்ளது. ஒரு பாட்டிற்கும் அடுத்த பாடலுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஒரே பாடலிற் கூட முன்னுக்குப் பின் தொடர்பில்லாமலும் இருக்கும்.

'அழகே புரிந்திட்டு அடிநாயேன் அரற்று கின்றேன்
உடையோனே!
திகழா நின்ற திருமேனி காட்டி என்னைப் பணிகொண்
டாய்
புகழே பெரிய பதம் எனக்குப் புராண! நீதந் தருளாதே
குழகா! கோல மறையோனே! கோனே! என்னைக்
குழைத்தாயே!' (குழை. பத்து — 10)

முதல் இரண்டடிகளில் அவன் வடிவுகாட்டி ஆட்கொண்டதைக் கூறும் அடிகள் பெரிய பதந் தரவில்லை என்று மூன்றாம் அடியில் குறைப்படுகிறார். திருமேனி காட்டுவதைவிடப் பெரிய பதம் எதுவும் உண்டா? இதனை அடிகள் அறியாதவரா? பின்னர் ஏன் இவ்வாறு பாடுகிறார்? காட்சி தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அவர் விரும்பிய விருப்பம் ஈடேற வில்லையாகலின் அவ்வருத்தம் மூன்றாமடியில் வெளிப்படுகிறது.

திருவாசகம் சிந்தித்துத் தெளிந்து, ஆராய்ந்து, பாடப் பெற்ற கலையாக முகிழ்த்த பாடல்கள் அல்ல. அவை பொள்ளெனத் (Spontaneous) தோன்றிய பாடல்களே யாகும். தேவாரம் முதலியவைகூட இத்தலைப்பில் அடங்கா. அவை தீர்ந்த சிந்தனையின் பயனாக வெளிவந்தவை. பல

சமயங்களில் எந்தத் தலத்தில் பாடப்படுகின்றனவோ அந்த ஊரின் பெயருக்கேற்பவே பாடல் அடிகள் தொடங்குவதைக் காண்டல் கூடும். இவ்வாறு கூறுவதால் தேவாரம் பக்திப் பாடல்கள் அல்ல என்று கூறுவதாக நினைத்து யாரும் இடர்ப்பட வேண்டா. பாடல்களைத் திறனாய்வு செய்கின்ற முறையில் இந்த இரண்டு பிரிவினைகள் உண்டு. பொள்ளெனத் தோன்றும் (Spontaneous poetry or Dionysian poetry) பாடல் என்றும், சிந்தித்துப் பாடப்படுபவை (Premeditated poetry or Appolonian poetry) என்றும் இருவகை உண்டு. ஆசு கவிகள் எனப்பெறுபவை எல்லாம் பொள்ளெனத் தோன்றிய பாடல்கள் எனினும் அவை அனுபவத்தை அப்படியே பிரதிபலிப்பன என்று கூறமுடியாது. தீர்ந்த சிந்தனையின் பயனாக வெளிப்படினும் தேவாரம் பிரபந்தம் என்பவை அனுபவத்தை அப்படியே வெளியிடுபவைகளாம்.

உதாரணமாக நம்பியாரூரரைப் பாடுக என்று பணித்து இறைவன் 'பித்தா' என்று அடியெடுத்துத் தந்தான். உடனே 'பிறைசூடி பெருமானே' என்று ஏன் வந்ததெனில் திருஞான சம்பந்தர் பாடலில் சுந்தரர் ஈடுபட்டிருந்தமையின் அவருடைய சொற்கள் உடனே நினைவுக்கு வரப் பாடினார்.

அடிகளின் அனுபவம் அப்படி அப்படியே வெளிப்படுகிற தென்பதைத் திருவாசகத்தை ஒருமுறை கற்பவர்களும் அறிய முடியும். திடீர் திடீரென்று அவருடைய எண்ண ஓட்டங்களில் தோன்றும் மாற்றங்கள் இதனை அறிவுறுத்தும். ஆன்ம யாத்திரையில் ஏற்படும் மேடு பள்ளங்கள் அப்படி அப்படியே வெளிப்படுத்தப்படுகின்றன. எல்லையில்லாத ஆனந்தம் தோன்றுவதும் அதை இழந்துவிட்ட ஆராத் துயரமும் அடுத்தடுத்துத் தோன்றலையும் திருவாசகத்தில் காணலாம்.

**''கடலே அனைய ஆனந்தம் கண்டார் எல்லாம் கவர்ந்துண்ண**
**இடரே பெருக்கி ஏசற்று இங்கு இருத்தல் அழகோ அடிநாயேன்'** *(பிரார்த்தனை—7)*

"அருள் புரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையினால் நடந்தேன் விடைப் பாகா!" (செத்திலா—3)

"என்பரம் இல்லா இன்னருள் தந்தாய் யான்இதற்கு
இலன்ஓர் கைம்மாறு" (கோயில்—2)

இத்தகைய முறையில் ஆனந்தத்தில் அழுந்தியிருந்து அது மறைந்துவிட்டதெனக் கவல்கின்றார். ஆன்ம யாத்திரையில் ஒரு முக்கியமான கட்டமாகும் இது. கிடைத்த பொருள் கை நழுவி விடுகிறதென்றால் அதனை வைத்துக் கொள்ளும் தகுதி இல்லை என்பதுதானே பொருள். எனவே தம் ஆனந்த பரவச நிலை கைநழுவிவிட்டது என்றால் அது தம் குற்றத்தாலேயே நேர்ந்தது என்று கருதி வருந்துகிறார் அடிகள். சத்தியமே வடிவான இறைவன் ,தாம் பொய்யன் என்பதனால் ஆட்கொண்டு அழைத்துப் போகாமல் விட்டுச் சென்றுவிட்டான் என்று வருந்துகிறார், திருச்சதகம் முழுவதிலும் இம்மன நிலையைக் காண்டல் கூடும்.

'பொய்யர் பெறும்பேறு அத்தனையும் பெறுதற்கு உரியேன்' (52)

'வஞ்சனேன் பொய் கலந்தது அல்லது இல்லை' (73)

'விச்சுக் கேடு பொய்க்கு ஆகாது என்று இங்கெனை
வைத்தாய்' (81)

'போனார் அடியார் யானும் பொய்யும் புறமே போந்தோமே' (85)

'யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்' (90)

இவ்வாறு தம் குற்றம் என்று தாம் கருதுவதை மிகைப் படுத்திக் காட்டிவிட்டு இறைவனிடம் தம் குற்றத்தைப் பொறுத்து ஆட்கொள்ள வேண்டும் என்று மன்றாடுகிறார்.

'அரைசே! அறியாச் சிறுநாயேன் பிழைக்கு அஞ்சல்
என்னினல்லால்' (நீ. வி. 37)

'என்பிழைக்கே குழைந்து வேசறுவேன்' (நீ. வி. 50)

'பொறுப்பர் அன்றே பெரியோர் சிறுநாய்கள்தம் பொய்
யினையே' (நீ. வி. 6)

'பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை'
(சதக. 66)

இறைவன் தம்மைத் தனியே விட்டு மறைந்தது அவன் கருணைக் குறையன்று; தம் பிழையே எனப் பலமுறை கூறுகிறார்.

'உன்னால் ஒன்றுங் குறைவில்லை அடிமைக்கு யார்
என்பேன்'

என்பன போன்ற பகுதிகளுடன் திருச்சதகத்தில் 3ஆம் பதிகமாக உள்ள சுட்டறுத்தல் பகுதி முழுவதும் இதே கருத்தைக் கூறுகின்றது.

இவ்வாறு துயருற்று ஒருவாறு தேறி எதிர்பாராமல் தம்மை வந்து ஒரு பொருட்படுத்து ஆட்கொண்ட பெருமான் உறுதியாகத் தம்மைக் கைவிடமாட்டான் என்றும் எப்படியும் அவனருள் கிட்டும் என்றும் தம் நெஞ்சுக்குத் திடம் கூறுகிறார்.

'இரங்கும் நமக்கு அம்பலக்கூத்தன் என்று ஏமாந்திருப்
பேனை

அருங் கற்பனை கற்பித்து ஆண்டாய்.........'(கோயில்-7)

'எந்தாய் இனித்தான் இரங்காயே!' (கோயில்-6)

'இரங்குங் கொல்லோ என்று அழுமதுவே அன்றிமற்றென்
செய்கேன்' (கோயில்-4)

தம்முடைய பிழையைப் பொறுத்து ஆட்கொள்வது அவன் கடமையாகும் என்று பலமுறை கூறிய அடிகள்,

'...........பொன்னம்பலக் கூத்தா
மருளார் மனத்தோடு உனைப்பிரிந்து வருந்துவேனை
வாஎன்றுஉன்
தெருளார் கூட்டம் காட்டாயேல் செத்தே போனாற்சிரி
யாரே?' (கோயில்-8

என்றுங் கூறுதல் அவருடைய ஆற்றாமையை அறிவிக்கிறது. அப்பாடல்களிடையே அடிகளின் நம்பிக்கை மலைபோல இருத்தல் கண்கூடு. அத்துணை நம்பிக்கை வைப்பதற்குரிய தலைவன் என்பதையும் நன்கு அறிந்துள்ளார். அப்படியா னால் பொறுமையுடன் காத்திராமல் ஏன் இத்துணைத் துயரடைய வேண்டும் என்ற வினாவிற்கு விடை காண்டல் எளிது. ஒப்பற்ற அனுபவத்தை ஓரளவு அனுபவித்துவிட்ட வர் அந்த அனுபவத்தை விடாது பெறல் வேண்டும் என்ற துடிப்பாலேயே வருந்துகிறார். அனுபவம் கிடைக்காத ஒவ்வொரு வினாடியும் வாணாள் வீணாளாவதாக நினைத்த லின் வருத்தம் ஏற்படுகிறது. இதனால்தான் ஒரு பாடலில் எல்லையில்லாத ஆனந்தம், அடுத்த பாடலில் எல்லையில் லாத துயரம். அதற்கடுத்த பாடலில் யாவற்றையும் இழந்து நிற்பவர் போன்ற ஆறாத் துயரம் என்பவை மாறி மாறி வரக் காண்கிறோம். இத்தகைய முறை வேறு யாருடைய பாடலிலும் காண்டல் கடினம்.

திருவாசகம் ஏன் இவ்வாறு அமைந்துளது? நம்பிக்கைக் கும் நம்பிக்கை இன்மைக்கும் இடையே கிடந்து ஊசலாடும் மனித சமுதாயத்தை உய்விக்க வந்த நூல் இவ்வாறு ஊச லாட்டை அறிவிக்கின்றமையின் மிகவும் அச் சமுதாயத் திற்கு உகந்ததாகிறது.

மனித வாழ்க்கையில் கிடைக்கும் நம்பிக்கை, நம்பிக்கை இன்மை என்ற இரண்டும் மாறி மாறிக் காணக் கிடப்பதா லும், மனிதர்கள் ஓயாமல் தவறு செய்துவிட்டு அத் தவற்றை மன்னிக்க வேண்டும் என்று வேண்டி நிற்பதைப் போலவே வேண்டி நிற்றலாலும், பொறி புலன்களின் வலுவைச் சுட்டிக் காட்டி வருந்துவதாலும், ஓயாத துன்பங்களை அனுபவித்து எதிர்த்துப் போராடுதலாலும் திருவாசகம் நம் மனத்தைப் பிடித்து உலுக்கிவிடுகிறது.

இன்றைய உலக வாழ்க்கையில் நடைபெறும் போராட் டத்தை அன்றே கண்டவர் போலப் படம் பிடித்துக்

காட்டுகிறார் அடிகள். ஆன்ம யாத்திரை எத்துணைத் துன்பம் நிறைந்தது என்பதைப் போற்றித் திருவகவலில் வரிசைப்படுத்துகிறார். தாயின் கருவில் உருவெடுத்த முதல் மாதத்திலிருந்து தோன்றும் துன்பங்களையெல்லாம் தாண்டிப் பிறந்துவிட்டால், பிறந்த பின்னர் வளரும் பொழுது ஏற்படுந் துன்பங்கள் வரிசைப்படுத்தப்படு கின்றன. செல்வமும் ஆன்ம யாத்திரைக்குத் தடைதான்; ஆனால் வறுமை தேவலாமா என்றால் செல்வத்தைவிட வறுமை பொல்லாதது. அதுவும் அந்த யாத்திரைக்குத் தடை செய்யும் என்பதை,

**'செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும்**
**நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்,**

*(போற். அக, 38-39)*

என்று கூறுகிறார்.

இத்துணைத் துயரங்களையும் தாண்ட முயன்று இறுதியில் ஓரளவு மன அமைதியை அடைந்து 'தெய்வம் என்ற நம்பிக்கை வந்துவிட்டாற் போதுமா?' என்றால் அந்த நம்பிக்கை வந்த பிறகும் ஏற்படுகிற துயரங்களும் தொல்லைகளும் அனந்தம்.

**'தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி,**
**முனிவிலாதது ஓர் பொருளது கருதலும்**
**ஆறுகோடி மாயா சக்திகள்**
**வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின**
**ஆத்தமானார் அயலவர் கூடி**
**நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர்**
**.....................................**
**சமய வாதிகள் தத்தம் மதங்களே**
**அறைவ தாக அரற்றி மலைந்தனர்'-**

*(போ. அக. 42 முதல் 48)*

ஆன்ம யாத்திரையில் ஏற்படும் இத்துணைத் தொல்லைகளையும் அடிகள் நம் பொருட்டாக அடுக்கிக்

காட்டுகின்றார். இறுதியடியில் வரும் 'முனிவிலாதது ஓர் பொருள்' என்ற சொல்லைக் காண்டல் வேண்டும். எந்தப் பொருளை நாடி ஆன்மா தன் யாத்திரையைத் தொடங்குகிறது என்பதை மிகச் சிறந்த முறையில் விளக்குகிறார் அடிகள் ஒரே ஒரு சொல்லால். அப் பொருள் 'விருப்பு வெறுப்பு இரண்டையுங் கடந்து நிற்பது' என்ற பொருளைத் தரும் 'முனிவு இலாதது' என்ற சொல்லால் பொருளின் இலக்கணத்தை வரைந்து காட்டினார்.

ஆன்ம யாத்திரையில் எதிர்ப்படும் மற்றோர் இடுக்கணையும் அடிகள் எடுத்துக் காட்டுகிறார். வாணாளில் குறிக்கோள் என்ற ஒன்றில்லாமல் சுற்றி வருகின்றவரை யாதொரு துயரமும் இல்லை. இது கருதியே பொதுமறை தந்த பெரியார் 'தேவர் அனையர் கயவர் அவருந்தாம், மேவன செய்து ஒழுகலான்' என்றும் 'நன்று அறிவாரின் கயவர் திருவுடையர், நெஞ்சத்து அவலம்இலர்' (குறள். கயமை 3,2) என்றும் கூறிப்போனார். ஆனால் ஏதாவது ஒரு குறிக்கோளை வைத்துக்கொண்டு அதனை அடைய முயலத் தொடங்கினால் தொல்லைகள் அடுக்கி வந்துகொண்டே இருக்கும். இது வாழ்க்கையில் அன்றாடம் காணும் அனுபவம். எனவே அதனையும் கூறத் தொடங்கிய அடிகள் முனிவிலாத பொருளைக் கருதத் தொடங்கியவுடன் 'ஆறு கோடி மாயா சக்திகள் வேறு வேறு மாயைகளைக் காட்ட'த் தொடங்குவதையும், நாத்திகர் உபதேசஞ் செய்யத் தொடங்குதலையும், பிற சமயவாதிகள் இந்த ஆன்மாவைத் தத்தம் வழிக்கு இழுக்க முயல்வதையும் வரிசைப்படுத்திக் காட்டுகின்றார்.

எதுபற்றியும் கவலைப்படாமல் இருப்பவர் எவ்விதத் தொல்லையும் இன்றி இருப்பதும், இறையுணர்வு பெற்றுச் சரண் புகுகின்றவர்கள் அனைத்துத் தொல்லைகட்கும் ஆளாவதையும் இவ்வுலகிற் காண்கிறோம். மிக இளங் குழந்தையாகிய நம்மாழ்வார் இதனைக் கண்டு அதிசயித்து இதோ கூறுகிறார்.

'நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்து ஏங்க
எண்ணாராத் துயர் விளைக்கும் இவைஎன்ன
உலகியற்கை?'
(திருவாய். 4,9.1)

இவை அனைத்தையும் ஓர் ஆன்மா துணிவுடன் தாண்டிச் சென்றாலும் இறுதியில் பரமபதப் படத்தில் கடைசியாக இருக்கும் பாம்பைப்போல ஒன்று குறுக்கிடுகிறது என்பதை இறுதியில் கூறுகிறார்.

'உலோகா யதனன் எனும் ஒண்திறல் பாம்பின்
காலபே தத்த கடுவிடம் எய்தி'
(போற்றி. அக. 56,57)

ஏனையவற்றிற்குக் கூறாத அடைமொழிகளை அடிகள் "உலகாயதருக்குத்' தந்தது சிந்தித்தற்குரியது. பாம்பின் விடம் இரத்த ஓட்டத்தை நிறுத்தி உயிருக்கு உலை வைப்பது போல உலகாயதரும் 'காட்சி அளவை' ஒன்றையே பிரமாணமாகக் கொண்டு மேற்கொண்டு சிந்திக்க விடாமல் தடுத்து முன்னேற்றத்தை முடிக்கின்றனர். மேலும் எத்துறையில் செல்பவர்களும், எவ்விதமான சமயச் சார்புடையவர்களும் 'உலகாயதம்' என்ற பாம்பினாற் கடிபடாதிருத்தல் கடினம். ஆன்ம யாத்திரையில் சோர்வு ஏற்படுதல் என்பது திண்ணம். அச்சோர்வு எப்பொழுது ஏற்படும் என்பதை மறைமுகமாகக் கவனித்துக் கொண்டிருந்து ஆன்மாவினுடைய முன்னேற்றத்தைத் தடுத்து அதனைக் கீழிறக்கக் காத்து நிற்பது உலகாயதம்.

சோர்ந்து நிற்கும் ஆன்மாவிற்கு இனி இதன் மேலும் முயற்சி வேண்டா, தேவையற்ற முயற்சியால் வருத்தம் தவிர நீ அடையப் போவது யாதொன்றும் இல்லை என்று கூறும் உலகாயதம் பரமபதப் படத்தில் உள்ள பாம்பைப் போல் அனைத்தையும் புறப்பட்ட இடத்திற்குக் கொண்டு வந்துவிடுதல் ஒருதலை. எனவே அடிகள் அந்த உலகாயதம் பலவித

வடிவத்தில் வந்து நின்று தடை செய்யும் என்பதனைக் 'கலாபேதத்த கடுவிடம்' என்றசொற்களால் குறிப்பிட்டார்.

மனிதனுடைய வீழ்ச்சிக்குக் காரணமானதும், தடை செய்யப் பெற்றதுமான பழத்தை 'ஆதாமும் ஏவாளும்' உண்ண வேண்டும் என்ற எண்ணத்தை அவர்களிடம் உண்டாக்கி அவர்களை அதை உண்ணுமாறு செய்து, அவர்களை வீழ்ச்சியடையுமாறு செய்ய வந்த சாத்தானும் 'ஒண்திறல் பாம்பாகவே' வடிவு கொண்டு வந்தான் என மில்டன் கூறுவதும் இவ்விடத்திற்குப் பொருந்த நோக்குக.

ஆன்ம யாத்திரையில் ஏற்படும் தடைகளைக் கூற வந்த புத்தன் கண்டு கூறிய வழிகள் ஓரளவு சிறந்தவைதாம். அவற்றைக் கடைப்பிடிப்பதால் உய்கதி அடைய முடியாதா என்ற வினாத் தோன்றலாம். புத்தன் கண்டு கூறிய "துக்கம்; துக்க உற்பத்தி; துக்க நிவாரணம்; துக்க நிவாரண மார்க்கம்" என்பவையும் சிறந்த வழிகளே. ஆனால் இவற்றை உள்ளவாறு அறிந்து கடைப்பிடிக்க வேண்டுமாயின் கூர்மையான அறிவு தொழிற்பட வேண்டும். எவை துக்கம்? துக்க உற்பத்திக்குக் காரணம் யாவை? நிவாரணமாவது யாது? அதற்குரிய மார்க்கங்கள் யாவை? என ஆராய்ந்து காண்பது எல்லார்க்கும் எளிய செயலன்று. அவ்வாறு கண்டாலும் பொறி புலன்களை அடக்கி ஒரு வழிப்படுத்தி இம்மார்க்கத்தில் செலுத்துதல் அதைவிடக் கடினமாகும். இதற்கு உதவியாக 'சத்சங்கம்' முதலியவற்றைப் புத்தன் கூறினும் இவ்வழியில் உள்ள இடர்ப்பாடு மிகுதி என்பதில் தடையில்லை.

ஆன்ம யாத்திரை சிறக்க வேண்டுமாயின் பொறிபுலன்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்னும் அருக சமயமும், அறிவின் துணைகொண்டு ஆய்ந்து அவற்றைத் 'தியானம்' என்பதன் மூலம் அடக்கி ஆளவேண்டும் என்னும் புத்த சமயமும் பழக்கத்திற்கு வருதல் மிக மிகக் கடினம். எனவே அடிகள் எளிய வழி ஒன்றை வகுத்துக் காட்டுகிறார். ஆன்ம யாத்திரையில் பொறி புலன்களை அடக்கித்தான் செல்ல

வேண்டுமெனில் அதிலேயே பெரும் பொழுது கழிந்துவிடக் காண்கிறோம். இம் முறையிலும் ஆன்ம யாத்திரை நடைபெறலாம். எனினும் அது யாவர்க்கும் இயலக் கூடிய ஒன்றன்று என்பது வெளிப்படை.

மாபெருங் கல்விக் கடலாகிய அடிகள் பல்வேறு சமயங்களும் ஆன்ம யாத்திரை, அதன் விடுதலை என்பவற்றிற்குக் கூறிய வழிகளை யெல்லாம் ஆராய்ந்து பார்த்து இறுதியில் யாவர்க்கும் இயலக் கூடியதான ஒரு வழியைக் கண்டு கூறுகிறார்.

உலகிடைப் பிறந்தோர் அனைவரும் பெருந் துன்பத்திற்காட்படுவதும், இத் துன்பத்தைப் போக்க எல்லா உயிர்களும் முயல்வதும் யாவரும் அறிந்த ஒன்று. எனவே துன்பங்களை ஒவ்வொன்றாகக் களைய முற்படுவதிலும் எல்லாத் துன்பங்கட்கும் ஆணிவேர் எது எனக் கண்டு அதனைக் களைய முற்படுவதே அறிவுடைமை. இதற்கு அதிக தூரம் ஆராய்ச்சி செய்துபோகத் தேவை இல்லை. 'பிறவியே எல்லாத் துன்பங்கட்கும் மூல காரணம்' என்பது நன்கு அனைவராலும் அறிந்து ஏற்றுக் கொள்ளப் பெற்ற ஒன்றாகும். அவ்வாறானால் இப் பிறவியை ஒழிப்பதே துன்பங்களிலிருந்து விடுதலை அடைய உள்ள ஒரு வழியாகும். பிறவியை நாமாகப் போக்கிக் கொள்ள முடியாது. எனவே யாருடைய உதவியையாவது நாடித்தான் பிறவியைப் போக்க வேண்டும். யாருடைய உதவியை ஆன்மா நாடுகிறதோ அவன் பிறப்பில்லாதவனாக இருந்தாலொழிய நம்முடைய பிறவியைப் போக்க அவன் எவ்வாறு உதவ முடியும்?

எனவே, பிறவி இல்லாதவன் துணை கொண்டுதான் இப்பிறவியைப் போக்க முடியும் என்று உணர்ந்த பிறகும் கூடப் பொறிகள் ஆன்ம யாத்திரையைத் தடை செய்கின்றன. எனவே பொறிகளின் வழிச் செல்லும் மனத்தை நோக்கி அடிகள்,

'சூழ்கின்றாய் கேடுஉனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய வெள்ளத்தே' (சத.20)

'சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணியிலி
பிண நெஞ்சே!
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை செய்வ
தொன்றறியேனே' (சத.31)

'............பிணநெஞ்சே'
கிறியெலாம் மிகக் கீழ்ப்படுத்தாய் கெடுத்தாய்
என்னைக் கெடுமாறே' (சத.32)

என்று கூறுமுகத்தான் ஆன்ம யாத்திரையைத் தடைசெய்யும் மனத்தைத் திருத்த முயல்கின்றார். மனம் எதன் உதவி கொண்டு இத்தடையைச் செய்கிறது? இதோ அதற்கு விடையையும் அடிகள் குறிப்பிடுகின்றார்.

'மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப் புலன்ஐந்தின்
வழியடைத்து அமுதே!
ஊறிநின்று என்னுள் எழுபரஞ்சோதி!' (கோயில்-1)

'ஆனைவெம் போரில் குறுந்தூறு எனப்புலனால்
அலைப்புண்டு' (நீத்த.21)

'எறும்பிடை நாங்கூழ்எனப் புலனால் அரிப்புண்டு'
(நீத்த.23)

என்ற அடிகள் மூலம் பொறிகளின் துன்பத்தை அறிதல் வேறு; அவற்றிலிருந்து விடுபடுவது வேறு. இறைவன் திருவருள் ஒன்றையே துணையாகக் கொண்டு பொறிகளை நெறிப்படுத்தலாமே தவிர, அவற்றை அடக்கிவிடுதல் இயலாத காரியம். அவற்றை அடக்குதல் இயலாத காரியம் என்பதைத் திருமூலர் 'ஐந்தும் அடக்கு அடக்கு என்பர் அறிவிலார்; ஐந்தும் அடக்கும் அமரரும் அங்கில்லை' எனக் கூறுகிறார். எத்தகைய வழியை மேற்கொண்டாலும் பொறிபுலன்கள் ஆன்மாவை யாத்திரை போகவிடாமல் இழுத்து வந்து விடும் என்பதைச் சேக்கிழார் உவமை முகத்

தான் மிக அழகாக எடுத்துக் காட்டுகிறார். கண்ணப்பர் கன்னிவேட்டை ஆடுவதைக் கூறவரும் சேக்கிழார் வேடர்கள் கட்டியுள்ள வலைகளை அறுத்துக் கொண்டு ஓட முயலும் விலங்குகளை வலைகட்கு அப்பால் நிற்கின்ற வேட்டை நாய்கள் சினத்தொடு கவ்வுகின்றன என்ற கருத்தை ஓர் உவமை மூலம் காட்டுகிறார். இருவினை என்ற வலையினுள் அகப்பட்டுத் தவிக்கும் உயிர் எவ்வாறேனும் அதனை அறுத்துக்கொண்டு ஓடவேண்டும் என்று முயன்றால் பொறிகள் என்ற வேட்டை நாய்களால் தடுக்கப் பெறுகின்றன என்கிறார்.

''பலதுறைகளின் வெருவரலொடு பயில்வலையற நுழைமா
உலமொடுபடர் வனதகையுற உறுசினமொடு கவர்நாய்
நிலைவிய இரு வினைவலையிடை நிலைசுழல்பவர் நெறிசேர்
புலன் உறுமனம் இடைதடை செய்த பொறிகளின் அளவுளவே' (கண். புரா. 85)

இக் கருத்தை வலியுறுத்தவே வள்ளுவரும் 'துறவு' என்று ஓர் அதிகாரம் கூறியபிறகு ஓர் அதிகாரந் தாண்டி 'அவா அறுத்தல்' என ஓர் அதிகாரம் அமைத்தார். இதன் பொருந்தாமை நன்கு அறியப்படும். துறவு என்றால் எல்லாவற்றையும் துறத்தல்தானே! அவ்வாறிருக்கத் துறவின் பின் ஏன் அவாவறுத்தல் வைக்கப் பெற்றது என்ற வினா நியாயமானதே. இதை மனத்துட் கொண்ட பரிமேலழகர் ''ஒரோவழித் துறக்கப்பட்ட புலன்கள் மேல் பழைய பயிற்சி வயத்தான் நினைவு செல்லுமன்றே, அந் நினைவும் அவிச்சையெனப் பிறவிக்கு வித்தாமாகலின், அதனை இடைவிடாது மெய்ப்பொரு ளுணர்வான் அறுத்தல்'' என்று கூறினார். இதனால் பொறிபுலன்கள் வலிமையை அடிகள் கூறுவது அனுபவ அடிப்படையில் கூறப்பெற்றது என்பது நன்கு விளங்கும்.

இனி இத்தகைய கொடுமை வாய்ந்த பொறி புலன்களிலிருந்து விடுதலையடைய வேண்டுமாயின் இறைவனுடைய

திருவருள் துணையால்தான் முடியும். அவன் 'முனிவிலாத வன்' என்றமையின் இவற்றால் ஏற்படும் துன்பத்தைப் போக்க வல்லவன் என்பதும் அறியப்படும்.

ஆன்ம யாத்திரையின் குறிக்கோளாகவுள்ள இறைவனைப் பல்வேறு வகையாகத் திருவாசகம் கூறிச்செல்கிறது. என்றாலும் 'தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைந்தவ' ரிடையே ஏற்படும் ஓர் இக்கட்டான வினாவை ஆசங்கித்தும் திருவாசகம் விடை கூறுகிறது.

இறைவனைக் கருணைக் கடல் என்று எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொள்கின்றன. அப்படியானால் துயரம் நிறைந்த உலகை அவன் ஏன் படைத்தான்? கருணைக் கடல் என்பதுண்மையானால் உலகிடை துயரம் நிலவுவது முறையா? அப்படியானால் கருணைக் கடலாகிய இறைவனின் வேறாகத் துயரத்தை உண்டாக்கும் வேறு ஒருவன் உண்டா? இவ் வினாக்களுக்கு வெவ்வேறு சமயங்களும் வெவ்வேறான விடையைக் கூறின. ஆனால் இந் நாட்டில் தோன்றிய சைவம், வைணவம் ஆகிய இரு சமயங்களும் தனியான ஒரு விடையைத் தந்தன.

குற்றம், குணம், நன்மை, தீமை என்று நம்மாற் பிரித்துக் கூறப்படும் இவை அனைத்துமே இறைவனுடைய படைப்புகள்தாம். முரண்பாடுடையவை போற் காணப் பெறும் இவற்றிடையேதான் முழுமுதல் காட்சி தருகிறான் என்பதை இந் நாட்டுச் சமயச் சான்றோர் அனைவரும் எடுத்துக் காட்டினர்.

'குற்றம்நீ குணம்நீ கூடலாலவாயிலாய்,

எனத் திருஞானசம்பந்தர் கூறுகிறார். மணிவாசகர்,

'மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்கு
சோதியுமா யிருளாயி னார்க்குத்
துன்பமுமா யின்பம் ஆயினார்க்கு
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்கு

பந்தமுமாய் வீடும் ஆயினார்க்கு
ஆதியுமாய் அந்தம் ஆயினார்க்கு' (பொற்சு-20)

என்று கூறுதலும் இக் கருத்தை வலியுறுத்தல் காணலாம்.

இதே கருத்தைக் கம்பநாடனும் கூறுதல் அறிதற்குரியது.

'மேவா தவரில்லை மேவின வருமில்லை, ஒளியொடு
இருளில்லை மேல் கீழுமில்லை
மூவாமை இல்லை, மூத்தமையு மில்லை
முதல் இடையோடு ஈறில்லை முன்னோடு
பின்னில்லை
தேவா! இங்கு, இவ்வோ நின் ஒன்று நிலை'
'நிலை இல்லாத் தீவினையும் நீ தந்தது அன்றே'
(சபதங். பிற. நீங்கு 29, 30)

இத்தகைய முறையில் முரண்பாடு என்று நாம் நினைப்பவற்றைக் கூறி இவற்றிடையேதான் அம் முழுமுதல் இருக்கிறதென்பதை அடிகள் காட்டிய பிறகு அதன் இலக்கணத்தை 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி' (எம்பா-1) 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் நின்ற நின் தன்மை' (கோயில்-7) என்றும் விரிவாகப் பேசுகிறார்.

இவ்வாறு கூறினமையின் யாத்திரை செல்லத் துணிந்த ஆன்மா ஓரளவு அமைதியடைந்து தன் துயர் போக்கக் கூடிய தலைவன்தான் என்பதை அறிந்து, உணர்ந்து உறுதி கொள்கிறது. ஆனால் அடுத்த ஐயம் உடனே தோன்றி விடுகிறது. இத்துணைப் பெரிய பொருள் அது எனில் அற்பமாகிய எனக்கும் அதற்கும் உள்ள தொடர்பு யாது? என் குறை தீர்க்க அது இறங்கி வருமா? என்ற ஐயம் நியாயமானதே.

இவ் வினாவிற்கு விடை தருவார் போல அடிகள் இறைவனின் எளிவந்த தன்மையை (சௌலப்பியம்) நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களிற் கூறிக்கொண்டு செல்கிறார்.

'வான்பழித்து இம்மண்புகுந்து மனிதரை ஆட்கொண்ட
வள்ளல்'

'அந்தரத்தே நின்று இழிந்து இங்கு அடியவர் ஆசை
அறுப்பான்' (குயில்-5, 6)

'நாயில் ஆகிய குலத்திலும் கடைப்படும் என்னை
நன்னெறி காட்டித்

தாயில் ஆகிய இன்னருள் புரிந்த என் தலைவன்'
(சதக—39)

'பலமா முனிவர் நனிவாடப் பாவியேனைப்
பணிகொண்டாய்' (சத.54)

'ஈறுஇலாதநீ எளியை ஆகிவந்து ஒளிசெய் மானுடம்
ஆக நோக்கியும்' (சத. 91)

'கல்லைமென்கனி ஆக்கும் விச்சை கொண்டு
என்னை நின்கழற்கு அன்பன் ஆக்கினாய்' (சத. 94)

'நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனை'
(அம்மா-7)

இறைவனுடைய எளிவந்த தன்மையைக் கூறுவதிலும் ஒரு தனிச் சிறப்பைக் கூறுகிறார் அடிகள். இறைவன் ஆட்கொள்ள வேண்டும் என்று நினைத்தாற்கூட ஆட்கொள்ள முடியாதபடி நம் மனம் கல்லாக இருப்பின் என்னாவது என்ற வினாவும் தோன்றலாமே! அந்த வினாவையும் எதிர் பார்த்து விடை கூறுவார் போலக் 'கல்லை மென்கனி ஆக்கும் வித்தை கொண்டு என்னை நின் கழற்கு அன்பனாக் கினாய்' என்றும் 'கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத் தழுத்தி வினை கடிந்த வேதியனை' (அம்மா-5) என்றும் கூறுகிறார்.

இதுகாறுங் கூறியவற்றால் யாத்திரை புறப்படும் ஆன்மாவுக்கு அமைதி கிட்டும் முறையில் எந்தப் பொருளின் உதவியை அந்த ஆன்மா நாடவேண்டும். அந்தப் பொருளின் இலக்கணம் யாது? அந்தப் பொருளுக்கும்

நமக்கும் உள்ள தொடர்பு யாது? அந்தப் பொருள் நம்மை இறங்கிவந்து ஆட்கொள்ளுமா? அதன் எளிவந்த தன்மை எத்தகையது? நம்முடைய மனம் கனியாததாக இருப்பினும் அது உதவ முன்வருமா என்ற வினாக்கட்கு எல்லாம் விடை கூறினார் அடிகள்.

அடுத்துள்ள ஐயம் இவை யெல்லாம் அறிந்த பிறகு நாம் செய்ய வேண்டியது யாது என்ற வினாவாகும். நம் மாட்டுள்ள பொறி புலன்களை அடக்க முடியாது என்பதை யும் அடக்கும் ஆற்றல் தன்பால் இல்லை என்பதையும் உணர்ந்து வருந்தும் ஆன்மாவுக்கு வழி கூறுகிறார் அடிகள். பொறிபுலன்களை அடக்க முடியாதுதான்; ஆனால் அவற்றை மடைமாற்றம் செய்யலாமல்லவா? கண் எதை யேனும் பார்த்துத்தான் தீரும் எனின் ஏனையவற்றைப் பார்ப்பதைக் காட்டிலும் அவன் திருவடிகளைப் பார்க்கு மாறு மடைமாற்றம் செய்யலாம் அல்லவா?

'சிந்தனை நின்தனக்கு ஆக்கி நாயினேன்தன்
கண்இணை நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குஉன்
மணிவார்த்தைக்கு ஆக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனை' (சத. 26)

பொறிபுலன்களை அடக்க முயன்று தோல்வியுறும் அவல நிலையைப் போக்குமுகத்தான் அடிகள் அவற்றை மடைமாற்றஞ் செய்வது மூலம் எத்தகைய காரியத்தைச் சாதிக்க முடியும் என்பதை அழகுற எடுத்துக் காட்டுகிறார். பொறிபுலன்களை வைத்துக் கொண்டு அவற்றால் அனு பவிக்கப்பட வேண்டியவற்றையும் அனுபவித்துக் கொண்டு, ஆனால், எவற்றை அனுபவிக்க வேண்டும் என்பதில் மட்டும் மடை மாற்றம் செய்து கொண்டு வாழ்தல் என்றால் இதனைவிடச் சிறந்தது வேறு எது இருக்க முடியும்?

ஆன்மா மகிழ்ச்சியுடன் யாத்திரையைத் தொடங்கும் வண்ணம் இத்துணை வழிகளையும் அடிகள் கூறிவிட்டார்

எனினும் இன்னும் ஒரு வினா எஞ்சி நிற்கக் காண்கிறோம். பொறிபுலன்களை மடை மாற்றஞ் செய்து ஆன்ம யாத்திரை செய்வதனால் ஏற்படக்கூடிய பயன் யாது என்பதே அந்த வினா. பயன் கிட்டுகிறது என்றால் எத்தகைய பயன்? எப்பொழுது கிட்டும்? என்பன போன்ற வினாக்கள் அடுக்கடுக்காய்த் தோன்றுகின்றன.

மிக நீண்ட காலங் கழித்துப் பயன் கிட்டும் என்றால் உயிர்கள் அதில் ஈடுபடாது என்ற மனித மனத் தத்துவத்தை அறிந்தவர் அடிகள். எனவே இப்பொழுதே கிட்டக்கூடிய இன்பம் கிட்டும் என்கிறார். உலகத்தில் இன்பம் என்றால் அதன் முடிவு துன்பமாய்த்தான் இருக்கும். இரட்டையாக உள்ள இவற்றிலிருந்து விடுபடுதலும் இயலாத காரியம். தேன் சுவையுடையது என்றால் அதனைக் குடித்த சிறிது நேரத்தில் வாயில் கசப்பு எஞ்சுதலை அறியமுடியும். இத்தகைய இன்பத்தில்கூட ஈடுபடும் உயிர்கள் துன்பக் கலப்பில்லாத இன்பம் உண்டு என்றால், அதுவும் இப் பிறப்பிலேயே கிட்டும் என்றால் யார்தாம் அதனை வேண்டா என்பர்? மேலும் உலக இன்பங்கள் அனைத்துமே, ஒன்றே ஒன்று தவிர, எந்தப் பொறியால் அனுபவிக்கப்படுகின்றனவோ அந்தப் பொறிக்கு மட்டுமே இன்பந்தருவன. அதுவும் அனுபவிக்கும் அந்த நேரத்திற்கு மட்டுமே இன்பந் தந்து பின்னர் மறைந்துவிடும் இயல்புடையன. இதன் எதிராகக் 'காதல்' ஒன்றுமட்டும் 'கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐயம்புலனும் ஒண்டொடி கண்ணேயுள' (குறள் 101) என்றவாறு ஐம்புலனுக்கும் ஒரே நேரத்தில் விருந்தாகும் என வள்ளுவர் கூறுகிறார். அதிலுங்கூட இன்பத்திற்குக் காரணமான பொருள் நீங்கி விட்டால் துன்பமே எஞ்சும்.

இவ்வாறு இல்லாமல் ஐம்புலனுக்கும் ஒருசேர விருந்தாகி, எப்பொழுதும் நீங்காத விருந்தாக உள்ள இன்பம், துன்பக் கலப்பில்லாத இன்பம் ஏதேனும் உண்டா என்றால் உண்டு என்கிறார் மணிவாசகர்.

'நினைத்தொறும் காண்தொறும் பேசும்தொறும்
எப்போதும்
அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்'
(கோத்தும்—3)

பொருள் ஒன்றுண்டு என்பதில் ஆனந்தத்தின் இயல்பை உள்ளவாறு விரிக்கின்றார். எப்போதும் என்ற சொல்லைப் பெய்வதன் மூலம் 'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்' (குறள் 1281) இயல்பாக உடைய காமத்தை, சிற்றின்பத்தைக் காட்டிலும் இது உயர்ந்தது என்கிறார். ஏன் எனில் எப்போதும் இன்பந் தரும் இயல்பு காமத்திற்கில்லை.

இதனை அடுத்து இங்குக் குறிப்பிடப்படும் ஆனந்தத்திற்கு ஓர் இலக்கணம் வகுக்கிறார் அடிகள். இந்த இலக்கணத்தை வகுப்பதன் மூலம் அவர் அதனைத் தாம் அனுபவித்த முறையில் வெளியிடுகிறார். இந்த அனுபவத்தை நேரே பெற்றவர் தவிர ஏனையோர் அதனை இவ்வளவு தெளிவாகக் கூறமுடியாது. 'அனைத்து எலும்பு உள் நெக' என்ற சொற்களில் ஆனந்தத்தின் இலக்கணம் கூறப்பெறுகிறது.

நம்முடைய உடம்பினுள் இருக்கும் எலும்புகள் உள்ளே துளையுடையன. அவற்றுள் எலும்புத் திசு (Bone marrow) இருக்கின்றது. இன்னுங் கூறவேண்டுமாயின் இவ்வெலும்பினுள்தான் வெள்ளை அணுக்கள் (White corpusels) தயாராகின்றன. எனவே எலும்புக்குள் குருதி ஓட்டம் உண்டு என்பது தெளியப்படும். ஒருசில உணர்ச்சிகள் (தூய ஆழமான காதல், உண்மையான பக்தி) எல்லை மீதூர்ந்து தோன்றுமாயின் இந்தக் கடினமான எலும்புகள் குழைவுத் தன்மையை அடைந்துவிட்டது போன்ற உணர்வு ஏற்படும். அனைத்து எலும்புகளும் உள்ளே நெக அல்லது குழைவை அடையும்படி ஏற்படுகின்ற ஆனந்தமாகிய தேன் பிலிற்றும் இறைவன் திருவடி என்கிறார் அடிகள். இதில் உள்ள சிறப்பு என்னையெனில் மற்றொர் இடத்தில் இதே உணர்ச்

சியைக் கூறவந்த அடிகள் இதே சொற்களை இன்னுஞ் சற்று விரிவாகப் பேசிக்காட்டுகிறார். இறைவன் குருந்த மரத்தடியில் தம்மை ஆட்கொண்டபோது ஏற்பட்ட அனுப வத்தை அப்படியே அடிகள் படம் பிடித்துக் காட்டுகிறார்.

'நாயுடல் அகத்தே
குரம்பை கொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புதமான அமுத தாரைகள்
எற்புத்துளை தொறும் ஏற்றினன்; உருகுவது
உள்ளங் கொண்டுஓர் உருச் செய்தாங்கு எனக்
கள்ளூறு ஆக்கை அமைத்தனன்...' (அண்டப்-172-177)

இதனைப் படித்துப் புரிந்து கொண்ட பிறகுதான் திரு வாசகத்தின் மற்றோர் அடிக்குப் பொருள் விளங்குகிறது.

'உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாய் உருகாதால்,
(சதக. 21)

என்று அடியைப் பாடும்பொழுது ஒருமுறை ஞானாசிரியன் முன்னர் ஏற்பட்ட இந்த அனுபவம் எப்பொழுதும் வேண்டும் என்று வருந்துகிறார் என அறியமுடிகிறது. உள்ளந்தாள் நின்று உச்சந்தலைவரை எலும்புகள் உண்டு. எனவே அற்புதமான அமுத தாரைகள் எற்புத் துளை தொறும் ஏறினால் அவை குழைவது போன்ற உணர்வு தோன்றுதல் சரியே. ஆனால் உடற்கூறு அமைப்பில் இத் தகைய நிலை நீண்டநேரம் இருத்தல் இயலாத காரியம். அதேபோல இறை அனுபவம் ஏற்பட்டவுடன் நாம் அதனுள் கலந்துவிடுதலின் அதன் பின்னர் நாம், அவன், அனுபவம் என்று மூன்று அற்று அனுபவம் ஒன்று மட்டுமே எஞ்சிநிற் கிறது.

இத்தகைய இன்ப அனுபவம் கிடைத்த பின்னர் கை நழுவிய நிலையில்தான் அடிகள் அதனை விளக்கிக் கூறி விட்டு அது போய்விட்டமையின் 'நெஞ்சும் கல்லாம், கண் இணையும் மரமாம் தீவினையினேற்கே' என்று வருந்து கிறார்.

மணிவாசகரின் ஆன்ம யாத்திரை மதுரையில் புறப்பட்டுத் திருப்பெருந்துறையில் முற்றுப் பெறுகிறது. 'மீட்டு வாரா நெறியருள் புரிபவன்' என்று அடிகள் தம் ஞானாசிரியனைக் குறிக்கின்றார் என்றாலும் உலகத்திற்கு மணிவாசகரின் அனுபவம் பயன்பட வேண்டும் என்ற பரமகருணையினாலே இறைவன் ஆன்ம யாத்திரையை முடித்துக் கொண்ட அடிகளை 'இருக்கு'மாறு பணித்து மறைந்துவிடுகிறான். அவர் தாம் மேற்கொண்ட ஆன்ம யாத்திரையை நம் போன்றவர்கட்காக மிக அழகிய பாடல்கள் மூலம் தருமாறு இறையருள் பாலிக்கின்றது.

நமக்குக் கருப்பஞ் சாறு வேண்டுமானால் கரும்பு ஆலையில் அகப்பட்டு நசுங்கித்தான் ஆகவேண்டும். திருவாசகம் என்னும் கருப்பஞ் சாற்றை இவ் வுலகம் பெறுதற்காக மணிவாசகர் என்னும் கரும்பு பிழியப்படுகிறது.

இப் பாடல்கள் அப்போது அப்போது எழுதப் பெற்றவை என்று கூறுதற்கில்லை. தான், அவன், அனுபவம் என்ற மூன்றும் ஒன்றாகி அனுபவம் ஒன்று மட்டுமே ஆக இருந்த அடிகளார் அப்பொழுது பாடி இருத்தல் முடியாது. பாடுவோன், பாடல், பாடும் பொருள் என்ற மூன்று இருந்தால்தானே பாட்டுக் கிடைக்கும்? எனவே பின்னர் அடிகள் தம் பழைய அனுபவத்தை நினைந்தும், அது கைநழுவிவிட்டதை நினைந்து அரற்றியும் பாடியவை இவை என்றே கருதுகிறேன். இவ் வனுபவத்தை மீட்டுப் பெற்றுப் பாடுமாறு திருவருள் புரிந்தவன் பொன்னம்பலவனே யாதல் வேண்டும். இக் கருத்தின் நுணுக்கத்தை நமக்கு உணர்த்தவே நம்முன்னோர் சிற்றம்பலத்தானே இவரைப் பாடச்செய்து படி செய்து கொண்டான் என்று கூறினர். அவன் திருவருளால் மீட்டும் அனுபவத்தை நினைவுகூர்ந்து பாடப் பெற்றவை என்பதே அதன் பொருளாகும்.

இதைவிடச் சிறந்த கதை ஒன்றும் கூறப்படுகிறது. திருவாசகத்திற்கு உரை கூற வேண்டும் என்று யாரோ கேட்ட

னார் என்றும் அம்பலக் கூத்தனையே பொருள் என்று சுட்டி விட்டு அடிகள் மறைந்தார் என்றும் கூறும் கதை மிகவும் நுண்ணிய பொருளை அறிவுறுத்த எழுந்ததாகும். ஏனைய பாடல்களில் சொல், ஓசை என்பன பொருளைக் குறிக்க, அப்பொருள் நம்மனத்திற்பட அதனால் ஏற்படும் அனுபவம் துய்க்கப்படுகிறது. ஆனால் திருவாசகத்தில் உள்ள சொற் கள் தம் வடிவை முன்னர் உணர்த்தி, பின்னர் பொருளை உணர்த்தி, இறுதியில் அனுபவத்தைத் தருவதில்லை. அவை நேரடியாகவே அனுபவத்தைத் தருகின்றன. அந்த அனுபவம் இறையனுபவமேயாகும் என்ற உண்மையைத் தான் இக் கதை காட்டுகிறது. அன்றியும் திருவாசகம் பதவுரை, பொழிப்புரை, பாடல், இலக்கணம் முதலியன பார்ப்பதற்கு ஏற்படவில்லை என்பதும் இதன் பொருளாம்

திருவாசகத்தை உரை படித்துப் புரிந்து கொள்ளுதல் இயலாத காரியம். சொற்களின் பொருளை அறியலாமே தவிர அனுபவத்தைப் பெறமுடியாது. நம்முடைய மனத்தை, அந்த அனுபவத்தை ஏற்றுக் கொள்ளும் தகுதி பெற்றதாக்கினால் (tune) அனுபவம் சித்திக்கும். மனத் தைச் சுருதி சேர்க்காவிட்டால் (without tuning) திருவாச கம் இனிக்காது. இசைக் கச்சேரியில் ஈடுபட்டவனுக்கு மேல் பஞ்சமத்தைக் கலைஞன் எட்டிப் பிடித்தது ஒப்பற்ற அனுபவத்தைத் தரும்; ஈடுபாடு இல்லாதவனுக்குக் கலைஞன் உயிரைக் கையிற் பிடித்துக் கொண்டு கத்துவதா கவே படும். அது போல மனம் சுருதி சேர்க்கப்பட்டிருந்தால் திருவாசகம் அனுபவத்தைத் தரும். அல்லாதவர்கட்குக் கட்ட ளைக் கலித்துறையாய், இணைக்குறளாசிரியமாய், தேமாங் காயாய், சொல்லாய், பொருளாய் விரிந்து அதனுடன் நின்றுவிடும்.

ஆனால் இவற்றை யெல்லாம் மறந்து நாம் படிக்கின் றோம் என்ற எண்ணத்தையும் மறந்து திருவாசகத்தைப் படித்தால் நம்மையே முழுமாற்றஞ் செய்யும் ஆற்றல் உடையது திருவாசகம். அதனால்தான் வள்ளலார் போன்ற

பெரியோர்கள் 'திருவாசகத்தை நான் கலந்து' பாடினார் கள். முழுத் திருவாசகமும் தேவைப்படவில்லை என்கிறார் வள்ளலார். திருவாசகத்தில் ஒரு வாசகமே அவரையும் உடையானையும் ஒன்றாக்கும் ஆற்றல் படைத்தது என் கிறார் அனுபவவாதியான அவர்.

இத்தகைய அனுபவத்துடன் ஆன்ம யாத்திரை செய்து அடிகளார் திருவாசகம் என்ற ஒப்பற்ற அனுபவப் பிழிவை நமக்குத் தந்துவிட்டு கூத்தப் பெருமானையே பொருளென்று காட்டிவிட்டு அவனுடன் இரண்டறக் கலந்தார். அவனையே பொருளெனக் காட்டியவர் சோதியில் கலந்தார் என்று கூறுகிறது வரலாறு. திருஞான சம்பந்தர் போன்ற பெரியோர்களின் வரலாறுகள் இறுதி யில் அவர்கள் சோதியிற் கலந்ததாகவே கூறுகின்றன. சோதியிற் கலத்தலாவது யாது? அவர்கள் சோதியிற் கலந் தார்கள். என்னில் அவர்களுடைய பூதவுடல் என்ன ஆயிற்று?

இவ் வினாக்கள் தேவையற்றவைதாம். எனினும் பல ருடைய மனத்தை மருட்டும் இயல்புடையன வாகலின் ஒருவாறு இதற்கு விடை கூறுவதும் தேவையாகும். இப் பெருமக்கள் இறப்ப உயர்ந்தவர்களாயினும் இவர்கள் எடுத்த உடம்பு பஞ்சபூதச் சேர்க்கையால் ஆயது என்பதும் நோய் முதலியவற்றையும் ஒரோ வழி ஏற்கும் இயல்புடை யது என்பதும் மறுக்க முடியாத உண்மைகள். நம்பியாரூர ராகிய சுந்தரரே நோய்வாய்ப்பட்டார் எனில் இதில் தவறு யாதும் இல்லை. அவ்வாறானால் இவர்கள் உடம்புக்கும் நம்போன்றோர் உடம்புக்கும் வேறுபாடு உண்டா? உண்டு. இவர்கள் ஆன்ம பலத்தால் உடலைக் கட்டுப்படுத்தும் பேராற்றல் படைத்தவர்கள். நம் போன்றவர்கள் உடம்பு இருப்பதும் கழிவதும் நம்கையில் இல்லை. ஆனால் இப் பெருமக்கள் தம் உடலை வேண்டுமானபடி இயக்கவும், தாம் வேண்டும்பொழுது உதறி விடவும் தேவை ஏற்படின் ஒன்றுமே இல்லாமல் ஆக்கவும் வல்லவர்கள்.

உடம்பை ஒன்றுமே இல்லாமல் ஆக்குவதென்பது என்ன என்று நினைக்கலாம். உடம்பும் ஏனைய பொருள்கள் போல அணுக்களின் கூட்டுறவால் ஆகியதுதானே! எனவே அந்த அணுக்களின் சேர்க்கையைக் கலைத்துவிடுகிறார்கள். அணுக்களை உடைப்பதற்கு ஒரு பேராற்றல் வேண்டும் என்பதை இன்று அறிவோம். புறக் கருவிகளின் துணை யால் அணுவைச் சிதைப்பது போலவே தம் பேராற்றலால் உடம்பிலுள்ள அணுக்களைச் சிதைத்துக் கொள்கின்றனர். இதனையே விஞ்ஞானம் அணுச்சிதைவு (Atomic Disintegration) என்று பேசும். அணுச்சிதைவு ஏற்படும் பொழுது சூரியனையும் தோற்கச் செய்யும் பேரொளி உண்டாகும் என்பதை அனுபவத்தில் கண்டோம். இவர்களும் தம் உடம்பாகிய அணுக்களைத் தம் ஆற்றலால் சிதைக்கும் பொழுது பேரொளி உண்டாகிறது. உண்மையில் உடலின் அணுச் சிதைவும் ஒளியும் ஒரே நேரத்தில் தோன்றுகின்றன. ஆனால் காண்பவர் இந்நுணுக்கத்தை அறியாராகலின் முதலில் ஒளி தோன்றியதாக நினைத்து அந்த ஒளியில் இவர்கள் மறைந்தனர் என்று கூறுவர். உண்மையில் நடை பெறுவது உடல் சிதைவு ஏற்பட்டு அதன் பயனாக ஒளி உண்டாகிறது. இதுவே சோதியிற் கலத்தல் என்று கூறப் பெறுகிறது. வள்ளலார் முதல் இம் முறையைப் பின் பற்றினவர்களே யாவர்.

'வேறொருவர் காணாமல் உலகத்து உலாவலாம்' என்று தாயுமானவப் பெருந்தகை கூறுவதை நாம் அறிவோம். மனத்தின் ஆற்றலை வளர்த்துக் கொள்வதன் மூலம் இவையெல்லாம் செய்யக் கூடிய அருஞ்செயல்களே யாகும். நீர் மேல் நடத்தல் முதலிய சிறு செயல்களில் தம் ஆற்றலைச் செலவழிக்காமல் இப் பெரியோர்கள் தம் ஆற்றலைச் சேர்த்து வைக்கின்றனர்.

வங்கியிற் போட்ட பணத்தை அடிக்கடி எடுத்துச் செலவு செய்யாதவன் ஒரேயடியாக ஒரே காசோலையில் அத்துணைப் பணத்தையும் வாங்கிவிடுவது போலத் தாம்

சேகரித்த பேராற்றலை (Conserved Energy) ஒரே நாளிற் பயன்படுத்தி இவ்வுடலை அணுச் சிதைவு செய்து விடுகின் றனர். தாம் வாழும் காலத்தில் பிறருக்கு உபகாரம் செய்வது தவிரப் பிறருடைய உதவியை நாடாத இவர்கள் தாம் மறைகின்ற காலத்திலும் தம் உடலை எடுத்து அப் புறப்படுத்த வேண்டிய பணியைப் பிறர் செய்ய வேண்டாத படி உடலையும் அணுச் சிதைவு செய்து கொள்கின்றனர்.

திருவாதவூரர் என்ற பாண்டிப் பேரரசின் தலைமை அமைச்சரை ஓர் ஆன்ம யாத்திரை புறப்படுமாறு செய்து, திருப்பெருந்துறை சேர்ந்தவுடன் அவரை மணிவாசகராக மாற்றி, நம் போன்ற ஆன்மாக்கள் எத்துணைத் துன்பங் களை வழியில் சந்திக்குமோ அவை அனைத்தையும் மணி வாசகரைச் சந்திக்கச் செய்து, அவற்றால் பெறும் துயரத் தையும் பாடச் செய்து, இத்துணைத் துன்பங்களைச் சந்தித் தாலும் இறுதியில் உய்கதி உண்டு என்பதைக் காட்டி, உய்கதி பெற்றவர்கள் எத்தகைய இன்பத்தை அனுபவிப் பார்கள் என்பதையும் எடுத்து விளக்குமாறு செய்து, துன் பங்கண்டு கலங்க வேண்டியதில்லை என்பதையும் திடமாகக் கூறுமாறு செய்து, இறையனுபவத்தின் பிழிவாக இருக்கும் திருவாசகத்தையும் அருளிச் செய்யுமாறு செய்து, இவ்வுலகத் தில் வாழும் உயிர்கட்குத் தன் பரங்கருணையால் இறைவன் உதவினான் என்று கூறலாம்.

வேகமாக முன்னேறிச் செல்லும் அவசர மயமான விஞ் ஞான உலகத்திற்கும் திருவாசகம் மிகவும் தேவைப்படுகிறது என்று கூறவும் வேண்டுமோ!